## உள்ளே...


1. *சிறகடிக்க ஆசை!* 5

2. *சுடும் நிலவு சுடாத சூரியன்!* 93

3. *சிவப்பாய் சில கனவுகள்* 176


# சிறகடிக்க ஆசை!



## 1

லேகா மாடிப்படிகளில் சரசர வென்று உயரம் குறைந்து கீழே வந்தாள்.

இருபதை நெருங்கிக் கொண்டிருக்கும் லேகா ஆல்பங்களில் பார்க்கும் பாப் நட்சத்திரங்களைப் போல பளிச்சென்று இருந்தாள். கூந்தல் பளபள வெனத் தோளில் புரண்டது. வாட்டர் ப்ளூ நிறத்தில் இறுக்கமான ஜீன்ஸூம், தொளதொளவென்று டிடர்ஜெண்ட் வெள்ளை டீசர்ட்டும் அணிந்திருந்தாள்.

கடைசிப் படியைத் தொட்ட போது - பக்கத்து அறையில் இருந்து வேலைக்காரி வெளிப்பட்டாள்.

''காலேஜூக்கு கிளம்பிட்டிங்களாம்மா...?''

''ஆமா தங்கம்...''

''அய்யா உங்களைப் பார்க்கணும்ன்னு சொன்னாங்க...''

"எங்கே இருக்கார்...?"

"குளிச்சிட்டிருக்கார்... குளிக்கப் போறதுக்கு முன்னால என்கிட்டே சொல்லிட்டுப் போனார்..."

"என்ன விஷயமாம்...?"

"தெரியலைம்மா...?"

புத்தகங்களை டீபாய் மேல் போட்டு விட்டு - சோபாவில் புதைந்தாள் லேகா.

டீபாய் மேல் கிடந்த ரிமோட் கண்ட்ரோலை அழுத்தி டி.வி. பெட்டிக்கு உயிர் கொடுத்தாள்.

திரையில் தோன்றிய தமிழ் சினிமாவில் கதாநாயகனும், கதாநாயகியும் பார்க்காமலே... பேசாமலே... சொல்லாமலே... காதலித்துக் கொண்டிருந்தார்கள்.

சொற்ப நிமிஷங்களில் ஈரத் தலையை டவலால் துவட்டிக் கொண்டே - ராமகிருஷ்ணன் வந்தார்.

லேகா டி.வி. திரையை வெறுமையாக்கி விட்டு - அவரை ஏறிட்டுக் கேட்டாள்.

"என்னைப் பார்க்கணும்ன்னு சொன்னீங்களாப்பா...?"

"ஆமா லேகா..."

"என்ன விஷயம்...?"

"இன்னிக்கு உனக்கு காலேஜ் இருக்கா...?"

"ஆமா..."

"செமஸ்டர் ஹாலிடேஸ் வரப் போகிறதுன்னு சொன்னியே...?"

"இன்னும் ஒரு வாரம் கழிச்சுத்தான் செமஸ்டர் ஹாலிடேஸ் ஆரம்பமாகிறது..."



"நான் இன்னிக்கு வெளியூர் கிளம்பிப் போறேன்..."

"சரிப்பா..."

"திரும்பி வரப் பத்து நாள் இருபது நாள் ஆகும்..."

"போய்ட்டு வாங்க..."

"டாட்டா எஸ்டேட் காரை நான் எடுத்துக்கிறேன்... டிரைவர் என்கூட வந்துடுவான்.. நீ மாருதியை செல்ஃப் டிரைவ் பண்ணிக்க..."

"கார்லயே போறீங்களா...? எந்த ஊருக்கு...?"

"பெங்களூர் வரைக்கும் கார்... அங்கிருந்து ஃப்ளைட் பிடிச்சு மும்பை... மும்பையிலிருந்து நியூயார்க்... மூணு வாரம் கழிச்சுத்தான் திரும்பி வருவேன்..."

"டிரைவர் பெங்களூரிலிருந்து காரை எடுத்துட்டு வந்துடுவாரா...?"

"ஆமா... நாளன்னிக்கு வந்துடுவான்..."

"சரிப்பா... வேற ஒண்ணும் விஷயம் இல்லையே...? நான் காலேஜ் கிளம்பட்டுமா...?"

"பார்த்து ஜாக்கிரதையா இரும்மா..."

"நான் என்ன சின்னக் குழந்தையா...? என்னை யாரும் கடிச்சுத் தின்னுட மாட்டாங்க..."

"என்னைப் பொறுத்த வரைக்கும் எப்பவுமே நீ சின்னக் குழந்தைதான் லேகா..."

"காலேஜுக்கு டயமாச்சு... போய்ட்டு வர்றேன்..."

அவரிடம் விடை பெற்றுக்கொண்டு டீபாய் மேல் கிடந்த புத்தகங்களை அள்ளினாள். போர்டிகோ படிகளில் தடதடவென இறங்கியபோது - கார் டிரைவர் எதிர்ப் பட்டார்.

"லேகாம்மா... நான் இன்னிக்கு அய்யா கூட...."

புன்னகையோடு அவரைப் பாதியில் மறித்தாள்.

"வெளியூர் போறீங்க... அதனால நான் மாருதி எடுத்துக்கணும்..."

"ஆமாங்க..."

சொல்லிக்கொண்டே அவர் மாருதி காரின் சாவியை நீட்டினார். அதைப் பெற்றுக் கொண்டு - போர்டிகோவுக்கு வெளியே பளீரென்று வாட்டர் சர்வீஸ் செய்து நிறுத்தப் பட்டிருந்த காரை அடைந்தாள்.

கதவை இறக்கை விரித்துத் திறந்து - டிரைவிங் இருக்கையை ஆக்ரமித்தாள்.

சாவியை இக்னீஷியன் துவாரத்திற்குள் நுழைத்துத் திருக - மெல்லிய கனைப்புடன் கார் ஸ்டார்ட் ஆகிக் கொண்டது.

ஆள் நடமாட்டம் அதிகமில்லாத அந்தத் தெருவை கடந்து மெயின் ரோட்டை எட்டிப் பிடித்தாள்.

மிதமான வேகத்தில் காரைச் செலுத்திக் கொண்டே எதேச்சையாய் ரிவர் வியூ கண்ணாடியைப் பார்த்தாள்.

அவள் புருவங்கள் சுருங்கின.

சற்றே இடைவெளி விட்டு வந்து கொண்டிருந்த அந்த புல்லட்டில் ஆஜானுபாகுவாய் ஆரோகணித்திருந்த ஆசாமி இவள் காரையே கவனமாகப் பார்த்துக் கொண்டு பின் தொடர்ந்து கொண்டிருந்தான்.

அவளுடைய கார் திரும்பிய வளைவுகளில் எல்லாம் பைக்கைத் திருப்பினான்.

சற்று நேரத்தில் கார் காலேஜ் வாயிலில் நுழைந்து பார்க்கிங் பகுதியில் ஒதுங்கி நின்றது.



புத்தகங்களை எடுத்துக் கொண்டு திரும்பித் திரும்பிப் பார்த்தபடி நடந்தாள் லேகா.

தொலைவில் காலேஜ் காம்பவுண்டுக்கு வெளியே - அவன் தெரிந்தான். பைக்கை ஸ்டாண்டில் நிறுத்தி வைத்திருந்தான்.



## 2

லேகா காலேஜ் முடிந்து வீடு திரும்பியபோது - சாயந்தரம் ஆறு மணி.

பாத்ரூம் ஷவரில் பதினைந்து நிமிஷங்கள் நனைந்து விட்டு ரோஜாப் பூ நிற நைட்டிக்குள் நுழைந்தாள் லேகா.

டொக்...

டொக்...

டொக்...

கதவுத் தட்டல் கேட்டதைத் தொடர்ந்து குரல் கொடுத்தாள்.

"யாரு...?"

"நான்தாம்மா..."

அறைக்கு வெளியே இருந்து வேலைக்காரி தங்கத்தின் குரல் கேட்டது.

"உள்ளே வா..."

ஆவி பறக்கும் டிகிரி காபியோடு உள்ளே வந்தாள் அவள்.

"இந்தாங்கம்மா காபி..."

"அப்படி டேபிள் மேல வெச்சிட்டுப் போ..."

வழியும் காபிக் கோப்பையை சிந்தாமல் கவனமாய் மேஜையின் மேல் வைத்துவிட்டு தயக்கமாய் நின்றிருந் தாள் தங்கம்.

மேஜைக்கருகே இருந்த பர்சனல் கம்ப்யூட்டரில் உறையை நீக்கிக் கொண்டே அவளைப் பார்த்தாள் லேகா.

"என்ன வேணும் தங்கம்..."

"அ... அய்யா கொஞ்ச நேரத்துக்கு முன்னால போன் பண்ணியிருந்தார் லேகாம்மா..."

"எதுக்கு...?"

"உங்களைத்தான் விசாரிச்சார்..."

"என்ன விசாரிச்சார்...?"

"நீங்க காலேஜிலிருந்து வந்தாச்சான்னு கேட்டார்... இல்லைன்னு சொன்னதும்... பதறிப் போய்ட்டார்..."

"எத்தனை மணிக்கு போன் பண்ணினார்..?"

"அஞ்சு மணிக்கு..."

"காலேஜ் நாலரை மணிக்கு முடியுது... டாண்ணு அஞ்சு மணிக்கு வீடு வந்து சேர முடியுமா...? லைப்ர ரிக்குப் போக வேண்டியிருக்கும்... அல்லது ப்ரொபசர்கள் கிட்டே சந்தேகம் கேக்க வேண்டியிருக்கும்..."

"உங்க கவலை உங்களுக்கு... அவர் கவலை அவ ருக்கு... அவர் இருக்கறப்ப லேட் ஆனா பரவாயில்லை... அவர் வெளியூர் போயிருக்கிறப்ப நீங்க வீடு வந்து சேர லேட் ஆச்சுன்னா... அய்யா என்னை சத்தம் போடு வார்ம்மா..."



"அவரோட கவலையில் கொஞ்சம்கூட நியாயம் இல்லை தங்கம்... நான் ஒண்ணும் பச்சைக் குழந்தை இல்லை..."

"அவருக்கு நீங்க என்னிக்குமே குழந்தைதாம்மா... பெண்ணைப் பெத்தவங்களுக்கு அவளை ஒருத்தன் கிட்டே கட்டிக்குடுக்கற வரைக்கும் வயத்தில நெருப்பைக் கட்டிக்கிட்டு இருக்கிற மாதிரிதான் இருக்கும்..."

"இட்ஸ் ஹைலி இடியாட்டிக்."

"என்னவோ இங்கிலீஷில் திட்டறீங்கன்னு தெரியுது. நாளைக்கு நீங்க ஒரு பொண்ணுக்கு அம்மா ஆனிங்கன்னா அப்போதுதான் உங்க அப்பாவோட கவலை என்னன்னு உங்களுக்கு நிஜமாவே புரியும். அதுவரைக்கும் அவர் மேல் உங்களுக்குக் கோபம்தான் வரும்..."

"கவலையானாலும் சரி... சந்தோஷமானாலும் சரி... அது நியாயமாவே இருந்தாலும் அளவோட இருக்கணும்... அளவுக்கு மீறி கவலைப்படக்கூடாது... இவர் அளவுக்கு மீறி கவலைப்படறார்... அவர் கவலைப்படறாரா... இல்லை நான் தப்பான பாதையில் போயிடுவேன்னு சந்தேகப்படறாரான்னு எனக்குப் புரியலை..."

"இல்லைம்மா..."

என்று வார்த்தைகளை ஆரம்பித்த தங்கத்தைப் பாதி யில் மறித்தாள் லேகா.

"உன்னோட லெக்ச்சர் போதும்... மறுபடியும் அவர் போன் பண்ணினார்ன்னா.. நான் பத்திரமா வீடு வந்து சேர்ந்தாச்சுன்னு சொல்லிடு..."

"சரிம்மா..."

தலையசைத்து விட்டுத் தங்கம் நகர்ந்த விநாடி-

டிரிங்...

டிரிங்...

டிரிங்...

டெலிபோன் வீறிட ஆரம்பித்தது.

''அய்யாவாகத்தான் இருக்கும்மா...'' என்று சொல்லி விட்டு தங்கம் அறையைக் கடந்தாள்.

ரிசீவரை எடுத்துக் காதில் பொருத்தி ''ஹலோ...'' என்றாள் லேகா.

தங்கம் சொன்ன மாதிரியே ராமகிருஷ்ணன்தான் பேசினார்.

''லேகா... வந்துட்டியாம்மா... கொஞ்ச நேரத்துக்கு முன்னாலதான் கூப்பிட்டேன்... நீ இன்னும் வீட்டுக்கு வரலைன்னு வேலைக்காரி சொன்னா...''

''காலேஜில் ஒரு ப்ரொபசர்கிட்டே சந்தேகம் கேக்கப் போயிருந்தேன்...''

''அப்படி ஏதாவது இருந்தா... வீட்டுக்கு ஒரு போன் அடிச்சு சொல்லிடு லேகா... நான் வெளியூரிலிருந்தாலும் மனசெல்லாம் உன் மேலேயே இருக்கும்.''

''அப்பா... இட் ஈஸ் டூ மச்...''

''என்னோட கவலை உனக்குப் புரியாது...''

''நான் எங்கே போனாலும் பைக்கிலும் காரிலும் நீங்க அனுப்பற செக்யூரிட்டி ஆட்கள் நிழல் மாதிரி வர்றாங் களே.. அவங்களுக்கு ஒரு செல்போன் வாங்கிக் கொடுத் திட்டிங்கன்னா நான் எங்கே இருக்கேன்... என்ன பண் றேன்னு அவங்க மூலமாகவே தெரிஞ்சிக்கலாமே...?''

''லே... லேகா...''



''என்னப்பா அதிர்ச்சி ஆயிட்டிங்க...?''

''லேகா... வந்து...''

''எனக்கு விஷயம் தெரிஞ்சிடுச்சேங்கறதே உங் களுக்கு அதிர்ச்சியா இருக்கா? என்னைப் பின் தொடர்கிற அந்த ஆட்களையும் நான் அடையாளம் தெரிஞ்சிக் கிட்டேன்... அவங்க அடிக்கடி தங்களோட கெட்டப்பை மாத்திக்கிட்டாலும்... கண்களை வெச்சு அவங்களை எனக்கு நல்லா அடையாளம் தெரியும்... என்னை யாரோ ஃபாலோ பண்றாங்கன்னு போன வாரம் உங்ககிட்டே சொன்னப்ப நீங்க அவ்வளவா பதட்டம் காட்டலை... அதையும் நான் கவனிச்சேன்... அதுக்கப்புறம் ஃபாலோ பண்ண நீங்க நியமிச்ச ஆட்களில் ஒருத்தனை 'விஷயம் அவளுக்குத் தெரியக்கூடாது... அவ என்கிட்டே வந்து சொல்ற அளவுக்கு வெச்சுக்காதீங்க...'ன்னு திட்டிட்டு இருந்திங்க... இன்னிக்குக் காலையில் பைக்கில் அதே ஆசாமி என் பின்னாடியே காலேஜ் வரைக்கும் வந்தான்... இதெல்லாம் உங்க ஏற்பாடுகள்தான்னு சந்தேகமில்லாம இன்னிக்கு எனக்கு உறுதியாயிடுச்சு...''

''லேகா... நீ என் மேல கோபமா இருப்பேன்னு நினைக் கிறேன்.''

''பின்னே இருக்காதா...? ஐ ஹேட் யூப்பா...''

''அவசரப்படாதே... உன்னோட அப்பா என்ன செஞ் சாலும் அது உன்னோட நன்மைக்காகத்தான் இருக்கும்... காலம் கெட்டுக் கிடக்கு லேகா... உனக்கு பாதுகாப்பு வேணும்...''

''என் கூட படிக்கிற எல்லா பெண்களுமே இப்படி ப்ளாக் கேட்ஸ் பாதுகாப்போடவா வர்றாங்க...?''

"போன்ல ஆர்க்யூமென்ட்ஸ் வேண்டாம்... நான் பிசினஸ் டூர் முடிச்சிட்டு வீட்டுக்கு வந்ததும்... விபரமா பேசலாம்..."

"வாங்க... பேசுங்க... ஆனா நீங்க தர்ற எந்த விளக்கமும் என்னை சமாதானப்படுத்தாது..."

"லேகா..."

"குட்நைட்..."

அவர் பதிலை எதிர்பார்க்காமல் பட்டென்று ரிசீவரை வைத்தாள் லேகா.

கோபமாய்ப் பேசியதில் மூச்சு இரைந்தது.

ஆசுவாசமாவதற்காக சற்று நேரம் அப்படியே சேரில் உட்கார்ந்திருந்தாள்.

சூடான காபியை கொஞ்சம் கொஞ்சமாய்த் தொண்டைக்குள் சரித்து முடித்து விட்டு கம்ப்யூட்டரை ஆன் செய்தாள்.

இன்டர்நெட்டை உயிர்ப்பித்து இன் பாக்சைப் பார்க்க - புதிதாய் ஒரு மெயில் வந்திருந்தது.

சப்ஜெக்ட்டைப் பார்த்தாள்.

'Hello from you netmate!'

இந்த வரிகளைப் பார்த்ததும் சட்டென்று அவளுக்குள் உற்சாகம் பிரவாகம் எடுத்தது.

இன்டர்நெட் மூலமாக வந்திருந்த அந்தக் கடிதத்தின் மேல் மௌசை நகர்த்தி க்ளிக் செய்ய - திரையில் கடிதம் தெரிந்தது.

"அன்புள்ள லேகா..."

எப்படி இருக்கிறாய்...?



நாம் இன்னும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்ததில்லை.

ஆனால் உன்னை இன்டர்நெட் மூலமாகச் சந்திக்காமல் என்னால் ஒருநாள் கூட இருக்க முடிவதில்லை.

இன்டர்நெட்டில் ஃப்ரீடாக் என்ற பெயரில் நான் உருவாக்கி வைத்து இருக்கும் அரட்டை அறைக்குள் இன்று இரவு ஏழரை மணி சுமாருக்கு உன்னை எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்

உன் சஞ்சீவ்.

ரிப்ளை பொத்தானை அழுத்திவிட்டு - சப்ஜெக்ட்டில் 'Confirming our Chating!' என்ற எழுத்துக்களை டைப் செய்துவிட்டு - கடகடவென்று செய்தியை அடிக்க ஆரம்பித்தாள்.

ஹாய் சஞ்சீவ்,

நான் லேகா.

நாம் இன்டர்நெட் மூலமாக ஒருவரோடு ஒருவர் பேச ஆரம்பித்து ஓரிரு மாதங்கள் கூட ஆகியிருக்காது என்று நினைக்கிறேன்.

முகம் தெரியாத எத்தனையோ பேரை இன்டர்நெட்டில் சந்திக்கிறோம். ஆனால் எல்லோரிடமும் ஈர்ப்பு ஏற்படுவதில்லை. என்னுடைய எண்ண அலைகளும் உங்களுடைய எண்ணங்களின் அலைவரிசையும் ஒத்துப் போகிறது.

உங்கள் சிந்தனைகள் எனக்குப் பிடித்திருந்தது. அதனால்தான் ஏதேச்சையாய் ஒரு முறை ஏற்பட்ட நம் சந்திப்பு தினம் தினம் தொடர்கிறது.

நீங்கள் குறிப்பிட்ட சேட்டிங் ரூமிற்கு என்னுடைய கம்ப்யூட்டர் மூலமாக இன்று இரவு ஏழரை மணிக்கு கண்டிப்பாக நான் வந்து இணைந்து கொள்கிறேன்.

என்றும் அன்புடன்,

லேகா.

திரையில் SEND பொத்தானை க்ளிக் செய்ய லேகா எழுதிய கடிதம் இன்ஸ்ட்டன்ட்டாய் அந்த முகம் தெரியாத சஞ்சீவுக்கு அனுப்பப்பட்டு விட்டதாக கம்ப்யூட்டர் செய்தி சொன்னது.

நேரம் பார்த்தாள்.

ஆறு முப்பத்தைந்திற்கும் ஆறு நாற்பதுக்கும் இடையே தத்திக் கொண்டிருந்தது கடிகார முட்கள்.

'மெயிலைப் பார்த்து விடுவானா அந்த சஞ்சீவ்...?'

அவளுக்குள் அவளே கேள்வி எழுப்பிக் கொண்டு அவளே பதில் சொல்லிக் கொண்டாள்.

'நிச்சயம் பார்ப்பான்... ஒவ்வொரு நிமிஷமும் என் பதில் கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டே இருக்கும் சஞ்சீவ் நிச்சயம் இந்நேரம் நான் அனுப்பிய கடிதத்தைப் பார்த்து இருப்பான்...

மறுபடி வாட்சைப் பார்த்தாள்.

மிச்சமிருந்த நாற்பத்தைந்து நிமிஷங்கள் நாற்பத் தைந்து வருஷங்களைப்போல மெல்ல மெல்ல நகர ஆரம்பித்தன.

கொஞ்ச நேரம் அறைக்குள் குறுக்கும் நெடுக்கும் நடந்தாள்.

கொஞ்ச நேரம் புத்தகத்தைப் புரட்டினாள்.



கொஞ்ச நேரம் வீடியோ சி.டி. ப்ளேயரை ஆன் செய்து பார்த்தாள்.

எதிலும் மனம் லயிக்க மறுத்தது.

கவனம் வாட்சிலேயே நிலைத்திருந்தது.

முட்கள் ஏழு இருபத்தைந்தைத் தொட்டதுமே -

சேட்டிங் விண்டோவைக் கம்ப்யூட்டர் திரைக்குக் கொண்டு வந்தாள்.

ஃப்ரீ டாக் என்ற பெயரில் சஞ்சீவ் உருவாக்கியிருந்த சேட்டிங் அறையுடன் தொடர்பு கொண்டாள்.

அங்கே ஏற்கனவே சஞ்சீவ் தயாராய் இருந்தான்.

இவள் வரவை அவனுடைய கம்ப்யூட்டரின் திரையில் உணர்ந்து -

"குட் ஈவினிங் லேகா..." என்று டைப் செய்திருந்தான்.

"குட் ஈவினிங் சஞ்சீவ்..."

"எப்படி இருக்கிறாய்...?"

"...."

லேகா தயக்கமாய் மவுனம் காக்க - அவனே தொடர்ந்து டைப் செய்தான்.

"இருபத்திநாலு மணி நேரத்துக்குள் என் சௌக்கியத் துக்கு என்ன குறைச்சல் வந்து விடப் போகிறது என்று நினைக்கிறாயா லேகா...?"

"நோ... நோ... இருபத்திநாலு மணி நேரத்திற்குள் ஒருவரின் வாழ்க்கையே தலைகீழாகி விடும் வாய்ப்புகள் இருக்கிறது. சஞ்சீவ்..."

"நீ சொல்வது எனக்குப் புரியவில்லையே..."

"சில பேரின் சுயரூபங்கள் எந்த நிமிஷம் வெளிப்படும் என்று சொல்ல முடியாது..."

"யாரைச் சொல்கிறாய் லேகா...? நான் ஏதாவது தவறாகப் பேசி விட்டேனா...?"

"நோ... நோ... நான் உங்களைச் சொல்லவில்லை..."

"பிறகு யாரைச் சொல்கிறாய்... நானும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்... எப்போதுமே உன்னுடைய உரையாடலில் ஒருவித வெறுப்பு இழையோடிக் கொண்டே இருக்கிறது..."

"அதற்குக் காரணம் என்னுடைய அப்பா..."

"புரியும்படி சொல்லலாமே...?"

"உங்களை யாரோ ஒருவர் இருபத்திநாலு மணி நேரமும் உங்களுக்கே தெரியாமல் கண்காணித்துக் கொண்டிருப்பதை நீங்கள் விரும்புவீர்களா சஞ்சீவ்..."

"நிச்சயமாக விரும்ப மாட்டேன்..." அது சுதந்திரம் அற்ற நிலையாயிற்றே..."

"கரெக்ட்... என் நிலை அதுதான்..."

"உன்னை யாராவது அப்படிக் கண்காணிக்கிறார்களா...?"

"பல வருஷங்களாகவே நான் கண்காணிப்பிலேயே இருந்திருக்கிறேன்... நான் எங்கே போகிறேன்... வருகிறேன்... யாருடன் பேசுகிறேன்... என்ன பேசுகிறேன்... எல்லாமே கண்காணிக்கப்பட்டு வந்திருக்கிறது..."

"கேட்பதற்கே அதிர்ச்சியாக இருக்கிறதே... உன்னை யார் அப்படிக் கண்காணிக்கிறார்கள்...?"

"என் அப்பா..."



"உன்னுடைய அப்பாவா...?"

"ஆமாம்... ஆட்களை நியமித்து அவர்தான் என்னைக் கண்காணித்து வந்திருக்கிறார்...

"ஏன் அப்படி...?"

"நான் கோடீஸ்வரனின் மகள் அல்லவா...? யாராவது ஒட்டாண்டியைக் காதலித்து விட்டால் அவர் கவுரவம் கெட்டுப் போய் விடும் அல்லவா... அதனால்தான் நான் காலேஜிலிருந்து வீடு திரும்ப ஐந்து நிமிஷம் லேட் ஆனால் கூட பதற ஆரம்பித்து விடுவார்..."

"அவர் என்ன மனிதரா... மிருகமா? இந்த விஷயங்களையெல்லாம் தெரிந்தும் எப்படி நீ சகித்துக் கொண்டிருக்கிறாய் லேகா?"

"இத்தனை நாளாய் அரசல் புரசலாய்த் தெரியும்... இன்றைக்குதான் இந்த விஷயத்தை உறுதிப் படுத்திக் கொண்டேன்..."

"எங்கே உன் அப்பா...? அந்த மனிதரிடம் நான் நாக்கை பிடுங்கிக் கொள்கிற மாதிரி நாலு கேள்வி கேட்க வேண்டும்..."

"அவர் இப்போது வெளிநாட்டில் இருக்கிறார்... அப்படியே நீங்கள் அவரைச் சந்தித்து இதையெல்லாம் பேசினால் ஒன்று உங்கள் பேச்சை மதிக்க மாட்டார்... அல்லது... தன் செயலை நியாயப்படுத்தித்தான் அவர் பேசுவார் சஞ்சீவ்..."

"இதில் நியாயப்படுத்த எதுவுமே இல்லை லேகா... பெற்ற மகளையே இருபத்தி நாலு மணி நேரமும் கண்காணிப்புச் சிறையில் வைத்திருக்கிறார் என்றால் அவரைத் தகுந்த விதத்தில் பழி வாங்கியே தீர வேண்டும்..."

"எப்படி...?"

"சாமர்த்தியமாய் இந்தச் சிறையை உடைக்க வேண்டும்... அப்பாவுடைய ஆட்களின் கண்காணிப்பை ஏமாற்றிவிட்டு நீ சுதந்திரப் பறவையாக வேண்டும்..."

"கேட்பதற்கே ஆசையாக இருக்கிறது... ஆனால் அது முடியுமா சஞ்சீவ்..."

"ஏன் முடியாது...? உன் ஆசையை நான் நிறைவேற்றிக் காண்பிக்கிறேன்..."

"அவர்களை ஏமாற்றிவிட்டு எங்கே போவது சஞ்சீவ்...?"

"எங்காவது போவோம்... சுதந்திரமாக ஒரு மாதத்தைக் கழிப்போம்... அவருடைய செயல் உனக்கு எப்படி ஷாக்காக இருந்ததோ... அதே போல் உன்னுடைய செயலும் அவருக்கு அதிர்ச்சியைத் தரட்டும்..."

"நீங்கள் சொல்வது சரிதான் சஞ்சீவ்... அப்பா வெளியூரிலிருந்து திரும்பி வரும்போது நான் இங்கே வீட்டில் இருக்கக் கூடாது..."

"குட்... அவருடைய கண்காணிப்புச் சிறையை உடைத்துவிட்டு... நாம் இருவரும் இந்த ஊரை விட்டு வெளியேறிச் செல்ல அருமையான ஒரு திட்டத்தோடு நான் உன்னை நாளைக்குத் தொடர்பு கொள்கிறேன்..."

"செய்யுங்கள் ப்ளீஸ் சஞ்சீவ்... நான் இந்த நிமிஷத்திலிருந்து ஒரு சுதந்திரமான பொழுதுக்காகக் காத்திருக்கிறேன்..."

"குட் பை..."

"குட் பை..."

சேட்டிங் விண்டோவை க்ளோஸ் செய்தாள் லேகா.



சுதந்திரப் பறவையாகும் ஆவல்... இது நாள் வரை பார்த்திராத சஞ்சீவின் முகத்தை நேரில் பார்க்கும் ஆவல்... எல்லாமாகச் சேர்ந்து அவளுக்குள் ஏராளமாய் ரசாயன மாற்றங்களை ஏற்படுத்த ஆரம்பித்திருந்தது.

ஒரு விபரீதத்திற்கு அடிகோலுகிறாள் என்று அப்போது லேகாவுக்குத் தெரியாது.



## 3

டொக்...

டொக்...

டொக்...

கதவு தட்டப்பட - கம்ப்யூட்டர் திரையினின்றும் கவனம் கலைந்தான் சஞ்சீவ்.

குரல் கொடுத்தான்.

"யாரது?"

"நான்தான் வாசு வந்திருக்கேன்..."

"உள்ளே வா வாசு... கதவு சும்மாதான் சாத்தியிருக்கு..."

வெண்ணிற பைஜாமா அணிந்திருந்த அந்த வாசு கதவு நிலையில் இடிக்கும் அளவுக்கு வளர்ந்திருந்தான். மீசை இல்லாமல் மழிக்கப்பட்ட மொசைக் தரை முகம். உச்சந்தலை வரைக்கும் வழுக்கை மேலேறியிருந்தது.

உள்ளே வர வரவே சொன்னான்.

"என்னடா சஞ்சீவ்... புதுசா ஏதாவது தொழில் ஆரம்பிச்சிட்டியா...? எப்பப் பார்த்தாலும் கம்ப்யூட்டரும் கையுமா உக்காந்திருக்கியே...?"

சஞ்சீவ் சிரித்தான்.

''எல்லாம் ஒரு பொண்ணுக்காகத்தான்...''

''லவ்ஸா...?''

''லவ்வாவது மண்ணாங்கட்டியாவது... ஒருத்தியை மடக்கணும்ன்னு முடிவு பண்ணினேன்... ரொம்பப் பெரிய இடம்... இன்டர்நெட் மூலமாத்தான் ரூட் போட முடியும்ன்னு தெரிஞ்சது...''

''என்ன சொல்றே...?''

''கோடி கோடியா சொத்து... கார்... பங்களா... எல்லாத்தையும் விட்டுட்டு என்னை நம்பி வீட்டை விட்டு ஓடி வரத் தயாராயிட்டா...''

''டேய்...? சஞ்சீவ்?''

''ஏண்டா... உனக்கு என்னைப் பார்த்தா பொறாமையா இருக்கா...?''

''பொறாமை இல்லை. பெரிய இடம்ங்கிறே... ஏதாவது விவகாரமாயிடப் போகுது...''

''உனக்குத்தான் என்னைப் பத்தித் தெரியுமே... எதுக்கும் நான் அசர மாட்டேன். மிரட்டி உருட்டி எல்லாம் என்னைப் பணிய வைக்க முடியாது...''

''அவ உன்னைப் பார்த்திருக்காளா...?''

''ஊஹூம்..''

''சினிமாவில் வர்ற மாதிரி இருக்கே...? உன் மூஞ்சியக் கூடப் பார்க்காத அவளுக்கு எப்படி ரூட் போட்டே...?''

''மாடர்ன் சயன்ஸுக்குத்தான் ஜே போடணும்... வாழ்க இன்டர்நெட்!''



வாசு வாயைப் பிளந்து கொண்டு அவனைப் பார்த்தான்.

''கொஞ்சம் விளக்கமா சொல்லுடா... இன்டர்நெட் மூலமா எப்படி அவளுக்கு ரூட் போட்டே...?''

''அவளுக்கு இன்டர்நெட்டில் ரொம்ப ஆர்வம் இருக்குன்னு தெரிஞ்சிகிட்டேன்.. ரெகுலராச் சேட்டிங்கில் உக்காருவாள்ன்னு தெரிஞ்சது... ச்சேட்டிங் மூலமாவே அவளை வழிக்குக் கொண்டு வந்தேன்...''

''ச்சேட்டிங்கா...? அப்படின்னா...?''

''இன்டர்நெட் மூலமா அரட்டை அடிக்கறது...''

''அது எப்படி...?''

''நம்ம கம்ப்யூட்டரை இன்டர் நெட்டோட கனெக்ட் பண்ணிட்டா.. இதே மாதிரி இன்டர்நெட்டில் கனெக்ட் ஆகியிருக்கிற வேற ஒரு கம்ப்யூட்டர் முன்னால உக்காந்திருக்கிற ஆசாமியோட பேசலாம்...''

''இசிட்...?''

''இங்கே நாம கேள்வியை டைப் பண்ணினா. நாம டைப் பண்ற கேள்வி முகம் தெரியாத அந்த ஆசாமியின் கம்ப்யூட்டர் திரையில் தெரியும். அதைப் படிச்சுட்டு அவர் பதிலை டைப் பண்ணினா அவரோட பதில் நம்ம கம்ப்யூட்டர் திரையில் வெளியாகும்... இப்படியே நேரில் பேசிக்கிற மாதிரி கம்ப்யூட்டர் கீ போர்டு மூலமா அரட்டை அடிக்கலாம்...''

''அடக் கடவுளே... உலகம் எங்கேயோ போயிட்டிருக்கு... நான் இன்னும் தெருக் கோடியில் நின்னு சைட் அடிச்சுகிட்டிருக்கேனே...''

''உன்னோட லெவல் அவ்வளவுதான்...''

"இந்த விஷயத்தைச் சொல்லி என்னோட பொறாமையை அள்ளிக் கொட்டிக்கத்தான் நீ போன் பண்ணி என்னை வரச் சொன்னியா...?"

"இல்லை... உன்னோட உதவி எனக்குத் தேவை..."

"என்ன உதவி...?"

"அவ அப்படி இப்படிப் போயிடக் கூடாதுன்னு அப்பன்காரன் ப்ளாக் கேட்ஸ் போட்டிருக்கான்... இருபத்தி நாலு மணி நேரமும் அவளை நிழல் மாதிரி அந்த ஆட்கள் கண்காணிச்சிட்டிருப்பாங்க... அவ வீட்டை விட்டு வெளியே கிளம்பினா உஷாராயிடுவாங்க... அவளை ஃபாலோ பண்ண ஆரம்பிச்சிடுவாங்க... அவளுக்கு போன் பேசினா ரெக்கார்டு பண்ணிடுவாங்க... அந்த அளவுக்கு தீவிர கண்காணிப்பு... அதனாலதான் அவளை மடக்க இன்டர்நெட்டைத் தேர்ந்தெடுத்தேன்."

"நான் என்ன உதவி செய்யணும்ன்னு சொல்லு..."

"அந்த பாதுகாப்பு வளையத்தை உடைக்கணும்... அதுக்காகத்தான் உன்னோட உதவி தேவை..."

"எப்படி?"

"நான் சொல்ற நேரத்தில் வீட்டை விட்டு வெளியே வர பட்சி தயாராயிட்டா. அப்படி அவ வர்றப்போ அந்த ஆட்களும் அவளை கண்காணிக்க ஆரம்பிப்பாங்க... நீ அவங்களை டைவர்ட் பண்ணனும்..."

"அந்த ஆட்களை உனக்குத் தெரியுமா?"

"தெரியும்... அவங்களை நான் உனக்கு அடையாளம் காட்டறேன்..."

"எப்படி அவங்களை டைவர்ட் பண்றது?"



"பகல் நேரத்தில் லேகா, வெளியே போறப்ப குறைஞ்சது மூணு பேராவது அவளைக் கண்காணிச்சிட்டிருப்பாங்க... அப்போ அவளைக் கூட்டிட்டுப் போறது நடக்காத காரியம்... ராத்திரி வேளையில் அவ வெளியே எங்கேயும் போறதில்லைங்கறதினால ட்யூட்டி சார்ஜை ஒரே ஒருத்தன்தான் எடுத்துக்கிறான்... பங்களா வாசலிலேயே அவன் கவனம் இருக்கும்... அசந்தர்ப்பமா அவ வெளியே போக வேண்டி நேர்ந்தால் மட்டும்தான் அவனுக்கு வேலை..."

"உன்னோட திட்டம் எனக்குப் புரியுது சஞ்சீவ்... அநேகமா அசந்தர்ப்பமா ராத்திரி வேளையில் அவ வெளியே போற சம்பவம் என்னிக்குமே இதுவரை நடந்திருக்காது... அதனால ராத்திரியில் சார்ஜ் எடுத்துக்கிற ப்ளாக் கேட் கொஞ்சம் அலட்சியமாகத்தான் ட்யூட்டியில் இருப்பான்... அவனை டைவர்ட் பண்றது சுலபம்... அப்படித்தானே...?"

"யூ ஆர் கரெக்ட்... அது மட்டுமில்லை வாசு... மூணு பேர்ர பகலில் சமாளிப்பதை விட ராத்திரி நேரத்தில் ஒரே ஒருத்தனை சமாளிச்சாப் போதுமே..."

"அப்போ இந்த ஆபரேஷனை என்னிக்கு வெச்சிக்கலாம்...?"

"நீ என்னிக்கு தயாரா இருக்கியோ அன்னிக்கி... அவளோட அப்பா வெளிநாட்டிலிருந்து திரும்பி வர குறைஞ்சது பத்துப் பதினைஞ்சு நாட்களாகும்... அதுக்குள்ளே ஒரு நாள் அவளைக் கூட்டிட்டு கம்பி நீட்டிடணும்..."

ஆர்வமாய்ச் சொன்ன சஞ்சீவை நிமிர்ந்து பார்த்தான் வாசு.

''எல்லாம் சரிதான் சஞ்சீவ்... நீ எதுக்காக இந்தப் பொண்ணைத் தள்ளிட்டுப் போறேன்னு எனக்குப் புரியலையே...? அவளை லவ் பண்றியான்னு கேட்டா இல்லைன்னு சொல்றே...?''

''ஒரு பொண்ணைக் காதலிச்சு... கல்யாணம் பண்ணிக்கோன்னு அவ நச்சரிச்சு - இதையெல்லாம் என்னால சகிச்சிக்க முடியாது... நான் இன்னும் நிறைய நாளைக்கு சுதந்திரமா இருக்க விரும்பறேன்.''

''சுதந்திரமா இருக்கணும்... அதே சமயத்தில் சுகமாவும் இருக்கணும்... அதானே உன் திட்டம்...?''

வாசு கேட்க - சஞ்சீவ் பதில் எதுவும் சொல்லாமல் மவுனமாய் ஒரு புன்னகை பூத்தான்.

''உன்னோட புன்னகைக்கு என்ன அர்த்தம்..?''

''ஏதாவது ஒரு மலை வாசஸ்தலம்...''

''நீ ஏதோ தப்பு பண்ணப்போறேன்னு என்னோட உள்ளுணர்வு சொல்லுது சஞ்சீவ்...''

மறுபடியும் சிரித்தான் சஞ்சீவ்.

''அழகான பொண்ணு மேல ஆசை வெச்சிட்டா... அதுக்கப்புறம் எந்தத் தப்பையுமே பண்ணிப் பார்க்கத் தான் தோணும்... எந்தத் தப்புப் பண்ணினாலும் தப்பில்லைன்னுதான் தோணும்...''

சொன்னவனைக் கவலையான கண்களால் நனைத்தான் வாசு.





## 4

ஸ்விஸ் மேட் வால் க்ளாக் பத்து முறை ஒரு பறவையைப் போல இசையைக் கிறீச்சிட்டது. லேகா வேகமாய்ப் போய் கம்ப்யூட்டரின் முன்னே அமர்ந்தாள்.

அவர்களின் அரட்டை அறையில் நுழைந்திருந்தான் சஞ்சீவ்.

''லேகா...?''

''எஸ்... சஞ்சீவி...''

''நீ ரெடியா...?''

''ம்...''

''வீட்டில் வேலைக்காரி தூங்கி விட்டாளா...?''

''அவள் பத்து மணிக்கெல்லாம் டாணென்று படுத்து விடுவாள்...''

''இடையில் எழுந்து களேபரம் பண்ணி விட மாட்டாளே...?''

''காலை ஐந்து மணியிலிருந்து பம்பரமாய்ச் சுழல்பவள்... கட்டையைச் சாய்த்தால் அடித்துப் போட்ட மாதிரி தூங்கிப் போய் விடுவாள்... தலையில் இடியே விழுந்தாலும் அவளுக்குத் தெரியாது...

''அப்படியென்றால் சரியாய்ப் பத்து பத்துக்கெல்லாம் நீ வீட்டை விட்டு வெளியே வரலாம்.''

''கூர்க்கா மற்றும் ஒரு ப்ளாக் கேட் ஆசாமியை சமாளிக்க வேண்டுமே...?''

''அந்தக் கவலை உனக்கு வேண்டாம்... இந்நேரம் என்னுடைய நண்பன் வாசு அவர்களை சமாளித்திருப்

பான்... சந்தேகமிருந்தால் நீ கூர்க்காவுடைய கூண்டை எட்டிப் பார்..."

லேகா ஜன்னல் திரையை விலக்கிப் பார்த்தாள்.

கூண்டுக்குள் கூர்க்கா தாறுமாறாய்ச் சரிந்து விழுந்திருந்தான்.

"சஞ்சீவ்... உங்கள் நண்பர் கூர்க்காவை என்ன செய்தார்...?"

"பயப்படாதே... அகிம்சை வழியில்தான் அவன் கூர்க்காவை இந்த நிலைமைக்கு ஆளாக்கியிருப்பான்."

"புரியும்படி சொல்லுங்கள்."

"மயக்க மருந்தின் உதவியால் அவனை சாய்த்திருக்கிறான்... அந்த ப்ளாக் கேட் ஆசாமிக்கும் இதே நிலைமை தான்..."

"அவர்கள் எழுந்து விட மாட்டார்களே?"

"இன்னும் குறைந்தது ஆறு மணி நேரத்துக்கு குறட்டைச் சத்தத்தைத் தவிர வேறு சத்தம் அவர்களிடம் கேட்காது... நீ தைரியமாகக் கிளம்பி வா..."

"நீங்கள் ரயில்வே ஸ்டேஷனில் ஹிக்கின்பாதம்ஸ் புத்தக நிலையம் அருகே நிற்கிறீர்களா...?"

"ஆமாம்... அதில் எந்த மாற்றமும் இல்லை."

"உங்களை நான் எப்படி அடையாளம் தெரிந்து கொள்வது?"

"உன்னை எனக்குத் தெரியுமே... நான் வந்து உன்னை சந்திக்கிறேன்."

"எ... என்னை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா...?"



"பார்த்திருக்கிறேன்..."

"இத்தனை நாள் நீங்கள் இந்த விஷயத்தை எனக்குச் சொல்லவே இல்லையே...?"

"இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது. என்னைப் போல ஆசாமிகளை யாருக்கும் தெரியப் போவதில்லை... ஆனால் உன்னைப்போல கோடீஸ்வரனின் வாரிசுகளை மற்றவர்கள் அறிந்து வைத்திருப்பதில் ஆச்சரியம் எதுவுமே இல்லை."

"ஓகே சஞ்சீவ்... நாம் நேரில் பார்ப்போம். உங்கள் சர்ட்டின் நிறத்தையாவது சொல்லுங்கள்... கூட்டத்தில் தேட வசதியாக இருக்கும்..."

"இளநீலம்..."

"தாங்க்யூ... நான் கிளம்பி வந்து கொண்டே இருக்கிறேன்."

"கம்ப்யூட்டரை அணைத்து விடட்டுமா..?"

"ம்..."

பவர் சுவிட்சைத் தட்டினாள் லேகா.

அறைக்கு வெளியே எட்டிப் பார்த்தாள்.

தொலைவில் ஸ்டோர் ரூம் வராந்தாவில் வேலைக்காரி தங்கம் ஒரு மூட்டையைப் போல சுருண்டு கிடப்பது தெரிந்தது.

மீண்டும் அறைக்குள் வந்தாள்.

கைக்கு அடக்கமான சின்ன ப்ரீப்கேசில் அளவோடு உடைகளை எடுத்து வைத்திருந்தாள்.

ப்ரீஃப்கேசை எடுத்துக் கொண்டு மெல்ல வெளியே வந்தாள்.

அறை வாயிலை தொட்ட விநாடி -

ஙீ...

ஙீ...

ஙீ...

டெலிபோன் ரீங்காரமிட்டது.

ஒரு விநாடி நிதானித்தவள் - ரிசீவரை எடுத்து காதில் வைத்தாள்.

''ஹலோ...''

''யாரு லேகாவா...? நான் உன் அப்பா பேசறேன்...''

''சொல்லுங்க...''

''இன்னும் என் மேல கோபமா இருக்கேன்னு நினைக்கிறேன்... உன்னோட குரலே அதைச் சொல்லுது...''

''என்ன பேசாம இருக்கே...?''

''நான் பேசறதுக்கு எதுவுமில்லைப்பா.''

''இங்கே பாரும்மா... உன்னோட மனசுக்குள் இப்போ என்ன மாதிரி எண்ணங்கள் ஓடிட்டிருக்கும். உனக்கு என் மேல எவ்வளவு கோபம் இருக்கும்... எல்லாமே எனக்குத் தெரியும் லேகா... ஆனா போன்ல உன்னை சமாதானப் படுத்தறதைவிட நேரில் பார்க்கறப்போ விபரமா உன் கிட்ட பேசிக்கலாம்னு நினைக்கிறேன்.''

''நீங்க நேரில் என்னை பார்க்க முடியாது.''

''என்ன சொல்றே...?''

''இப்போதைக்கு நான் எதுவும் சொல்றதா இல்லை. நீங்க வெளிநாட்டு ப்ரோக்ராமை முடிச்சிட்டு வீட்டுக்குத் திரும்பி வர்றப்போ நான் எழுதி வெச்சிட்டுப் போற



லெட்டர் மட்டும் உங்களுக்காக இந்த வீட்டில் காத்திட்டிருக்கும்... அதைப் படிச்சுத் தெரிஞ்சுக்கங்க.''

''லேகா... லேகா... அவசரப்பட்டு தப்பான எந்த முடிவுக்கும் போகாதே?''

''ஸாரிப்பா... சொல்லாம போறமேங்கற ஒரு சின்ன வருத்தம் மட்டும் என் மனசில் இருந்தது; இப்போ அந்த வருத்தமும் எனக்கு இல்லை... குட் பை.''

''லேகா... லேகா... லேகா...''

மறுமுனையில் ராமகிருஷ்ணன் பதட்டமாய் அலறிக் கொண்டிருக்க - ரிசீவரை சாத்திவிட்டு அலட்சியமாய் அறையைக் கடந்தாள்.

போர்டிகோவை தொட்டபோது, சில்லென்று குளிர் காற்று அவளைத் தழுவியது.

மெர்க்குரி விளக்கின் வெளிச்சம் வாசல் வரை பரவிக் கிடக்க - மயங்கிச் சரிந்து கிடக்கும் கூர்க்காவை பார்த்த படியே - கிராதி கேட்டை சத்தமில்லாமல் திறந்தாள் லேகா.

ப்ரீஃப்கேசோடு ஐந்து நிமிஷ நடை.

மெயின் ரோட்டை எட்டிப் பிடித்ததும் குறுக்கே போன ஆட்டோவை கையைக் காட்டி நிறுத்தினாள்.

நரைத்த தலையோடு டிரைவிங் இருக்கையில் நிரம்பியிருந்த அந்த வயதான டிரைவர், ''எங்கேம்மா போகணும்...?'' என்றார்.

''ரயில்வே ஸ்டேஷன்...''

''சேரன் எக்ஸ்பிரசை பிடிக்கணுமா?''

"இல்லை... பிருந்தாவன் எக்ஸ்பிரஸ்..."

சொல்லிக்கொண்டே ஆட்டோவின் பின் இருக்கையில் நிரம்பினாள்.

ஆட்டோ டிரைவர் கிக்கரை உதைத்துக் கொண்டே வியப்பை வெளிப்படுத்தினார்.

"பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் இந்த நேரத்தில் கிடையாதே...? நீங்க எந்த ஊருக்குப் போகணும்?"

ஆட்டோ விரைய ஆரம்பித்திருக்க... லேகா பதில் சொன்னாள்.

"பெங்களூர்..."

"இப்போ பெங்களூர் போறதுக்கு ட்ரெயின் எதுவும் இருக்கிற மாதிரி எனக்குத் தெரியலைம்மா."

சொல்லிவிட்டு அவர் சாலையில் கவனமாகிக் கொண்டார்.

லேகாவுக்குள் யோசனை வட்டங்கள் சுழல ஆரம்பித்தன.

'பத்தரை மணிக்குள் வந்துவிடு... பிருந்தாவன் எக்ஸ்பிரஸ் பிடித்து பெங்களூர் போய் விடலாம் என்று தானே சஞ்சீவ் சொல்லியிருந்தார்.'

'ஏன் அப்படிச் சொன்னார்?'

'ஆட்டோ டிரைவர் தெரியாமல் சொல்கிறாரா? இல்லை... சஞ்சீவ் சொன்னது பொய்யா?'

லேகாவின் இருதய பிரதேசத்தில் கலவர மேகங்கள் மிதக்க ஆரம்பித்தன.





# 5

ராமகிருஷ்ணன் முகப்பரப்பின் ஒவ்வொரு மூலையிலும் உச்ச பட்சமாய் கவலையைத் தோய்த்து வைத்திருந்தார்.

பெரிய பெரிய சூட்கேஸ்கள் இன்னமும் அதனதன் இடத்தில் எடுத்து வைக்கப்படாமல் அப்படியே ஹாலின் ஓரமாய் கிடந்தன.

கண்களில் பயண களைப்பு தீவிரமாய் அப்பிக் கிடந்தது.

அவருக்கு எதிரே இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் உட்கார்ந்திருந்தார்.

"நீங்க இப்பதான் வந்தீங்களா ராமகிருஷ்ணன்?"

"ஆமா... நேத்திக்கு போன் பண்ணினப்பதான் விஷயம் தெரிஞ்சது. நான் என்ன வேலையா வெளிநாடு போனேனோ அதை கேன்சல் பண்ணிட்டு ஃப்ளைட் பிடிச்சு உடனடியாக கிளம்பி வந்துட்டேன்."

"போன்ல உங்க மகள் லேகா என்ன சொன்னா?"

"என் மேல அவளுக்குக் கோபம் இருந்திருக்கு?"

"என்ன கோபம்?"

"நான் அவளோட பாதுகாப்புக்காக சில ப்ளாக் கேட்ஸை அவளுக்கே தெரியாம நியமிச்சிருந்தேன். இப்போ அவளுக்கு அந்த விஷயம் தெரிஞ்சிடுச்சு... அவளோட கோபத்துக்கு காரணம் இதுதான்."

"அவளோட பாதுகாப்புக்காகத்தானே நீங்க ப்ளாக் கேட்ஸ் போட்டிருந்தீங்க...? இதில் கோபப்பட என்ன இருக்கு?"

"அவளுக்கே தெரியாம அவர்களை நியமிச்சிருந்தது தான் அவளோட கோபத்துக்குக் காரணம்... நான் அவளை சந்தேகப்பட்டு கண்காணிக்கிறதா அவ தப்பா நினைச்சிட்டா."

"ஏன் அப்படி அவளுக்கே தெரியாம பாதுகாவலர்களை நியமிச்சீங்க?"

"அவ சுதந்திரமான உணர்வோட இருக்கணும்ங்கிறது ஒரு காரணம்... ரெண்டாவது, துறுதுறுப்பான இந்த வயதில் ப்ளாக் கேட்ஸை ஏமாத்திட்டு ஃப்ரெண்ட்ஸோட எங்கேயாவது போறதுக்கு வாய்ப்பிருக்கு. விளையாட்டுத் தனமா அவ செய்கிற இந்த காரியம்... விபரீதத்தில் போய் முடிஞ்சிடக் கூடாதே?"

"இல்லை மிஸ்டர் ராமகிருஷ்ணன்... பக்குவமா அவளுக்கு எடுத்துச் சொல்லி, அவளோட அனுமதியோட நீங்க பாதுகாவலர்களை நியமிச்சிருக்கலாம்... ஏன்னா இந்தக் காலத்துப் பெண்கள் சுதந்திர உணர்வு அதிகம் உள்ளவங்க... தன்னிச்சையா சிந்திக்கக் கூடிய ஆற்றல் உள்ளவங்க."

"யூ ஆர் கரெக்ட் இன்ஸ்பெக்டர். இந்த விஷயத்தில் நான் தப்புக் கணக்குத்தான் போட்டுட்டேன்."

"நேத்திக்கு ராத்திரி பத்து மணி சுமாருக்கு... அவ வீட்டை விட்டுப் போனாளா...?"

"ஆமா இன்ஸ்பெக்டர்."

"அப்போ அவளோட பாதுகாப்புக்கு யாரும் இல்லையா?"

"வீடு பூராவும் எலக்ட்ரானிக் ஸேஃப்டி டிவைஸஸ் நிறைய பொருத்தியிருக்கோம். அந்நியர்கள் யாரும் அவ்வளவு சுலபத்தில் வீட்டுக்குள் நுழைய முடியாது.



அப்படி அத்துமீறி நுழைய முயற்சி பண்ணினா... ஃப்ளட் லைட்ஸ் பங்களாவை பகலாக்கிடும். சைரன் அலற ஆரம்பிச்சிடும். ப்ராப்பர் கீ நம்பர் தராம கதவை யாரும் திறக்கவும் முடியாது; இது தவிர கேட்டில் ஒரு கூர்க்கா இருக்கான்... அவனைத் தவிர ஒரு ப்ளாக் கேட்..."

"எலக்ட்ரானிக் செக்யூரிட்டி டிவைஸசை லேகாவே அணைச்சிட்டுப் போயிருப்பாள்னு நினைக்கிறேன்."

"ஆமா இன்ஸ்பெக்டர். அந்த கருவிகளை ஆஃப் பண்ணி செயலிழக்க வெச்சிட்டு வீட்டை விட்டு வெளியேறிப் போயிருக்கா."

"கூர்க்காவும் ப்ளாக் கேட் ஆசாமிக்கும் அவ வெளியேறின விஷயம் தெரிஞ்சிருக்குமே...?"

"அவங்களையும் ஏமாத்திட்டுப் போயிருக்கா இன்ஸ்பெக்டர்."

"எப்படி?"

"அவங்களுக்கு மயக்க மருந்தை ஸ்ப்ரே பண்ணி மயக்கப்படுத்திட்டு வீட்டை விட்டு வெளியேறியிருக்கா."

"ஒரு பொண்ணால தன்னந்தனியா இது சாத்தியமா மிஸ்டர் ராமகிருஷ்ணன்."

"சாத்தியமில்லைதான்... அவளுக்கு எவனோ ஒருத்தன் உதவி பண்ணியிருக்கான்."

"என்ன சொல்றீங்க?"

"அவ லவ் அஃபேர்ல மாட்டிகிட்டிருக்காள்னு நினைக்கிறேன். இதைப் பயன்படுத்தி அவன் லேகாவை கூட்டிட்டுப் போயிட்டான்."

"இந்த லவ் விவகாரம் உங்களுக்கு முன்னமே தெரியுமா?"

"தெரியாது. இன்ஸ்பெக்டர். தெரிஞ்சிருந்தா இவ்வளவு தூரம் நான் வளர விட்டிருக்க மாட்டேன்."

"இப்போ எப்படித் தெரிஞ்சது...? நேத்திக்கு போன் பண்ணினப்போ லேகா சொன்னாளா?"

"இல்லை..! அவ எனக்கு ஒரு லெட்டர் எழுதி வெச்சிட்டுப் போயிருக்கா... அந்த லெட்டர் மூலமாத்தான் எனக்கு விஷயம் தெரிஞ்சது."

"அந்த லெட்டர் எங்கே?"

ராமகிருஷ்ணன் எழுந்து போய் மேஜை மேல் வைத்திருந்த அந்த துண்டு பேப்பரை எடுத்துக் கொண்டு வந்தார்.

கார்த்திகேயனிடம் நீட்டினார்.

"இதுதான் அந்த லெட்டர்."

கார்த்திகேயனின் பார்வை அந்த கிறுக்கலான கடிதத்தின் மேல் விழுந்தது.

**அன்புள்ள அப்பா...**

**என் மனதுக்குப் பிடித்தவரோடு ஒரு சுதந்திரமான வாழ்க்கையை தேடிப் போகிறேன். என்னைத் தேட வேண்டாம்.**

இப்படிக்கு,

லேகா.

"சுதந்திரமானங்கிற வார்த்தையை அண்டர்லைன் பண்ணியிருக்கா பாருங்க ராமகிருஷ்ணன்."

"ஆமா... அவளுக்கு இருக்கிற மனக்குறையை சாதகமாக்கிட்டு எவனோ அவளைக் கூட்டிட்டுப் போயிருக்கான் இன்ஸ்பெக்டர்."



"கூர்க்காவோ.. ப்ளாக் கேட் ஆசாமியோ வந்தவனைப் பார்த்திருக்க வாய்ப்பிருக்கு இல்லையா?"

"இருக்கலாம்!"

"நீங்க அவங்ககிட்டே பேசிப் பார்த்தீங்களா?"

"ஜஸ்ட்... இப்போதான் நான் வந்தேன். இன்னும் யார் கிட்டேயும் நான் விபரமா பேசலை."

"அவங்க இங்கே இருக்காங்களா?"

"ரெண்டு பேருமே இருக்காங்க இன்ஸ்பெக்டர்."

"கூப்பிட்டு அனுப்புங்க... நான் அவங்ககிட்டே விசாரணை பண்ணிப் பார்க்கணும்."

ராமகிருஷ்ணனின் பார்வை ஓரமாய் நின்றிருந்த வேலைக்காரி தங்கத்திடம் போனது.

"தங்கம்..."

"இதோ அவங்களை கூப்பிடறேங்கய்யா..."

அவள் குறிப்பால் உணர்ந்து கொண்டு பதிலளித்து விட்டுப் போனாள்.

சற்று நேரத்தில் திடகாத்திரமான அந்த இரண்டு பேரும் அவர்கள் முன்னால் வந்து நின்றார்கள்.

"நீங்க ரெண்டு பேரும் எவ்வளவு நாளா இங்கே வேலை பார்க்கறீங்க?"

"நான் அஞ்சு வருஷமா இங்கேதான் இருக்கேன் ஸார்..." என்றான் அந்த கூர்க்கா.

"நான் மூணு வருஷமா அய்யா கிட்ட வேலை பார்க்கிறேன்..."

கறுப்புப் பூனை பாதுகாவலன் பதிலளிக்க - இருவரையும் பொதுவாய் பார்த்து, மறுபடியும் கார்த்திகேயன் கேட்டார்.

"ராத்திரி என்ன நடந்தது...? எப்படி லேகாவை கோட்டை விட்டீங்க...?"

"அந்தம்மா இப்படி போகும்னு நாங்க நினைக்கவே இல்லை ஸார்... யாராவது நேரடியா அட்டாக் பண்ணியிருந்தா நிச்சயமா சமாளிச்சிருப்போம்... இப்படி தந்திரமா மறைஞ்சிருந்து எங்களை அட்டாக் பண்ணிட்டுத் தப்பிச்சுப் போயிருக்கறதை இப்ப நினைச்சாலும் உடம்பெல்லாம் எரியுது."

"யார் அட்டாக் பண்ணினாங்க...? எப்படி அட்டாக் பண்ணினாங்க...?"

"ராத்திரி ஒன்பதரை மணி இருக்கும். பங்களாவை ரவுண்ட்ஸ் போறதுக்காக கூண்டை விட்டு வெளியே வந்தேன். இறங்கி வந்ததுதான் தாமதம்... பின்னாடி என்னவோ சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்... மசமசப்பா ஒரு உருவம் தெரிஞ்சது. நான் சுதாரிச்சு ஏதும் பண்றதுக்குள்ளே என் முகத்தை மயக்க மருந்து தோய்ச்ச பஞ்சால அமுக்கி மயக்கப்படுத்திட்டாங்க."

"ஏறக்குறைய என்னையும் இதே போலத்தான் அட்டாக் பண்ணினாங்க. இன்ஸ்பெக்டர்..." என்றான் ப்ளாக் கேட் ஆசாமி.

"வந்த ஆளை உங்களால அடையாளம் பார்க்க முடிஞ்சதா...?"

"இல்லை ஸார்... ஆள் ஒல்லியா, உயரமா இருந்தான்..."

ராமகிருஷ்ணன் இருவரையும் லேசான கோபத்தோடு பார்த்தார்.



"கரெக்ட்டா யோசிச்சு பதில் சொல்லுங்க... நீங்க சொல்ற பதிலை வெச்சுத்தான் இன்ஸ்பெக்டர் இன்வெஸ்டிகேட் பண்ணப் போறார்..."

"நான் சரியாத்தான் சொல்றேன் ஸார்..."

"நானும் சரியாத்தான் சொல்றேன் ஸார்... வந்தவன் குண்டா, குள்ளமாத்தான் இருந்தான்..."

"என்னோட யூகம் சரியா இருந்தா, ரெண்டு பேருமே சரியாத்தான் சொல்றாங்க ராமகிருஷ்ணன்."

"உங்க யூகம் என்ன...?"

"கூர்க்காவையும், ப்ளாக் கேட் ஆசாமியையும் ரெண்டு வெவ்வேறு நபர்கள்... ஏறக்குறைய ஒரே நேரத்தில் அட்டாக் பண்ணியிருக்காங்க..."

நிமிர்ந்தார் ராமகிருஷ்ணன்.

"அப்படியா சொல்றீங்க...?"

"இவங்க அடையாளம் சொல்றதைப் பார்த்தா அப்படித் தான் நினைக்கத் தோணுது."

"அப்படின்னா, லேகா யாரோ ஒருத்தன்கூட ஓடிப் போகலையா...? க்ரூப்பா சிலர் சேர்ந்து போயிருக்காங்களா...?"

"மே பி... அல்லது லேகா யார் கூட ஓடிப் போனாளோ... அந்த எக்ஸின் நண்பர்கள் அவனுக்கு உதவி செஞ்சிருக்கலாம்..."

"இவ்வளவு ரிஸ்க் எடுத்து லேகாவை கூட்டிட்டுப் போயிருக்கறது உறுத்தலா இருக்கு..."

"இந்தக் காலத்து இளைஞர்களுக்கு துணிச்சல் அதிகம் ராமகிருஷ்ணன்... எப்பேர்ப்பட்ட ரிஸ்க்கையும் எடுத்துடுவாங்க."

அவருக்கு மறுத்தலாய் தலையாட்டிக் கொண்டே ராமகிருஷ்ணன் சொன்னார்.

"என்னோட கவலை வேற..."

"தெரியும்... காதல்ங்கிற பேரில் மகளைக் கூட்டிட்டுப் போய், அவன் ஏதாவது பண்ணிடுவானோன்னு பயப் படறீங்க...!"

"அப்படி ஒரு கவலை இருக்கு. ஆனா எனக்கு லேகா மேலேயும் நிறைய நம்பிக்கை இருக்கு. கற்பு விஷயத்தில் அவ்வளவு சுலபத்தில் ஒருத்தன்கிட்டே ஏமாந்துட மாட்டா... நல்லா சிந்திக்கக்கூடிய தெளிவான புத்தியுள்ள பெண். என்னோட கவலை வேற இன்ஸ்பெக்டர்."

- சொன்ன ராமகிருஷ்ணனை புதிராகப் பார்த்தார் கார்த்திகேயன்.

"உங்க கவலை என்ன...? அதை மனம் திறந்து சொல்லுங்க..."

ஒரு விநாடி - தயக்கத்தோடு சுற்றிலும் பார்த்தவர் - பிறகு மெதுவான குரலில் சொன்னார்.

"இங்கே நின்னு பேச விரும்பலை... வாங்க என்னோட ஆபீஸ் ரூமுக்கு போயிடலாம்."

கார்த்திகேயன் நெற்றியைச் சுருக்கிக் கொண்டே கூர்க்காவையும், ப்ளாக் கேட் ஆசாமியையும் அனுப்பி விட்டு - ராமகிருஷ்ணனின் பின்னால் நடந்தார்.

ஹாலை ஒட்டினாற்போல இடதுபுறம் இருந்த ஆபீஸ் அறைக்குள் நுழைந்தார்கள்.

தானியங்கி கதவு ஹைட்ராலிக் பிஸ்டனின் உதவி யால் நச்சென்று அதுவாகவே சாத்திக் கொண்டது.



தன்னுடைய சுழல் நாற்காலியில் அமர்ந்து கொண்டே கலவரம் படர்ந்த முகத்தோடு சொன்னார் ராமகிருஷ்ணன்.

"லேகாவோட உயிருக்கு ஏராளமான ஆபத்து இருக்கு இன்ஸ்பெக்டர்... அது தெரியாம அவ என் மேல கோபிச் சிக்கிட்டு, எவனையோ நம்பி போயிருக்கா."

"அவ உயிருக்கு என்ன ஆபத்து? கொஞ்சம் புரியும்படி சொல்லுங்க ராமகிருஷ்ணன்."

"இவ்வளவு ரிஸ்க் எடுத்து செக்யூரிட்டி பாதுகாப்பு களை உடைச்சிக்கிட்டு அவளை கூட்டிட்டுப் போயிருக் கான்னா விஷயம் தெரிஞ்சுதான் கூட்டிட்டுப் போயிருப்பா னோன்னு எனக்கு சந்தேகமா இருக்கு."

"என்ன விஷயம் தெரிஞ்சு கூட்டிட்டுப் போயிருக் கான்னு சொல்றீங்க...?" புதிர் போடாம வெளிப்படையா விஷயத்தை உடைங்க ராமகிருஷ்ணன்."

"இன்னித்த தேதிக்கு லேகாவோட உயிரின் மதிப்பு எட்டு கோடி..."

"உங்க சொத்து கணக்கை சொல்றீங்களா...? சொத்துக் காக ஆசைப்பட்டு உங்க சொந்தக்காரங்க யாராவது லேகாவை கொலை செஞ்சிடுவாங்கன்னு பயப்படறீங் களா...?"

"நோ... நோ... என்னோட சொத்தின் மதிப்பு இன்னும் அதிகமா தேறும்."

"அப்படின்னா... நீங்க சொல்ற அந்த எட்டு கோடி எதை குறிக்கிறது?"

"லேகாவின் உடம்புக்குள் மதிப்பு வாய்ந்த ஒரு வைரம் இருக்கு... நான் அதைத்தான் எட்டு கோடின்னு சொல்றேன்."

கார்த்திகேயன் மெல்லிய திகைப்போடு நிமிர்ந்தார்.

''லேகாவின் உடம்புக்குள்ளே வைரமா?''

''ஆமா இன்ஸ்பெக்டர்...''

''உங்களுக்குச் சொந்தமான வைரத்தை பாதுகாப்பு கருதி, அவளோட உடம்புக்குள்ளே வெச்சிருக்கீங்களா...?''

''சேச்சே... சொந்த மகளையே ஸேஃப்டி லாக்கரா பயன்படுத்தற அளவுக்கு நான் பணத்தாசை பிடிச்சவன் இல்லை...''

''அப்படின்னா லேகாவின் உடம்புக்குள்ளே வைரம் இருப்பது எப்படி? அதைப் பத்தி அவளுக்குத் தெரியுமா?''

''அதைப் பத்தி அவளுக்கே தெரியாது. அவளுக்கு ஆறு வயசா இருக்கிறப்பவே அந்த வைரம் அவ உடம்புக்குள்ளே ஆபரேஷன் மூலமா பொருத்தப்பட்டாச்சு.''

''எதுக்காக?''

''அவளுக்கு நரம்பு சம்பந்தமான ஒரு அபூர்வ வியாதி இருந்தது. எபிலெப்சி வகையைச் சேர்ந்தது... உயிரையே குடிக்கக்கூடிய ஆபத்தான வியாதி. அதை குணமாக்குறதுக்காக பிஞ்சுக் குழந்தையான லேகாவை தூக்கிட்டுப் போகாத டாக்டர் இல்லை. எல்லோருமே கையை விரிச்சிட்டாங்க... கடைசியில் மதன்ராய்னு ஒரு டாக்டரை சந்திச்சோம். அவர் ஜெம்மாலஜிஸ்ட்டும்கூட இயற்கை கற்களிலிருந்து வெளிப்படக்கூடிய கதிர் வீச்சின் மூலமா உடல் வியாதிகளுக்கு நிரந்தர தீர்வு காண முடியும்னு கண்டு பிடிச்சு... அந்த முறையில் சிகிச்சை அளிச்சிட்டு வர்றவர் அவர்தான். இந்த சிகிச்சையை



பரிந்துரைச்சார் ஸார். லண்டன்ல இருக்கும் ஒருத்தர் கிட்டே இருந்து எட்டு கோடி மதிப்புள்ள அபூர்வ வைரத்தை தருவிச்சு... அதை லேகாவின் இடது கைமணிக் கட்டுக்கருகே நாடி நரம்புகளில் கதிர்வீச்சு பாயும் வகையில் பொருத்தியிருக்கார்.

அந்த வைரத்தின் கதிர்வீச்சு நரம்புகளில் பாய்ஞ்சிட்டிருக்கிற வரைக்கும் லேகாவுக்கு அவளுக்கிருக்கும் எபிலெப்சி வியாதியால் எந்த பாதிப்பும் இல்லை. அந்த வைரத்தை உடம்பை விட்டு எப்போ எடுத்தாலும் எபிலெப்சி தீவிரமா அட்டாக் ஆகி சில மணி நேரத்திலேயே லேகா உயிரை விடக்கூடிய பரிதாபம் இருக்கு...''

ராமகிருஷ்ணன் விபரமாய் சொல்லி முடிக்க...

கார்த்திகேயன் அயர்ந்து போய் அவரைப் பார்த்தார்.

''மை குட்னஸ்... இவ்வளவு பெரிய ஆபத்தை தனக்குள்ளே வெச்சிருக்கிற விபரம் தெரியாம லேகா, யாரோ ஒருத்தன் கூட போயிருக்காளே...?''

''அவன் அவளை காரியத்தோட கூட்டிட்டுப் போனானா அல்லது சிறு பிள்ளைத்தனமா கூட்டிட்டுப் போனானான்னு தெரியலை. எப்படியிருந்தாலும் அவளோட உயிருக்கு ஆபத்து இருக்கு இன்ஸ்பெக்டர்... இத்தனை நாள் அவ என்னோட கண்காணிப்பிலேயே இருந்ததால யாரும் அவளை நெருங்க முடியாம இருந்தது. இப்போ அவ என்னோட கண்காணிப்பை விட்டு ஓடிப் போயிட்டாள்னு தெரிஞ்சதுன்னா, அந்த வைரம் பத்தி விவரம் தெரிஞ்சவங்களுக்கு பெரிய கொண்டாட்டமா இருக்கும். உடனடியா லேகாவை மடக்கி, அவளோட உடம்புக்குள்ள இருக்கும் வைரத்தை அபகரிக்க முயற்சி செய்வாங்க...''

"அந்த வைரம் பத்தி தெரிஞ்சவங்க இருக்காங்களா...?"

"இருக்காங்க. ஏற்கனவே அவங்க வைரத்தை அபகரிக்கிறதுக்காக படாத பாடு பட்டுகிட்டுத்தான் இருந்தாங்க..."

"யார் அவங்க?"

"அவளோட உடம்புக்குள்ளே வைரத்தை பதிச்ச டாக்டர் மதன்ராய்தான். அவருக்கும் எனக்கும் இப்போ டெர்ம்ஸ் சரியில்லை. மெடிக்கல்ல இருந்த ஆர்வம் எல்லாம் குறைஞ்சு போய், அவர் இப்போ பணத்துக்காக எதையும் செய்யக்கூடியவரா மாறியிருக்கார். பல வருஷங்களாகவே அவர் லேகா மேல கண்ணு வெச்சிருக்கார். சில சமயம் அவள் மேல கொலை முயற்சியும் நடந்திருக்கு... ஆனா என்னோட ப்ளாக் கேட்ஸின் நடவடிக்கைகளால அந்த முயற்சிகள் முறியடிக்கப்பட்டிருக்கு."

கார்த்திகேயன் கவலையோடு மோவாயை தேய்த்தார்.

எட்டு கோடி ரூபாய் மதிப்புள்ள வைரம் உடம்புக்குள்.

அதைப் பற்றித் தெரியாமல் எவனோ ஒரு முகம் தெரியாத ஆளுடன் ஓடிப் போயிருக்கிறாள் லேகா. அவனே அவளுக்கு எதிரியாக இருக்கலாம். அப்படி இல்லாமல் போனாலும், காத்திருந்து பாயப் போகும் எதிரிகளை சமாளிக்கும் ஆற்றல் அவனுக்கு இல்லாமல் போகலாம்.

எப்படிப் பார்த்தாலும் லேகாவின் உயிர் இந்த நிமிஷம் ஊசலாடிக் கொண்டுதான் இருக்கிறது. விடக்கூடாது.

இந்த பிரம்மாண்டமான சவாலில் எதிரிகளை ஜெயிக்க விடக்கூடாது.

கார்த்திகேயனுக்குள் தீர்மானம் பரபரப்பாய் பற்றியெரிய ஆரம்பித்தது.





## 6

டாக்டர் மதன்ராய் டெலிபோனுக்கு அருகிலேயே நகத்தைக் கடித்துத் துப்பிக்கொண்டு பரபரப்பாக அமர்ந்திருந்தார்.

கெச்சலான உருவம்.

ப்ரெஞ்ச் தாடி...

பட்டையான ரீடிங் கிளாஸ்.

பின் மண்டையில் மட்டும் சொற்பமாய் முடி.

- இதுதான் மதன்ராய்.

அவர் எதிர்பார்த்துக் கொண்டிருந்த போன்கால் சரியாய் காலை ஏழரை மணிக்கு வந்தது.

ங்...

ங்...

ங்...

நாலாவது ரிங் போகும் முன்பு பாய்ந்து போய் ரிசீவரை எடுத்தார்.

"ஹலோ..."

"எஸ். ஹோல்டிங்..."

"நான் திம்மப்பா பேசறேன் டாக்டர்."

"சொல்லு... உன்னோட போனுக்காகத்தான் நான் ரொம்ப நேரமா காத்திட்டிருக்கேன்..."

"அந்த பொண்ணும் பையனும் பெங்களூர்தான் வந்திருக்காங்க."

"குட்... பெங்களூரில் இப்போ அவங்க எங்கே இருக்காங்க."

"சிட்டி அவுட்டர்ல ஒடிஸி காட்டேஜஸ்ன்னு ஒரு இடம் இருக்கு. பெரும்பாலும் ஹனிமூன் கப்புள்ஸ் தங்கற இடம். அந்த காட்டேஜில்தான் இவங்க தங்கியிருக்காங்க."

"அந்த பொண்ணுதான் நமக்கு முக்கியம் திம்மப்பா... உயிருடனோ, பிணமாகவோ வேணும்."

"டாக்டர், நீங்க சொன்ன விஷயத்தை இந்த நிமிஷம் வரைக்கும் என்னால நம்பவே முடியலை. அந்தப் பெண்ணோட உடம்புக்குள்ளே எட்டு கோடி ரூபாய் மதிப்புள்ள வைரம் இருக்குங்கறது சரியான தகவல்தானா?"

"மணிக்கட்டருகே ஆபரேஷன் பண்ணி அந்த வைரத்தை அவளோட உடம்புக்குள்ள பொருத்தியதே நான்தான் திம்மப்பா."

"எப்போ?"

"பல வருஷங்களுக்கு முன்னால.. அந்த பொண்ணு லேகா அப்போ ரொம்ப சின்னப் பொண்ணு... அவளுக்கு அந்த சமயத்தில் ஆறு வயசுதான் இருக்கும்."

"எதுக்காகப் பொருத்துனீங்க?"

"அவளுக்கு இருந்த உயிருக்கு ஆபத்தான வலிப்பு நோயை குணப்படுத்தறதுக்காகத்தான்..."

"இவ்வளவு வருஷமா அந்த வைரம் அவ உடம்புக் குள்ளேயே இருக்கா...?"

"ஆமா..."

"அப்படியே இருக்குமா?"

"அதிலென்ன உனக்கு சந்தேகம்..? அந்த அபூர்வ வைரம் உடம்பில் இல்லைன்னா அடுத்த சில மணி நேரங்களிலேயே எபிலெப்சி அட்டாக் ஆகி துடிதுடித்துப் போய் சாவுக்குத் தயாராயிடுவா லேகா... அந்த வைரத்தில் இருந்து வெளிப்படும் கதிர் வீச்சுத்தான் லேகாவை ஒவ்வொரு நிமிஷமும் காப்பாத்திட்டிருக்கு."



"என்னோட சந்தேகம் வேற டாக்டர்."

"என்ன சந்தேகம் சொல்லு."

"அந்நியப் பொருளை உடம்பு எப்பவுமே ஏத்துக்காதுன்னு சொல்லுவாங்க. அப்படி உள்ளே இருந்தா அது செப்டிக் ஆகி, உடம்புக்கு உபாதை கொடுத்து அந்த அந்நிய ஆப்ஜெக்ட்டை வெளியேற்றவே உடம்பு முயற்சி பண்ணும்னு படிச்சிருக்கேன்."

"நீ சொல்றது சரிதான்... ஆனா அந்நிய பொருள்னு நம்ம பாடி கண்டு பிடிக்க முடியாத, செப்டிக் ஆகாத... ஒருவகை காப்ஸ்யூலில் அந்த வைரம் இருக்கு. அது ட்ரான்ஸ் பரண்ட் காப்ஸ்யூல்ங்கிறதால ரேடியேஷன் மட்டும் அவளோட நாடி நரம்புகளுக்கு இடை விடாம பாய்ச்சிட் டிருக்கும்."

"அவளை மடக்கினா நமக்கு எட்டு கோடி உறுதியா கிடைக்குமா?"

"கண்டிப்பா!"

"எனக்கு இன்னும் ஒரு சந்தேகம்."

"சொல்லு."

"பத்து பனிரெண்டு வருஷமா சைலன்ட்டா இருந் துட்டு, இப்போ போய் இந்த வைரத்துக்காக முயற்சி பண்றீங்களே...? இத்தனை வருஷமா நீங்க இதைப்பத்தி கண்டுக்காம இருந்ததுக்கு என்ன காரணம்?"

சிரித்தார் மதன்ராய்.

"ஏன் சிரிக்கிறீங்க...?"

"அப்போ நான் நல்லவனா இருந்தேன். நல்லவனுக்கு காலமில்லைன்னு ஞானோதயம் ஏற்பட்டு இப்போதான் கெட்டவனா மாறியிருக்கேன்."

"புரியும்படி சொல்லுங்க."

"ஜெம்மாலஜியையும், மெடிக்கலையும் இணைச்சு பல சாதனைகளை புரியணும்னு மருத்துவ களத்தில் இறங்கியவன் நான். என்னோட ஆர்வமெல்லாம் முழுக்க முழுக்க அதிலேதான் இருந்தது. அந்த முயற்சியில் ஜெம்சின் உதவியால பல பேரோட வியாதிகளை குணப்படுத்தியிருக்கேன். அந்த வகையில்தான் லேகாவுக்கு இப்படி ஒரு வைரத்தைப் பொருத்தி சிகிச்சை அளிச்சேன். நான் எதிர்பார்த்த அளவுக்கு எனக்கு இந்த துறையில் அங்கீகாரம் கிடைக்கலை. கடைசியில் பணமும் இல்லாம புகழும் இல்லாம ஒருவித ஃப்ரஸ்ட்ரேஷன் நிலைக்கு வந்துட்டேன். கையில் பணம் உள்ளவனுக்குத்தான் இங்கே பெரும்பாலும் அங்கீகாரம் கிடைக்கிறதுன்னு தெரிஞ்சுக்கிட்டதுக்கப்புறம் பணத்துக்காக எதையும் செய்யத் தயாராயிட்டேன்."

"இந்த ஞானோதயம் உங்களுக்கு சமீபத்தில்தான் வந்ததா?"

"இல்லை... இப்படி ஒரு எண்ணத்துக்கு நான் மாறி நாலஞ்சு வருஷமாச்சு... இந்த நாலைஞ்சு வருஷங்களில் லேகாவிடமிருந்து வைரத்தைப் பறிக்க பலமுறை முயற்சி பண்ணியிருக்கேன். ஆனா அவளோட அப்பா ராமகிருஷ்ணன் அவளைச் சுத்தி பலமான காவல் போட்டிருந்ததால, அந்த முயற்சிகள் எல்லாமே தோல்வி அடைஞ்சிடுச்சு... இப்போ பழம் நழுவி பாலில் விழுந்த மாதிரி ஒரு சந்தர்ப்பம் நமக்குக் கிடைச்சிருக்கு. தன்னோட விலை மதிப்பு தெரியாம எவனோ ஒருத்தனோட பெங்களூருக்கு



அவ ஓடிப்போயிருக்கா. எந்த பாதுகாப்புமில்லாம அவ இருக்கிற இந்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டோம்னா அதைவிட முட்டாள்தனம் வேற எதுவும் இருக்க முடியாது. ராமகிருஷ்ணன் நிச்சயமா இந்நேரம் போலீசுக்குப் போயிருப்பார். போலீஸ் லேகாவை தேடிக் கண்டு பிடிச்சு மீட்டுக்கிட்டு போறதுக்கு முன்னால் நாம நம்ம கை வரிசையைக் காமிச்சாகணும்."

"ஓகே டாக்டர்... அவளை மடக்கினதும் நான் உங்களுக்கு தகவல் தர்றேன். நீங்க உடனே புறப்பட்டு வாங்க."

சிரித்துக் கொண்டே மதன்ராய் சொன்னார்.

"அவளை உயிரோட பிடிக்க முடிஞ்சா எனக்குத் தகவல் கொடு. நான் ஆபரேஷன் பண்ணித்தான் வைரத்தை எடுக்க முடியும். பிணமாகக் கிடைச்சாள்னா, யார் வேணா ஆபரேஷன் பண்ணலாம்."

"சீக்கிரமே உங்களுக்கு தகவல் தர்றேன் டாக்டர்."

திம்மப்பா சொல்லிவிட்டு, ரிசீவரை சாத்திக்கொள்ள - நிறைவான முகத்தோடு மதன்ராயும் தன் கையிலிருந்த ரிசீவரை அதனிடத்துக்குக் கொடுத்தார்.



## 7

லேகாவும், சஞ்சீவியும் ஒதுக்குப்புறமாய் இருந்த அந்த காட்டேஜ் அறையில் இருந்தார்கள்.

குளித்து முடித்து பாத்ரூமிலிருந்து வெளிப்பட்ட லேகா, ஈரகேசத்தை உலர்த்திக் கொண்டே அவனுக்கு, எதிரே இருந்த சோபாவில் சோப்பு வாசனையோடு அமர்ந்தாள்.

சஞ்சீவ் டெலிபோனும் கையுமாய் இருந்தான்.

''யாருக்கு போன் பண்றீங்க?''

''என் ஃப்ரெண்டுக்கு.''

''பெங்களூரில் உங்களுக்கு ஃப்ரெண்ட்ஸ் இருக்காங்களா?''

''நம்ம ஊருக்கு ட்ரை பண்ணிட்டிருக்கேன்...'' - சொல்லச் சொல்லவே லைன் கிடைத்திருக்க... ரிசீவரில் கவனமானான் சஞ்சீவ்.

''ஹலோ வாசுவா...?''

''ஆமா.''

''நான் சஞ்சீவ் பேசறேன்...''

''சொல்லு சஞ்சீவ்... பத்திரமா போய் சேர்ந்தீங்களா?''

''சேர்ந்துட்டோம். உனக்கு தாங்க்ஸ் பண்ணத்தான் கூப்பிட்டேன்.''

''இதில் தாங்க்ஸ் சொல்ல என்ன இருக்கு?''

''கூர்க்காவையும், செக்யூரிட்டி ஆளையும் திட்டமிட்டு நீ அட்டாக் பண்ணினதாலதான் நாங்க ஸேஃபா ஊரை விட்டே கிளம்ப முடிஞ்சது. அங்கே ப்ராப்ளம் எதுவும் இல்லையே?''

''லேகாவோட அப்பா ராமகிருஷ்ணன் வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்துட்டார். போலீஸ் தீவிரமா இன்வெஸ்டிகேட் பண்ணிட்டிருந்தாங்க...''

''உன்னை நெருங்கறதுக்கு வாய்ப்பிருக்கா...?''

''நிச்சயமா இல்லை... கூர்க்காவையும் ப்ளாக் கேட் ஆசாமியையும் பின்னாடி இருந்துதான் என் ஆட்கள் தாக்கினாங்க. இருட்டு நேரம்... அவங்களால எங்களைப்



பத்தி எந்த அடையாளமும் சொல்ல முடியாது... என்னோட கவலையெல்லாம் உன்னைப் பத்திதான்...''

''என்னைப் பத்தி என்ன கவலை...?''

''உன்னோட போக்கு எனக்கு புதிரா இருக்கு...''

சஞ்சீவ் சிரித்தான்.

''லைஃப்ல [illegible] வேண்டாமா வாசு...? ஏதாவது எமர்ஜென்சின்னா காண்டாக்ட் பண்றேன்... போனை வெச்சிடட்டுமா...?''

''சரி...''

பரஸ்பரம் இரண்டு முனைகளிலும் ரிசீவர்கள் கவிழ்த்தப்பட்டன.

லேகா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்ன சொல்றார் உங்க ஃப்ரெண்ட்?''

''உங்கப்பா ஃபாரின் ட்ரிப்பை கேன்சல் பண்ணிட்டு திரும்பி வந்துட்டாராம்...''

''வரட்டும்... வந்து தவிக்கட்டும்... ஒரு வளர்ந்த பொண்ணை அவளுக்குத் தெரியாமக் கண்காணிச்சதன் பலனை அனுபவிக்கட்டும்... எனக்கும் சுதந்திரம் தேவை அப்படிங்கறதை அவர் புரிஞ்சிக்கட்டும்...''

''ஸோ வாட்...?''

''அநேகமா நான் உன்னைக் கடத்திட்டுப் போயிருக்கறதா அவர் ரிப்போர்ட் குடுத்திருப்பார்...''

லேகா அலட்சியமாய்ப் புன்னகைத்தாள்.

''குடுக்கட்டுமே... நான் மேஜராயிட்டேன்... தன்னிச்சையா முடிவுகளை எடுக்கக்கூடிய அதிகாரம் சட்டப்

படி எனக்கு உண்டு... யாருக்கும் கட்டுப்பட்டு இருக்கணும்ங்கற அவசியம் எனக்கு இல்லை... நான் மனசாரத்தான் உங்களோட ஊரை விட்டுக் கிளம்பி வந்தேன்னு எந்த கோர்ட்டிலும்... எந்த போலீஸ் ஸ்டேஷனிலும் சொல்லத் தயாரா இருக்கேன்... நீங்க கவலையே பட வேண்டாம்..."

"குட் லேகா..."

"உங்க மேல எனக்கு அபார நம்பிக்கை இருக்கு..."

"தாங்க்யூ வெரி மச்..."

"ஆனா ஒரே ஒரு விஷயம் மட்டும் எனக்கு உறுத்தலா இருந்தது..."

"என்ன விஷயம்...?"

"நீங்க என்கிட்டே ஒரு பொய் சொல்லியிருக்கீங்க..."

நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"நான் உன்கிட்டே பொய் சொன்னேனா...? என்னன்னு...?"

"நேத்திக்கு ட்ரெயின் பிடிக்கணும். பத்தரை மணிக்குள்ளே ரெயில்வே ஸ்டேஷனுக்கு வந்துடுன்னு சொன்னீங்க... அந்த நேரத்துக்கு நீங்க சொன்ன மாதிரி எந்த ட்ரெயினுமே இல்லையே...?

புன்னகைத்தான் சஞ்சீவ்.

"இதுதான் விஷயமா...? நான் என்னவோ ஏதோன்னு பயந்துட்டேன்..."

"நேத்திக்கு அரிபரில இதைப் பத்தி உங்ககிட்டே கேக்க முடியலை..."



"நாம பாதுகாப்பா தப்பிச்சுப் போகணும்ங்கறதுக்காகத்தான் உன்கிட்டே அப்படி ஒரு பொய்யைச் சொன்னேன் லேகா..."

"புரியலை..."

"ஒரு வேளை தப்பித் தவறி உன்னை யாராவது ஃபாலோ பண்ணி வந்தாங்கன்னா அவங்களை கன்ஃப்யூஸ் பண்றதுக்காகத்தான் உன்கிட்டேயே அப்படி ஒரு பொய்யைச் சொல்லி உன்னை ரயில்வே ஸ்டேஷனுக்கு வரவழைச்சேன். உண்மையில் நான் வீடியோ ஆம்னி பஸ்சில்தான் டிக்கெட் ரிசர்வ் பண்ணி வெச்சிருந்தேன்..."

ஒரு நிம்மதிப் பெருமூச்சோடு அவனைப் பார்த்த லேகா தொடர்ந்து கேட்டாள்.

"இப்போ நம்ம அடுத்த ப்ளான் என்ன சஞ்சீவ்...?"

"நீ ஆசைப்பட்ட மாதிரி ஒரு சுதந்திரமான வாழ்க்கையை உனக்கு அறிமுகப்படுத்தப் போறேன்..."

"எப்படி...?"

"இங்கிருந்து நாம போக வசதியா ஏராளமான மலை வாசஸ்தலங்கள்... சைட்ஸீயிங் ப்ளேஸஸ் இருக்கு... எந்தக் கட்டுப்பாடும் இல்லாம... யாரோ நம்மைக் கவனிக்கறாங்கங்கற பயம் இல்லாம நாம எல்லாம் இடங்களுக்கும் போய்ட்டு வரலாம்..."

லேகா சந்தோஷமாய்த் தலையை ஆட்டினாள்.

"இன்னிக்கு எங்கே போறோம்...?"

"இன்னிக்கு லோக்கல் சைட் ஸீயிங்..."

"ஒக்கே... டிரஸ் சேன்ஜ் பண்ணினா நான் ரெடி... நீங்க இன்னும் குளிக்கக் கூட இல்லையே...?"

"காலையிலிருந்து ஒரு சிகரெட் கூட குடிக்காம வாயெல்லாம் நமநமன்னு இருக்கு. ஒரே ஒரு தம் அடிச்சிட்டு குளிக்கிறேன்..."

"சிகரெட் குடிப்பீங்களா...?"

"அளவா..."

"அளவான்னா....?"

"காலை எழுந்ததும் ஒண்ணு... ராத்திரி தூங்கப் போறதுக்கு முன்னால இன்னொண்ணு..." சொன்னவன் வார்த்தைகளைச் சற்றே நிறுத்தி விட்டுக் கேட்டான்.

"நான் சிகரெட் குடிப்பதில் உனக்கு ஆட்சேபணை ஏதாவது இருக்கா லேகா...?"

"சேச்சே... அதை ஆட்சேபிக்க நான் யார்? ஆனா முடிஞ்சா அந்தப் பழக்கத்தை விட்டுடுங்கன்னு அட்வைஸ் பண்ணலாம்ன்னு எனக்குள்ளே ஒரு துறுதுறுப்பு ஏற்பட்டது. உண்மை..."

"பத்து வருஷப் பழக்கம்... ஒரு நாளில் முழுக்குப் போட முடியாது..."

"ஐ ஹேவ் நோ அப்ஜெக்ஷன்... நீங்க ஸ்மோக் பண்ணலாம்..."

"தாங்க்யூ... கை வசம் ஸ்டாக் இல்லை.. வாங்கிட்டு வந்துடறேன்..."

லேகாவிடம் சொல்லிவிட்டு - காட்டேஜ் அறையை விட்டு வெளியேறினான் சஞ்சீவ்.

காட்டேஜ் வளாகத்தின் மெயின் வாயிலைக் கடந்து எதிர் சாரியில் இருந்த சிறிய ஷாப்பிங் காம்ப்ளக்ஸைத் தொட்டான்.



காம்ப்ளக்சின் மூலையில் இருந்த டெலிபோன் பூத்திற்குள் நுழைந்து எண்களை வேகமாய் அழுத்த ஆரம்பித்தான்.

ரிங் போய் மறுமுனையில் ரிசீவர் எடுக்கப்பட்டதும் வார்த்தைகளை வெளியிட்டான்.

"குணா... நான் சஞ்சீவ் பேசறேன்..."

"ஓ... குட்மார்னிங் சஞ்சீவ்.. எப்ப வந்தே..?"

"காலைல வந்து சேர்ந்தேன்..."

"இப்ப எங்கிருந்து பேசிட்டிருக்கே...?"

"ஒடிஸி காட்டேஜுக்கு முன்னால உள்ள ஒரு பப்ளிக் டெலிபோன் பூத்திலிருந்து பேசிட்டிருக்கேன்."

"அந்தப் பொண்ணு... கூட வந்திருக்கா...?"

"ஆமா..."

"எந்தப் பிரச்சனையும் இல்லையே...?"

"இல்லை... அங்கே வாசு ஹெல்ப் பண்ணினான்..."

"அவனுக்கும் விஷயம் தெரியுமா...?"

"இல்லை... விஷயம் முழுசாத் தெரியாது. தெரிஞ்சா எதிர்ப்புத் தெரிவிப்பான். அதனால அவன் கிட்டே விபரமா எதுவும் சொல்லலை..."

"சரி அடுத்த கட்டம் என்ன?"

"இன்னிக்கு லோக்கல் ஸைட் ஸீயிங்...! அவளும் நானும் காலைல பத்து மணி சுமாருக்கு காட்டேஜை விட்டுக் கிளம்பறோம்."

"ஒக்கே... மத்ததை நான் பார்த்துக்கறேன்..."

"தாங்க்யூ குணா..."

ரிசீவரை வைத்தான் சஞ்சீவ்.

பூத்தை விட்டு வெளியே வந்தவன் படபடப்பாய் சுற்றும் முற்றும் ஒருமுறை பார்த்தான்.

அருகாமை பெட்டி ஷாப்பை அடைந்து - ஒரு சிகரெட்டை உயிர்ப்பித்துக் கொண்டு முகத்தில் சாவகாச உணர்வை வரவழைத்துக் கொண்டான்.

ஒடிஸி காட்டேஜை நோக்கி மெதுவாய் நடந்து போக ஆரம்பித்தான்.



## 8

இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் இடப்புறம் அமர்ந்திருக்க - ராமகிருஷ்ணன் டாட்டா எஸ்டேட்டைக் கையாண்டு கொண்டிருந்தார்.

கார் சீரான வேகத்தில் போக்குவரத்தை ஊடுருவிக் கொண்டிருந்தது.

கார்த்திகேயன் கேட்டார்.

"டாக்டர் மதன்ராயோட வீடு எங்கேன்னு உங்களுக்குத் தெரியாதா..?"

ஸ்டியரிங்கை வளைத்துக் கொண்டே தலையை அசைத்தார் ராமகிருஷ்ணன்.

"பழைய வீடு எனக்குத் தெரியும்... ஆனா அவர் இப்போ அங்கே இல்லை இன்ஸ்பெக்டர்..."

"அப்படின்னா நாம இப்போ எங்கே போறோம்...?"



"எனக்குத் தெரிஞ்சு கடைசியா அவர் சர்வீஸ் பண்ணின க்ளினிக்குக்குத்தான் போறோம். அவர் எங்கே இருக்கார்... என்ன விளம்பரம்ங்கறது அவங்களுக்குத் தெரிஞ்சிருந்தா உண்டு... இல்லைன்னா ஒண்ணும் செய்ய முடியாது..."

சில நிமிஷங்களில் கார் அந்த ப்ரைவேட் நர்சிங் ஹோமின் வாயிலுக்குள் பிரவேசமானது.

ரிசப்ஷனிஸ்ட்டைக் கேட்டுக் கொண்டு தலைமை டாக்டரைச் சந்தித்தார்கள்.

ஐம்பத்தெட்டை நெருங்கிக் கொண்டிருந்த தலைமை டாக்டரிடம் மதன்ராயைப் பற்றிக் கேட்டதும் - அகலமாய் உதடுகளைப் பிதுக்கினார்.

"ஸாரி இன்ஸ்பெக்டர்... அவர் இப்போ இங்கே இல்லை..."

"இந்த க்ளினிக்கில் எவ்வளவு நாளா சர்வீஸ் பண்ணிட்டிருந்தார்...?"

"கிட்டத்தட்ட நாலஞ்சு வருஷம் அவர் இங்கே சர்வீஸ் பண்ணிட்டிருந்தார்."

"அவராக நின்னுட்டாரா...?"

"நாங்கதான் அவரை நிறுத்தினோம்..."

"என்ன காரணம்...?"

"நிறுத்தக்கூடிய சூழ்நிலையை அவராகவே உருவாக்கி விட்டார் அப்படின்னுதான் சொல்லணும்..."

"புரியும்படியா சொல்லுங்க டாக்டர்..."

"சுருக்கமா சொல்லப் போனா எங்களோட மெடிக்கல் பாலிசிகள்... ட்ரீட்மெண்ட் முறைகளை அவர் சரியா ஃபாலோ பண்றதில்லை... மெடிக்கலை விட ஜெம்மாலஜியில் அவருக்கு ஆர்வம் அதிகமா இருந்தது... மெடிக்

கலில் அவரோட இன்வால்வ்மென்ட் குறைஞ்சிட்டே வந்ததால அவரை நிறுத்திட்டோம்...''

''அவர் வீடு எங்கிருக்குன்னு உங்களுக்குத் தெரியுமா...? பழைய ரெக்கார்ட்சைப் பார்த்துச் சொல்ல முடியுமா?''

வருத்தம் தோய்ந்த குரலில் பதிலளித்தார் அந்த டாக்டர்.

''ஸாரி... உங்களுக்கு உதவ முடியாத நிலையில் நான் இருக்கேன்... அவர் நாங்க குடுத்த கெஸ்ட் ஹவுசில்தான் தங்கியிருந்தார். ஆஸ்பிட்டல் நிர்வாகம் அவரை விலக்கியதால கெஸ்ட் வெச்சுக்கலை. அநேகமா சில வருஷங்களாவே அவர் டாக்டரா ப்ராக்ட்டீஸ் பண்றதில்லைன்னுதான் நினைக்கிறேன்... அப்படி பண்ணினாக் கூட அவர் வீடு எங்கிருக்குன்னு பப்ளிக்குத் தெரிய வாய்ப்பிருக்கு...''

கார்த்திகேயனும்... ராமகிருஷ்ணனும், ஏமாற்றத்தைத் தழுவிய முகங்களோடு அவரிடம் விடை பெற்றார்கள்.

மீண்டும் கார் சாலையில் வழுக்க ஆரம்பித்திருக்க - கார்த்திகேயன் கேட்டார்.

''டாக்டர் மதன்ராயைக் கண்டு பிடிக்கும் முயற்சி சிக்கலான விஷயமா ஆயிடுச்சு... போலீஸ் டீமை வெச்சு சிட்டி பூராவும் வலை வீசித் தேடித்தான் அவரைப் பிடிக்க முடியும். அந்த முயற்சி அவசரத்துக்கு உதவாது.''

''டாக்டர் மதன்ராயைச் சந்திச்சுப் பேச முடிஞ்சா பரவாயில்லைன்னு சொன்னீங்க.. அந்த முயற்சி தோல்வி அடைஞ்சிடுச்சு... அடுத்ததா லேகா யார் கூட இந்த ஊரை விட்டுப் போனாளோ... அந்த ஆசாமியைப் பத்தி விபரம் தெரிஞ்சா உடனடியா ஏதாவது நடவடிக்கை எடுக்க



லாம்ன்னு சொன்னீங்க... அதைப் பத்தி தெரிஞ்சிக்க முயற்சி பண்ணலாம் இன்ஸ்பெக்டர்...''

''எப்படி...?''

''லேகாவோட க்ளோஸ் ஃப்ரெண்ட் வீட்டுக்குத்தான் நாம இப்போ போயிட்டிருக்கோம்... ஒரு நாள் ரெண்டு நாள் பழக்கத்தில் லேகா அவனோட போயிருக்க மாட்டா... நிச்சயமா சில மாதங்களாவது அவனோட அவளுக்குப் பழக்கம் இருந்திருக்கும்... அப்படி இருக்கும் பட்சத்தில் லேகாவோட நெருங்கிய தோழியான ரமலாவுக்கு அவனைப் பத்தித் தெரியாம இருக்க வாய்ப்பே இல்லை...''

''யு மே பி கரெக்ட் மிஸ்டர் ராமகிருஷ்ணன்.''

கார் சில நிமிஷங்கள் வேக ஓட்டம் ஓடி - பாரதி நகர் விரிவாக்கத்தில் விலாச விலாசமாய் முளைத்திருந்த புது மோஸ்தர் பங்களாக்களைக் கடந்தது.

ஆப்பிள் ஒயிட் நிறத்தில் டிஸ்டெம்பர் அடித்திருந்த அந்த பங்களாவின் முன்னால் காரின் இயக்கத்தைத் தொலைத்தார் ராமகிருஷ்ணன்.

ஆரஞ்சு வர்ணப் புள்ளி போட்ட மேக்சிக்குள் திணிந்திருந்த ரமலாவே போர்டிகோவுக்கு வந்து அவர்களை எதிர்கொண்டாள்.

முகப்பரப்பில் ஆச்சரியத்தைக் காட்டியபடி ராமகிருஷ்ணனை வரவேற்றாள்.

''வாங்க அங்க்கிள்...''

''வர்றேம்மா... அப்பா அம்மா எல்லாம் நல்லா இருக்காங்களா...?''

''நல்லா இருக்காங்க...''

''வீட்ல இருக்காங்களா...?''

''சொந்தக்காரங்களோட மேரேஜுக்குப் போயிருக் காங்க... இப்போ நான் மட்டும்தான் வீட்டில் இருக்கேன் அங்க்கிள்...''

''நான் உன்னைப் பார்க்கத்தான் வந்தேன் ரமலா.''

அவள் தன்னுடைய பராமரிக்கப்பட்ட புருவங்களைச் சுருக்கியபடி அவரைப் பார்த்தாள்.

''என்ன விஷயம் அங்க்கிள்...? அதுவும் போலீஸ் இன்ஸ்பெக்டரோட வந்திருக்கீங்க...''

கவலையான குரலில் ராமகிருஷ்ணன் சொன்னார்.

''உன்னோட ஃப்ரெண்டைப் பத்திப் பேசத்தான் வந்தேன் ரமலா.''

''லேகாவைப் பத்தியா...?''

''ஆமா...''

''அவளைப் பத்தி என்ன பேசணும்...?''

''இன்னிக்குக் காலேஜ் லீவ்ங்கறதால உனக்கு விஷயம் தெரியாதுன்னு நினைக்கிறேன்... நேத்திக்கு ராத்திரி லேகா ஒரு விபரீதமான காரியத்தைப் பண்ணித் தொலைச் சிட்டாம்மா...''

ரமலா நிமிர்ந்தாள்.

''என்ன சொல்றீங்க அங்க்கிள்...?''

''லெட்டர் எழுதி வெச்சிட்டு யாரோ ஒருத்தன் கூட இந்த ஊரை விட்டே ஓடிப்போயிட்டா...''

ரமலாவின் முகப்பரப்பில் துல்லியமான அதிர்ச்சி தெரிந்தது.



உதடுகளுக்குள் முணுமுணுத்தாள்.

''மை குட்னஸ்...''

''அவ யார் கூடப் போனா... எங்கே போனாள்ங்கற விபரமெல்லாம் எதுவும் தெரியலை... அவளோட நெருங் கிய தோழியான உனக்கு ஒரு வேளை ஏதாவது விபரம் தெரிஞ்சிருக்கலாமேங்கற எண்ணத்தில் உன்னைப் பார்க்க வந்திருக்கோம்...''

கார்த்திகேயன் ஆமோதிப்பாய்த் தலையை அசைத்த படியே சொன்னார்.

''ஆமாம்மா... உன்னோட தோழிக்கு உதவறதா நினைச்சு... நீ உனக்குத் தெரிஞ்ச விபரங்களை மறைக்க முயற்சி பண்ணினின்னா... அது லேகாவோட உயிருக்கே ஆபத்தா முடிஞ்சிடும்...''

ரமலா கார்த்திகேயனிடம் திரும்பிச் சொன்னாள்.

''இன்ஸ்பெக்டர்... எனக்குத் தெரிஞ்ச விபரங்களை உங்களுக்குச் சொல்றதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. ஆனா லேகா இப்படிப் பண்ணியிருக்காள்ங்கிற விஷயத்தைக் கேள்விப்படறப்ப எனக்கே ஷாக்கிங்காத் தான் இருக்கு.''

''அவளோட லவ் விவகாரம் பத்தி உனக்கு ஏதாவது தெரியுமா...?''

''அவ காதல்ல சிக்கின மாதிரி எனக்குத் தெரியலை... ஆனா சமீப நாட்களா ஒரு ஆளோட பழகிட்டிருந்தது தெரியும்...''

''யாரோட பழகிட்டிருந்தா... அவன் பேரென்ன...? ஊர் என்ன...? அவன் இப்போ எங்கிருக்கான்...?''

''அவன் பேர் சஞ்சீவ்ங்கறது மட்டும் எனக்குத் தெரியும்... மத்தபடி அவன் எங்கிருக்கான்... அவன் விலாசம் என்ன... இதெல்லாம் எனக்கு மட்டுமில்லை... லேகாவுக்கே தெரியாது...''

''என்ன சொல்றே...? அட்ரஸ் இல்லாத ஆள் கூடவா லேகா பழகிட்டிருந்தா...?''

''இந்த இன்டர்நெட் உலகத்தில் இப்படிப்பட்ட முகம் தெரியாத தொடர்புகள் நிறைய இருக்கு...''

''அவனை நம்பி எப்படி அவ ஊரை விட்டுப் போற அளவுக்கு வந்தாள்...?''

''அதுக்குக் காரணம் அங்க்கிளோட சில நடவடிக்கைகள்தான்...''

ராமகிருஷ்ணன் அவளைப் பார்த்தார்.

''என்னம்மா சொல்றே...?''

''அவளுக்கே தெரியாம அவளை நீங்க எந்த நேரமும் க்ளோசா வாட்ச் பண்ணிட்டே வந்திருக்கீங்க... அது அவளுக்குப் பிடிக்கலை. சுதந்திரம் வேணும்ன்னு ஏங்க ஆரம்பிச்சிட்டா... அந்த ஏக்கத்தைப் பயன்படுத்திகிட்டு அந்த சஞ்சீவ் அவளை வார்த்தைகளாலேயே மயக்கிட்டான்னு நினைக்கிறேன்...''

''அவளோட, உயிருக்கு நிறைய ஆபத்து, இருக்கு ரமலா... அதனாலதான் நான் அவளுக்கு ப்ளாக் கேட்ஸ் பாதுகாப்பு வளையம் போட்டிருந்தேன்... சுதந்திர உணர்வு போயிடக் கூடாதேங்கிற நல்ல எண்ணத்தில்தான் அவளைச் சுத்தி இருக்கிற ப்ளாக் கேட்ஸைப் பத்தி அவளுக்கே தெரியாத விதத்தில் வெச்சிருந்தேன்... ஆனா அவ தலைகீழா யோசிச்சிட்டா... என்னைத் தப்பா நினைச்சிட்டா...''



''உங்களோட கண்காணிப்பு விஷயம் தெரிஞ்சப்ப அவ முதன் முதல்ல என்கிட்டேதான் தன்னோட வருத்தத்தைப் பகிர்ந்துகிட்டா...

இதில் வருத்தப்பட ஒண்ணுமில்லை... பணக்கார வீட்டில் பிறந்துட்டோம்ன்னா இந்த மாதிரி சில விலைகளைக் கொடுத்துத்தான் ஆகணும்... அப்படின்னு நான் அங்க்கிளுக்கு சாதகமாகப் பேசினது அவளுக்குப் பிடிக்கலை... அதிலிருந்து அவ என்கிட்டே இதைப் பத்தி எதுவும் பேசறதில்லை... ஆனா சின்ன வயசிலிருந்தே ஒண்ணாப் பழகறதால எந்த ஒரு விஷயத்தையும் அவளாலே என்கிட்டே மறைக்க முடியாது. அப்படித்தான் மனசுக்குள்ளேயே பூட்டி வெச்சிக்க முடியாம சஞ்சீவ் பத்தி என்கிட்டே சொன்னா...''

ரமலா வார்த்தைகளை நிறுத்திவிட்டு - டீபாய் மேலிருந்த தண்ணீரை சில மிடறு விழுங்கினாள்.

ராமகிருஷ்ணனும், கார்த்திகேயனும் ஆர்வம் கொப்பளிக்க அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருக்க - ரமலாவின் உதடுகள் தொடர்ந்து அசைந்தன.

''இன்டர்நெட்டில் ஒருத்தர் பழக்கமாயிருக்கார். அவரோட பேசிட்டிருந்தா நேரம் போறதே தெரியலை. மனசுக்கு ஒத்தடம் கொடுக்கிற மாதிரி இருக்கு அவர் பேச்சு. ஆகா ஓகோன்னு புகழ்ந்துட்டிருந்தா...''

''ஸோ... நான் நினைச்சது சரிதான்.. லேகாவுக்கு என் மேல இருந்த வெறுப்பை சாதகமாக்கி அவளை அவன் கவர்ந்துட்டான்...''

''எக்சாட்லி அங்க்கிள்... ஆனா இப்படி திடீர்னு அவனோட ஊரை விட்டு ஓடிப் போற அளவுக்கு அந்த

ஃப்ரெண்ட்ஷிப் டெவலப் ஆகும்னு நான் கனவில்கூட நினைக்கலை. அப்படி ஒரு எண்ணம் என் மனசில் தோணியிருந்தா... உங்களுக்கு முன் கூட்டியே அரசல் புரசலா எச்சரிக்கை தந்திருப்பேன்.."

"இப்போ அவன் பேர் சஞ்சீவ்ங்கிறதைத் தவிர வேற எந்த விபரமுமே அவனைப் பத்தித் தெரியாதே. ஒரு வேளை லேகாவுக்கு அவனைப் பத்தி முழுசாத் தெரிஞ்சிருக்கலாம்."

"அதை நாம எப்படித் தெரிஞ்சிக்கிறது?"

"இதைத் தெரிஞ்சிக்கிறதுக்காக நீங்க எங்கேயும் அலைய வேண்டியதில்லை அங்க்கிள்... அப்டி செஞ்சீங்கன்னா அது வெண்ணெயைக் கையில் வெச்சிக்கிட்டு நெய்க்கு எங்கோ அலையறதுக்கு சமம்."

"என்ன சொல்றே...?"

"அவங்க ரெண்டு பேரும் இன்டர்நெட் மூலமாத்தான் ஒருத்தரோட ஒருத்தர் தொடர்பு கொண்டுட்டு இருந்தாங்க. ஸோ... அவங்க என்ன பேசிக்கிட்டாங்கங்கிற விபரம் அவளோட கம்ப்யூட்டரில் இருக்க வாய்ப்பிருக்கு."

"இசிட்."

இன்ஸ்பெக்டர் கார்த்திகேயன் துள்ளலாய் நிமிர - ராமகிருஷ்ணன் நிதானமாய்க் கேட்டார்.

"அதை நாம எப்படிப் பார்க்க முடியும் ரமலா...?"

"அதுக்கு ஆபரேஷன் இருக்கு. இன்டர்நெட் ப்ரௌசரில் ஹிஸ்டரின்னு ஒரு இடம் இருக்கு. அந்த இடத்தில் இன்டர்நெட்டில் அவ பார்த்த ஒவ்வொரு பகுதியும் பதிவாகி இருக்கும். இன்டர்நெட் மூலமா லேகாவும் சஞ்சீவும் பரிமாறிக்கிட்ட கடிதங்களை அந்த ஹிஸ்டரி



போல்டரில் துழாவிப் பார்த்தா நிச்சயமாக் கிடைக்கும். அதை வெச்சு சஞ்சீவைப் பத்தின விபரங்களைக் கலெக்ட் பண்ணிடலாம் இல்லையா...?"

கார்த்திகேயனிடம் பரபரப்புத் தொற்றிக் கொண்டது.

"சிரமமா நினைக்கலைன்னா நீயே ராமகிருஷ்ணன் வீடு வரைக்கும் ஒரு தடவை வந்துட்டுப் போம்மா... நாங்க கம்ப்யூட்டரோட போராடறதைவிட... விஷயம் தெரிஞ்ச நீயே அந்தக் கம்ப்யூட்டர் சமாச்சாரத்தை பார்த்துச் சொல்லிடு..."

சின்னத் தயக்கத்துக்குப் பின் தலையை அசைத்தாள் ரமலா.

அடுத்த சில நிமிஷங்களில் ராமகிருஷ்ணனின் டாட்டா எஸ்டேட் சல்வார்கமீஸுக்கு மாறியிருந்த ரமலாவையும் சுமந்து கொண்டு - லேகாவின் வீட்டை நோக்கி துப்பாக்கியிலிருந்து விடுபட்ட தோட்டாவாய்ச் சீறிக் கொண்டு செல்ல ஆரம்பித்திருந்தது.



## 9

ஒடிஸி காட்டேஜின் டூ வீலர் பார்க்கிங்கில் பைக்கை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினான் திம்மப்பா.

பெங்களூரின் ஏசி தட்ப வெப்பத்திற்கு இதமாக பழுப்பு நிறத்தில் ஜெர்கின் அணிந்திருந்தான்.

காட்டேஜ் வளாகத்தை நிதானமாய் ஒரு முறை பார்வையிட்டபடி - உதட்டுக்குக் கொடுத்த சிகரெட்டை லைட்டரின் உதவியால் உயிர்ப்பித்தான்.

புகையைத் தவழவிட்டபடியே ஃப்ரண்ட் ஆபீஸ் பகுதியை நோக்கி நடைபெயர்ந்தான்.

ஃப்ரண்ட் ஆபீஸுக்கு முன்புறம் இரும்புக் கால்களால் நின்றிருந்த பெரிய போர்டில் காட்டேஜின் உள்ளே உள்ள இடங்கள் தெளிவான மேப் வரைபடமாக பெயிண்ட் செய்யப்பட்டிருந்தது.

ஃப்ரண்ட் ஆபீஸ்.

காட்டேஜ் அறைகள் பகுதி.

ரெஸ்டாரெண்ட்.

நீச்சல்குளம்.

ரெக்ரியேஷன் க்ளப்.

பவர் ரூம்.

பட்டியலுடன் அடையாளங்கள் நீண்டிருந்தன.

கிட்டத்தட்ட பத்து நிமிஷங்களுக்கு மேல் அந்த வரைபடத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த திம்மப்பா ரெஸ்டாரெண்ட் பகுதியை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

க்ரோட்டன்ஸ் பாத்திகளுக்கு மத்தியில் சென்றது சிமெண்ட் பாதை.

கண்ணாடி வேய்ந்த கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே சென்றான். மசமசப்பான வெளிச்சத்துடன் இருந்தது அந்த ரெஸ்டாரெண்ட்.

விலாச விலாசமாய்ப் போடப்பட்டிருந்த மேஜை நாற்காலிகளை சொற்பம் பேர் மட்டுமே ஆக்கிரமித்திருந் தார்கள்.

மூலை மேஜை ஒன்றைத் தேர்ந்தெடுத்து அமர்ந்தான்.



எங்கிருந்தோ உற்பத்தியாகி வந்த பேரர் பவ்யமாய்க் குனிந்து நின்றார்.

"என்ன ஸார் வேணும்...?"

"கோக்..."

அவர் தலையசைத்துவிட்டு அதே பவ்யத்தோடு நகர்ந் தார்.

மறைவான ஸ்பீக்கர்களிலிருந்து வெளிப்படும் மெல்லிய இசைக்கிடையே யோசனையில் மூழ்கினான் திம்மப்பா.

சில நிமிஷங்கள் வழிந்திருக்க - பேரர் ட்ரேயில் கோக் எடுத்து வந்தார்.

ஓப்பனரின் உதவியால் மூடியைத் திறந்தவர் ஸ்ட்ரா ஒன்றை உள்ளே போட்டார்.

நகர எத்தனித்தவரைக் குரலால் நிறுத்தினான் திம்மப்பா.

"பேரர்..."

"எஸ் ஸார்..."

"இங்கே நட்ராஜ்னு ஒரு பேரர் இருப்பானே...?"

"ஆமா... ஸார்!"

"அவனைக் கூப்பிட முடியுமா?"

"என்ன விஷயம் சார்...? எதுவா இருந்தாலும் என் கிட்டே சொல்லுங்க... என்னால முடிஞ்ச உதவியை நான் செய்யறேன்."

"இல்லை... அவன்கிட்டே பர்சனலா நான் பேசணும்."

"அவன் இப்போ ரெஸ்டாரெண்டில் இல்லை ஸார்."

"பின்னே...?"

"அவனுக்கு நைட் ட்யூட்டி... அதனால இப்போ ரெஸ்ட் ரூமில்தான் இருப்பான். நான் ரெஸ்டாரெண்ட்டை விட்டு வெளியே போய் அவனைக் கூப்பிட முடியாது."

"ரெஸ்ட் ரூம் எங்கிருக்கு...?"

"அதோ அங்கே இடது பக்கமா ஒரு பாதை போகுது பாருங்க. அந்தப் பாதை நேரா சர்வன்ட்ஸ் ரெஸ்ட் ரூமுக்குத்தான் போகும்..."

"தாங்க்ஸ்..."

திம்மப்பா கோக்கை உறிஞ்சிக் குடித்துவிட்டு - ரெஸ்டாரெண்டை விட்டு வெளியேறிச் சென்றான்.

சற்றுத் தொலைவில் இருந்த கட்டிடத்தை நெருங்கி வராந்தாவில் எதிர்ப்பட்ட ஆளிடம் விசாரித்தான்.

அந்த நட்ராஜின் அறைக்கே கொண்டு போய் விட்டான் அந்த ஆள்.

"இதுதான் ஸார்... நட்ராஜோட ரெஸ்ட் ரூம். தூங்கிட்டிருப்பான்னு நினைக்கிறேன்." அழுக்கான அந்தக் கதவைத் தட்டினான் திம்மப்பா.

டொக்...

டொக்...

டொக்...

வெகு நேரத்திற்குப் பின் உள்ளே அசைவுகள் கேட்டது.

தாழ்ப்பாள் விலகி கதவு திறக்க... திறந்த கதவுக்குப் பின்னே சிவப்பான விழிகளோடு நட்ராஜ் தெரிந்தான்.

தூக்கம் கலைந்த எரிச்சலில் கண்களைக் கசக்கிக் கொண்டே - கேட்டான்.



"யாரு வேணும்?"

"நட்ராஜ் நீதானே...?"

"ஆமா..."

"நீதான் வேணும்... உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்."

திம்மப்பா சொன்னதும் - அவன் நெற்றிப் பரப்பில் யோசனைச் சுருக்கங்கள் பிரசவம் ஆயின. கதவினின்றும் விலகி - வழிவிட்டான்.

"உள்ளே வாங்க..."

கசகசப்பாயிருந்த அந்த அறையின் மூலையிலிருந்த மர ஸ்டூலை எடுத்துப் போட்டுக்கொண்டே கேட்டான்.

"நீங்க யார்னு எனக்குத் தெரியலையே..."

"அதனால என்ன... இப்ப தெரிஞ்சிக்கிட்டாப் போச்சு..."

"என்னை எதுக்காகப் பார்க்க வந்தீங்க...?"

"நீ இன்னிக்கு கேலண்டர்ல ராசி பலன் பார்த்தியா...?"

சிரித்துக் கொண்டே திம்மப்பா கேட்க - நட்ராஜ் புதிர் விழுந்த கண்களோடு அவனைப் பார்த்தான்.

"என்ன சொல்றீங்க..?"

"உன்னோட ராசிக்கு நேரா... எதிர்பாராத பணவரவுன்னு போட்டிருக்குமே..."

"எதிர்பாராத பணவரவா...?"

"ஆமா... அஞ்சு பத்து இல்லை... ஆயிரங்களில் பணவரவு உன்னோட ராசிக்கு இன்னிக்கு இருக்கு... நீ நினைச்சின்னா இன்னிக்கு மட்டும் முப்பதாயிரம் ரூபாய் சம்பாதிக்கலாம்."

நட்ராஜ் தட்டென்று நிமிர்ந்தான்.

"முப்பதாயிரம் ரூபாயா...?"

"ஆமா..."

"எப்படி...?"

"ரொம்ப சிம்ப்பிள்... நான் கொடுக்கிற வேலையை நீ செஞ்சாப் போதும்..."

"எ... என்ன வேலை...?"

"இந்த காட்டேஜில் தங்கியிருக்கிற ஒரு பொண்ணை நான் கடத்திட்டுப் போக நீ உதவணும்..."

நட்ராஜ் தீவிர முகமாற்றத்தோடு சட்டென நிமிர்ந்தான்.

"என்ன ஸார் விளையாடறீங்களா...?"

"ஆயிரக்கணக்கில் பிசினஸ் பேசிட்டிருக்கிற என்னைப் பார்த்து விளையாடறீங்களான்னு கேக்கறியே...?"

"நான் இந்த காட்டேஜில் ரெஸ்டாரெண்டில் பேரரா இருக்கேன். என்கிட்டே வந்து கடத்தல் அது இதுன்னு சொல்றீங்களே...?"

"குட் ஜோக் நட்ராஜ்... புத்தன் மாதிரி நீ பேசறதைப் பார்த்தா எனக்கு அழறதா இல்லை சிரிக்கிறதான்னு தெரியலை..."

"........"

"என்ன சைலண்ட் ஆயிட்டே? இந்த காட்டேஜில் எத்தனையோ பேர் வேலை பார்க்கிறாங்க... எல்லாரையும் விட்டுட்டு நான் ஏன் உன்கிட்டே வந்தேன் தெரியுமா...?"

"........"

நட்ராஜ் மவுனமாய் திம்மப்பாவையே பார்த்துக் கொண்டிருக்க - அவன் தொடர்ந்தான்.



"ஏன்னா பாம்பின் கால் பாம்பறியும்... நீ இங்கே பேரரா வேலைக்கு சேர்றதுக்கு முன்னால எங்கே இருந்தேன்னு எனக்குத் தெரியும். ஒரு ஃபோர்ஜரி வழக்கில் கைதாகி நாலு வருஷம் உள்ளே இருந்துட்டு வந்தவன். கடத்தல்ங் கிற வார்த்தையைக் கேட்டதும் என்னவோ தீயை மிதிச்சா மாதிரி அலறியே...?"

"ஏன் தப்பு செஞ்சவன் திருந்தி வாழக் கூடாதா...?"

"கண்ணா... இந்த டயலாக்கெல்லாம் நான் நிறைய கேள்விப்பட்டிருக்கேன்... நீ பயந்து பயந்து அதி ஜாக் கிரதை உணர்வோட என்கிட்டே பேச வேண்டாம். நீ திருந்தி வாழறியா இல்லையான்னு செக் பண்ண வந்த ப்ரொபேஷன் ஆபீசர் இல்லை நான்... நான் உன் ஜாதிதான் அதனால..."

அவனைப் பாதியில் குறுக்கிட்டான் நட்ராஜ்.

"நான் என்ன செய்யணும்...?"

"குட்... காட்டேஜ் நம்பர் டி செவன்ட்டி ஃபோர்ல ஒரு கப்புள்ஸ் தங்கியிருக்காங்க. அவன் பேர் சஞ்சீவ். அந்தப் பொண்ணு பேர் லேகா. அந்தப் பொண்ணுதான் எனக்கு முக்கியம். அந்தப் பொண்ணை நான் கடத்திட்டுப் போக நீ உதவி செய்யணும்..."

"எப்படி...?"

"அவளை மயக்கப்படுத்தியோ வலுக்கட்டாயமாவோ இந்த காட்டேஜிலிருந்து மத்தவங்க கவனத்தைக் கவ ராமக் கூட்டிட்டுப் போறதுங்கிறது ரொம்பக் கஷ்டமான காரியம். எந்நேரமும் நடமாட்டம் இருந்துட்டே இருக் கிறதால யாரோ ஒருத்தரின் சந்தேகப் பார்வைக்கு இலக்காகி திட்டம் பாழாயிட வாய்ப்பிருக்கு. அதனால

தான் உன்னோட உதவியோட அவளைக் கடத்தணும்னு தீர்மானம் பண்ணேன்."

"நான் மட்டும் மத்தவங்க, சந்தேகிக்காத வகையில் அந்தப் பொண்ணை எப்படிக் கடத்த முடியும்..?"

"உன்னால முடியும்..."

"அதான் எப்படி...?"

"உங்க ரெஸ்டாரெண்டிலிருந்து தினமும் ப்ளாஸ்டிக் டிஸ்போசல்களை மூட்டையாக் கட்டி ஒரு ட்ராலில வெச்சு தள்ளிட்டுப் போய் பின்பக்க வழியாக் கொண்டு போய் கொட்டிட்டு வர்றாங்க இல்லையா...?"

"ஆமா..."

"அந்தக் காரியத்தை யூனிபார்ம் அணிஞ்ச யாராவது ஒரு பேர்தான் செய்யறார்.."

"ஆமா..."

"ஸோ அந்த ட்ராலியில் ஒரு மூட்டையை எடுத்துக் கிட்டு நீ போனீன்னா யாரும் சந்தேகமா பார்க்க மாட்டாங்க. இன்னிக்கு ராத்திரி சுமார் எட்டரை மணிக்கு நீ அந்த ட்ராலியில் மூட்டையோட பின்பக்க வாசலுக்கு வர்றே. மூட்டைக்குள் அந்தப் பொண்ணு லேகாவை பேக் பண்ணிக் கொண்டு வரவேண்டியது உன் பொறுப்பு..."

"என்னவோ துணிமணியைப் பேக் பண்ற மாதிரி ரொம்ப ஈசியா சொல்றீங்களே...?"

"ஈசியா சம்பாதிக்கணும்னா கஷ்டமான வேலையை ஈசி பண்ணிக்க வேண்டியது தான்..."

"அந்தப் பொண்ணை எதுக்காக கடத்திட்டுப் போறீங்க...?"



"அதெல்லாம் உனக்கு அநாவசியம். கரன்சிக் கத்தையை எண்ணி உன் கையில் வைக்க நான் தயாரா இருக்கேன். எந்தக் கேள்வியும் கேக்காம காரியத்தைச் செஞ்சு முடிக்க வேண்டியது உன்னோட பொறுப்பு."

அந்த நட்ராஜ் தன் கறைப் பற்களால் அலட்சியச் சிரிப்புச் சிரித்தான்.

"நீங்க கொடுக்கிற பணம் நான் செய்யற காரியத்துக்குத் தகுந்த கூலிதானான்னு நான் சரி பார்க்க வேண்டாமா?"

"முப்பதாயிரம் பத்தலைன்னா அஞ்சோ பத்தோ அதிகமாக் கேளு..."

"பணத்தைப் பார்த்ததும் வாயைப் பிளக்கிறவன் இந்த நட்ராஜ் இல்லை. என்ன காரணத்துக்காக நீங்க அந்த லேகாவைக் கடத்திட்டுப் போகத் துடிக்கிறீங்கன்னு தெரிஞ்சுக்கிட்டு அதுக்குத் தகுந்த மாதிரி ஒரு ரேட்டை நான் பிக்ஸ் பண்றேன். நான் பிக்ஸ் பண்ற ரேட்டை உங்களால தர முடியும்னா உதவி பண்றேன். இல்லைன்னா ஒரு துரும்பைக்கூட கிள்ளிப் போட மாட்டேன்."

"நீ பக்கா கிரிமினல்ங்கிறதை நிரூபிக்கிறே நட்ராஜ்..."

"உங்களுக்குக் காரியம் ஆகணும்னா என்னோட கண்டிஷனுக்கு ஒத்துப் போங்க... இல்லைன்னா என்னை ஆளை விடுங்க. இப்போ தூங்கி ரெஸ்ட் எடுத்தால்தான் நான் நைட் ட்யூட்டி பார்க்க முடியும்..."

விறைப்பாய்ச் சொன்னவனை சில விநாடி யோசனை யாய்ப் பார்த்த திம்மப்பா - பிறகு மெல்லிய குரலில் கேட்டான்.

"ஒக்கே உன்னோட பாணிக்கே நான் வர்றேன். நான் செய்யச் சொன்ன காரியத்தை எந்தக் கேள்வியும் கேக்காம செஞ்சு முடிக்க நீ எவ்வளவு தொகை எதிர்பார்க்கறே...?"

மவுனமாய் சற்று நேரம் யோசனையில் மூழ்கினான் நட்ராஜ்.

பின்பு - தயக்கம் வழியும் குரலில் கேட்டான்.

''ஒரு லட்சம் ரூபாய்...?''

சற்றும் யோசிக்காமல் திம்மப்பா தலையை ஆட்டினான்.

''தர்றேன்... அட்வான்ஸ் முப்பதாயிரத்தை இப்ப நீ வாங்கிக்கோ...? காரியம் முடிஞ்சதும் மீதித் தொகை...''

திம்மப்பா ஜெர்கின் பாக்கெட்டிலிருந்து எடுத்து வைத்த ஐநூறு ரூபாய் கத்தையை விழிகள் விரியப் பார்த்தான் நட்ராஜ்.



## 10

போர்டிகோவில் கார் ஒதுங்கி நின்றதும் - கதவுகளை இறக்கை விரித்துக் கொண்டு இறங்கினார்கள் ராமகிருஷ்ணன், கார்த்திகேயன் மற்றும் ரமலா.

ராமகிருஷ்ணன் வேக நடையில் வீட்டுக்குச் செல்ல - ரமலாவும், கார்த்திகேயனும் அவரைப் பின் தொடர்ந்தார்கள்.

எதிர்பட்ட தங்கத்திடம் ''போன் ஏதாவது வந்ததா தங்கம்...?''

கேட்டுக் கொண்டே விடுவிடுவென மாடிப்படிகளில் ஏறினார் ராமகிருஷ்ணன்.

தங்கம் மறுத்தலாய் தலையை ஆட்டினாள்.

''இல்லீங்கய்யா.''



மாடியில் இருந்த லேகாவின் அறைக்குள் நுழைந்தார்கள்.

வெளிர் நீல ஃபர்னிச்சரின் மேலே அமர்ந்திருந்த கம்ப்யூட்டரை ரமலாவுக்கு காட்டினார் ராமகிருஷ்ணன்.

''இந்த கம்ப்யூட்டரைத்தாம்மா லேகா யூஸ் பண்ணிட்டிருந்தா.''

''நான் பார்க்கிறேன் அங்கிள்.''

ரமலா கண்ட்ரோல் சுவிட்சைத் தட்டிவிட்டாள்.

மெல்லிய பீப் ஒலியோடு கம்ப்யூட்டர் மின்சாரத்தை குடித்து - மானிட்டரில் வர்ணங்களைத் துப்ப ஆரம்பித்தது.

சிஸ்டம் ரெடி ஸ்டேட்டுக்கு வந்ததும் - மவுசை லாவகமாய் நகர்த்தி இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரரின் ஹிஸ்டரி ஃபோல்டரைத் திறந்தாள்.

ராமகிருஷ்ணனும் கார்த்திகேயனும் ஆவலாய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த ஃபோல்டருக்குள் -

தேதி -

நேரம் வாரியாக -

லேகா இன்டர்நெட்டில் பார்த்த பக்கங்களின் விபரம் லிஸ்ட் ஆகியிருந்தது.

ரமலா சொன்னாள்.

''அங்க்கிள்... நாம இன்டர்நெட்டை பார்த்துகிட்டிருக்கிறப்போ சிஸ்டம் நாம பார்க்கிற ஒவ்வொரு பக்கத்தையும் இப்படி பல ஃபைல்களா பதிவு பண்ணி வெச்சிருக்கும் பின்னாடி தேவைப்பட்டா அந்த ஃபைல்களை நாம ஓப்பன் பண்ணிப் படிச்சுப் பார்த்துக்கலாம்.''

"இங்கே லிஸ்ட் ஆகியிருக்கிற ஃபைல்களையெல்லாம் லேகா இன்டர்நெட்டில் பார்த்த விஷயங்களா?"

"ஆமா..."

"இதை எப்படி ஓப்பன் பண்ணிப் பார்க்கணும்...?"

"சிம்ப்பிள்... இந்த ஃபைல் மேலே மவுசை வெச்சு டபுள் க்ளிக் பண்ணினா போதும்."

சொல்லிக் கொண்டே அதைச் செய்தும் காட்டினாள்.

ரமலா க்ளிக் செய்த ஃபைல் ஓப்பன் ஆகி திரையில் விரிந்தது.

இன்டர்நெட்டில் தக்காளி சூப் பற்றி யாரோ வெளியிட்டிருந்த தகவல் பக்கம் அது.

அடுத்த ஃபைலை க்ளிக் செய்தாள் ரமலா.

நாய்களை வளர்க்கும் முறை பற்றி யாரோ வெள்ளைக்காரன் படங்களோடு விளக்கியிருந்தான்.

அடுத்த ஃபைல்...

அடுத்த ஃபைல்...

அடுத்த ஃபைல்...

அடுத்த ஃபைல்...

அடுத்த ஃபைல்...

ரமலா சோர்ந்து போனாள்.

ராமகிருஷ்ணன் கவலையோடு கேட்டார்.

"என்னம்மா... அந்த சஞ்சீவ் பத்தி எதுவுமே காணோம்...? அவன் அனுப்பின லெட்டர்ஸ் எதுவுமே இல்லையே...?"

அடுத்த ஃபைல்...



அடுத்த ஃபைல்...

அடுத்த ஃபைல்...

அந்த ஹிஸ்டரி ஃபோல்டர் பதிவுகள் அத்தனையையும் பார்த்து முடித்திருக்க - ரமலா ஏமாற்றத்தோடு நிமிர்ந்தாள்.

அதே ஏமாற்றம் இன்ஸ்பெக்டர் கார்த்திகேயனிடமும் தொற்றியிருந்தது.

"என்னாச்சும்மா...?"

ரமலா தயக்கத்தோடும் வருத்தத்தோடும் சொன்னாள்.

"ஸாரி... அங்க்கிள்... லேகா நம்மை விட புத்திசாலியா இருக்கா..."

"என்ன சொல்றே...?"

"சஞ்சீவை பத்தின விபரங்களை இப்படி நாம பார்க்கக் கூடும்னு கெஸ் பண்ணி... அந்த விபரங்களை மட்டும் அழிச்சி வெச்சிட்டுப் போயிருக்கா...?"

கார்த்திகேயன் தன் முன்னால் ஒரு பெரிய சூன்யம் நிற்பதைப்போல உணர்ந்தார்.



## 11

காட்டேஜ் எண் டி எழுபத்தி நான்கு.

லேகா ஏராளமான மகிழ்ச்சியை முகப்பரப்பில் கொட்டி வைத்திருந்தாள்.

ப்ரீஃப்கேஸிலிருந்து டர்க்கி டவலை எடுத்துத் தோளில் மாட்டிக் கொண்டே சொன்னாள்.

"சஞ்சீவ்... விபரம் தெரியாத வயசில் விளையாட்டுப் பிள்ளையா இருந்தப்ப நான் எப்படி என்ஜாய் பண் ணினேனோ... அதே மாதிரி என்ஜாய்மென்ட் விபரம் தெரிஞ்சு இன்னிக்குத்தான் எனக்கு கிடைச்சிருக்கு..."

"உனக்கு இந்த சந்தோஷத்தைக் கொடுக்கணும்ங்கிறது தானே என்னோட நோக்கமா இருந்தது."

அவனை ஆழமாய் பார்த்துக் கொண்டே லேகா கேட்டாள்.

"உங்களுக்கு இப்படி ஒரு யோசனை எப்படித் தோணிச்சு...? உங்களோட அத்தனை வேலைகளையும் கிடப்பில் போட்டுட்டு என்கூட எப்படி கிளம்பி வந் தீங்க...?"

"இதிலென்ன இருக்கு...? ஒரு நிஜமான ஃப்ரெண்ட் ஷிப்புக்காக இதைக்கூட செய்யலைன்னா எப்படி...?"

"நம்ம ஃப்ரெண்ட்ஷிப்புக்காகத்தான் நீங்க உங்க வேல்யுபுள் நேரத்தை விட்டுக் கொடுக்கறீங்களா...?"

"ஆமா..."

"அதைத் தவிர வேற எந்த நோக்கமுமே இல்லையா?"

"இல்லை லேகா..."

"ரியலி..."

"ரியலி..."

"ப்ராமிஸ்..."

"காட் பிராமிஸ்..."

பளபளக்கும் கண்களால் அவனைப் பார்த்தாள் லேகா.

"இப்படி ஒரு ஃப்ரெண்ட்ஷிப் கிடைச்சதுக்காக நான் ரொம்ப பெருமைப்படறேன் சஞ்சீவ்..."



"திடீர்னு உன் பேச்சு ஏன் ஒரு மாதிரி சென்ட்டிமெண் டலா போயிட்டிருக்கு... உனக்கு என்னோட அப்பா ஞாபகம் வந்திடுச்சா...?"

"சேச்சே... அந்த சூழ்நிலையை தயவு செஞ்சு ஞாப கப்படுத்தாதீங்க..."

"அப்படின்னா நீயும் தேவையில்லாம மனசைப் போட்டுக் குழப்பிக்காம இருக்கணும். ரொம்ப உணர்ச்சி வசப்பட்டு சென்ட்டிமெண்டலாப் பேசக்கூடாது. இப்படி உட்கார்ந்து பேசிட்டிருக்கவா நாம இங்கே வந்தோம்."

"ஓ.கே. ஓ.கே. இப்போ நான் போய் களைப்பு தீர குளிச்சிட்டு வர்றேன்... வந்ததும் திவ்யமா டின்னர் சாப்பிட்டு அக்கடான்னு பெட்ல விழுகணும்... நாள் பூராவும் சிட்டியை சுத்தினதால அடிச்சுப் போட்ட மாதிரி இன்னிக்கு எனக்குத் தூக்கம் வரும்..."

"போய் குளிச்சிட்டு வா..."

லேகா பாத்ரூமை நோக்கிப் போய் ப்ளைவுட் கதவில் அஸ்தமித்தாள்.

கதவு இறுக சாத்திக் கொண்டதும் - சட்டென டெலி போனுக்கு பாய்ந்தான் சஞ்சீவ். எண்களை அழுத்தினான்.

"ஹலோ..."

"யாரு... சஞ்சீவா...?"

"ஆமா குணா..."

"சிட்டி சைட் ஸீயிங் எப்படி இருந்தது?"

"அவ நல்லா என்ஜாய் பண்ணினா...?"

"நீ என்ஜாய் பண்ணலையா...?"

"இப்படி சைட் ஸீயிங் போகவா நான் லேகாவோட பெங்களூர் வந்தேன். என்னோட மனசெல்லாம் நாம செய்ய வேண்டிய காரியத்தின் மேலேயே இருந்தது. எந்த லெவல்ல இருக்கு...?"

"திட்டமிட்டபடி எல்லா ஏற்பாடுகளும் நடந்திட்டிருக்கு... லேகாவுக்கு சந்தேகம் வராம நீ பார்த்துக்கிட்டா போதும்..."

"அதை நான் பார்த்துக்கிறேன்.."

"அநேகமா இன்னிக்கு ராத்திரிக்குள்ளே ஆபரேஷனை நடத்திடலாம்னு எதிர்பார்க்கறேன்... எதுக்கும் நீ தயாரா இரு..."

"ஓ.கே. குணா... நான் எந்த நிமிஷமும் லேகாவோட ஆஜராக தயாரா இருக்கேன்..."

"ரைட்... இப்போ நீ எங்கிருந்து பேசிக்கிட்டிருக்கே?"

"காட்டேஜ் அறையிலிருந்துதான்..."

"காட்டேஜ் அறையிலிருந்தா...? அப்போ லேகா...?"

"அவ பாத்ரூமில் குளிச்சிட்டிருக்கா."

"அப்படின்னா... சீக்கிரமா போனை வெச்சிடு சஞ்சீவ்... அவளுக்கு சந்தேகம் வரக்கூடாது."

"நோ ப்ராப்ளம்... அவளை நான் சமாளிச்சுக்கிறேன்."

"அப்போ நான் போனை வெச்சிடட்டுமா...?"

"வெச்சிடு... எந்த நிமிஷமும் உன்னோட போனை நான் எதிர்பார்த்துட்டிருப்பேன்..."

"ஸீ யு..."

குணா டெலிபோன் தொடர்பை துண்டிக்க, சஞ்சீவும் ரிசீவரை கவிழ்த்தான். லேகா இன்னமும் ஷவரின் இரைச்சலோடு குளித்துக் கொண்டிருந்தாள்.





# 12

தட்...

தட்...

தட்...

காட்டேஜின் கதவு தட்டப்பட - சஞ்சீவ் எழுந்து போய் ஜன்னல் திரைச்சீலையை விலக்கிப் பார்த்தான்.

வெளியே கவிழ்ந்திருந்த இருட்டில் மசமசப்பாய் ஒரு உருவம் நின்றிருப்பது தெரிந்தது.

அருகாமை சுவிட்ச் போர்டில் கை வைத்தான்.

டிட்.

சுவிட்சைத் தட்டிவிட - வெளி வாசலில் மஞ்சள் வெளிச்சம் சோகையாய் பரவியது.

"யாரது..."

சஞ்சீவின் குரலுக்கு பதில் வந்தது.

"நான் ரெஸ்டாரெண்ட் பேரர் ஸார்..."

மசமச மஞ்சள் வெளிச்சத்தில் பார்த்த போது - யூனிபார்மில் அவன் நின்றிருந்தான்.

காட்டேஜின் கதவைத் திறந்தான் சஞ்சீவ்.

"என்ன வேணும்...?"

சஞ்சீவ் கேட்க கேட்கவே...

பேரர் யூனிபார்மில் இருந்த நட்ராஜ் உள்ளே வந்தான்.

"டின்னர் கொண்டு வந்திருக்கேன் ஸார்..."

சொல்லிக்கொண்டே தன் கையிலிருந்த டிரேயை டீபாய் மேல் வைத்தான்.

அயிட்டங்களை தனித்தனியே பரப்பி வைக்க ஆரம்பித்தவனைப் பார்த்து சஞ்சீவ் அவசரமாய்க் குரல் கொடுத்தான்.

"ஒரு நிமிஷம் நில்லுப்பா... நீ பாட்டுக்கு டின்னர் கொண்டு வந்து வெச்சிட்டிருக்கியே...?"

நட்ராஜ் நிமிர்ந்தான்.

"ஏன் ஸார்... என்ன ப்ராப்ளம்?"

"இங்கே யாரும் டின்னர் ஆர்டர் பண்ணவே இல்லையே?"

நட்ராஜ் செயற்கையாய் புருவங்களைச் சுருக்கினான்.

"நீங்க டின்னர் ஆர்டர் பண்ணலையா...?"

"ஆமா..."

"உங்க காட்டேஜ் நம்பர் செவன்ட்டி ஃபோர்தானே...?"

"எஸ்..."

"செவன்ட்டி ஃபோரிலிருந்து டின்னருக்கு ரூம் சர்வீஸ் ஆர்டர் வந்ததாலதான் நான் இதை எடுத்துட்டு வந்தேன்."

"இங்கே நாங்க ரெண்டே பேர்தான் இருக்கோம். நானும் ஆர்டர் பண்ணலை..." வார்த்தைகளைப் பாதியில் நிறுத்திவிட்டு லேகாவிடம் திரும்பிக் கேட்டான் சஞ்சீவ்.

"லேகா... நீ இன்டர்காம் மூலமா டின்னர் கொண்டு வரச் சொன்னியா...?"

அவளும் மறுத்தலாய் தலையை அசைத்தாள்.

"இல்லை... நான் சொல்லவே இல்லை..."

ஒரு விநாடி யோசனைக்குப் பின் சஞ்சீவ் சொன்னான்.



"இது டி ப்ளாக் செவன்ட்டி ஃபோர்... வேற பிளாக்கில் உள்ள செவன்ட்டி ஃபோர் காட்டேஜிலிருந்து டின்னர்க்கு ஆர்டர் வந்திருக்கலாம் பேரர்..."

"இஃப்யூ டோண்ட் மைண்ட் நான் இந்த இன்டர்காமை யூஸ் பண்ணி கன்ஃபார்ம் பண்ணிக்கலாமா சார்..."

சஞ்சீவ் தோள்களைக் குலுக்கிவிட்டு கட்டிலுக்குப் போய் அமர -

நட்ராஜ் திருட்டுப் பார்வையோடு இன்டர்காமிடம் குனிந்தான்.

ஏதோ எண்களை அழுத்திவிட்டு - மறுமுனையில் யாருடனோ பேசுவது போல பாவனை செய்துவிட்டு ரிசீவரைக் கவிழ்த்தான்.

"காட்டேஜ் நம்பர் தப்பா சொல்லிட்டாங்களா பேரர்...?"

"இல்லை சார்... டி செவன்ட்டி ஃபோர்தான்... ஆனா எப்படி இந்தத் தப்பு நடந்ததுன்னு தெரியலை... இட்ஸ் ஆல்ரைட். நான் கொண்டு வந்த அயிட்டம்ஸை எடுத்திட்டுப் போயிடறேன்..."

பீங்கான் கிண்ணங்களில் இருந்த அயிட்டம்களை பவ்யமாகத் திரும்பவும் ட்ரேயில் எடுத்து வைக்க ஆரம்பித்தான்.

அதே விநாடி -

லேகா சொன்னாள்...

"சஞ்சீவ்... காலைல இருந்து ஊரைச் சுத்தி ரொம்ப டயர்டா இருக்கேன்... இனி ரெஸ்டாரெண்ட்டுக்கு நடந்து போய் சாப்பிடறதை நினைச்சாலே மலைப்பா இருக்கு. இந்த டின்னரை நாம எடுத்துப்போம்."

சஞ்சீவ் தலையசைத்தான்.

"நோ ப்ராப்ளம்."

நட்ராஜ் கேட்டான்.

"அப்போ டின்னரை வெச்சிட்டுப் போயிடவா சார்..."

"வெச்சிடு..."

நட்ராஜ் அந்த காட்டேஜை விட்டு வெளியேறினான். படிகளைக் கடந்தவன் மேற்கொண்டு நகர்ந்து செல்லாமல் அப்படியே நின்றிருந்தான். அந்த ஜன்னல் ஓரமாய் நின்று உள்ளே நடப்பவைகளைத் தீவிரமாய்க் கண்காணிக்க ஆரம்பித்தான்.

சில நிமிஷங்களில் சாப்பிட ஆயுத்தமாகி டீபாய் அருகே சேர்களை நகர்த்திப் போட்டார்கள் லேகாவும், சஞ்சீவும்.

பீங்கான் கிண்ணங்களை அருகில் இழுத்து மூடியைத் திறந்தார்கள். திறந்ததுதான் தாமதம்...

குப்பென்று ஏராளமான புகையோடு ஒரு வாயு பீறிட்டது.

என்ன ஏது என்று யூகிக்கும் முன்பாக லேகா மயங்கிச் சரிந்தாள். தொடர்ந்து சஞ்சீவ்.

இதற்காகவே காத்திருந்தவனாய் நட்ராஜ் பின்பக்க வழியே உள்ளே நுழைந்தான். வரும்போதே பிளாஸ்டிக் டிஸ்போசல்களை எடுத்துப் போகும் ஆளுயர நைலான் பேகையும் கொண்டு வந்தான். லேகாவை மூட்டை மாதிரி மடங்கலாய் அந்த பேகிற்குள் திணித்தான். சிரம மூச்சோடு மூட்டையை இழுத்துக் கொண்டு போய் பின் பக்க வாசலருகே - தயாராய் நிறுத்தி வைத்திருந்த டிராலியில் அதை ஏற்றினான்.



இருட்டு கவிழ்ந்திருந்த பேஷ்மெண்ட்டில் டிராலியை உருட்டிக் கொண்டு போனான். காட்டேஜ் வளாகத்தின் பின்புறம் போய்ச் சேர்ந்தது டிராலி.

அங்கிருந்த சின்னக் கதவைத் திறந்து வெளியே செல்ல... அருகாமை மண் பாதையில் காரை நிறுத்தித் தயாராய்க் காத்திருந்தான் திம்மப்பா.

நட்ராஜைப் பார்த்ததும் மகிழ்ச்சிப் புன்னகை பூத்தான்.

"வா நட்ராஜ்... காரியத்தைக் கச்சிதமாப் பண்ணிட்டே... வெரி குட்..."

"உங்க பாராட்டு எனக்குத் தேவையில்லை. மீதித் தொகையைக் கொடுத்தீங்கன்னா... இந்த ட்ராலியில் இருக்கிற மூட்டை காருக்கு வரும்."

பணம் கை மாறியது. இருவரும் ஆளுக்கொரு கை பிடிக்க - லேகாவைக் கர்ப்பம் தாங்கியிருந்த அந்த நைலான் மூட்டை கார் டிக்கிக்குப் போனது.

திம்மப்பா பானெட்டைச் சுற்றிக் கொண்டு போய் டிரைவிங் இருக்கையில் நிரம்பினான். இக்னீஷியனை உசுப்ப - கார் மெல்லிய கனைப்புடன் ஸ்டார்ட் ஆகிக் கொண்டது. புழுதியைக் கிளப்பிக் கொண்டு அந்த மண் பாதையில் விரைய ஆரம்பித்தது. கார் அந்தத் திருப்பத்தைக் கடந்தவுடனே - ஹெட்லைட் விளக்கைப் போடாமல் - என்ஜின் சத்தமில்லாமல் ஒரு மாருதி நட்ராஜை நெருங்கி வந்து நின்றது.

டிரைவிங் இருக்கையிலிருந்து தலையை நீட்டியவன் அவசரமாய்க் கத்தினான்.

"நட்ராஜ்... சீக்கிரமா காரில் ஏறு..."

பின் சீட் கதவு திறக்க - நட்ராஜ் காருக்குள் தொற்றினான். அவன் உள்ளே நிரம்ப நிரம்பவே மாருதி வேகமெடுக்க ஆரம்பித்தது.

"சீக்கிரமா காரை விரட்டு... திம்மப்பாவின் காரை நழுவ விட்டுடக்கூடாது."

காருக்குள் நட்ராஜின் சகாக்கள் மூன்று பேர் நிரம்பியிருந்தார்கள்.

நட்ராஜ் சிரித்தான்.

"இந்த மாதிரி காட்டேஜில் இருந்தோம்னா என்னிக்காச்சும் ஜாக்பாட் மாதிரி எவனாச்சும் மாட்டுவான்னு நான் சொன்னது சரியாப் போச்சு பார்த்தியா...?"

"யாராவது பண்ணாரக் குடும்பத்துப் பையனை மடக்கி ப்ளாக் மெயில் பண்ணலாம்ங்கிற மாதிரி திட்டம் போட்டு இந்த காட்டேஜில் உன்னை நுழைய வெச்சோம். ஆனா இப்போ வேற ஏதோ விவகாரம் மாட்டியிருக்கே."

நட்ராஜ் கறைப் பற்கள் தெரியச் சொன்னான்.

"இந்த விவகாரம் எனக்கே புதிராத்தான் இருக்கு. அந்தப் பொண்ணை கடத்திட்டுப் போக உதவணும்னு அவன் வந்து கேட்டான். அதுக்குக் கூலியா முப்பதாயிரம் தர்றேன்னான். நான் கொஞ்சம் பிகு பண்ணி விஷயத்தை துருவிக் கேட்டதும், இன்னும் அதிகமா பணம் தர்றேன்னு சொன்னான். ஒரு லட்ச ரூபாய் தருவியான்னு கேட்டதும், அதுக்கும் சரின்னு ஒத்துக்கிட்டான். மறு பேச்சுப் பேசாம இவ்வளவு பெரிய தொகையைத் தர ஒருத்தன் தயாரா இருக்கான்னா... இதில் என்னவோ விவகாரம் இருக்குன்னு நான் புரிஞ்சிக்கிட்டேன். அந்தப் பொண்ணைக் கடத்திட்டுப் போறதால அதைவிடப் பலமடங்கு



தொகை அவங்களுக்குக் கிடைக்கறதாலதான் இந்த பேரம் அவங்களுக்கு சர்வ சாதாரணமா இருந்திருக்கு. அதனாலதான் உங்களுக்கு நான் உடனடியா தகவல் கொடுத்தேன்."

"இவ்வளவு ரிஸ்க் எடுத்து அந்தப் பொண்ணை ஏன் கடத்தறாங்கன்னு இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரிஞ்சிடும்."

அவர்கள் திம்மப்பா ஓட்டிச் செல்லும் காரைப் பின் தொடர்ந்து செல்ல -

திம்மப்பாவின் கார் நகரின் ஒதுக்குப்புறத்தில் இருந்த ஒரு சிறிய பிரைவேட் டிஸ்பென்சரிக்குள் நாசியை நுழைத்தது.

டிஸ்பென்சரி வாசலில் டென்ஷன் நிரம்பிய முகத்தோடு மதன்ராய் காத்திருந்தார்.

## 13



ஆபரேஷன் மேஜையின் மேல் நீளமாய்க் கிடத்தப்பட்டிருந்தாள் லேகா.

மதன்ராய் மாஸ்க் அணிந்து ஆபரேஷனுக்குத் தயாராய் இருந்தார்.

திம்மப்பா சில்வரில் பளபளக்கும் ஆயுதங்களை அவர் கேட்க கேட்க ஒவ்வொன்றாய் எடுத்துக் கொடுக்க ஆரம்பித்தான்.

மயக்கத்திலிருந்த லேகாவின் மணிக் கட்டில் கத்தியை வைத்தார் மதன்ராய்.

பீரிட்ட ரத்தத்தைப் பஞ்சினால் ஒற்றியெடுத்து அவருக்கு ஒத்தாசை செய்தான் திம்மப்பா.

ஒரு மணி நேர ஆபரேஷன்.

மதன்ராய் வேகமாய்த் தையலைப் போட்டு மூட ஆரம்பித்தார்.

திம்மப்பா அவரைத் திகைப்போடு கேட்டான்.

''என்ன டாக்டர்..? வைரம் எங்கே...?''

மதன்ராயின் முகம் வெளிறிப் போயிருந்தது.

''இவளோட மணிக்கட்டில் நான் வெச்ச இடத்தில் வைரம் இல்லை...''

''அதெப்படி...? வைரம் உடம்பில் இல்லாம சிலமணி நேரம்கூட இவளால உயிர் வாழ முடியாதுன்னு சொன்னீங்களே...?''

''அதைத்தான் நானும் யோசிக்கிறேன்...''

சொல்லிக்கொண்டே - லேகாவின் முகத்தைப் போர்த்தியிருந்த துணியை விலக்கி வெளிச்சத்தில் அவள் முகத்தைப் பார்க்க -

அதிர்ச்சி தாக்கியது.

அந்தப் பெண் லேகாவே அல்ல.

மதன்ராயின் முகம் கோபத்தில் தக்காளிப் பழம் மாதிரிச் சிவந்தது.

''ஏய்... திம்மப்பா... நீ எவளோ ஒருத்தியைத் தூக்கிட்டு வந்து இதான் லேகான்னு சொல்லியிருக்கே... இதுக்காகவா உன் கையில் லட்சக் கணக்கில் பணம் கொடுத்தேன்...''



''டாக்டர்... அந்த பேரர்தான் நம்ம ரெண்டு பேரையும் ஏமாத்திட்டான்..''

அவன் சொல்லச் சொல்லவே - நட்ராஜும் அவன் சகாக்களும் அவர்களைச் சுற்றி வளைத்தார்கள்.

''என்ன சொன்னே திம்மப்பா... நான் உன்னை ஏமாத்திட்டேனா...? ரிஸ்க் எடுத்து நீ சொன்ன காரியத்தை நிறைவேத்தினேன். அந்த காட்டேஜில் இருந்த பொண்ணைத்தான் நான் கடத்திட்டு வந்தேன்...''

நட்ராஜின் சகா பிஸ்டல் ஒன்றைக் கையில் ஏந்திக் கொண்டு டாக்டர் மதன்ராயிடம் கரகரத்த குரலில் கேட்டான்.

''அதெல்லாம் இருக்கட்டும்... ஏதோ வைரம் வைரம்ன் னீங்களே அது என்ன...? அதைப் பத்திச் சொல்லுங்க...''

அவன் கேட்கிற போதே -

சத்த்த்...

ஒரு பூட்ஸ் கால் உதைத்ததில் அந்த பிஸ்டல் தெறித்தது.

''நான் சொல்றேன்... வைரமும், அதை உடம்புக்குள்ளே வெச்சிருக்கிற லேகாவும் என்கிட்டேதான் பத்திரமா இருக்காங்க...''

புதுக்குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

சஞ்சீவ் நின்றிருந்தான்.

அவனுக்குப் பின்னால் குணா.

அவனுக்கும் பின்னால் ஒரு சின்ன போலீஸ் படை.



## 14

லேகா தலையைக் குனிந்து நின்றிருக்க... அவள் கையைப் பிடித்து ராமகிருஷ்ணனிடம் ஒப்படைத்தபடியே சஞ்சீவ் சொன்னான்.

"ஸார்... உங்க பொண்ணை எப்படிக் கூட்டிட்டுப் போனேனோ அப்படியே திரும்பக் கொண்டு வந்து சேர்த்திருக்கேன்."

"தம்பி... நீங்க லேகாவோட உயிரை மட்டும் காப்பாத்தலை... அவ மேல உயிரையே வெச்சிருக்கிற என்னோட உயிரையும் சேர்த்துக் காப்பாத்தியிருக்கீங்க..."

"சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் போலீசுக்கு எவ்வளவு உரிமையும் கடமையும் இருக்கோ... அதே அளவு கடமையும் உரிமையும் பிரைவேட் டிடெக்டிவ்வான எங்களைப் போன்றவர்களுக்கும் இருக்குன்னுதான் நான் நினைக்கிறேன். அதனாலதான் இரண்டொரு சந்தர்ப்பத்தில் லேகா மேல கொலை முயற்சி நடந்தப்போ ஏதேச்சையா நான் அதைக் கவனிக்க நேர்ந்தது.

இந்தப் பொண்ணை ஏன் கொலை பண்ண முயற்சி செய்யறாங்கன்னு கேள்விக் குறியோட லேகாவைக் கவனிக்க ஆரம்பிச்சேன். அவளோட இன்டர்நெட் மூலமா ரிலேஷன்ஷிப் வச்சுக்க ஆரம்பிச்சேன். அப்போதான் நீங்க வெளிநாடு போற தகவல் எனக்குக் கிடைச்சது.

நீங்க வெளிநாட்டிலிருக்கிறப்போ இவளைத் தீர்த்துக் கட்ட முயற்சிகள் நடக்கப் போறது தெரிஞ்சது. அதனால தான் அவளைக் கூட்டிட்டு வெளியூர் கிளம்பினேன். இவளை யார் கொலை செய்ய முயற்சி பண்றாங்க... எதுக்காக கொலை செய்ய முயற்சி பண்றாங்க. இந்தக்



கேள்விக்கெல்லாம் விடை தெரியணும்ங்கிறதுக்காகத் தான் இந்த ட்ரிப்பை பயன்படுத்தினேன். லேகாவைக் கூட்டிட்டுப் போக இங்கே என்னோட நண்பன் 'வாசு உதவி பண்ணினான். இதெல்லாம் வெட்டி வேலைன்னு திட்டுவான்கிறதால அவன்கிட்டே உண்மையான விபரத்தை நான் சொல்லலை. அதே மாதிரி பெங்களூரில் இருக்கும் என்னோட டிடெக்டிவ் நண்பன் குணாவும் இந்த விஷயத்தில் எனக்கு ரொம்பவும் உதவினான்.

நானும் லேகாவும் பெங்களூரில் இருக்கிறப்போ எங்களைச் சுத்தி என்ன நடக்குதுன்னு கவனிச்சு தகுந்த சமயத்தில் எனக்கு தகவல்கள் கொடுத்து டாக்டர் மதன்ராயை மடக்க உதவினதே குணாதான். அவன் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் டின்னர் கொண்டு வர்ற சாக்கில் எங்களை மயக்கப்படுத்தி லேகாவைக் கடத்த இருந்த திட்டம் எனக்குத் தெரிஞ்சது. லேகாவுக்கு பதிலா குணாவின் ஆபீஸ் ஸ்டெனோவைக் கொண்டு வந்து அறையில் வெச்சோம். மயக்கமடையற மாதிரி நடிச்சோம். திம்மப்பாவின் கட்டளைப்படி லேகாவைக் கடத்த வந்த நட்ராஜுக்கு லேகாவை அடையாளம் தெரியாதுங்கிற விஷயத்தை சாதகமா பயன்படுத்திக்கிட்டு இந்த ஆள் மாறாட்ட நாடகத்தை வெற்றிகரமா நடத்திட்டோம், திம்மப்பா. மதன்ராயின் இருப்பிடத்துக்கு போனப்பதான் எல்லா உண்மைகளும் எனக்கே முழுசா தெரிஞ்சது."

சிறிது இடைவெளி விட்டுவிட்டு ராமகிருஷ்ணனைப் பார்த்து சஞ்சீவ் தொடர்ந்தான்.

"முதல்ல உங்களைப் பத்தி லேகாவைப் போலவே நானும் தப்பாத்தான் நினைச்சிருந்தேன். பெத்த மகளையே வேவு பார்க்கிற இவரெல்லாம் ஒரு தகப்பனான்னு லேகாவை வெளியூருக்குக் கூட்டிட்டுப் போற முடிவையும் அதன் மூலமா கொலை முயற்சி செய்பவர்களைக் கண்டு

பிடிக்கவும் முடிவு பண்ணினேன். ஆனா மகளோட உயிருக்காக கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள வைரத்தை வரவழைச்சு உடம்பில் பொறுத்தி... இந்த நிமிஷம் வரைக்கும் எதிரிகள் அவளை நெருங்கி விடாம பாதுகாப்பு வளையம் அமைச்சு பாதுகாத்துட்டு வர்ற இவரை நினைக்கும்போது இப்ப எனக்குப் பெருமையா இருக்கு... அதனாலதான் நானே லேகாவை திரும்ப இவர் வசம் ஒப்படைச்சேன்..."

லேகாவும் ஆமோதிப்பதாய்த் தலையசைத்தாள்.

"ஆமாப்பா... உங்களைப் பத்தி தப்பா புரிஞ்சிக்கிட்டதுக்காக என்னை மன்னிச்சிடுங்கப்பா..."

ராமகிருஷ்ணன் குரல் தழுதழுத்தார்.

"என்னை நீ புரிஞ்சிக்கிட்டா அதுவே எனக்கு போதும்மா... மன்னிச்சிடுங்கன்னு பெரிய வார்த்தையெல்லாம் சொல்ல வேண்டாம்..."

கார்த்திகேயன் புன்னகைத்தார்.

"இந்தக் கேசை என்னால துப்பு துலக்க முடியலைன்னாலும்... ஒரு சிராய்ப்புக்கூட ஏற்படாம லேகா திரும்பக் கிடைச்சது எனக்கு மன நிறைவாகத்தான் இருக்கு..."

"இனிமே லேகாவைப் பத்தின கவலை எனக்கு இல்லை இன்ஸ்பெக்டர்..."

"ஏன்..?"

"பாதுகாப்பு வளையமா சஞ்சீவ் இருக்கும்போது நான் ஏன் கவலைப்படணும்...?"

கேட்டுவிட்டு ராமகிருஷ்ணன் சஞ்சீவை அர்த்த புஷ்டியோடு பார்க்க - லேகா குப்பென்று மகிழ்ச்சியும் வெட்கமும் பீறிட சிவந்த முகத்தோடு நிமிர்ந்தாள்.

# சுடும் நிலவு சுடாத சூரியன்!



## 1

அரண்மனையின் மஹா மண்டபத்தில் அரசவை கூடியிருந்தது.

பணிப்பெண்கள் மயில்தோகை கொண்டு வீசியதால் எழுந்த மெல்லிய காற்று - அரியணையில் அமர்ந்து இருந்த மன்னன் சுந்தரசேனனின் முகத்தில் வியர்வை அரும்பாமல் பார்த்துக் கொண்டது. மன்னன் அவை நடவடிக்கைகளில் உன்னிப்பாய் கவனம் செலுத்திக் கொண்டிருக்க, அவனுக்கு அருகில் இருந்த அரியணை

யில் அமர்ந்து இருந்த மஹாராணி வாசமதி தன் அழகான மேனியை மெல்ல நெளித்தாள். மருதாணிச் சாற்றில் குளித்து சிவப்பேறியிருந்த விரல்களால் யாரும் அறியா வண்ணம் மன்னனின் இடுப்பைத் தொட்டாள். சாமரம் வீசும் பணிப் பெண்ணுக்கும் கேட்டு விடாதபடி மெல்ல "அரசே!" என்றாள். அவள் விட்ட மூச்சுக்காற்றில் வாசனை திரவியம் மணத்தது. சபை நடவடிக்கையினின்றும் கலைந்த சுந்தரசேனன் அவளை ஏறிட்டு 'என்ன' என்பது போல் பார்த்தான். வாசமதி மன்னனின் காதோரம் தன் சிரத்தை மெல்லச் சாய்த்துக் கேட்டாள். காதுகளில் இருந்த ஆபரணங்கள் அழகாய் அசைந்தன.

"சபை நடவடிக்கைகள் முடிய நீண்ட நேரம் ஆகும் போல உள்ளதே...?"

"ஏன் தேவி...?"

"எனக்கு உடல் நலம் சற்று சரியில்லை. ஓய்வு எடுக்க வேண்டும் போல் உள்ளது..." வாசமதி சொல்ல - மன்னன் புன்னகைத்தான்.

"இதோ...! இன்னும் சற்று நேரத்தில் சபை நடவடிக்கைகள் முடிந்து விடும். பிரதான அமைச்சர் நாட்டின் நிதிநிலை பற்றி சில கருத்துக்களைச் சொல்லி முடித்ததும் சபை கலைந்து விடும் தேவி!" - மன்னர் சுந்தரசேனன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே காவலாளி ஒருவன் ஏந்திய ஈட்டியோடு உள்ளே வேக வேகமாய் வந்து பவ்யமாய் குனிந்தான்.

"அரசர்க்கு வணக்கம்...! முதிய புலவர் பெருமான் ஒருவர் தங்களைப் பார்ப்பதற்காக வந்து வாயிலில் காத்து இருக்கிறார்."



"முதியவரா...?"

"ஆம் அரசே...!"

"பெயர் என்ன சொன்னார்...?"

"சாமந்தனார்."

"நோக்கம் என்னவென்று கேட்டாயா...?"

"சில அபூர்வ வகையான பூக்களை தங்களிடம் காட்ட வேண்டுமாம்... வட எல்லையிலிருந்து வருகிறாராம்....!"

முன் வரிசையில் அமர்ந்து இருந்த பிரதான அமைச்சர் இரும்பொறை முத்தரய்யர் அந்த காவலாளியை சினத்தோடு ஏறிட்டார்.

"காவலாளியே! அந்தப் புலவரை நாளைய தினம் வரச்சொல். மன்னர்க்கு இப்போது நேரம் இல்லை...!"

"உத்தரவு அமைச்சரே..." - சொல்லிவிட்டு போகத் திரும்பிய காவலாளியை மன்னன் சுந்தரசேனன் தன் உரத்த குரலில் நிறுத்தினான்.

"நில்... காவலாளியே!"

காவலாளி திரும்பி மறுபடியும் குனிந்து வணங்கினான். "அரசே...!"

"அந்தப் புலவர் உள்ளே வரட்டும். முதியவர்களை அலைக்கழிக்க வைக்கக் கூடாது...!"

"உத்தரவு அரசர் பெருமானே...!" காவலாளி அரண்மனை வாயிலை நோக்கிப் போக, அமைச்சர் இரும்பொறை முத்தரய்யர் வியப்போடு சுந்தரசேனனை ஏறிட்டார்.

"மன்னா...! இது சபை அலுவல் நேரம். இது போன்ற வேளைகளில் நாம் புலவர்களையோ மற்றவர்களையோ அரசவைக்குள் அனுமதிப்பது வழக்கம் கிடையாது."

"வழக்கம் இல்லை என்பது எனக்கும் தெரியும் அமைச்சரே...! வந்து இருப்பவர் ஒரு வயதான புலவர் என்றும், வட எல்லையிலிருந்து வந்து இருக்கிறார் என்றும், என்னிடம் சில அபூர்வமான பூக்களைக் காட்ட விரும்புகிறார் என்றும் காவலாளி சொன்னதால் மனதுக் குள் ஓர் ஆர்வம். எப்போதுமே நாம் பார்க்கின்ற சபை நடவடிக்கைகள்தானே...?"

"இருந்தாலும் மன்னா...! நாட்டின் நிதி நிலையைப் பற்றி தங்களிடம் சில கருத்துக்களைத் தெரிவிக்க இருந் தேன்." அமைச்சர் இரும்பொறை முத்தரய்யர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்தப் புலவர் அரச சபைக்குள் நுழைந்தார் முதியவர். கூன் போட்டு தளர்வாய் நடந்து வந்தார். வெண்ணிற தாடி மீசைக்குள் முகமும் கண்களும் தேஜஸோடு தெரிந்தது. வலது கையில் மான் தோலால் உருவாக்கப்பட்ட ஒருபை.

மன்னன் சுந்தரசேனனுக்கு எதிராக வந்து நின்று கைகளைக் குவித்தார். "வந்தனம் மன்னா...!"

"வரவேண்டும் புலவரே...!"

"மன்னா...! என் பெயர் சாமந்தன். வடநாட்டில் உள்ள மதுராபுரியிலிருந்து வருகிறேன். நான் இந்த தென்னாட் டுக்குள் வருவது இதுவே முதல் தடவை. இந்த முதல் தடவையே தங்களைப் பார்க்க வந்ததற்கு ஒரு காரணம் இருக்கிறது...!"

"என்ன காரணம்?"

"மன்னா...! நான் சித்த மருத்துவம் கற்ற ஒரு புலவன். பண்டையக்கால சித்தர்கள் எழுதி வைத்து விட்டுப் போன பழம் பெரும் பாடல்களைப் படித்து அவைகளின் பொருள்



உணர்ந்து மூலிகைச் செடிகளை உற்பத்தி செய்வதற்காக தோட்டம் ஒன்று அமைத்துள்ளேன். அந்த தோட்டத்தில் நான் வளர்த்த இரண்டு அற்புதமான மூலிகைச் செடிகளான 'ஹம்ருதா' 'பிரவஞ்சனா' இப்போது பூக்க ஆரம்பித்துள்ளன. அந்தப் பூக்களை நான் உங்களுக்காகக் கொண்டு வந்துள்ளேன். இந்தப் பூக்கள் சாதாரண பூக்கள் அல்ல. அரச வம்சத்துப் பூக்கள். தெய்வீக அம்சம் பொருந்திய பூக்கள். மற்ற பூக்கள் எல்லாம் பறித்த சில மணி நேரத்தில் வாடி வதங்கி விடும். ஆனால் இந்த ஹம்ருதா, பிரவஞ்சனா பூக்கள் ஒரு மண்டலம் வரை அதாவது 48 நாட்கள் வரை வாடாமல் பறித்த போது எவ் வளவு உயிர்ப்போடும் புத்துணர்ச்சியோடும் இருந்ததோ அதே போல் இருக்கும். மருத்துவ குணமும், தெய்வீக மணமும் பொருந்திய இந்தப் பூக்களை தங்களிடம் கொடுப்பதற்காக பல நாட்கள் புரவியில் பயணம் செய்து வந்துள்ளேன். மன்னர் இந்தப் பூக்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்..." சொன்ன புலவர் சாமந்தனார் தான் கொண்டு வந்திருந்த மான் தோல் பைக்குள் கையை நுழைத்து அந்த இரண்டு பூக்களையும் எடுத்தார். ஒன்று பொன்நிறத்தில் இதழ்களைப் பரப்பி சிரிக்க, இன் னொன்று இளஞ்சிவப்பு நிறத்தில் மினுமினுத்தது.

அரசவை மொத்தமும் அந்தப் பூக்களை வியப்போடு பார்க்க, புலவர் தொடர்ந்தார்.

"மன்னா...! இந்தப் பூக்கள் மருத்துவ குணம் வாய்ந் தவை என்று சொன்னேன். அது எந்த வகையில் உடம் புக்கு நன்மை செய்ய வல்லது என்பதை இப்போது நான் சொல்கிறேன். கேளுங்கள். ஒரு மனிதனின் உடம்புக்குள் 96 தத்துவங்கள் இருந்து செயல் புரிகின்றன. இதை சித்தர் பெருமான் திருமூலர் இப்படி ஒரு பாட்டாகப் பாடுகிறார்.

முப்பதும் முப்பதும்

முப்பத்து அறுவரும்

செப்ப மதிலுடைக்

கோயிலினுள் வாழ்பவர்.

இந்த 96 தத்துவங்களும் உடம்பில் உயிர் உள்ளவரை தான் வேலை செய்யும். உயிர் நீங்கியதும் இந்த தத்து வங்களும் வேலை செய்யாமல் நின்றுவிடும். எனவே உடம்பில் உள்ள உயிர்க்கு மூலாதாரமாக உள்ள இந்த 96 தத்துவங்களும் நன்றாக வேலை செய்ய வேண்டு மென்றால் உடம்பு ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இந்த இரண்டு பூக்களையும் தினசரி ஒருவன் ஒரு முறை முகர்ந்து பார்த்தாலே போதும் - அவனுடைய ஆயுள் கூடும். இந்தப் பூக்கள் சாதாரண நபர்களிடம் இருப்பதைக் காட்டிலும் அரச வம்சத்தாரிடம் இருந்தால் இவைகளின் ஆற்றல் அதிக அளவில் வெளிப்படும். எனவேதான் இதைத் தங்களிடம் கொண்டு வந்தேன். ஔவை, அதியமான் மன்னனுக்கு நெல்லிக்கனியைக் கொடுத்தது போல் நான் இந்த தெய்வாம்சம் மிக்க மலர்களை தங் களுக்கு அளிக்க விரும்புகிறேன்.... இதை தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் மன்னா..."

சுந்தரசேனன் அரியணையிலிருந்தும் எழுந்து புலவரை நோக்கி வந்தான்.

"என் உடல் நலனைக் கருத்தில் கொண்டு இந்த அபூர்வ மலர்களோடு என்னைக் காண வந்த உங்களுக்கு என் நன்றி புலவர் பெருமானே..."

"மலர்களைப் பெற்றுக் கொள்ளுங்கள் மன்னா!" - சொன்ன புலவர் சாமந்தனார் தம் கையில் வைத்து இருந்த இரண்டு மலர்களையும் கொடுத்தார். சுந்தரசேனன் அந்த மலர்களை வாங்கினான்.



"இவைகளின் பெயர்கள் என்னவென சொன்னீர்கள் புலவரே?"

"ஹம்ருதா, பிரவஞ்சனா...!"

"இந்த மலர்கள் மணக்குமா...?"

"முகர்ந்துதான் பாருங்களேன் மன்னா...!"

சுந்தரசேனன் அந்த இரண்டு பூக்களையும் தம் நாசியருகே கொண்டு போய் மூச்சை இழுத்து முகர்ந்தான்.

ஒரு விநாடி-

இரண்டு விநாடி-

மூன்று விநாடி-

மன்னன் சுந்தரசேனன் வெட்டுண்ட மரம் போல் அப்படியே பின்னுக்கு சாய்ந்து மல்லாந்து விழுந்தான்.

நாசித் துவாரங்களில் குருதி கொப்பளித்தது.



2

மும்பையின் தாராவி.

'க்ளாஸிக் இன்போடெக்'கின் அமர்க்களமான ஏழு மாடிக்கட்டிடம். கட்டிடத்தின் உடம்பு முழுவதும் இள நீல நிறத்தில் நேர்த்தியாய் பொருத்தப்பட்ட கண்ணாடிச் சதுரங்கள் தெரிய - உள்ளே அறைகளில் ஆயிரக்கணக் கான கம்ப்யூட்டர்களுக்கு முன்னால் ஆண்களும் பெண்களுமாய் இளம் ஸாஃப்ட்வேர் என்ஜினியர்கள்.

நம்முடைய நாவலுக்குத் தேவையான 'கதிர்' என்கிற கதிரவனும் 'திரு' என்கிற திருமூர்த்தியும் ஏழாவது மாடியில் இருந்த காண்ட்டீனில் பக்கம் பக்கமாய் உட்கார்ந்து பீஸாவை மென்று, ஸ்ப்ரைட்டை ஸ்ட்ரா மூலம் உறிஞ்சிக் கொண்டிருந்தார்கள். அவ்வப்போது பேசினார்கள். சிரித்தார்கள்.

''கதிர்...!''

''ம்....!''

''உன்னோட கல்யாணத்துக்கு இன்னும் எத்தனை நாள் இருக்குன்னு தெரியுமா...?''

திரு கேட்க - அவசர அவசரமாய் பீஸா விள்ளலை மென்று விழுங்கி விட்டு கதிர் சொன்னான்.

''இன்னும் 41 நாள் 18 மணி நேரம் 25 நிமிஷம் இருக்கு...''

''அடப்பாவி! இவ்வளவு துல்லியமாய் கணக்கு போட்டு வெச்சிருக்கே! ராத்திரியில் தூங்கறியா... இல்லையாடா...?''

கதிர் சிரித்தான். ''தூக்கமாவது... ஒண்ணாவதுடா...! வெண்ணிலாவை நினைச்சுகிட்டாலே மனசுக்குள்ளே விடிய விடிய தீபாவளிதான். நானே என்னை மறந்து போய் தூங்கினாத்தான் உண்டு. படுத்தறாடா...!''

''அதான் இளைச்ச மாதிரி தெரியறியா...?''

''நாற்பத்தியோரு நாளும் 'கடகட'ன்னு ஓடிட கூடாதான்னு இருக்குடா திரு.''

''அதெல்லாம் ஓடிடும்... உன்னோட ப்ராஜக்ட் ஹெட்டை பார்த்தியா...? கல்யாணத்துக்கு ஒரு மாசம் லீவு வேணும்ன்னு கேட்டு இருந்தியே. என்ன சொன்னார்...?''



''பார்க்கலாம்ன்னு சொல்லியிருக்கார்.''

''பார்க்கலாம்ன்னா என்ன அர்த்தம்...?''

''கேட்ட லீவு கிடைக்காது.... கொஞ்சம் குறைச்சலாய் கிடைக்கும்ன்னு அர்த்தம். ப்ராஜக்ட் ஹெட் ஒரு டைப்பான ஆள். யாராவது கல்யாணம் பண்ணிக்கப் போறாங்கன்னா போதும். அந்த ஆளுக்குப் பிடிக்காது.''

''அப்படின்னா... நீ ஒண்ணு பண்ணு...!''

''என்ன...?''

''நேரடியாய் வி.பி.யைப் போய்ப் பார்த்துடு.... லீவு உடனே சாங்க்ஷன் ஆயிடும்...!''

''வி.பி.யெல்லாம் வேண்டாண்டா திரு...! ப்ராஜக்ட் ஹெட் நல்ல மூடில் இருக்கும் போது பேசிப் பார்த்துடறேன். இன்னொரு பீஸா சாப்டறியா?''

''வேண்டாம்...''

''ஐஸ்க்ரீம்...?''

'''ம்... சாய்ஸ்...!''

''ஸ்ட்ராபெர்ரி...'' கதிர் சொல்லிக் கொண்டு இருக்கும் போதே அவனுடைய செல் 'நீயே நீயே நானே நீயே' என்ற பாடலை ரிங்டோனில் வெளியிட்டது. கதிர் செல்லை எடுத்து டிஸ்ப்ளேயில் யார் என்று பார்த்தான்.

வெண்ணிலா!

கதிரின் முகத்தில் சந்தோஷம் பாய்ந்தது.

''ஹாய்...!'' என்றான்.

''நான் 'ஹாய்' சொல்லமாட்டேன்....!''

''ஏன்...?''

"நேத்திக்கு நீ ஏன் எனக்கு போன் பண்ணலை...?"

"ஸாரி வெண்ணிலா...! நேத்திக்கு எங்க கம்பெனியில் ஒரு ப்ராக்ரஸ் மீட்டிங் போட்டாங்க. காலையில் பத்து மணிக்கு ஸ்டார்ட் பண்ணின மீட்டிங் முடியும் போது சாயந்தரம் ஏழு மணி. அதுக்கப்புறம் டின்னர். செல்போன் களையெல்லாம் ஆஃப் பண்ணி வெக்கச் சொல்லிட் டாங்க. டின்னர் முடியும் போது நேரம் எவ்வளவு தெரியுமா...?"

"நீ எவ்வளவு சொன்னாலும் நான் நம்பித்தானே ஆகணும்... சொல்லு... சொல்லு...!"

"நான் பொய் சொல்லலை வெண்ணிலா..."

"சரி... இப்ப என்ன பண்ணிட்டிருக்கே...?"

"கம்பெனி காண்ட்டீன்ல இருக்கேன்...!"

"எந்தப் பொண்ணுக்கு முன்னாடி உட்கார்ந்துட் டிருக்கே!"

"பொண்ணா...?"

"ம்...! மல்லிகைப் பூ வாசம் வருது..."

"ஏய்... வெண்ணிலா...! இது எல்லாம் ரொம்பவும் ஓவர்...! எனக்கு முன்னாடி என்னோட கொலீக் திரு மூர்த்திதான் உட்கார்ந்துட்டு இருக்கான். வேணும்ன்னா செல்போனை அவன்கிட்டே கொடுக்கட்டுமா?"

"வேண்டாம்...! நீ கற்புக்கரசன்தான்... ஒத்துக்கறேன். உன்னோட ஃப்ரண்ட்ஸ்களுக்கெல்லாம் மேரேஜ் இன்வி டேஷனை கொடுத்திட்டியா?"

"இல்லை...!"

"ஏன்...?"



"இன்னும் நாள் இருக்கே...?"

"இதோ பார் கதிர்...! நாள் ராக்கெட் வேகத்துல போய்க் கிட்டு இருக்கு... இன்னையிலிருந்து டிஸ்ட்ரிப்யூஷனை ஆரம்பிச்சுடு... கல்யாணத்துக்கு இன்னும் சரியாய் 41 நாள்தான் இருக்கு...! லேட் பண்ணாதே!"

"சரி...! இன்னையிலிருந்து ஸ்டார்ட் பண்ணிடறேன்!"

"அப்புறம்... நேத்து என்னோட வீட்ல ஒரு இன்ட் ரஸ்டிங்கான சம்பவம் நடந்தது... கதிர்..."

"என்ன...?"

"நேற்று சாயந்தரம் என்னோட அப்பாவைப் பார்க்க அவரோட ஃப்ரண்ட் ஒருத்தர் வந்து இருந்தார். அந்த ஃப்ரண்டோடு இன்னொருத்தரும் வந்து இருந்தார். அவர் ஒரு ஜோதிடர். சொந்த ஊர் சீர்காழி. இருந்தாலும் மாசத்துல இருபது நாள் அவர் காசியில் இருப்பாராம். மூணு பேரும் பேசிட்டிருந்த போது அப்பா என்னோட கல் யாணத்தைப் பற்றி பேசியிருக்கார். கல்யாணத்துக்கு அப் புறம் பொண்ணும் மாப்பிள்ளையும் எப்படி இருப்பாங் கன்னு தெரிஞ்சுக்கற ஆவலில் அப்பா என்னோட ஜாதகத்தையும் உன்னோட ஜாதகத்தையும் கொண்டு வந்து அந்த ஜோதிடர் கிட்டே காட்டியிருக்கார்...."

"ஜோதிடர் என்ன சொன்னார்?"

"ரெண்டு ஜாதகத்தையும் பார்த்து - ரொம்ப நேரம் ஏதோ கணக்கு போட்டு பார்த்துட்டிருந்தவர் கடைசியில் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்...!"

"குண்டா...?"

"ம்... உனக்கும்... எனக்கும் ஜாதகத்துல ஏழாம் இடம் சரியில்லையாம். ஏதோ களத்ர தோஷமாம்... இப்ப

கல்யாணம் பண்றது அவ்வளவு உசிதம் இல்லையாம்.''

"பின்னே எப்ப பண்ணணுமாம்...?"

"மூணு மாசம் கழிச்சு குரு மாறுதாம். அந்த சமயத்துல ஆலங்குடிக்குப் போய் குருபகவானை தரிசனம் பண்ணிட்டு வரணுமாம். அதுக்கப்புறம் ஒரு ஏழைப் பெண்ணுக்கு கல்யாணத்தை நடத்தி வைக்கணுமாம்.... இந்தப் பரிகாரத்தைப் பண்ணின பிறகுதான் கல்யாணப் பேச்சையே ஸ்டார்ட் பண்ணணுமாம்...!"

"அதுக்கு உங்கப்பா என்ன சொன்னார்...?"

"எங்கப்பாவைப் பத்தித்தான் உனக்குத் தெரியுமே! அவர் இந்த ஜாதகம், ஜோதிடம் இதெல்லாம் பொய்ன்னு சொல்றவர்... என்னோட கல்யாணப் பத்திரிகையை அந்த ஜோதிடர் கையில் எடுத்துக் கொடுத்து 'அடுத்த வாரம் நடக்கப் போற கல்யாணத்துக்கு அவசியம் வந்துடுங்க'ன்னு சொல்லியிருக்கார்."

"ஜோதிடர்க்கு முகம் அஷ்ட கோணலாய்ப் போயிருக்குமே?"

"இல்லை.....!"

"பின்னே என்னதான் அவரோட ரியாக்ஷன்...?"

அந்த ஜோதிடர் மெல்ல சிரிச்சுகிட்டே 'கல்யாணம் நடந்தா கண்டிப்பா வர்றேன்'னு சொன்னார்! அப்பாவுக்கு பயங்கர கோபம். ஜோதிடரைக் கன்னாபின்னான்னு திட்டிட்டார்... ஜோதிடர் எழுந்து போயிட்டார்."

".........!"

"என்ன கதிர்! பேச்சையே காணோம்?"

"எனக்கு பயமாயிருக்கு வெண்ணிலா!"





## 3

மன்னன் சுந்தரசேனன் அடியற்ற மரம் போல் வீழ்ந்து மல்லாந்ததும் அரசவை அதிர்ச்சியில் உறைந்து போயிற்று.

"அரசே...!" என்ற மிகப் பெரிய அலறலோடு மகாராணி வாசமதி ஓடிவந்து மண்டியிட்டு உட்கார்ந்து மன்னன் சுந்தரசேனனின் தலையைத் தூக்கி தன் மடியில் வைத்துக் கொண்டாள். மன்னனின் நாசித்துவாரங்களில் ரத்தம் எட்டிப் பார்த்து வழிந்தது. சுவாசிக்க முடியாமல் திணறினான்.

அமைச்சர் இரும்பொறை முத்தரய்யர் பொங்கிய சினத்தோடு தனது உறையினின்றும் வாளை உருவிக் கொண்டு புலவர் சாமந்தனாரை நோக்கிப் போக, புலவர் தன் இரண்டு கைகளையும் அகல விரித்துக் கொண்டு கோடையிடி போல் நகைத்தார். பிறகு போலியாக மெல்ல வாய் பொத்தி சொன்னார். குரலில் சிறிது கூட அச்ச உணர்வு இல்லை.

"அமைச்சர் பெருமானே...! மன்னன் சுந்தரசேனன் இன்னும் சற்று நேரத்தில் இறந்து போய் விடுவான். அவன் இப்படி உயிர் விட வேண்டும் என்பதற்காகவே இந்த விஷக் குணம் கொண்ட காட்டு மலர்களைக் கொண்டு வந்தேன். இந்த மலர்கள் சீன தேசத்து காட்டுப் பகுதிகளின் பள்ளத்தாக்குகளில் அரிதாகப் பூப்பவை.

வருடம் ஒன்றானாலும் வாடிப் போகாதவை. இதனுடைய விஷத்தன்மை பகல் நேரங்களில் அதிகமாகவும், இரவு நேரங்களில் குறைவாகவும் இருக்கும். சுந்தரசேனனை இந்த விஷப்பூக்களால் சாய்க்க வேண்டும் என்று நினைத்தேன். அந்த நோக்கத்தைத்தான் இப்போது நிறைவேற்றிக் கொண்டேன்...! மன்னனை இனி யாராலும் காப்பாற்ற முடியாது!" - சொல்லிவிட்டு புலவர் நகைக்க, அமைச்சர் இரும்பொறை முத்தரய்யர் பெருங்குரல் எடுத்துக் கத்தினார்.

"இந்தப் புலவனை வெட்டிக் கொல்லுங்கள்...!" சொன்ன அடுத்த விநாடியே படைத்தளபதிகளும் வீரர்களும் உருவிய வாள்களோடு புலிகளைப் போல் பாய்ந்து வந்தார்கள். அவர்களைப் புலவர் கையமர்த்தினார். தாடியைக் கோதியபடி பேச ஆரம்பித்தார்.

"சற்றுப் பொறுங்கள்...! என் வயோதிக உயிரை எடுப்பதற்காக உங்களுடைய வாள்களுக்கும் வேல்களுக்கும் வேலை கொடுக்காதீர்கள். உங்களுடைய மன்னனின் உயிரைப் பறித்த அதே விஷப்பூக்கள் இன்னமும் இரண்டு என்னிடம் உள்ளது. என் உயிரைப் போக்கிக் கொள்ள அந்தப் பூக்கள் போதுமானது." - சொன்னவர் விநாடிக்கும் குறைவான நேரத்தில் மான்தோல் பைக்குள் கையை நுழைத்து அந்த இரண்டு மலர்களையும் எடுத்து மூச்சை இழுத்து முகர்ந்தார். கண்கள் அப்படியே நிலைத்தன.

மொத்த அரசவையும் திகைத்துப் போய் பார்த்துக் கொண்டு இருக்கும் போதே புலவர் இரண்டாய் மடிந்து மல்லாந்தார். நாசியில் ரத்தம் கொப்பளிக்க-உயிர்க்குப் போராட ஆரம்பித்தார். மூச்சு இரைத்தது.

புலவரை அப்படியே விட்டுவிட்டு அரசவையிலிருந்த அனைவரும் மன்னன் சுந்தரசேனனைச் சூழ்ந்தார்கள்.



அரண்மனை வைத்தியர் உடனடியாய் வரவழைக்கப்பட்டார். மன்னனின் நாடி பிடித்துப் பார்த்த வைத்தியரின் முகம் இருண்டு போயிற்று.

"என்ன வைத்தியரே...! மன்னனின் உடம்பில் கலந்து விட்ட நச்சுத்தன்மையை முறியடிக்க ஏதாவது மாற்று மருந்து கொடுக்க ஏதாவது வழியுண்டா...?" அமைச்சர் கேட்க வைத்தியர் யோசித்து விட்டு தலை அசைத்தார். "ஒரே ஒரு வழிதான் உண்டு...!"

"சொல்லுங்கள்...!"

வைத்தியர் சொல்ல ஆரம்பித்தார்.



## 4

மும்பையின் மாதுங்கா பகுதிக்குள் பைக்கை விரட்டிக் கொண்டிருந்தான் கதிர். பின்னால் திருமூர்த்தி. அது ஒரு ஞாயிற்றுக்கிழமையின் காலை நேரம் என்பதால் சாலைகளில் போக்குவரத்து நெரிசல் காணாமல் போயிருந்தது. வெயில் பிடரியில் உறைத்தாலும் அரபிக் கடல் காற்று சுகமாய் வீசிக் கொண்டிருந்தது.

"கதிர்...!"

"ம்..."

"இப்ப நாம சௌஜன்யா வீட்டுக்குத் தானே போய்க்கிட்டிருக்கோம்...?"

"ஆமா...!"

"அவ அட்ரஸ் உனக்கு ஞாபகம் இருக்கா...?"

"இருக்கு...!"

"ஒருவேளை அவ அட்ரஸ் மாறிப் போயிருந்தா...? ஏன்னா சௌஜன்யா தன்னோட செல்போன் நெம்பரை மாத்திகிட்ட மாதிரி வீட்டையும் மாத்திகிட்டு ஏன் போயிருக்கக் கூடாது...?"

"போய்ப் பார்த்தா தெரிஞ்சுடுது..."

"டேய்... கதிர்....! இது தேவையில்லாத பயணம். இந்த சௌஜன்யா நம்ம கம்பெனியில் ஒரு ஆறு மாசம்தான் வேலை பார்த்தா. அவ வேலை பார்த்த காலத்தில் யாரோடவும் சரியா பழகலை. நாம் 'குட்மார்னிங்' சொன்னாத்தான் பதிலுக்கு அவ 'குட்மார்னிங்' சொல்லுவா... தான் அழகாய் இருக்கோம்ங்கற கர்வம் வேற... அவளையெல்லாம் உன்னோட கல்யாணத்துக்கு நேர்ல போய் இன்விடேஷன் கொடுத்து கூப்பிடணுமா...? இன்விடேஷனை போஸ்ட் பண்ணினால் போதாதா...?"

"போதாது திரு...! ஏன்னா சௌஜன்யா மத்தவங்க கிட்டே எப்படி பழகினாளோ எனக்குத் தெரியாது. பட் என்கிட்டே நல்லாப் பழகினா. அவளோட நட்பு எனக்கு பல விஷயங்களைக் கற்றுக் கொடுத்தது.... திரு...!"

"சரி...! அப்படிப்பட்ட நட்போடு உன்னோடு பழகினவள் வேலையை ராஜினாமா பண்ணப் போறேன்னு என்னிக்காவது சொன்னாளா?"

"சொல்லலை...!"

"ஏன் சொல்லலை...?"

"இதோ பார்ரா...! சௌஜன்யாவுக்கு ஏதோ பிரச்னை இருக்கப் போய்த்தான் வேலையை ராஜினாமா பண்ணியிருக்கா."



"ஓ.கே.டா...! அவ திடீர்னு ராஜினாமா முடிவை எடுத்து இருக்கலாம்...! வேலையை அவ ராஜினாமா பண்ணி இப்ப ஆறுமாச காலமாகுது. இந்த ஆறுமாச காலத்துல என்னிக்காவது உனக்கு போன் பண்ணியிருக்காளா? அவ போன் பண்ணாதது மட்டுமில்லை... மத்தவங்க யாரும் அவளுக்கு போன் பண்ணிடக்கூடாதுன்னு செல்போன் நெம்பரையே மாத்திட்டா! அப்படிப்பட்டவளை நேர்ல போய்ப் பார்த்து உன்னோட மேரேஜ் இன்விடேஷனைத் தரணுமா என்ன...?"

கதிர் திருவின் பேச்சைப் பொருட்படுத்தாமல் ஒரு மளிகைக் கடைக்குப் பக்கத்தில் நிறுத்தி - உள்ளே சர்க்கரையை பொட்டலமாய்க் கட்டிக் கொண்டிருந்த ஒரு குல்லாய் அணிந்த நபரிடம் ஹிந்தியில் கேட்டான்.

"அத்வாலே அவென்யூ இதுதானே?"

"ஆமாம்...!"

"செவன்த் க்ராஸ் எந்தப் பக்கம்...?"

"இதே ரோட்டில் நேராகப் போய் வலது கைப்பக்கம் திரும்புங்கள். அதுதான் இந்த அவென்யூவின் செவன்த் க்ராஸ்"

"சுக்ரியா...!" ஹிந்தியில் நன்றியைச் சொல்லிவிட்டு பைக்கை விரட்டினான் கதிர்.

திரு மறுபடியும் சலித்துக் கொண்டான். "வேகாத வெய்யிலில் இது தேவையா...?"

"பேசாமே வாடா..." கதிர் பைக்கை விரட்டி அந்த நீளமான தெருவை முடித்துக் கொண்டு வலது பக்கம் திரும்பினான். 'அத்வாலே அவென்யூ - செவன்த் க்ராஸ்' என்ற பெயர்ப் பலகை அம்புக்குறியோடு வந்தது.

பைக்கை மெல்ல நகர்த்தி அந்த மே ஃப்ளவர் மரத்துக்குப் பக்கத்தில் இருந்த வீட்டுக்கு முன்பாய் நிறுத்தினான்.

''இதுதான் சௌஜன்யாவோட வீடா...?'' திரு கேட்டான்.

''காம்பௌண்ட் கேட்ல நெம்பர் 29ன்னு போட்டிருக்கு. இந்த வீடாய்த்தான் இருக்கணும்...''

பைக்கை மரத்தடியில் நிறுத்தி விட்டு இருவரும் காம்பௌண்ட் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனார்கள். பசேலென்ற ஒரு சின்னத் தோட்டத்துக்கு மத்தியில் வீடு உட்கார்ந்திருந்தது. ஐம்பது வயது மதிக்கத்தக்க தோற்றத்தில் இருந்த ஒருவர் வீட்டின் முன்னறைச் சோபாவில் சாய்ந்தபடி புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார். கதிரையும் திருவையும் பார்த்து விட்டு எழுந்து வந்தார்.

''கோன்...? க்யா சாஹியே...?''

கதிர் வாசற்படி ஏறி நின்று ஹிந்தியில் கேட்டான். ''இது சௌஜன்யாவோட வீடுதானே?''

''ஆமா...''

''அவங்களைப் பார்க்கணும்.''

''நீங்க...?''

''ஃப்ரண்ட்ஸ்...! க்ளாஸிக் இன்போ டெக்கில் ஒண்ணா வேலை பார்த்தோம்...!''

''ஓ... அப்படியா...!'' என்றவர் லேசாய் முகம் மாறி ''சௌஜன்யா ஊர்ல இல்லையே! அவ வெளியூர்க்குப் புறப்பட்டுப் போய் ரெண்டு நாளாகுது!'' என்றார்.

கதிர் ஏமாற்றத்தோடு அந்தப் பெரியவரைப் பார்த்தான்.



''எந்த ஊருக்கு...?''

''பெங்களூர்...''

''எப்ப ரிட்டர்ன்...?''

''எப்படியும் பதினஞ்சு நாளாயிடும். ஏன்... என்ன விஷயம்?''

''ஒண்ணுமில்லை...! எனக்கு கல்யாணம். இன்விடேஷன் கொடுத்துட்டு போலாம்ன்னு வந்தேன்...!''

''என்கிட்டே குடுத்துட்டுப் போங்க... சௌஜன்யா வந்ததும் நான் கொடுத்துடறேன்...!''

''சௌஜன்யாவோடு நான் பேசணும்.... அவங்க செல் நெம்பரைக் கொடுக்க முடியுமா...?''

''ஸாரி... அவளுக்கு செல்போன் கிடையாது...!'' - பெரியவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே வீட்டுக்குள்ளேயிருந்து அந்தப் பெண்ணின் குரல் கேட்டது.

''அப்பா! அவங்களை உள்ளே வந்து உட்காரச் சொல்லுங்க...!''

அது சௌஜன்யாவின் குரல்.



## 5

அரசவையில் இருந்த அனைவரும் அரண்மனை வைத்தியரையே பார்க்க - அவர் நிதானமான குரலில் பேச ஆரம்பித்தார்.

"அமைச்சர் பெருமானே...! அந்த நச்சு மலர்களின் கொடிய விஷம் மன்னரின் குருதியோட்டத்தில் கலந்து அவருடைய இருதயத்துடிப்பைக் கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்திக் கொண்டிருக்கிறது. இன்னமும் இரண்டு நாழிகை நேரம் மட்டுமே மன்னரின் உடம்பில் உயிர் இருக்கும். அதற்குள் அந்த நச்சுத் தன்மையை போக்க வேண்டும். அதற்கு 'கல்ப மஞ்சரி' வேண்டும்."

அமைச்சர் திகைத்தார்.

"கல்ப மஞ்சரியா...! அப்படியென்றால்...?"

"அது ஒரு புஷ்பம்...! எல்லாவகையான நஞ்சையும் உறிஞ்சி எடுத்துக் கொள்ளும் உன்னத மலர். ஆரண்யா காட்டுப் பகுதிக்குள்ளே ஜமதக்னி அருவி உள்ளது. அந்த அருவிக்கு அப்பால் கல்ப மஞ்சரி மரம் ஒன்று உள்ளது. அந்த மரத்தில் நாள் ஒன்றுக்கு ஒரு பூ மட்டுமே பூக்கும். அந்தப் பூவை யாரேனும் ஒருவர் போய்ப் பறித்து வந்து என்னிடம் கொடுத்தால் மன்னரை காப்பாற்றி விடலாம்...!" வைத்தியர் சொல்லி முடித்த அடுத்த கணம்...

படைத்தளபதி ஜெயசிம்ஹன், இரும்பொறை முத்தரய்யரிடம் திரும்பினார்.

"அமைச்சரே...! நான் இப்போதே ஆரண்யா காட்டுக்குப் போய் கல்ப மஞ்சரி பூவைப் பறித்து வருகிறேன்...!"

"புறப்படுங்கள் படைத்தளபதியாரே!"

வைத்தியர் குறுக்கிட்டார். "இரண்டு நாழிகை நேரத்துக்குள் அந்த மலரைப் பறித்துக் கொண்டு வந்து விட வேண்டும். அதற்குப் பிறகு மலரைக் கொண்டு வந்தாலும் மன்னரின் உயிரைக் காப்பாற்ற முடியாது."

"கவலை வேண்டாம் வைத்தியரே! நீங்கள் குறிப்பிட்ட நேரத்துக்குள் அந்த மலரைக் கொண்டு வந்து



விடுவேன்." - படைத்தளபதி சொல்லி விட்டு ஒரு புலியின் பாய்ச்சலோடு அந்த இடத்தை விட்டு நகர்ந்து போனார்.

அமைச்சர் இரும்பொறை முத்தரய்யர் காவலாளிகளுக்கு உத்தரவிட்டார்.

"இந்தப் புலவனின் உடலை முதலில் இங்கிருந்து அப்புறப்படுத்தி எரியூட்டி விடுங்கள்."

காவலாளிகள் சென்று புலவரின் உயிர் பிரிந்து கொண்டிருந்த - ஒருக்களித்து விழுந்து கிடந்த உடலைத் தூக்க முயன்றார்கள். அவர் கையில் வைத்து இருந்த மான் தோல் பையிலிருந்து சுருட்டப்பட்ட கடித ஓலை ஒன்று தெறித்து விழுந்தது. அதைக் கண்ணுற்ற அமைச்சர் வேகமாய்ப் போய் எடுத்துப் பிரித்தார்; படித்தார்.

உங்கள் நாட்டு மன்னன் சுந்தரசேனன் உயிரோடு இருக்கத் தகுதியற்றவன். அவன் பல கலைகளையும் கற்ற அறிவாளி. வீரம் மிக்கவன். ஆனால் போர் வெறி கொண்டவன். அமைதியாய் இருக்கும் அண்டை நாடுகளைத் தன் அதிகாரத்துக்குக் கீழே கொண்டு வர நினைத்துப் போர் தொடுத்தவன். அந்தப் போரில் என் குடும்பத்தையே இழந்தேன். என்னைப் பொறுத்த வரைக்கும் உங்கள் நாட்டு மன்னன் சுந்தரசேனன் ஒரு கொலைக் குற்றவாளி. அந்தக் குற்றவாளியைத் தண்டிக்க நினைத்தேன். தண்டித்தும் விட்டேன். மன்னன் சுந்தரசேனன் முகர்ந்த நஞ்சு அவனுடைய உடம்புக்குள் இரண்டு நாழிகை நேரம் இருக்கும். அவனுடைய உடம்பின் ஒவ்வொரு அணுவும் மரணத்தின் வலியை அனுபவிக்கும். ஆனால் நான் முகர்ந்த நஞ்சு கால் நாழிகை நேரத்தில் எனக்கு மரணத்தைக் கொடுத்து விடும். உங்கள் மன்னனின் இறப்புக்காக யாரும் அழுது

அரற்ற வேண்டாம். போர் வெறியற்ற ஒருவரை இந்த நாட்டுக்கு மன்னன் ஆக்குங்கள். அண்டைய நாடுகளோடு நட்புக்கரத்தை நீட்டி அன்பு செலுத்தச் சொல்லுங்கள். என்னுடைய ஆத்மா மகிழ்ச்சியடையும்.

ஓலையில் எழுதப்பட்டு இருந்த வாசகங்களைப் படித்த அமைச்சர் இரும்பொறை முத்தரய்யர் மிகுந்த சினம் கொண்டு அந்த ஓலையை இரண்டாய்க் கிழித்து எறிந்தார். பின் அரண்மனை வைத்தியரை அதே கோபத்தோடு ஏறிட்டார்.

"வைத்தியரே!"

வைத்தியர் வாய் பொத்தி உடம்பைக் குறுக்கிக் கொண்டு "சொல்லுங்கள் அமைச்சர் பெருமானே...!" என்றார்.

"நீங்கள் வைத்திய சாஸ்திரத்தை நல்ல முறையில் கற்றவர்தானே?"

"அதில் என்ன சந்தேகம் அமைச்சர் பெருமானே...?"

"அது உண்மை என்றால் மரணத்தின் பிடியில் சிக்கியிருக்கும் மன்னரை நீங்கள் காப்பாற்றியாக வேண்டும்...!"

"மன்னரின் உயிரைக் காப்பாற்றும் வல்லமை அந்த 'கல்ப மஞ்சரி' மலர்க்கு மட்டுமே உண்டு. இரண்டு நாழிகை நேரத்துக்குள் படைத்தளபதி அந்த மலரைக் கொண்டு வந்துவிட்டால் மன்னரை நிச்சயமாய்க் காப்பாற்றி விடலாம்..."

"ஒரு வேளை படைத்தளபதி அந்த மலரைக் குறிப்பிட்ட நேரத்துக்குள் கொண்டு வராமல் போனால்...?"

"மன்னரை என்னால் காப்பாற்ற முடியாது...!"

"வைத்தியரே...!" இரும்பொறை முத்தரய்யரின் குரல் இடிபோல் எழுந்தது. "கல்ப மஞ்சரி மலரை படைத்



தளபதி கொண்டு வராமல் போனாலும் மன்னரின் உயிர் காப்பாற்றப்பட வேண்டும். நீங்கள் என்ன செய்வீர்களோ ஏது செய்வீர்களோ எனக்குத் தெரியாது. அடுத்த இரண்டு நாழிகை நேரத்திற்குள் மன்னர் எழுந்து உட்கார வேண்டும். மஹாராணியாரின் கையால் பழரசம் அருந்த வேண்டும்."

வைத்தியர் பதட்டத்தோடு குறுக்கிட்டார்.

"அமைச்சர் பெருமானே...! நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால்..."

"நீங்கள் ஒன்றையும் சொல்ல வேண்டாம். எனக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் வேண்டியது மன்னரின் உயிர். மன்னரின் உயிரை நீங்கள் காப்பாற்றா விட்டால் அதற்குப் பிறகு நீங்கள் உயிரோடு இருக்க முடியாது...!"

அரண்மனை வைத்தியர் அதிர்ச்சியில் நிலை குலைந்தவராய் அப்படியே நின்றார்.



## 6

சௌஜன்யாவின் குரலைக் கேட்டதும் கதிரும் திருவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பெரியவர் உள்ளே போய் இரண்டு நிமிடங்கள் வாக்குவாதம் செய்து விட்டு வெளியே வந்தார். சற்றே கோபம் கலந்த குரலில் சொன்னார்.

"போய் அந்த ரூம் சோபாவில் உட்கார்ங்க... சௌஜன்யா வருவா...!"

திருவும் கதிரும் தயக்க நடை போட்டு உள்ளே போய் அங்கிருந்த சோபாவுக்கு சாய்ந்தார்கள். அறை சுத்தமாய் இருக்க - காற்றில் ஊதுவத்தியின் வாசனை உறைந்து போயிருந்தது.

அடுத்த சில விநாடிகளில் உள்ளறையின் கதவைத் திறந்து கொண்டு அந்தப் பெண் வெளியே வந்தாள். கையில் ட்ரே; அதில் நீர் நிரம்பிய இரண்டு கண்ணாடி டம்ளர்கள்.

'யார் இந்தப் பெண்...?'

'இவள் சௌஜன்யா இல்லையே!'

திருவும் கதிரும் அவளை வியப்பாய்ப் பார்த்துக் கொண் டிருக்கும் போதே அந்தப் பெண் ட்ரேயை டீபாயின் மேல் வைத்து விட்டு புன்னகைத்தாள்.

''நல்ல வெய்யில் நேரத்துல வந்து இருக்கீங்க. தண்ணி எடுத்துக்குங்க.''

''இது சௌஜன்யாவின் குரல்தான்...! ஆனால் இவள் சௌஜன்யா இல்லையே!''

''என்ன திரு யோசனை...?'' அந்தப் பெண் கேட்டாள்.

''சௌஜன்யாவைப் பார்க்க வந்தோம். நீங்க அவங்க சிஸ்டரா...?''

''சௌஜன்யாவுக்கு சிஸ்டரே கிடையாதே!''

''அப்படீன்னா நீங்க...?''

''நான்தான் சௌஜன்யா...!''

திருவுக்குள் லேசாய் கோபம் எட்டிப் பார்த்தது. ''என்ன விளையாடறிங்களா...? சௌஜன்யா எப்படி இருப்பாங் கன்னு எங்களுக்குத் தெரியாதா என்ன...?''



அவள் சிரித்தாள். ''உங்க கோபம் நியாயமானதுதான். பட்... உண்மை இதுதான்....! நான் சௌஜன்யாதான். நீங்க ஆறு மாசத்துக்கு முன்னாடி பார்த்த அந்த பழைய முகம் எனக்குக் கிடையாது. இப்போ நீங்க பார்த்துட்டிருக்கிற முகம் ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்யப்பட்ட புதுமுகம்.''

கதிரும் திருவும் ஆணியடித்த மாதிரியான பார்வை களோடு அவளையே பார்க்க - அவள் தொடர்ந்தாள். ''ஆறுமாசத்துக்கு முந்தி நான் என்னோட கிராமத்துக்கு போயிருந்த போது ஒரு தீ விபத்துல மாட்டிகிட்டேன். முகம் மட்டும் கருகிப் போன நிலைமையில் ஒரு ஹாஸ் பிட்டல்ல அட்மிட்டானேன். முகத்தில் ஏற்பட்ட தீப்புண் கள் ஆறியிருந்தாலும் அதனுடைய கோரமான வடுக்கள் போகலை. கிராமத்திலிருந்து மும்பை வந்ததும் ஒரு ப்ளாஸ்டிக் சர்ஜனைப் பார்த்து அப்பாவும் நானும் கன்சல்ட் பண்ணினோம். அவர் என்னோட முகத்தில் ஏற்பட்டிருந்த காயத்தோட தன்மைகளைப் பாத்துட்டு 'ஆர்ட்டி ஃபிஷியல் போன் மேரோ காஸ்மெடிக் சர்ஜரி' செய்ய வேண்டும் என்றும், அப்படி செய்தால் மட்டுமே முகத் தில் இருக்கும் ஆழமான வடுக்களை அகற்ற முடியும் என்றும் சொன்னார். இந்த வகையான ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்யும் போது சிலர்க்கு முகத்தின் அமைப்பே மாறி விடும் என்பதையும் சொன்னார்.

''அதுக்காக இப்படியா...? சௌஜன்யா! இப்ப பார்க்கிற உன்னோட புதிய முகத்தில் ஆறு மாசத்துக்கு முந்தி நாங்க பார்த்த உன்னோட பழைய முகம் அறவேயில்லை...'' கதிர் சொல்ல, சௌஜன்யா சின்னதாய் புன்னகைத்தாள்.

''எனக்கு எந்த முகம் அழகாயிருக்கு...? இப்ப நீங்க பார்த்திட்டிருக்கிற முகமா...? இல்லை பழைய முகமா...?''

''என்ன இருந்தாலும் பழைய முகம்தான் ஒரு படி தூக்கல். என்னோட ஓட்டு பழைய முகத்துக்கே...!''

''திரு..........! உங்களுக்கு...?''

''என்னோட ஓட்டும் பழைய முகத்துக்குத்தான்....!''

''எனக்கென்னவோ... என்னோட பழைய முகத்தைக் காட்டிலும் இந்த முகம்தான் பிடிச்சிருக்கு.... பழைய முகத்துல மூக்கு கொஞ்சம் ஓவர் சைஸ். இந்த புதிய முகத்தில் கனகச்சிதம்... அதே மாதிரி எனக்கு முன்பு 'டபுள்சின்' இருந்தது. இப்போ அதுவும் இல்லை...''

''இப்படி ஒரு ப்ளாஸ்டிக் சர்ஜரி நடந்தது பற்றி நீ ஏன் எங்களுக்கு போன் பண்ணி சொல்லலை சௌஜன்யா...?''

''என் அப்பாவோட கண்டிஷன்தான்!''

''என்ன கண்டிஷன்...?''

''எனக்கு இப்படி ஒரு ப்ளாஸ்டிக் சர்ஜரி நடந்தது ரிலேட்டிவ்ஸ் தவிர வேற யார்க்கும் தெரியக்கூடாதுன்னு அப்பா நினைச்சார். அதனாலதான் நம்ம ஃப்ரண்ட்ஸ் யார்க்கும் நான் போன் பண்ணிச் சொல்லலை.''

''இட்ஸ் ஓ.கே. சௌஜன்யா! நாங்க இப்போ எதுக்காக வந்து இருக்கோம் தெரியுமா...?''

''தெரியும்...!''

''சொல்லு பார்க்கலாம்...!''

''உங்க ரெண்டு பேர்ல யாரோ ஒருத்தருக்கு கல்யாணம்! எனக்கு இன்விடேஷன் கொடுக்க வந்து இருக்கீங்க... நான் சொன்னது சரியா?''

''ரொம்பவும் சரி...! கல்யாணம் எனக்குத்தான்!''

''அட்வான்ஸ் கங்க்ராட்ஸ்... பொண்ணு யாரு?''



''பேரு வெண்ணிலா...''

''பெயர் பொருத்தமே சூப்பராய் இருக்கு... உங்க பேர் கதிரவன்...! உங்க வுட்பி பேர் வெண்ணிலா... சூரியன், சந்திரன். நல்ல காம்பினேஷன்....... அதுசரி... லவ்வா... இல்லை அரேன்ஜ்டா...!''

''லவ்தான்....!''

''பொண்ணோட போட்டோ இருக்கா...?''

''இப்ப கையில இல்லை... ரூம்ல இருக்கு. நீ கல்யாணத்துக்கு அவசியம் வரணும்... சௌஜன்யா...''

''ஸாரி கதிர்...! அப்பா என்னை வெளியே அனுப்ப மாட்டார். உங்க கல்யாண நாளன்னிக்கு என்னோட வாழ்த்துக்கள் எஸ்.எம்.எஸ். மூலமாய் உங்களுக்கு வரும்...!''

''நீ என்னோட கல்யாணத்துக்கு வந்தால் நான் ரொம்பவும் சந்தோஷப்படுவேன்...!''

''மறுபடியும் ஸாரி கதிர்... அப்பா ஒத்துக்க மாட்டார்.''

''நான் வேணும்ன்னா உன்னோட அப்பாகிட்டே பேசிப் பார்க்கட்டுமா...?''

''வேண்டாம். அவர் விரும்ப மாட்டார்.''

''சரி! இந்தா... இன்விடேஷன்...! கல்யாணத்துக்கு இன்னும் நாள் இருக்கு... யோசனை பண்ணு...!''

கதிர் ஒரு இன்விடேஷனை எடுத்து சௌஜன்யாவின் பெயரை எழுதி அவளிடம் நீட்ட அவள் பெற்றுக் கொண்ட விநாடி-

கதிரின் செல்போன் தன் ரிங்டோனை வெளியிட்டது. கதிர் எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தான். பிறகு முகம் மலர்ந்தவனாய் செல்போனை காதுக்குப் பொருத்தி

னான். எழுந்து ஒதுக்குப்புறமாய் போய் பேசினான்.

"சொல்லு வெண்ணிலா....!"

"இப்ப... நீ எங்கேயிருக்க கதிர்...? ஆபீஸிலயா... இல்லை வெளியிலயா...?"

"வெளியே.....! நம்ம மேரேஜ் இன்விடேஷனை ஒரு ஃப்ரண்டுக்கு கொடுக்கிறதுக்காக அவங்க வீட்டுக்கு வந்து இருக்கேன்.... ஏன்... என்ன விஷயம்... உன்னோட குரலில் ஒரு டென்ஷன் தெரியுது."

"க...தி...ர்...!"

"சொல்லு..."

"நீ உடனே புறப்பட்டு சென்னை வரமுடியுமா?"



## 7

அரண்மனை வைத்தியர் அதிர்ச்சியில் உறைந்து போய் அமைச்சரைப் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அமைச்சர் காவலாளிகளைப் பார்த்து கட்டளை பிறப்பித்தார்.

"அரண்மனை வைத்தியர் மன்னரைக் காப்பாற்றும் முயற்சியில் தோல்வியடைந்தால் அவரை உடனே கழுமரத்தில் ஏற்றிக் கொன்றுவிடுங்கள்...!"

"அமைச்சரே! இது பெரும் அநீதி...! நான் வைத்திய சாஸ்திரம் கற்ற ஒரு மனிதன். இறைவன் அல்ல...!"



"அது எனக்குத் தெரியாதா என்ன...? மன்னர் திடீர் என்று சாய்ந்து உயிரை விட்டு விடவில்லை. அவருடைய உடம்பில் இன்னமும் உயிர் இருக்கிறது. அந்த உயிரை நீங்கள் காப்பாற்றலாமே! அப்படி காப்பாற்ற முடியவில்லை என்றால் அரண்மனை வைத்தியர் என்கின்ற பதவி எதற்கு...?"

"அமைச்சரே!"

"என்னிடம் எந்த பேச்சும் வேண்டாம். போய் மன்னரைக் காப்பாற்ற முடியுமா என்று பாருங்கள்...!"

அரண்மனை வைத்தியர் உடல் நடுக்கத்தோடு மல்லாந்து கிடந்த மன்னர்க்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்தார். படைத்தளபதி கொண்டு வரப்போகும் கல்ப மஞ்சரி மலர்க்காக காத்திருக்க ஆரம்பித்தார். அரசவை மஹா மண்டபத்தில் பெரும் நிசப்தம்.

ஒரு நாழிகை நேரம் கடந்து இருந்த போது மன்னர் சுந்தரசேனனின் தொண்டைக் குழியிலிருந்து ஒரு விக்கல் புறப்பட்டது. அதைத் தொடர்ந்து சிறியதும் பெரியதுமாய் விக்கல்கள்.

வைத்தியரின் முகம் இருண்டது.

அமைச்சர் இரும்பொறை வைத்தியரிடம் திரும்பினார்.

"என்ன இது...?"

"மரண விக்கல்...!"

"அப்படியென்றால்...?"

"அமைச்சரே! இனி மன்னரைக் காப்பாற்ற முடியாது...! அவர் காப்பாற்றப் பட வேண்டுமென்றால் கல்ப மஞ்சரி மலர் இந்தக் கணமே வேண்டும். அந்த மலர் இப்போது என் கையில் இருந்தால் மன்னரை உயிர்ப்பித்துக் காட்டுவேன்!"

"இந்நேரம் படைத்தளபதி வந்து கொண்டிருப்பார். நீங்கள் வைத்திய சாஸ்திரத்தை உபயோகப்படுத்தி மன்னர் உயிர் உடலை விட்டுப் பிரியாமல் பார்த்துக் கொள்ளுங்கள் வைத்தியரே!"

வைத்தியர், மன்னர் சுந்தரசேனனின் நாடியைப் பிடித்துப் பார்த்தார். அவருடைய முகம் வெகுவாய் மாறியது. குரல் நடுங்க அமைச்சரிடம் திரும்பினார்.

"மன்னர் இறந்துவிட்டார்...!"

வைத்தியர் சொன்னதைக் கேட்டதும் மஹாராணி வாசமதி பெருங்குரலெடுத்து அழுதபடி மன்னரின் உடல் மீது விழுந்து கதறினாள்.

மன்னர் இறந்த செய்தி வெளியே பரவியதும் பாண்டிய நாடே சோகத்தில் மூழ்கியது. மன்னரின் மீது மட்டற்ற அன்பும் பாசமும் வைத்து இருந்த நாட்டு மக்கள் புலம்பினர்.

அமைச்சர் இரும்பொறையின் சினம் அரண்மனை வைத்தியர் மீது பாய்ந்தது. காவலாளிகளைப் பார்த்துக் குரல் கொடுத்தார்.

"இந்த வைத்தியரை ஒரு நாள் முழுவதும் பாதாளச் சிறையில் வைத்து இருந்து நாளை கழுவில் ஏற்றிக் கொல்லுங்கள்..."

காவலாளிகள் உடனடியாய் வைத்தியரைச் சூழ்ந்து அவருடைய கைகளையும் கால்களையும் சங்கிலியால் பிணைத்து பாதாளச் சிறைக்கு இழுத்துப் போனார்கள்.

அமைச்சர் மஹாராணியாரிடம் வந்தார்.

"அரசியாரே...! மன்னர் மாண்டு போனது அதிர்ச்சியான ஒன்றுதான்...! அந்த அதிர்ச்சியிலிருந்து தாங்கள் விரைவிலேயே மீண்டு கொள்ள வேண்டும். மன்னர் விட்டுச் சென்ற பணிகளைத் தாங்கள் உடனடியாகத் தொடர வேண்டும்...!"



வாசமதி கண்களில் வழியும் நீரோடு - தலைவிரி கோலத்தோடு நிமிர்ந்தாள்.

"அமைச்சரே...! எனக்கு இந்த நாடு வேண்டாம். ஆட்சிப் பொறுப்பு வேண்டாம். எனக்கு என் கணவர்தான் வேண்டும்..."

"அரசியாரே...! இது என்ன பைத்தியக்காரத்தனம்? தாங்கள் சாதாரண பெண்ணல்ல. ராஜவம்சத்துப் பெண். மரணம் என்பது பொதுவான ஒன்று. அது யார்க்கும் எந்த நேரத்திலும் வரலாம். 'முடிசார்ந்த மன்னரும் ஓர் நாள் பிடிசாம்பல் ஆவார்' என்பது தங்களுக்குத் தெரியாத ஒன்று அல்லவே...! தாங்கள் உடனடியாய் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்தால்தான் அண்டை நாடுகள் பயப்படும். இல்லாவிட்டால் மன்னர் இல்லாத நாட்டில் குழப்பத்தை உண்டாக்க அந்த நாடுகள் முயலலாம்."

வாசமதி துக்கம் தாளாமல் புலம்பினாள்.

"அமைச்சரே! மன்னர் இல்லாத இந்த நாட்டை என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்க முடியவில்லை. அவர் உடலை எரியூட்டுவதற்கு முன்பாக நான் நெருப்பில் விழுந்து உயிர் விடுவேன்... இந்த நாட்டை யார் வேண்டுமானாலும் ஆளட்டும்..."

"அரசியாரே! தாங்கள் இப்படி மனம் தளருவது சரியில்லை. பெரும் துக்கத்தின் பிடியில் தாங்கள் சிக்கியுள்ளீர்கள். இந்தச் சூழ்நிலையில் இப்படிப்பட்ட வார்த்தைகள்தான் வரும். சிறிது நேரம் போனதும் துக்கத்தின் கனம் குறையும். அப்போது நிதானமாய் யோசித்துப் பாருங்கள். நாட்டின் நிலைமை தங்களுக்குப் புரியும்...!"

"என்னுடைய துக்கம் குறையக்கூடிய ஒன்றல்ல அமைச்சரே...! கணத்துக்கு கணம் அதிகமாகக் கூடிய ஒன்று. மன்னர் இல்லாத இந்த உலக வாழ்க்கை எனக்கு வேண்டாம். அவருடைய உடலை அந்த நெருப்பு தொடும் முன்பு நான் அந்த நெருப்பைத் தொட்டு சாம்பலாக வேண்டும். நான் நெருப்பில் குளிக்க அரண்மனைக்கு முன்பாக நெருப்புக் குழியை உண்டாக்குங்கள்...!"

"அரசியாரே! நான் சொல்வதை சிறிது..."

"கேட்கமாட்டேன்... என்னுடைய உத்தரவை உடனடியாய் செயல்படுத்துங்கள். மன்னரின் இந்த உயிரில்லாத உடம்பைப் பார்த்துக் கொண்டு இருக்க என்னால் முடியாது..." சொன்ன மஹாராணி இரண்டு கைகளாலும் முகத்தை மூடி பெருங்குரல் எடுத்து அழுதபடி அரண்மனையின் உட்புறத்தை நோக்கி ஓடினாள்.



## 8

கதிர் செல்போனை காதில் ஒட்ட வைத்துக் கொண்டு திகைப்பு அகலாத முகத்தோடு கேட்டான்.

"நான் உடனே சென்னை வரணுமா...? எதுக்கு வெண்ணிலா...?"

"நேர்ல... வா... சொல்றேன்...!"

"இதோ பார் வெண்ணிலா... நான் சென்னை வந்து சேர்கிற வரைக்கும் விஷயம் என்னான்னு தெரியாமே ஒரே டென்ஷனாய் இருப்பேன். அந்த அவஸ்தையை



என்னால் தாங்கிக்க முடியாது. விஷயம் என்னான்னு சொல்லு...!"

"சொன்னால் இன்னும் நீ டென்ஷன் ஆயிடுவே...!"

"பரவாயில்லை சொல்லு...!"

"............" வெண்ணிலா மறுமுனையில் மௌனம் சாதிக்க - கதிர் படபடத்தான்.

"சொல்லு... வெண்ணிலா...! விஷயம் எதுவாயிருந்தாலும் பரவாயில்லை.."

"கதிர்...! ஒருத்தன் என்னை போன்ல மிரட்டறான்...!"

"மிரட்டறானா...? என்னான்னு...?"

"நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதாம். பண்ணிகிட்டா நாம ரெண்டு பேருமே உயிரோடு இருக்க மாட்டோமாம்."

"யாரவன்...?"

"தெரியலை...! தினசரி ரெண்டு தடவையாவது எனக்கு போன் பண்ணறான்...!"

"வீட்ல சொல்ல வேண்டியதுதானே...?"

"கதிர்...! வீட்ல சொன்னா என்னாகும்ன்னு உனக்குத் தெரியாதா...? அப்பாவுக்கு முன்கோபம் அதிகம். விஷயத்தை நான் சொன்னா உடனே பிரச்னையை பெரிசாக்கி போலீஸ் வரைக்கும் போயிடுவார். நீ சென்னை வந்துட்டியானா பிரச்னையை ஸ்மூத்தா ஹேண்டில் பண்ணலாம். மிரட்டற ஆள் யார்ங்கிறதைக் கண்டு பிடிச்சு அவனைக் கார்னர் பண்ணிடலாம்."

"நான் உடனடியாய் புறப்பட்டு வரமுடியாதே!"

"சரி... எப்பத்தான் உன்னால புறப்பட்டு வர முடியும்...?"

"எப்படியும் ஒரு வாரமாயிடும்...!"

"கதிர்! எனக்கு ஒவ்வொரு மணி நேரமும் ஒரு யுகம் மாதிரி இருக்கு... எந்த நேரத்துல அவன் போன் பண்ணுவானோன்னு மனசு 'திக் திக்'ன்னு இருக்கு...!"

"நீ எதுக்கும் பயப்படாமே தைரியமா இரு வெண்ணிலா... அவன் போன் பண்ணினால் அட்டெண்ட் பண்ணு. துணிச்சலாய் பேசு... பேச்சுக் குரலை வெச்சு அவன் யாருங்கிறதைக் கண்டுபிடிக்க முயற்சி செய்...!"

"இந்த வாரத்துக்குள்ளே நீ எப்படியாவது வந்துட்டா பரவாயில்லை..."

"டிபார்ட்மெண்ட் ஹெட் கிட்டே பேசிட்டு உனக்கு போன் பண்ணுறேன்...!" வியர்த்த முகமாய் செல்போனை அணைத்தான் கதிர்.



## 9

மஹாராணி வாசமதியின் கதறலும், நாட்டு மக்களின் அழுகைச் சத்தமும் அப்போது வானத்தில் ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்துக்கு ஆகாய மார்க்கமாய்ப் போய்க் கொண்டிருந்த சிவகிரி சித்தரின் செவிகளில் கேட்டது. உடனே அவர் கீழே பார்த்தார்.

மன்னன் சுந்தரசேனனின் சடலமும், அந்த சடலத்தைச் சுற்றி நின்று அழுகின்ற மஹாராணி வாசமதியும், மக்களும் அவருடைய பார்வையில் பட்டார்கள். தன்



னுடைய ஞான திருஷ்டியை உபயோகித்து என்ன நடந்திருக்கும் என்று யோசித்துப் பார்த்தார். நிலைமை அவர்க்குப் புரிந்தது.

'மஹாராணியின் துயரமும், மக்களின் துயரமும் தீர வேண்டுமென்றால் மன்னன் சுந்தரசேனன் உயிர்த்து எழ வேண்டும்.'

'என்ன செய்யலாம்...?'

சிவகிரி யோசித்துக் கொண்டிருக்க - அவருடைய சீடன் குருராஜன் கேட்டான்.

"பெருமானே....! பயணத்தைத் தொடராமல் என்ன யோசனை...?"

"கீழே என்ன ஒரு அவலமான காட்சி! பார்த்தாயா குருராஜா...?"

"பார்த்தேன் ஸ்வாமி...! மன்னன் சுந்தரசேனனின் விதிப் பயன் அப்படி இருக்கும் போது நாம் என்ன செய்ய முடியும்?"

"மஹாராணி வாசமதியும் தீயில் வீழ்ந்து தன்னுடைய இன்னுயிரை மாய்த்துக் கொள்ளப் போகிறாளே?"

"அது அவளுடைய விதிப்பயன்...!"

சிவகிரி சித்தர் சிரித்தார். "குருராஜா! அந்த விதிப் பயனை நாம் ஏன் மாற்றி அமைக்கக் கூடாது...?"

"மாற்றி அமைப்பதா... அது எப்படி ஸ்வாமி சாத்தியம்?"

"சுந்தரசேனனை உயிர்ப்பித்து விட்டால் எல்லோருடைய துயரங்களும் ஒரு முடிவுக்கு வந்துவிடுமே...?"

"சுந்தரசேனனை உயிர்ப்பிக்கும் உரிமை அந்த இறை சக்திக்கே உண்டு என்பது தங்களுக்குத் தெரியாத ஒன்று இல்லையே ஸ்வாமி!"

"அது எனக்கு நன்றாகவே தெரியும் குருராஜா! உடம்பினின்றும் நீங்கிவிட்ட உயிரை மறுபடியும் உட்செலுத்த

முடியாது என்பதும், அந்த சக்தி எனக்கு இல்லை என்பதும் தெரியும். மன்னன் சுந்தரசேனனை உயிர்ப்பிக்கும் என்னுடைய வழி வேறானது..."

"அது என்ன வழி ஸ்வாமி?"

"சுந்தரசேனனின் உடலுக்கு உயிர் வரவேண்டுமென்றால் அந்த உடலுக்குள் நான் நுழைய வேண்டும்.!"

சீடன் குருராஜனின் உடல் நடுங்கியது.

"ஸ்வாமி! தாங்கள் என்ன சொல்கிறீர்கள்? தாங்கள் மன்னனின் உடலுக்குள் நுழையப் போகிறீர்களா...?"

"ஆமாம்! மஹாராணியின் துயரையும், இந்த நாட்டு மக்களின் துயரையும் தீர்த்து அவர்களை சந்தோஷத்தில் ஆழ்த்த இது ஒன்றுதான் வழி...!"

"வேண்டாம் ஸ்வாமி இந்த விபரீத எண்ணம்...!"

"குருராஜா...! எதற்காக இந்த அச்சம்...? நீ பயந்து உடல் நடுங்கும் அளவுக்கு இது ஒன்றும் பெரிய விஷயம் இல்லை."

"ஸ்வாமி! நான் அச்சப்படுவதற்கு காரணம் உள்ளது."

"என்ன காரணம்?"

"சித்தர் பெருமானே...! தங்களுடைய உடல் காயகல்ப உடல். ஆண்டுகள் எத்தனை கடந்தாலும் சிதைந்து போகாத உடல். ஆனால் சுந்தரசேனன் ஒரு மன்னனாக இருந்தாலும் அவன் ஒரு மனிதன். ஒரு மனித உடலுக்குள் தங்கள் ஆத்மா நுழைவது அவ்வளவு உசிதமாக எனக்குப் படவில்லை..."

"குருராஜன்...! உன் பயம் தேவையற்றது....! இந்த பூமியில் நான் சிறிது காலம் ஒரு மன்னனாக இருந்து நாட்டை ஆட்சி செய்யப் போகிறேன். மன்னன் சுந்தர



சேனன் நீதி தவறாத ஒரு மன்னன். அவனுடைய இறந்த உடலுக்குள் நான் புகுவது எனக்குப் பெருமையும் மகிழ்ச்சியையும் தருகிறது..."

"பெருமானே...!"

"நீ எதையும் பேச வேண்டாம். இப்போதே-இந்தக் கணமே நீயும் நானும் சதுரகிரி மலைக்குப் போகின்றோம். அங்கே இருக்கும் மலைக்குகையில் என்னுடைய உடலைக் கிடத்தி விட்ட பின்பு நான் மன்னனின் இறந்த உடலில் பிரவேசித்து சில வருடங்கள் ஒரு மனிதனாக - ஒரு மன்னனாக இருந்து அந்த நாட்டு மக்களை மகிழ்விக்கப் போகிறேன். பிற உயிர்களின் துயர் தீர்ப்பவனே சித்தன்! குருராஜா! நான் உனக்குக் கொடுக்கும் பணி இதுதான். நான் மன்னனாக வாழ்ந்து விட்டு திரும்பி வருகிற வரைக்கும் என்னுடைய வைரம் பாய்ந்த காய கல்ப உடலை பாதுகாப்பாய் வைத்து இருக்க வேண்டும். இந்த ரகசிய செய்தியை வெளியே யாரிடமும் சொல்லவும் கூடாது....!"

சீடன் குருராஜன் மனதைத் தேற்றிக் கொண்டு தலையசைத்தான்.

"அப்படியே ஸ்வாமி....! தாங்கள் மன்னனாக ஆட்சி புரிந்து விட்டுத் திரும்பி வருகிற வரைக்கும் தங்களுடைய காயகல்ப உடலை கண்ணின் இமை போல காப்பேன்... இந்த செய்தியை வெளியே யாரிடமும் சொல்ல மாட்டேன்....!"

"நல்லது குருராஜன்!" சொன்ன சிவகிரி சித்தர் உடனடியாக செயல்பட்டார். சதுரகிரி மலைக்குகைக்குள் ஒரு மறைவான இடத்தில் தன் உடலைக் கிடத்தி விட்டு கண்ணுக்குப் புலப்படாத சூட்சும உடலோடு சுந்தர

சேனன் உடல் இருந்த இடம் நோக்கி காற்றாய் விரைந்தார். ஆகாய மார்க்கத்தில் சில விநாடிகள் பயணம் செய்து பாண்டிய நாட்டுக்குள் பிரவேசித்தார்.



## 10

''டேய் கதிர்...!'' திரு கூப்பிட்டான். பைக்கின் பில்லியனிலிருந்து.

''ம்...'' என்றான் பைக்கை விரட்டிக் கொண்டிருந்த கதிர்.

''என்னடா ஓவரா டல்லடிக்கிற...? நேத்திக்கு சௌஜன்யா வீட்லயிருந்து நீ வெளியே வந்ததிலிருந்து மௌனச் சாமியார் மாதிரி ஆயிட்டே...? என்ன பிராப்ளம்ன்னு சொல்லுடா...!''

மும்பையின் வாலஸ் ரோட்டில் ஓடிக் கொண்டு இருந்த பைக்கை அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸுக்கு முன்பாய் நிறுத்தினான் கதிர். ''வா... ஒரு காபி சாப்பிட்டுகிட்டே பேசலாம்...!''

''என்னடா...! ஏதாவது பெரிய அளவுக்கு பிரச்னையா?''

''சொல்றேன்... வாடா....!''

இருவரும் உள்ளே போய் ஷாப்பிங் காம்ப்ளக்ஸின் அண்டர் க்ரௌண்டில் இருந்த கபேடேரியாவுக்குள் நுழைந்தார்கள். கூட்டம் அவ்வளவாக இல்லை. வசதியாய் ஒரு மேஜையைத் தேடிப் பிடித்து உட்கார்ந்தார்கள்.



பேரர் உடனே வந்து நின்றான்.

''தோ காபி... மோர் சுகர்...'' கதிர் ஆர்டர் சொல்லி அனுப்பி விட்டு திருவை ஏறிட்டான்.

''திரு...! சௌஜன்யா வீட்டில் நாம இருந்த போது வெண்ணிலா எனக்கு போன் பண்ணி ஒரு அதிர்ச்சியான விஷயத்தை சொன்னா. அவளை ஒருத்தன் போன்ல மிரட்டறானாம்.''

''என்னது! போன்ல ஒருத்தன் மிரட்டறானா...? யார் அவன்...?''

''தெரியலையாம்...! வெண்ணிலா என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளக் கூடாதாம்... அப்படி கல்யாணம் பண்ணிகிட்டா நாங்க ரெண்டு பேருமே உயிரோடு இருக்க மாட்டோமாம்... தினசரி ரெண்டு தடவையாவது போன் பண்ணுறானாம். வெண்ணிலாவுக்கு என்ன பண்ணுறதுன்னு தெரியலை. அதான் எனக்கு போன் பண்ணிட்டா...!''

''வீட்ல விஷயத்தை சொல்லி போலீஸுக்குப் போக வேண்டியதுதானே...!''

''வெண்ணிலா வீட்ல சொல்றதுக்கு பயப்படறா! அவளோட அப்பா ஒரு முன் கோபி. உணர்ச்சிவசப்பட்டு பிரச்னையை பெரிசு பண்ணி வெளியே எல்லார்க்கும் தெரியும்படியா பண்ணிடுவார்ன்னு சொல்றா.''

''சரி....! வெண்ணிலா இப்போ என்ன பண்ணணும்ன்னு சொல்றா...?''

''என்னை உடனே சென்னைக்குப் புறப்பட்டு வரும்படி சொல்றா...! பிரச்னையை ஸ்மூத்தாய் ஹேண்டில் பண்ணி போன்ல மிரட்டற அவன் யார்ங்கிறதைக் கண்டு பிடிச்சிடலாம்ன்னு சொல்றா...''

"அப்படிக் கண்டுபிடிக்க முடியுமா...?"

"முயற்சி பண்ணிப் பார்க்கிறதுல எந்த தப்பும் இல்லையே?"

"ஓ.கே...! உடனடியாய் நீ சென்னை கிளம்பறதுக்கு உன்னோட ஹெட் லீவு கொடுப்பாரா...?"

"பிரச்னையை சொல்லி கேட்டுப் பார்க்கணும்...!"

கதிர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவனுடைய செல்போன் ரிங்டோனை வெளியிட்டது. அழைப்பது யார் என்று பார்த்தான்.

வெண்ணிலா அழைத்திருந்தாள்.

கதிர் செல்போனை காதுக்குக் கொடுத்து "சொல்லு வெண்ணிலா...!" என்றான்.

அவள் மறுமுனையில் ஏதோ சொன்னாள். கதிர்க்குப் புரியவில்லை. செல்போனின் நெட்வொர்க் கரகரத்தது.

"வெண்ணிலா...! ஒரு நிமிஷம் இரு. நான் இப்போ ஒரு ரெஸ்டாரெண்டுக்குள்ளே இருக்கேன். வெளியே வந்து பேசறேன்" - சொல்லிக் கொண்டே வெளியேறி னான் கதிர். டூவீலர்ஸ் பார்க்கிங்கிற்குப் பக்கத்தில் இருந்த ஒரு மரத்துக்குக் கீழே போய் நின்று செல்போனை உதட்டுக்கு கொடுத்தான்.

"வெண்ணிலா...! இப்ப கேட்குதா...?"

"ம்... கேட்குது....!"

"சொல்லு... என்ன விஷயம்...? அவன் மறுபடியும் போன் பண்ணினானா....?"

"ஆமா... நேத்திலிருந்து நாலைஞ்சு தடவை பண்ணிட் டான். ரிஸீவரை என்னைத் தவிர வேற யார் எடுத்தாலும்



பெண் குரலில் பேசறான். காலேஜ்மேட்ன்னு சொல்லி ஏமாத்திடறான். நான் எடுத்தா மிரட்ட ஆரம்பிச்சுடறான்... எனக்கு என்ன பண்ணுறதுன்னே தெரியலை... சரியா சாப்பிட முடியலை. தூங்க முடியலை...! 'ஏன் இப்படி இருக்கே'ன்னு வீட்ல இருக்கிறவங்க கேட்டு - அது ஒரு பக்கம் தொல்லை...! நீ எப்ப சென்னை வர்றே கதிர்?"

"என்னோட ப்ராஜக்ட் ஹெட்கிட்டே லீவ் அப்ளி கேஷன் கொடுத்து இருக்கேன்... வி.பி. கிட்டே கேட்டு பதில் சொல்றேன்னு சொல்லியிருக்கார்..."

"லீவு கிடைச்சுடுமா...?"

"கிடைக்கும்ன்னு நினைக்கிறேன்...!"

"ஒரு வேளை கிடைக்கலைன்னா...?"

"டோண்ட் வொர்ரி வெண்ணிலா...! எப்படியும் ஹெட் கிட்டே பேசி லீவு வாங்கிடுவேன்...!"

"இதோ பார் கதிர்... உனக்கு லீவு தரலைன்னா அந்த வேலையை ராஜினாமா பண்ணிட்டு வந்துடு... சென்னையி லேயே உனக்கு ஒரு நல்ல வேலை கிடைக்காமலா போயிடும்.?"

"அதுக்கெல்லாம் அவசியம் இருக்காது வெண்ணிலா. ப்ராஜக்ட் ஹெட் எப்படியும் லீவு கொடுத்துடுவார். நான் நாளைக்குக் காலையில் அவர்கிட்டே பேசிட்டு உனக்கு போன் பண்றேன். நீ அந்த போன் மிரட்டலைப் பற்றி கவலைப்படாமே தைரியமாய் இரு..."

"முடியலையே கதிர்...!"

"நீ ஒரு காரியம் பண்ணு..."

"என்ன...?"

''வீட்டுக்கு வர்ற எந்த போன் காலையும் அட்டெண்ட் பண்ணாதே... உன்னோட ரூம்ல உட்கார்ந்துகிட்டு ஏதாவது புத்தகம் படிச்சிட்டிரு...!''

''நீ... எப்படியும் ரெண்டு நாளைக்குள்ளே வந்துடுவியா கதிர்?''

''கண்டிப்பா....! நீ யாரைப் பற்றியும் கவலைப்படாமே கலர் கலராய் கனவு கண்டு என்கூட டூயட் பாடிட்டு இரு... வந்துடறேன்...!'' - கதிர் பேசி விட்டு செல்போனை அணைத்து பாக்கெட்டுக்குள் போட்டுக் கொண்ட விநாடி -

வெள்ளை யூனிஃபார்ம் அணிந்த அந்த கார் டிரைவர் பக்கத்தில் வந்து நின்றான். ''ஸாப்....!''

''க்யா...?''

அவன் இந்தியில் பேசினான். ''ஸாப்....! உங்களுக்குப் பின்னாடி ஒரு ஹோண்டா சிட்டி கார் நிக்குது. கொஞ்சம் திரும்பிப் பாருங்க.''

கதிர் திரும்பிப் பார்த்தான்.

கறுப்பு நிற உடம்போடு ஒரு ஹோண்டா சிட்டி கார் வெயிலில் பளபளப்பாய் நின்றிருந்தது.

''அந்த கார்க்கு என்ன...?''

''நீங்க அந்த கார்ல ஏறணும்.''

''எதுக்கு....?''

''ஹோட்டல் ஒபராய் ஷெர்டனில் தங்கியிருக்கிற என்னோட பாஸ் உங்களைப் பார்த்து பேச விரும்பறார்.''

''உங்க பாஸ் யார்....?''

''அங்கே போனதும் உங்களுக்குத் தெரியும்!''



''ஸாரி....! நான் யாரையும் பார்க்க விரும்பலை...!'' சொல்லிவிட்டு கதிர் நடக்க முயல - அந்த டிரைவர் தன் இடதுகையை நீட்டி மறித்தான். வலதுகை மறைவில் ஒளிந்து இருந்த ஒரு பிஸ்டல் எட்டிப் பார்த்தது.

''ஸாரி... மிஸ்டர் கதிர்... நீங்க கார்ல ஏறலைன்னா உங்களை சுட்டுத்தள்ளிட்டு வரும்படியாய் என் பாஸோட உத்தரவு. என்னோட கையில் இருக்கிற சைலன்ஸர் பிஸ்டலோட ஸ்டிரிக்கரை ஒரு தடவை சுண்டினால் போதும் - ஒவ்வொரு விநாடி இடைவெளியில் மூணு தோட்டா உங்க உடம்புக்குள்ளே பாயும். பத்தே விநாடி யில் உங்களுக்கு மரணம். அந்த மரத்துக்குப் பின்னாடி உங்களை இழுத்துப் போட்டுட்டு நான் பாட்டுக்குப் போயிட்டு இருப்பேன்.''

கதிர் வியர்த்துப் போய் அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸைப் பார்த்தான். காலை நேரத்தில் கூட்டம் அவ்வளவாக இல்லை. எல்லா மாடிகளும் வெறிச்சோடிப் போயிருந்தன.

அந்த டிரைவர் உதடு பிரியாமல் சிரித்தான். ''என்ன... சத்தம் போட்டு கத்தி யாரையாவது உதவிக்கு கூப்பிட லாம்ன்னு நினைக்கறீங்களா...? அப்படியொரு எண்ணம் உங்க மனசுக்குள்ளே இருந்தா அதை இப்பவே துடைச் சுடுங்க. ஏன்னா... இந்த இடத்துக்கு நான் மட்டும் தனியா வரலை. இன்னும் அஞ்சு பேர் இந்த ஷாப்பிங் காம்ப்ளக் ஸுக்குள் அங்கங்கே மறைவாய் நின்னுட்டு இருக்காங்க. உங்களை யாராவது காப்பாற்ற வந்தாலோ அல்லது நீங்க என்னைத் தாக்கினாலோ அந்த அஞ்சு பேரின் கைகளில் இருக்கிற துப்பாக்கிகளும் கனைக்கும்... பரவாயில்லையா...?''

கதிர் தனக்குப் பின்னால் இருந்த ஹோண்டா சிட்டி காரைத் திரும்பிப் பார்த்தான். டிரைவர் தன் கையில்

வைத்து இருந்த துப்பாக்கியை கதிரின் இடுப்பில் குத்தி தள்ளினான்.

"பராக்குப் பார்த்துட்டு இருக்காமே மளமளன்னு கார்ல போய் ஏறுங்க ஸார்! பாஸ் அங்கே வெயிட் பண்ணிட்டிருப்பார்."

கதிர் வியர்வையோடு காரை நோக்கிப் போனான்.



## 11

சிவகிரி சித்தர் ஆகாய மார்க்கமாய் பயணம் செய்து பாண்டிய நாட்டுக்குள் நுழைந்தார்.

மன்னன் சுந்தரசேனனின் உடல் அதற்குள் குளிப்பாட்டப்பட்டு - வாசனை திரவியங்கள் பூசப்பட்டு இறுதிச் சடங்குகளுக்குத் தயாராகிக் கொண்டிருந்தது. மஹாராணி வாசமதியும், உறவினர்களும், நாட்டு மக்களும் கதறி அழுது கொண்டிருந்தார்கள்.

சிவகிரி சித்தர் தன் சூட்சும உடம்போடு மன்னன் சுந்தரசேனனின் இறந்த உடம்புக்குள் புகுந்தார். அடுத்த விநாடியே உடல் அசைந்தது. கண்ணிமைகள் மெல்லத் திறந்தன. கைகள் மெல்ல மேலே உயர்ந்தன. சுற்றி நின்று அழுது கொண்டு இருந்தவர்கள் திகைத்தார்கள். அழுகை ஒலி நின்றது.

மஹாராணி வாசமதியும், அமைச்சர் இரும்பொறையும் திகைப்பும் மகிழ்ச்சியுமாய்ப் பார்த்துக் கொண்டு இருக்கும்



போதே சுந்தரசேனன் தூக்கம் கலைந்து எழுந்து உட்கார்பவனைப் போல் உட்கார்ந்தார். மக்கள் எல்லோரும் அழுகையை மறந்தவர்களாய் ஆனந்தக் கண்ணீர் வடித்தார்கள்.

வாசமதி மகிழ்ச்சிப் பெருக்கால் மன்னரைத் தழுவிக் கொண்டே கேட்டாள். "அரசே...! தாங்கள் உயிர் பிழைத்தது எவ்வாறு? அரண்மனை வைத்தியர் தங்களை சோதித்துப் பார்த்துவிட்டு இறந்து போய்விட்டதாக அல்லவா சொன்னார்...?"

மன்னர் சுந்தரசேனன் தன்னைச் சுற்றியும் நின்றிருந்த எல்லோரையும் பார்த்து புன்னகைத்தபடி சொன்னார். "அரண்மனை வைத்தியர் சொன்னது போல் நான் இறந்து போனதும் உண்மை. இப்போது உயிரோடு இருப்பதும் உண்மை."

"அது எப்படி அரசே?"

"என்னைப் பார்க்க வந்த புலவர் சாமந்தனார் இரண்டு விஷப்பூக்களைக் கொடுத்தார். அதை நான் முகர்ந்ததும் எனது ஐம்புலன்களும் செயலற்றுப் போய் மயங்கி விழுந்துவிட்டேன். என்னுடைய ஆத்மா என் உடலிலிருந்து பிரிந்து ஒரு ஒளிமயமான பாதையின் வழியே போயிற்று. அந்தப் பாதையில் நெடு நேரம் பயணம் செய்த பின் ஒரு மஹா மண்டபம் வந்தது. மண்டபத்தின் மையத்தில் தங்க அரியணை மேல் தேவகுமாரன் போல் ஒரு உருவம் தெரிந்தது. போய் வணங்கி நின்றேன். தேவகுமாரன் எழுந்து என் பக்கத்தில் வந்தார். என் தோளின் மேல் கையை வைத்தார்.

"சுந்தரசேனா...! விஷமலரை நீ முகர்ந்ததின் காரணமாய் உன் ஸ்தூல உடம்பிலிருந்து உன் சூட்சும உயிர்

பிரிந்தது. அது விதியின் கடமை. ஆனால் உன் முற்பிறவி பயன்கள்படி பார்த்தால் மரணம் என்பது இப்போது உனக்கு இல்லை. அதற்கு இன்னும் பலவருடங்கள் இருக்கிறது. உன் மரணமானது வயது முதிர்ந்து இயற்கையாய் நிகழ வேண்டுமே அல்லாது சூழ்ச்சியால் நிகழ்ந்தால் அந்த மரணம் மரணமாகாது. நீ மறுபடியும் உன் ஸ்தூல உடம்புக்குள் நுழைவாயாக! பாண்டிய நாட்டை ஆண்டு மக்களுக்கு நல்லாட்சி நல்குவாயாக...!'' என்று சொல்லி என்னைத் திருப்பி அனுப்பி வைத்தார்...!'' - மன்னரின் உடம்புக்குள் இருந்த சித்தர் இப்படி ஒரு பொருத்தமான பொய்யைச் சொல்ல, மஹாராணி வாசமதியும் அமைச்சர் இரும்பொறையும் ஏனையோரும் நம்பிவிட்டார்கள்.

நாட்டில் சந்தோஷமும் உற்சாகமும் கரை புரண்டு ஓடியது. மன்னர் உயிர் பிழைத்து வந்ததை மக்கள் ஒரு திருவிழாவைப் போல் கொண்டாடினார்கள்.

சிவகிரி சித்தர் சுந்தரசேன மஹாராஜாவாக மாறிய பிறகு அவருடைய ஆட்சியில் நாடு சுபிட்சமாய் இருந்தது. மழை பருவம் தவறாமல் பெய்தது. பயிர்கள் செழித்து, விளைச்சல் பெருகி, செல்வம் கொழித்தது. குற்றங்கள் குறைந்தன. கள்வர்கள் மனம் திருந்தி நல்ல மனிதர்களாக மாறினார்கள். அண்டைய நாடுகள் போர்க் குணத்தைக் கைவிட்டு நட்புக்கரம் நீட்டின. மொத்தத்தில் பாண்டிய நாடு ஒரு சொர்க்கபுரியாய் மாறியிருந்தது.

அன்றைக்கு பௌர்ணமி நாள். மேகங்கள் இல்லாத சுத்தமான வானத்தில் முழுநிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது. சிவகிரி சுந்தரசேன மஹாராஜா, அமைச்சர்களோடு நாட்டு நிலவரம் குறித்து ஒரு அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்திவிட்டு மஹாராணி வாசமதியைக்



காண அந்தப்புரத்துக்குள் ஆர்வமாய் நுழைந்தார். அந்தப்புரத்தின் மையத்தில் இருந்த நந்தவனம் பாரிஜாத மலர்களோடும், பன்னீர் மலர்களோடும் மூச்சை அடைப்பது போல் மணத்துக் கொண்டிருந்தது. வாசமதியைத் தேடி அந்த நந்தவனத்துக்குள் நுழைந்தார் சிவகிரி சுந்தரசேன மஹாராஜா.

நந்தவனத்தின் நீரூற்று அருகே வாசமதி உட்கார்ந்து இருந்தாள். அவள் முகத்தில் வாட்டம். பார்வை ஒரே திசையில் நிலைத்துப் போய் இருந்தது. அவளுக்கு எதிரே போய் நின்றார் மன்னர்.

''தேவி...! என்ன யோசனை....?''

வாசமதி தலைகுனிந்தபடி சொன்னாள். ''ஒன்றும் இல்லை...!''

''ஒன்றும் இல்லை என்று உன் உதடுகள் சொன்னாலும் ஏதோ இருக்கிறது என்று உன் கண்களில் தெரியும் வாட்டம் சொல்கிறதே!''

''அரசே...! அது... வந்து...!''

''இதோ பார் தேவி...! என்னிடம் பேச உனக்கு எந்த ஒரு தயக்கமும் வேண்டாம்... சொல்...உனக்கு என்ன பிரச்சனை...?''

வாசமதி சில விநாடிகள் தயங்கிவிட்டு மெல்லப் பேச்சை ஆரம்பித்தாள். ''அரசே! நான் ஒரு விஷயம் சொன்னால் அதைத் தாங்கள் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டீர்களே...?''

மன்னர் சிரித்தார்.

''நீ தவறாகவே சொன்னாலும் நான் அதைத் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டேன்...! போதுமா...? சொல்... என்ன விஷயம்...?''

"என் மனதுக்குள் ஒரு குழப்பம் வண்டாய் மாறி குடைந்து கொண்டு இருக்கிறது...!"

"என்ன குழப்பம்...?"

"முன்பெல்லாம் தங்களுக்கு அதிக கோபம் வரும். யாராவது குற்றம் செய்தால் மன்னிக்க மாட்டீர்கள். ஆனால் இப்போது தங்களிடம் அந்த கோபம் இல்லை. பேச்சில் நிதானம். நடத்தையில் பணிவு. ராத்திரி வேளைகளில் தங்களுக்கு மது அருந்தினால்தான் உறக்கம் வரும். ஆனால் இப்பொழுது தாங்கள் மதுக்கிண்ணத்தையே கையால் தொடுவது இல்லை. மேலும் அரசாங்க விஷயங்களில் புயல் போன்ற செயல்திறன். எந்தப் பிரச்சனையானாலும் உடனடியாகத் தீர்வு காண்கிறீர்கள். மொத்தத்தில் இந்த பாண்டிய நாட்டையே மாற்றிவிட்டீர்கள். என்னைப் பொறுத்த வரைக்கும் தாங்கள் பழைய மஹாராஜாவாக இல்லை. உண்மையில் தாங்கள் யார்?"

மன்னர் சிரித்தார்.

"இது என்ன கேள்வி... நான் உன் கணவன். இந்த நாட்டின் அரசன்!"

"இப்படி சொல்லி தாங்கள் மற்றவர்களை ஏமாற்றலாம். ஆனால் என்னை ஏமாற்ற முடியாது. என் கணவரோடு வாழ்ந்த அனுபவம் எனக்கு இருக்கிறது. அவர் எப்படிப்பட்டவர்... அவருடைய குணாதிசயம் என்னென்ன என்பது எனக்குத் தெளிவாகவே தெரியும். இதைத் தங்களுடன் இருக்கும் ஒவ்வொரு கணமும் உணர்கிறேன்...!"

சிவகிரி சுந்தரசேன மஹாராஜா உள்ளுக்குள் திகைத்தாலும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் சொன்னார்.

"வாசமதி! நீ தேவையில்லாமல் குழம்பிப் போய் இருக்கிறாய். போய் ஓய்வு எடு... நாளை உதயத்துக்குள் உன் மனம் ஒரு தெளிவுக்கு வந்துவிடும்..."



வாசமதி இருந்த இடத்தை விட்டு அசையாமல் தீர்க்கமாய் தலையாட்டினாள். "இல்லை...நான் இங்கேயிருந்து நகரமாட்டேன். எனக்கு உண்மை தெரிய வேண்டும். என் கணவர் இறந்துவிட்டதாக அரண்மனை வைத்தியர் சொன்னார். அவர் ஒரு திறமையான வைத்தியர். அவர் சொன்னால் அது உண்மையாகத்தான் இருக்கும். ஆனால் என் கணவர் உயிர் பிழைத்துவிட்டார். அது எனக்கு மகிழ்ச்சியான விஷயம்தான்! ஆயினும் இந்த மகிழ்ச்சியே இப்போது என்னை உறுத்த ஆரம்பித்து விட்டது. உண்மையிலேயே தாங்கள் யார்...? இந்தக் கேள்விக்கு இன்று எனக்கு விடை தெரிய வேண்டும்."

வாசமதியின் தீர்க்கமான பேச்சும், பிடிவாதமும் சுந்தரசேனனின் உடம்புக்குள் இருந்த சிவகிரி சித்தரை திகைக்க வைத்தது.

'இவளிடம் உண்மையைச் சொல்வதா?'

'வேண்டாமா?'

யோசித்துக் கொண்டு நின்றார்.



## 12

போலீஸ் ஸ்டேஷன்.

திரு அந்த இன்ஸ்பெக்டர்க்கு முன்பாய் கண்ணீர் நிரம்பிய விழிகளோடு உட்கார்ந்திருந்தான். இன்ஸ்பெக்டரின் நேம் பேட்ஜ் அவரை ஸ்ரீமன் பாலாஜி என்று சொன்னது. இந்தி ஆங்கிலம் மாற்றி மாற்றி பேசினார்.

"உங்க ஃப்ரண்ட் பேர் என்னான்னு சொன்னீங்க?"

"அவனோட பேர் கதிரவன் ஸார். பொதுவா அவனை எல்லோரும் கதிர்ன்னு கூப்பிடுவோம்..."

"அவர் காணாமே போய் எத்தனை மணி நேரமாச்சு?"

"எட்டு மணி நேரம் ஸார்...!"

"எந்த இடத்துல வெச்சு காணாமே போனார்?"

"மயன் மல்ட்டி ஷாப்பிங் காம்ப்ளக்ஸில் இருக்கிற க்ரீன் பார்க் ரெஸ்டாரெண்ட்டில் காபி சாப்பிட போனோம் ஸார். காபிக்கு ஆர்டர் குடுத்துட்டு உட்கார்ந்திட்டிருக்கும் போது அவனுக்கு செல்போன் வந்தது. ரெஸ்டாரெண்ட் டுக்குள்ளே செல்போன் சரியா எடுக்காததினால வெளியில் பேசப் போனான். போனவன் வரவேயில்லை ஸார். நானும் ரெஸ்டாரெண்ட்டுக்குள்ளே உட்கார்ந்து வெயிட் பண்ணிப் பார்த்தேன். அரைமணி நேரமாகியும் வராமல் போகவே வெளியே வந்து பார்த்தேன். கதிரைக் காணோம். என்னோட செல்போனிலிருந்து அவனோட செல்போனுக்கு தொடர்பு கொள்ள முயற்சி பண்ணினேன். அவனோட செல்போனிலிருந்து எந்த ரெஸ்பான்ஸும் இல்லை. அதுக்கு அப்புறம் அந்த ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் பூராவும் தேடிப் பார்த்தேன். கதிர் பார்வைக்குத் தட்டுப்படலை. ஆபீஸுக்கு போன் பண்ணிப் பார்த்தேன். அங்கே வரலைன்னு சொன்னாங்க. தெரிஞ்ச ஃப்ரண்ட்ஸ் எல்லார்க்கும் போன் பண்ணிப் பார்த்தேன். யாருமே கதிரை பார்க்கலைன்னு சொன்னாங்க. கடந்த எட்டு மணி நேரமா அவனைத் தேடிப் பார்த்தும் கிடைக்காமல் போகவே தான் போலீஸில் புகார் கொடுக்க வந்தன்."

இன்ஸ்பெக்டர் ஸ்ரீமன் பாலாஜி சில விநாடிகள் யோசிப் பாய் இருந்துவிட்டு கேட்டார்.



"கதிர் என்கிற கதிரவனை யாராவது கடத்திக்கொண்டு போயிருப்பாங்கன்னு நினைக்கறீங்களா...?"

"மே... பி... ஸார்...!"

"எதனால அப்படி நினைக்கறீங்க...?"

"ஸார்...! கதிர்க்கும் சென்னையைச் சேர்ந்த வெண்ணிலா என்கிற பெண்ணுக்கும் அடுத்த மாதம் கல்யாணம். அதுக்கான ஏற்பாடுகள் சென்னையில் நடந்துட்டு இருக்கு... ரெண்டு நாளைக்கு முன்னால் வெண்ணிலா கதிர்க்கு சென்னையிலிருந்து போன் பண்ணி ஒரு அதிர்ச்சியான தகவலைச் சொல்லியிருக்கா!"

இன்ஸ்பெக்டர் நிமிர்ந்தார்.

"என்ன தகவல் அது...?"

"கதிர் - வெண்ணிலா கல்யாணம் நடக்கக் கூடா துன்னு ஒருத்தன் டெலிபோன்ல மிரட்டியிருக்கான். அதனால் வெண்ணிலா பயந்து போய் கதிர்க்கு போன் பண்ணி உடனடியாய் சென்னைக்கு வரச் சொன்னா. கதிரும் சென்னைக்குப் புறப்பட்டுப் போகத் தயாராய் இருந்தான். இந்த சூழ்நிலையில்தான் இந்த சம்பவம் நடந்து இருக்கு...!"

"போன்ல மிரட்டினது யாரு...?"

"தெரியலை ஸார்..."

"கதிரோட போட்டோ உங்ககிட்டே இருக்கா?"

"இருக்கு..."

"குடுங்க..."

திரு தன் மணிபர்ஸை எடுத்து உள்ளே ஒரு பாலிதீன் உறைக்குள் பத்திரமாய் வைத்து இருந்த கதிரின் போட் டோவை எடுத்துக் கொடுத்தான். இன்ஸ்பெக்டர் அந்தப்

போட்டோவை வாங்கி அதில் பார்வையைப் போட்டுக் கொண்டே கேட்டார்.

"உங்க ஃப்ரண்டோட போட்டோவை மணிபர்ஸுக் குள்ளே இவ்வளவு பத்திரமா வெச்சு இருக்கீங்க...?"

"அவன் என்னோட உயிர் நண்பன் ஸார்...! அவனுக் கொரு கஷ்டம்ன்னா அதை என்னால் பொறுத்துக்க முடியாது."

"சரி...! கதிரோட அப்பா அம்மாவைப் பத்தி சொல் லுங்க...!"

"கதிர்க்கு அம்மா இல்லை ஸார். அப்பா மட்டும்தான். அவர் ஒரு கிராமத்துல போஸ்ட்மாஸ்டராய் இருக்கார்."

"அவர் பேர் என்ன?"

"குழந்தைவேலு ஸார்...!"

"கதிர் காணாமே போன விஷயத்தை அவர்க்குத் தெரியப்படுத்திட்டீங்களா...?"

"இன்னும் இல்ல ஸார்...?"

"அந்தப் பெண் வெண்ணிலாவுக்கு?"

"சொல்லலை ஸார்!"

"ஏன்...?"

"கதிர் காணாமே போயிட்ட விஷயத்தை அவங்க கேள்விப்பட்டா தாங்க மாட்டாங்க ஸார். கதிர் கிடைக்கிற வரைக்கும் நான் இந்த விஷயத்தை சொல்லப் போறது இல்லை ஸார்...!"

"ஒரு வேளை கதிர் கிடைக்கலைன்னா?"

"அப்படி சொல்லாதீங்க ஸார்...!" தழுதழுத்த குரலில் சொன்ன திரு தன் இரண்டு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு உடல் குலுங்க அழ ஆரம்பித்தான்.





# 13

மன்னர் சுந்தரசேனனின் உடம்புக்குள் இருந்த சிவகிரி சித்தர் நீண்ட நேர யோசனைக்குப் பின்பு வாசமதியிடம் உண்மையைச் சொல்லிவிடுவது என்னும் முடிவுக்கு வந்தார். தயக்கத்தோடு பேச்சை ஆரம்பித்தார்.

"தேவி! இனியும் உன்னிடம் உண்மையை மறைக்கத் தயாராக இல்லை. நீ எண்ணியது சரிதான்.. நான் உன் கணவன் சுந்தரசேனன் அல்ல. சுந்தரசேனன் அந்த நச்சு மலர்களை சுவாசித்து இறந்துபோனது உண்மையிலும் உண்மை. சுந்தரசேனன் இறந்த அன்று அவனுடைய உடலைக் கண்டு நீயும் இந்த நாட்டு மக்களும் கதறித் துடித்து அழுது புரண்டதை நான் பார்த்தேன். எனக்கு மனம் பொறுக்கவில்லை. உனக்கும் இந்த நாட்டு மக்களுக்கும் சந்தோஷம் தர வேண்டும் என்பதற்காக இறந்த மன்னரின் உடலில் நான் புகுந்து கொண்டேன்!"

வாசமதி திடுக்கிட்டுப் போனவளாய் சித்தரைப் பார்க்க, சுந்தரசேனனின் உருவத்தில் இருந்த அவர் மெல்ல புன்னகைத்தார்.

"தேவி! என்னுடைய ஆத்மா உன் கணவனின் உட லுக்குள் இருக்கின்ற காரணத்தால் உன்னுடைய கற்புக்கு எந்த விதமான ஒரு களங்கமும் ஏற்பட்டுவிடவில்லை. ஏற்பட்டு விட்டதாக நினைத்து உன்னை நீயே வருத்திக் கொள்ளாதே! ஆன்மா எப்போதும் பரிசுத்தமானது. அது என்றைக்கும் களங்கப்படாது. அதனால்தான் உன்னை

வீரசேனனின் உடலோடு தொட்டேன். அந்தத் தொட லில் எந்த ஒரு தவறும் இல்லை. அது தவறு என்று நீ நினைத்தால் அதற்காக நான் உன்னிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்."

சித்தர் இப்படி சொன்னதும் வாசமதி அவருடைய பாதங்களில் வீழ்ந்தாள். "என்னிடம் தாங்கள் மன்னரின் உடலால் தாங்கள் என்னைத் தொட்டதால் நான் என் னுடைய பத்தினித் தனத்தை இழந்து விட்டதாக நினைக்க வில்லை. எனக்கு இப்போது தெரிய வேண்டியதெல்லாம் இதுதான். தாங்கள் யார்...? எப்படி இந்த உடலுக்குள் நுழைந் தீர்கள்? தங்களுடைய பழைய உடல் என்னவாயிற்று...?"

வாசமதி இப்படி கேட்டதும் சித்தர் தயங்கினார். அவ ருடைய தயக்கத்தை கவனித்துவிட்ட வாசமதி "தங்களுக்கு விருப்பம் இல்லாவிட்டால் சொல்ல வேண்டாம். நான் தங்களைக் கட்டாயப்படுத்த விரும்பவில்லை" என்றாள்.

"தேவி! நான் என்னைப் பற்றிய உண்மைகளை உன் னிடம் சொல்ல எனக்கு எந்த ஒரு தயக்கமும் இல்லை. ஆனால் இது வெளியே யார்க்கும் தெரிந்துவிடக்கூடாது!"

"எப்படி தெரியும் ஸ்வாமி! தாங்கள் சொல்லப் போகும் எந்த ஒரு உண்மையும் என் மனதைத் தாண்டி வெளியே போகாது. தாங்கள் தயக்கமின்றி தங்களைப் பற்றிய உண்மைகளைச் சொல்லலாம்!"

வாசமதி இப்படி சொன்னதும் சிவகிரி சித்தர் தான் யார் என்பதையும் தன்னுடைய உடலை சதுரகிரி மலைக் குகையில் மறைத்து வைத்து இருக்கும் ரகசியத்தையும் சொன்னார். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட வாசமதி "ஸ்வாமி! எனக்கொரு சந்தேகம்!" என்றாள்.

"என்ன...?"



"இப்போது என்னுடைய கணவனின் உடலில் இருக்கும் தாங்கள் என்னைவிட்டு மறுபடியும் போய்விட மாட்டீர் களே...?"

சித்தர் சிரித்தார். "அது எப்படி போகாமல் இருக்க முடியும் தேவி! இந்த உடல் எனக்கு சொந்தமானது இல்லை. இது பஞ்சபூதங்களாலான உடம்பு. காலப்போக்கில் இந்த உட லுக்கு முதுமைப் பருவம் வரும்போது நான் போய்விடு வேன். சதுரகிரி மலைக்குகையில் என்னுடைய உடம்பு என் சீடன் குருராஜனின் கண்காணிப்பில் பத்திரமாக உள்ளது."

"ஸ்வாமி! என்னுடைய கணவனின் உடல் பஞ்ச பூதங்களாலானது என்றும் அதற்கு அழிவு உண்டு என்றும் சொன்னீர்கள். ஆனால் சதுரகிரி மலைக்குகையில் இருக்கும் தங்களுடைய உடம்புக்கு அழிவு வராதா?"

"வராது...!"

"ஏன்...?"

"என்னுடைய உடல் காயகல்ப உடல். பல்வேறு மூலிகை மருந்துகளால் உரமேற்றப்பட்ட உடம்பு அது. நான் ஒரு சித்தன் என்பதால் அது சாத்தியமாயிற்று."

"ஸ்வாமி! தங்களுடைய அந்த காயகல்ப உடலைத் தங்கள் சீடன் குருராஜன் மலைக்குகையில் பாதுகாப்பாய் வைத்துக் கொண்டு இருப்பதாய் சொன்னீர்கள். குருராஜனை யாராவது ஏமாற்றி விட்டு தங்களுடைய உடம்பை எடுத்துப் போய் எரித்துவிட்டால் என்ன செய்வது?"

சித்தர் சிரித்தார். "அப்படியெல்லாம் என் உடம்பை யாராலும் எரித்துவிட முடியாது."

"ஏன் எரிக்க முடியாது?"

''என்னுடைய காயகல்ப உடலை சாதாரண தீயால் எரித்துவிட முடியாது. அந்த உடம்பை எரிக்க வேண்டு மென்றால் அரிதான சில பொருள்கள் வேண்டும்!''

''அரிதான பொருள்களா?''

''ஆமாம்! அந்த அரிதான பொருள்கள் மூன்று. முத லாவது வெடியுப்பு, இரண்டாவது பொரிகாரம், மூன்றாவது குங்கிலியம். இந்த மூன்றையும் சம அளவில் கலந்து தூளாக்கி, அதை பசு வெண்ணெய்யில் கலந்து அந்தக் கலவையை என் உடம்பில் பூசி அதன்பிறகு அந்த உடம்பை விராலி இலைகளால் மூடி, அகில் கட்டைகளை அடுக்கி எரி மூட்டினால்தான் அது எரிந்து சாம்பலாகும். அந்த அரிதான பொருட்களை ஒருவன் சேகரிப்பது சிரமம். சேகரித்த பின் அதை முறைப்படி பயன்படுத்தி என் னுடைய உடம்பை எரிப்பதும் சிரமம். நான் ஒரு சாதாரண சித்தன். எனக்கு கூடுவிட்டு கூடு பாயும் வித்தையைத் தவிர வேறு எதுவும் தெரியாது. முதுமைக்காலம் வரைக் கும் மன்னரின் உடம்பில் இருக்க விரும்புகின்றேன். இந்த சுந்தரசேனனின் உடல் முதுமை அடையும் போது நான் உன்னிடம் விடைபெற்று ஒரு நாள் போய் விடுவேன்...!''

''தங்களோடு வாழும் நாட்கள் என்னுடைய பாக்கியம்'' என்று சொன்ன வாசமதி சித்தரின் பாதங்களில் மீண்டும் வீழ்ந்து வணங்கினாள். அப்படி வணங்கும்போது குனிந்து இருந்த அவளுடைய பார்வை பக்கவாட்டில் திரும்பி சற்று தொலைவில் இருட்டில் ஒரு தூண் ஓரம் மறைந்து நின்றிருந்த அமைச்சர் இரும்பொறையைப் பார்த்தது. உதடுகளில் ஒரு மந்தகாசப் புன்னகை ஒட்டிக்கொள்ள - வாசமதி கண்ணடித்தாள்.





# 14

கதிர் கடத்தப்பட்ட இரண்டாவது நாள்.

விடியற்காலையில் படுக்கையில் புரண்டு கொண்டு இருந்த திருவுக்கு இன்ஸ்பெக்டர் ஸ்ரீமன் பாலாஜிட மிருந்து போன் வந்தது.

''திரு! நீங்க உடனே புறப்பட்டு போலீஸ் ஸ்டேஷ னுக்கு வாங்க...!''

திரு பரபரத்தான்.

''ஸார்! கதிர் கிடைச்சுட்டானா?''

''அதைப்பத்திதான் பேசப்போறோம்... புறப்பட்டு வாங்க...! போன்ல எதுவும் வேண்டாம்!''

திரு, முகம் கூட அலம்பிக் கொள்ளாமல் ட்ரஸ் மாற்றிக் கொண்டு உடனே புறப்பட்டான். பதினைந்து நிமிஷ பைக் பயணத்தில் போலீஸ் ஸ்டேஷன் வந்தது.

இன்ஸ்பெக்டர் ஸ்ரீமன் பாலாஜி ஸ்டேஷன் வாசலில் ஜீப்போடு காத்து இருந்தார்.

''திரு! பைக்கை ஸ்டேஷன் வாசல்ல அப்படி ஓரமாய் நிறுத்திட்டு ஜீப்ல ஏறுங்க...!''

''எங்கே ஸார் போறோம்?''

''ஜி.ஹெச்சுக்கு...''

''அங்கே எதுக்கு ஸார்...?''

"ரயில்வே ட்ராக்கில் விழுந்து கிடந்த ஒரு இளைஞனோட டெட்பாடியைக் கொண்டு வந்து ஜி.ஹெச். மார்ச்சுவரில் வெச்சிருக்காங்க... அது கடத்தப்பட்ட கதிராகக் கூட இருக்கலாம். ஸோ நீங்க வந்து அடையாளம் காட்டினால் பரவாயில்லை..."

"நோ... ஸார்...!"

"என்ன நோ...?"

"அது கதிராய் இருக்க முடியாது ஸார். இருக்கவும் கூடாது ஸார்."

"இதோ பாருங்க திரு...! கதிர் எப்படி காணாமல் போனார்ன்னு நமக்குத் தெரியாது. நீங்க சொன்ன தகவல்களை வெச்சு அவர் கடத்தப்பட்டு இருக்கலாம்ன்னு நாம் யூகம் பண்ணியிருக்கிறோம். ஒரு போலீஸ் ஸ்க்வாட் கதிரைத் தேடிக்கிட்டு இருக்கு... இந்த சூழ்நிலையில் நமக்குக் கிடைக்கிற எந்த ஒரு செய்தியையும் அலட்சியப்படுத்த முடியாது. ரயில்வே ட்ராக்கில் உடல் சிதைந்து போன ஒரு இளைஞனின் உடல் கிடைச்சிருக்கு. அது கதிரா இல்லையான்னு பார்த்து வெரிஃபை பண்ணிக்கிறதுல என்ன தப்பு...? என்னைக் காட்டிலும் கதிரோட பாடியைப் பத்தி உங்களுக்கு நல்லாவே தெரியும். பாடியைப் பார்த்த உடனேயே அது கதிரா இல்லையான்னு உடனே உங்களால் சொல்ல முடியும். அதான் உங்களுக்கு போன் பண்ணினேன்...! போய் ஜீப்புல ஏறுங்க...!"

திரு தயக்கமாய் நடந்து போய் ஜீப்புக்குள் ஏறி உட்கார்ந்தான். இன்ஸ்பெக்டர் ஸ்ரீமன் பாலாஜி ஜீப்புக்குள் ஏறியதும் அது புறப்பட்டது.



"ஸார்!"

"என்ன...?"

"அந்த பாடியை நீங்க பார்த்தீங்களா?"

"ம்... பார்த்தேன்.... முகம் சிதைந்து போயிருக்கு. அதனால்தான் சரியாய் ஐடெண்டிஃபை பண்ண உங்களைக் கூப்பிட்டேன்.... அது கதிர் இல்லைன்னா உங்களைக் காட்டிலும் நான்தான் அதிகமாய் சந்தோஷப்படுவேன்! பை... த... பை... கதிர் காணாமல் போன விஷயத்தை அந்தப் பெண் வெண்ணிலாவுக்கும், கதிரோட அப்பாவுக்கும் தெரியப்படுத்திட்டீங்களா...?"

"இன்னும் இல்லை ஸார்...! இனிமேல்தான் தெரியப்படுத்தணும்!"

"வெண்ணிலா உங்களுக்கு போன் பண்ணி கதிர் எங்கேன்னு கேட்கலையா...?"

"கேட்டா ஸார்...! 'கதிர் ஒரு செமினார் விஷயமாய் டெல்லி போயிருக்கான். அவனோட செல்போன் காணாமே போயிட்டதால அவன் உன்னை காண்டாக்ட் பண்ணலை'ன்னு சொன்னேன்!"

"நம்பிட்டாளா...?"

"நம்பலை...! 'கதிர்கிட்டே செல்போன் இல்லேன்னா என்ன.. வெளியே இருந்து போன் பண்ணக் கூடாதா...? ரெண்டு பேரும் சேர்ந்து என்ன திருட்டு வேலை பண்ணிட்டு இருக்கீங்க'ன்னு கேட்டா."

"இதோ பாருங்க திரு...! இது மாதிரியான விஷயத்தையெல்லாம் மூடி மறைக்கிறது தப்பு... நெருக்கமானவங்க கிட்டே உடனடியாய் சொல்லிடறது நல்லது...!" இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஜி.ஹெச். வந்தது

காலை நேர ஜி.ஹெச். பரபரப்பாய் இருந்தது. ஜீப்பை ஃபோர்வீலர்ஸ் பார்க்கிங்கில் நிறுத்திவிட்டு இருவரும் மார்ச்சுவரியை நோக்கிப் போனார்கள். இன்ஸ்பெக்டர் இயல்பாய் நடைபோட்டுக் கொண்டு இருக்க - திருவுக்கு கால்கள் பின்னியது. அடி வயிறு பயத்தில் புரண்டது.

'ரயில்வே ட்ராக்கில் கிடந்த அந்த சிதைந்து போன உடல் கதிரின் உடலாய் இருக்குமோ?'

'இருக்கக் கூடாது!'

எகிறித்துடிக்கிற இருதயத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு நடந்தான் திரு. மார்ச்சுவரி வந்தது.

அறையின் வாசலில் நின்றிருந்த ஒரு கான்ஸ்டபிள் இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் சல்யூட் ஒன்றை அடித்து விட்டு உள்ளே கூட்டிப் போனார்.

தகர மேஜைகளின் மேல் வரிசையாய் உடல்கள் வெள்ளை விரிப்புகளில் போர்த்தப்பட்டு தெரிய, அந்த கான்ஸ்டபிள் ஒரு உடம்புக்கு முன்பாய் போய் நின்றார். வெள்ளை விரிப்பை நீக்கினார்.

ஒரு சிதைந்து போன உடல் காய்ந்து போன ரத்தக் கறைகளோடு தெரிந்தது. இளைஞனின் உடல், அடர்த்தியான தலை முடி. முகத்தில் வலது காது மட்டும் உருப்படியாய் தெரிந்தது. உடம்பில் துணி இல்லை.

திரு நடுக்கமான பார்வையோடு அந்த உடம்பையே உற்றுப் பார்த்தான். கால் விரல்கள், கை விரல்கள், சிதையாமல் இருந்த உடம்பின் இடுப்புப் பகுதி, கொஞ்சம் முதுகு, வாய் இருந்த இடத்தில் கிட்டித்துப் போன பல்வரிசை.

இன்ஸ்பெக்டர் மெல்ல நடந்து திருவை நெருங்கி அவனுடைய தோளைத் தொட்டார்.



"என்ன திரு...! இது கதிர் இல்லையே?"

"இல்ல ஸார்...! இது கதிர் இல்லை..."

"தேங்க்... காட்...!"



## 15

மன்னன் சுந்தரசேனனின் உடம்புக்குள் இருந்த சிவகிரி சித்தர் உறங்கியதும் அவர்க்கு அருகே படுத்து இருந்த வாசமதி எழுந்தாள். கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து காவலர்கள் இல்லாத பகுதிக்கு வந்து - அங்கே ஒரு மரத்துக்குப் பின்னால் இருட்டில் காத்து இருந்த அமைச்சர் இரும்பொறையை நெருங்கினாள். அவர் பாய்ந்து வந்து அவளை இறுக்கி அணைத்துக் கொண்டார்.

"எத்தனை நாளாயிற்று அரசியாரே!"

வாசமதி புன்னகைத்தாள். "அமைச்சரே! நம் சரசத்துக்கான நேரம் இல்லை இது. நம் இன்பத்துக்கு இடையூறாய் இருந்த மன்னன் சுந்தரசேனன் நாம் கொல்வதற்காக திட்டம் தீட்டியிருந்தோம். அதற்குள் சாமந்தனார் என்ற புலவன் தன் சொந்த பகையை மனதில் வைத்துக் கொண்டு நச்சு மலர்களை முகர வைத்து மன்னனையும் தீர்த்துக் கட்டி தன் வாழ்க்கையையும் முடித்துக் கொண்டான். மனதுக்குள் நான் மகிழ்ந்து கொண்டு வெளியே கதறித் துடித்து அழுது புலம்பியதை உண்மை என்று நினைத்துக் கொண்ட ஒரு சித்தன், கூடு விட்டு கூடு

பாயும் முறையில் இறந்த மன்னரின் உடலுக்குள் புகுந்து விட்டான். அந்த சித்தன் சொன்னதை நேற்று இரவு நீங்கள் கேட்டீர்கள் அல்லவா...?''

''கேட்டேன் அரசியாரே! கேட்டு அப்படியே திகைத்து உறைந்து போனேன். மன்னரின் உடம்புக்குள் இருக்கும் இந்த சித்தனுக்கு உண்மை தெரிந்து விட்டால் அது நமக்கு ஒரு பெரிய இடையூறாக மாறிவிடும்.''

''அஞ்ச வேண்டாம் அமைச்சரே! நாம் இன்பமாக இருப்பதற்கு யார் குறுக்கே வந்தாலும் அவர்கள் உயிரோடு இருக்க மாட்டார்கள். மன்னரின் உடம்புக்குள் இருக்கும் இந்த சித்தனை மாய்க்க ஒரு வழி இருக்கிறது. அதைப் பற்றிப் பேசத்தான் இந்த நடுச்சாம வேளையில் நான் வந்தேன்!''

''அது என்ன வழி அரசியாரே?''

''சதுரகிரி மலைக்குகையில் இருக்கும் சித்தரின் உண்மையான உடலைத் தேடிக் கண்டுபிடித்து எரித்து விட்டால் அதுவே சித்தர்க்கு ஒரு பெரிய இடியாய் இருக்கும். அந்த அதிர்ச்சியிலிருந்து மீள முடியாமல் அவர் தவித்துக் கொண்டு இருக்கும் போதே அவரை நோயில் விழ வைத்து உயிரை வெளியேற்றி விடலாம். எந்த ஒரு சித்தரும் தன் காயகல்ப உடல் இருந்தால்தான் அவரால் அற்புதங்களை நிகழ்த்திக் காட்ட முடியும். மன்னரின் உடம்பில் இருக்கும் சித்தரின் உயிர் வெளியேறினாலும் அவரால் இன்னொரு உடலுக்குள் நுழைய முடியாது. அவர் மீண்டும் மனிதப்பிறப்புக்காக மேலே போய்த்தான் ஆக வேண்டும்...!''

''சித்தரின் காயகல்ப உடலை எரிக்க முடியுமா?''

''ஏன் எரிக்க முடியாது? அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டேன்.''



''அது என்ன ஏற்பாடு அரசியாரே...?''

''நம் விசுவாசத்துக்குரிய அரண்மனை ஆட்கள் சில பேர்களை சதுரகிரி மலைக்கு காலையே அனுப்பி விட்டேன். இந்நேரம் அவர்கள் சதுரகிரி மலைக்குப் போய் சேர்ந்து இருப்பார்கள். நாளை சூரிய உதயத்துக்குள் சித்தரின் காயகல்ப உடலை - அந்த அரிதான பொருட்களை பயன்படுத்தி எரித்து விடுவார்கள்.''

''சித்தரின் உடலைத்தான் குருராஜன் என்கிற சீடன் ஒருவன் பாதுகாத்துக் கொண்டு இருக்கிறானே! அவனை எப்படி அப்புறப்படுத்துவது?''

வாசமதி சிரித்தாள்.

''அந்த சீடன் ஒரு சிறுவன்! அவனைத் தாக்கி காயப் படுத்திவிட்டு கட்டிப் போட்டு விட்டால் என்ன செய்வான்?''

''திட்டம் அருமையாக உள்ளது அரசியாரே! அதை நிறைவேற்றும் போது எந்த ஒரு பிரச்சனையும் வராமல் இருக்க வேண்டும்.''

''எதுவும் வராது அமைச்சரே!'' சொன்ன வாசமதி அவர்மீது சாய்ந்தாள்.

அமைச்சர் இரும்பொறை அவளை தன்னோடு சேர்த்து இறுக்கி அணைத்து கண்களை மூடி மெய் மறந்தார்.



## 16

திரு. மும்பையின் மாதுங்கா பகுதியில் இருந்த அத்வாலே அவென்யூக்குள் தன் பைக்கை நுழைத்து

சௌஜன்யாவின் வீட்டுக்கு முன்பாய் நிறுத்தி இறங்கி ஸ்டாண்ட் விட்டு வாசற்படியேறி அழைப்பு மணியின் பொத்தானை அழுத்தினான்.

சரியாய் ஒரு நிமிட நேரத்துக்குப் பிறகு கதவு விலகியது. சௌஜன்யா நின்றிருந்தாள். திருவைப் பார்த்ததும் திகைத்தாள். "திரு...! நீங்களா...! வாங்க...!"

"சௌஜன்யா...! நான் உன்கிட்டே கொஞ்சம் தனியா பேசணும். உன்னோட அப்பா வீட்ல இருக்காரா...?"

"இல்ல. வெளியே போயிருக்கார். நீங்க உள்ளே வாங்க...!"

திரு உள்ளே வர - சௌஜன்யா கேட்டாள்.

"என்ன விஷயம் திரு...? ஏன் நீங்க மட்டும் தனியா வந்திருக்கீங்க...? கதிர் எங்கே...? ஏன் இப்படி ஷேவ் கூட பண்ணாமே டல்லாய் இருக்கீங்க...?"

பெருமூச்சொன்றை விட்ட திரு, சோபாவுக்கு சாய்ந்து கொண்டே சொன்னான். "கதிர் காணாமல் போய் நாலைஞ்சு நாளாச்சு சௌஜன்யா."

அவள் அதிர்ந்து போய் திருவைப் பார்த்தாள்.

"என்னது... கதிரைக் காணோமா... நீங்க என்ன சொல்றீங்க திரு?"

"உண்மையைச் சொல்லிட்டிருக்கேன்..."

"காணாமல் போறதுன்னா எப்படி...? எனக்கு ஒண்ணும் புரியலை திரு...!"

எல்லாவற்றையும் சொன்னான் திரு. சௌஜன்யா செவி மடுத்து விட்டு கவலையோடு கேட்டாள்.

"ஊர்ல எல்லார்க்கும் விஷயம் தெரியுமா?"



"தெரியும்...! ஊர்லயிருந்து வெண்ணிலாவோட அப்பாவும் கதிரோட அப்பாவும் மும்பை வந்து ஒரு ஹோட்டல்ல தங்கி போலீஸ் கிட்டயிருந்து எப்ப நல்ல தகவல் வரும்ன்னு காத்துட்டிருக்காங்க. வெண்ணிலா ஊர்ல இடிஞ்சு போயிட்டாளாம். கதிர் காணாமல் போனதை அவளால் தாங்கிக் கொள்ள முடியாமல் ஒரு தடவை தற்கொலைக்கு முயற்சி பண்ணியிருக்கா. ஹாஸ்பிட்டல் கொண்டு போய் எப்படியோ காப்பாத்திட்டாங்க."

"மை குட்னஸ்! மும்பை போலீஸ் என்ன சொல்றாங்க திரு...?"

"அவங்களும் முயற்சி பண்ணிட்டுத்தான் இருக்காங்க!"

"கதிர் காணாமல் போனதுக்கு காரணம் என்னவாய் இருக்க முடியும்னு நீங்க நினைக்கறீங்க திரு...?"

"சௌஜன்யா! நான் இங்கே வந்தது காரண காரியங்களைப் பத்தி பேசறதுக்காக இல்லை...!"

"பின்னே...?"

"நீ எனக்கு ஒரு உதவி பண்ணனும்."

"என்ன உதவி...?"

"உன்னோட முகத்தை பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணி அடியோடு மாத்தின அந்த டாக்டர் யாரு...?"

"அந்த டாக்டர் பேர் மல்ஹோத்ரா. தாதரில் இருக்கார். எதுக்காக கேட்கறீங்க திரு...?"

திரு, மௌனமாய் நிற்க, சௌஜன்யா மறுபடியும் கேட்டாள். "சொல்லுங்க..! எதுக்காக அந்த டாக்டரைப் பத்தி கேட்டீங்க?"

"சௌஜன்யா! நான் என்னோட முகத்தை ப்ளாஸ்டிக் சர்ஜரி பண்ணி மாத்திக்கப் போறேன்!"

''என்னது...! முகத்தை மாத்திக்கப் போறீங்களா...!''

''ம்! நான் என்னோட முகத்தை கதிரோட முகமாய் மாத்திக்கப் போறேன். கதிர் உயிரோடு இருந்தாத்தான் வெண்ணிலா உயிரோடு இருப்பா... இல்லேன்னா... அவ கண்டிப்பாய் தற்கொலை பண்ணிக்குவா...''

''திரு...! உங்களுக்கென்ன பைத்தியமா...? உங்க முகத்தை கதிர் மாதிரி மாற்றியமைக்க அந்த ப்ளாஸ்டிக் சர்ஜரி டாக்டர் மல்ஹோத்ராவால் முடியும். ஆனால் நீங்க கதிராய் மாறின பிறகு காணாமல் போன உண்மையான கதிர் வந்துட்டா அப்ப உங்க நிலைமை என்ன?''

''கதிர் திரும்பி வரமாட்டான்.''

''ஏன்...?''

''அவன் இப்போ உயிரோடு இல்லை...!''

''என்னது! உயிரோடு இல்லையா...? அவர் காணாமல்தானே போயிருக்கார்?''

''சௌஜன்யா! இப்ப உன்கிட்டே ஒரு உண்மையைச் சொல்றேன். நாலு நாளைக்கு முன்னாடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீமன் பாலாஜி என்னை ஜி.ஹெச்சுக்கு கூட்டிப் போய் மார்ச்சுவரியில் இருந்த ஒரு இளைஞனின் சடலத்தைக் காட்டினார். ரயில்வே ட்ராக்கில் கிடந்த - சிதைந்து போன சடலம் அது. முகம் சிதைந்து போயிருந்தாலும் உடம் போட மற்ற உறுப்புகள் ஓரளவு உருப்படியாய் இருந்தது. கதிரும் நானும் ஒரே அறையில் ரெண்டு வருஷம் தங்கி யிருந்ததால எனக்கு அவன் உடம்போட அனாடமியும், மச்சங்களும் அத்துப்படி. ஆகையால் அந்த பாடியைப் பார்த்ததுமே அது கதிர்தான்னு நான் தெரிஞ்சுக்கிட்டேன். ஆனா இன்ஸ்பெக்டர் கிட்டே அது கதிர் இல்லைன்னு பொய் சொன்னேன்.''



''ஏன்...?'' சௌஜன்யா திகில் படிந்த முகத்தோடு கேட்டாள்...

''கதிரோட இழப்பை யார் தாங்கிக்கிட்டாலும் வெண் ணிலாவால தாங்கிக்க முடியாது. கதிர் உயிரோடு இல்லைன்னு தெரிஞ்ச அடுத்த நிமிஷமே வெண்ணிலா ஏதாவது ஒரு வகையில் தன்னோட உயிரைப் போக்கிக் குவா... அதுக்கப்புறம் அந்த குடும்பத்தோட ஒட்டு மொத்த சந்தோஷமும் காணாமல் போயிடும்.''

''அதுக்காக... நீங்க கதிர் மாதிரி முகத்தை பிளாஸ்டிக் சர்ஜரி பண்ணிக்கிட்டு அவளை ஏமாத்தப் போறீங்களா?''

''இது ஏமாத்தற விஷயம் கிடையாது சௌஜன்யா! ஒரு பிரச்சனைக்கு தீர்வு தேடற முயற்சி. வெண்ணிலா உயிரோடு இருக்கணும்ன்னா நான் கதிராய் மாறியாகணும். வேற வழியில்லை...!''

''திரு! இது சினிமா இல்லை. வாழ்க்கை! சினிமாவில் தான் இப்படியெல்லாம் நடக்கும். ப்ராக்டிகலாய் சாத்தியமில்லை.''

''ஏன் சாத்தியம் இல்லை சௌஜன்யா...? நீ இப்போ பழைய சௌஜன்யா கிடையாது. உன்னோட பழைய முகம் உனக்கு இப்போ இல்லை. இருந்தாலும் நீ இப்போ சந்தோஷமாய் இருக்கியா இல்லையா...?''

''திரு! என்னோட பிரச்னை வேற. உங்களோட பிரச்னை வேற! நீங்க கதிராய் மாறி வெண்ணிலாவைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு வெண்ணிலாவோட அப்பா ஒத்துக் கணும். உங்க அப்பா ஒத்துக்கணும். அந்த பாயிண்ட்டை யோசிச்சுப் பார்த்திங்களா?''

''யோசிக்காமலா இந்த முடிவுக்கு வருவேன்...? வெண் ணிலாவோட அப்பாவும், என்னோட அப்பாவும் பச்சைக்

கொடி காட்டின பிறகுதான் நான் கதிராய் மாற முயற்சி பண்ணினேன். கதிர் இறந்து போன விஷயம் அவங்களுக்கு மட்டுந்தான் தெரியும். வேற யார்க்கும் தெரியாது. தெரியப்போறதும் இல்லை."

சௌஜன்யா திருவையே பார்த்தாள். திரு கேட்டான். "என்ன அப்படி பார்க்கிறே...?"

"திரு! நீங்க பேசறதைப் பார்த்தா எனக்கு பயம்மாயிருக்கு. கதிர் மாதிரி நீங்க உங்களோட முகத்தை மாத்திக்கலாம். அது ஒரு பிரச்சனையில்லை. ஏன்னா டாக்டர் மல்ஹோத்ரா திறமை வாய்ந்த ஒரு பிளாஸ்டிக் சர்ஜன்... அதே சமயத்தில் நியாயமானவர் கூட. ஒருத்தரோட முகத்தை ப்ளாஸ்டிக் சர்ஜரி பண்ணி மாத்தறதுக்கு முந்தி காரணம் கேட்பார். நீங்க சொல்ற காரணம் சரியாய் இருந்தாத்தான் அவர் சர்ஜரி பண்ணுவார். இல்லேன்னா தீர்மானமாய் 'நோ' சொல்லிடுவார். நீங்க எவ்வளவு பணம் தர்றேன்னு சொன்னாலும் ஒத்துக்க மாட்டார்."

"சௌஜன்யா! நான் வெண்ணிலாவோட உயிரைக் காப்பாத்தத்தான் இப்படியொரு முயற்சியில் இறங்கியிருக்கேன். வேணும்ன்னா நீயும் என்கூடவா... ரெண்டு பேரும் சேர்ந்து போய் அவர்கிட்டே சொல்லுவோம். அவர் என்னோட கோரிக்கையில் இருக்கிற நியாயத்தைப் புரிஞ்சுக்குவார்."

"ஓ.கே... திரு...! அவர் வேண்டாம்ன்னு சொன்னா இந்த முயற்சியை நீங்க கைவிட்டுடணும்..."

"அவர் வேண்டாம்ன்னு சொல்ல மாட்டார்..."

"சொல்லிட்டா...?"

"சொல்லவே மாட்டார்... புறப்படு!"





# 17

அமைச்சர் இரும்பொறையோடு இரண்டாம் சாமம் வரை இருந்துவிட்டு பிறகு தன்னுடைய சயன அறைக்குள் நுழைந்தாள் வாசமதி. விளக்கின் மெல்லிய வெளிச்சத்தில் சயன மஞ்சத்தைப் பார்த்தவள் திடுக்கிட்டாள்.

மன்னர் சுந்தரசேனன் மஞ்சத்தில் இல்லை.

பதட்டமடைந்தாள் வாசமதி.

'எங்கே போனார்...?'

'தூக்கம் பிடிக்காமல் அந்தப்புர நந்தவனத்தில் உலாவிக் கொண்டு இருப்பாரோ...?'

நந்தவனத்துக்கு போகத் திரும்பிய வாசமதியின் பார்வை மஞ்சத்து தலையணை மேல் வைக்கப்பட்டிருந்த ஓர் ஓலைச் சுவடியின் மேல் நிலைத்தது. வேகவேகமாய்ப் போய் எடுத்தாள். அந்த குருத்தோலையில் எழுத்தாணி கொண்டு நேர்த்தியாய் எழுதப்பட்ட வாசகங்கள் வாசமதியின் கண்களில் படிந்து மனதுக்குள் போயிற்று!

**தேவி வாசமதி!**

**'பெண்ணாகி வந்ததொரு மாயப் பிசாசு' என்ற வாக்கியத்திற்கு இன்று நீ ஓர் உதாரணமாகி விட்டாய். மனிதர்களுக்கு வரும் துயரத்தைப் போக்குவது தான் ஒரு சித்தனின் தலையாய கடமை என்பதை உணர்ந்து இருந்த நான் உன் துயரத்தைப் போக்குவதற்காக எனது காயகல்ப உடம்பை சதுரகிரி மலைக்குகையில் ஒளித்து வைத்து விட்டு உன் கணவனின் இறந்த உடம்புக்குள்**

நுழைந்தேன். அது எவ்வளவு பெரிய தவறு என்பதை இப்போது உணர்கிறேன். நீ எப்படிப்பட்ட வேஷதாரி என்பதை இப்போது புரிந்து கொண்டேன். என் காய கல்ப உடம்பை எரிப்பதற்காக உன்னால் அனுப்பப் பட்ட அரண்மனை ஆட்கள் என் உடம்பை நெருங்க முடியாது. காரணம் இன்று பௌர்ணமி நாள். இந்த முழுமதி நாளில் என் உடலை நெருங்கியவர்களுக்கு மரணம் உண்டாகும். இப்போது நான் என் உடலை நோக்கி பயணப்பட்டு விட்டேன். நாளைக்காலை கதிரவன் உதயமாகும் போது நான் என்னுடைய உடம்புக்குள் நுழைந்து இருப்பேன். அதன் பிறகு உன் கணவனின் உடலை அதே சதுரகிரி மலைக்குகையில் வைத்து எரித்து விடுவேன். மன்னர் சுந்தரசேனன் காணாமல் போனது மக்களுக்கு துக்கமாகவும் உனக்கு மகிழ்ச்சியாகவும் இருக்கும். நான் எழுதிய இந்த ஓலை லிகிதத்தைப் படித்து விட்டு நீ திருந்தி வாழ்ந்தால் உன் நாடு சுபிட்சமாக இருக்கும். இல்லையேல் நாட்டின் நிலைமையைப் பார்த்து நீ வருத்தப்படும்படியாக இருக்கும். நான் வருகிறேன்.

அடியேன் சிவகிரி சித்தன்.

ஓலையைப் படித்து முடித்த வாசமதி அப்படியே தளர்ந்து போய் மஞ்சத்துக்கு சாய்ந்தாள்.



## 18

டாக்டர் மல்ஹோத்ரா தனக்கு எதிரே உட்கார்ந்திருந்த திருவையும், சௌஜன்யாவையும் ஏறிட்டார். பிறகு பார்வையை திருவின் மேல் நிறுத்தினார்.



''மிஸ்டர் திரு...! வெண்ணிலாவோட உயிர்க்கு எந்த ஒரு ஆபத்தும் ஏற்பட்டு விடக் கூடாதுங்கிற உங்க ஆதங்கம் எனக்குப் புரியுது. இது ஒரு நல்ல நோக்கம்தான்! இருந்தாலும் உங்க முகத்தை கதிர் முகம் மாதிரி ப்ளாஸ்டிக் சர்ஜரி பண்றதுக்கு முன்னாடி நீங்க நிறைய யோசனை பண்ணனும். பின்னாடி என்னென்ன சிக்கல்கள் வரலாம்ங்கிறதையும் திங்க் பண்ணனும்...!''

திரு பரபரத்தான். ''டாக்டர்...! இனிமே யோசனை பண்ண ஒண்ணுமேயில்லை. கதிர் உயிரோடு இல்லைங் கிற விஷயம் வெண்ணிலாவுக்கு தெரியும்போது அவ உயிரோடு இருக்க மாட்டா. இப்போ கதிர் காணாமே போயிட்டதாய் வெண்ணிலா நினைச்சு அவன் எப்படியும் வருவான்னு காத்திட்டிருக்கா... நான் கதிராய் மாறி அவளுக்கு முன்னாடி போய் நின்னாத்தான் வெண்ணிலா பழைய சந்தோஷத்துக்கு வருவா. இது நான் மட்டும் எடுத்த முடிவு இல்லை டாக்டர். மும்பைக்கு வந்து ஒரு ஹோட்டலில் தங்கியிருக்கிற வெண்ணிலாவோட அப்பா வும் என்னோட அப்பாவும் சேர்ந்து எடுத்த முடிவு...''

டாக்டர் மல்ஹோத்ரா சில விநாடிகள் யோசிப்பாய் இருந்து விட்டு தலையை ஆட்டினார்.

''ஓ.கே... மிஸ்டர் திரு...! நீங்க இவ்வளவு தீர்க்கமாகவும் பிடிவாதமாகவும் இருக்கிறதால உங்களுக்கு ப்ளாஸ்டிக் சர்ஜரி பண்றேன். சர்ஜரி பண்றதுக்கு முன்னாடி நீங்க இந்த ஹாஸ்பிடலில் ஒரு வாரம் தங்கி சில பரிசோதனைகளைப் பண்ணிக்கணும். அப்புறம்... சர்ஜரிக்கு நிறைய செலவாகும்.''

''பணம் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை டாக்டர். பணம் எவ்வளவு கட்டணும்ன்னு சொல்லுங்க. இப்பவே கட்டிடறேன்!''

"நாட் நெசசரி...! மொதல்ல பரிசோதனைகள் முடியட்டும். அப்புறம் அதைப்பத்தி பேசுவோம்...!"

"தேங்க்யூ டாக்டர்...!"

டாக்டர் மல்ஹோத்ரா சௌஜன்யாவிடம் திரும்பினார். "திருவுக்கு ப்ளாஸ்டிக் சர்ஜரி பண்றதைப் பத்தி நீ என்னம்மா நினைக்கிறே...?"

"டாக்டர்...! திரு, கதிர் ரெண்டு பேருமே உயிர்க்கு உயிரான நண்பர்கள். ரெண்டு பேர்க்குமே ஒரே மாதிரியான உடல் அமைப்பு. ஒரே நிறம். வெயிட் கூட ரெண்டு பேர்க்கும் 72 கிலோதான். முக அமைப்பு மட்டுமே வேறுபட்டிருக்கு. ஸோ திருவை கதிராய் மாத்தறதால பின்னாடி எந்த பிரச்னையும் வராது. காணாமல் போயிட்ட கதிர்தான் திரும்பி வந்துட்டதாய் நினைப்பாங்க. இந்த சர்ஜரியை நீங்க தாராளமாய் பண்ணலாம் டாக்டர்..."

"ஓ.கே... லெட் அஸ் ப்ரொஸீட்...!" டாக்டர் மல்ஹோத்ரா தோள்களைக் குலுக்கினார்.



## 19

இன்ஸ்பெக்டர் ஸ்ரீமன்பாலாஜி ஒரு செக் மோசடி விஷயமாய் ஸ்டேஷனில் வைத்து விசாரணை நடத்திக் கொண்டு இருந்த போது அவருடைய செல்போன் ஒலித்தது. எடுத்து பேசினார்.

"எஸ்...!"



"இன்ஸ்பெக்டர் ஸ்ரீமன் பாலாஜி?"

"எஸ்...!"

"அ'யாம் டாக்டர் மல்ஹோத்ரா... பிளாஸ்டிக் சர்ஜன்!"

"கேள்விப்பட்டு இருக்கிறேன்... சொல்லுங்கள் டாக்டர். என்ன விஷயம்...?"

"காணாமல் போய்விட்ட ஒரு சாஃப்ட்வேர் என்ஜினியர் - பேர் கதிர் என்கிற கதிரவன். அவருடைய கேஸை நீங்கள் தானே இன்வெஸ்டிகேட் செய்து கொண்டு இருக்கிறீர்கள்?"

"ஆமாம்...!"

"அது சம்பந்தமாய் உங்களோடு பேச வேண்டும். என்னுடைய நர்சிங் ஹோமுக்கு ஒரு... ஒரு மணி நேரம் வந்து போக முடியுமா?"

"வித் ப்ளஷர்...! எனிதிங்க் இம்பார்ட்டண்ட் டாக்டர்?"

"எஸ்... ப்ளீஸ் கம்...!"

"உடனே வரலாமா?"

"வந்தால் சந்தோஷப்படுவேன்...!"

"இன்னும் இருபது நிமிடத்தில் உங்கள் முன்னால் இருப்பேன்!'

சொன்னது போலவே இருபதாவது நிமிடம் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமன் பாலாஜி டாக்டர் மல்ஹோத்ராவுக்கு முன்பாய் உட்கார்ந்திருந்தார்.

"சொல்லுங்க டாக்டர்... என்ன விஷயம்...?"

மல்ஹோத்ரா சில விநாடிகள் மௌனமாய் இருந்து விட்டு மெல்லப் பேச்சை ஆரம்பித்தார். "காணாமல் போன சாஃப்ட்வேர் என்ஜினியர் கதிரைக் கண்டுபிடிக்கிற

முயற்சியில் ஏதாவது பலன் கிடைத்ததா இன்ஸ்பெக்டர்...?"

"ஸ்பெஷல் போலீஸ் ஸ்க்வாட் தேடிக் கொண்டு இருக்கிறது. எப்படியும் இன்னும் ஒரு வாரத்திற்குள் கண்டுபிடித்து விடுவார்கள். ஏன்... எதற்காக இந்த கேள்வி...?"

மல்ஹோத்ரா புன்னகைத்தார். "இனிமேலும் அந்தக் கதிரைத் தேடிக் கொண்டு இருக்க வேண்டாம் இன்ஸ்பெக்டர்..."

"ஏன்...?"

"அந்தக் கதிர் கொலை செய்யப்பட்டு விட்டான் என்கிற விஷயம் உங்களுக்குத் தெரியுமா...?"

"என்னது... கதிர் கொலையா...! டாக்டர் நீங்கள் என்ன சொல்லிக் கொண்டு இருக்கிறீர்கள்...?"

"உண்மையைச் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். கதிர் கொலை செய்யப்பட்டு விட்டான் என்கிற அதிர்ச்சியான விஷயத்தைக் காட்டிலும் இன்னொரு அதிர்ச்சியான விஷயம் - அவனைக் கொலை செய்தது யார் என்பது தான்...!"

"யார்...?"

"கதிரின் நண்பன் திருமூர்த்தி...!"

"என்னது... திருமூர்த்தியா...?"

"எஸ்...!"

"உங்களுக்கு எப்படி தெரியும்...?"

"வாருங்கள்! அந்த அறைக்குள் போய்ப் பேசுவோம்." மல்ஹோத்ரா எழுந்து இன்ஸ்பெக்டர் ஸ்ரீமன் பாலாஜியை



கூட்டிக் கொண்டு பக்கத்தில் இருந்த அறைக்குள் நுழைந்தார். மெலிதாய் வெளிச்சம் நிரம்பியிருந்த அந்த அறைக்குள் ஒரு பெரிய பிளாஸ்மா டி.வி.யும் ஒரு கம்ப்யூட்டரும் சில மருத்துவ உபகரணங்களும் தெரிந்தன.

"உட்காருங்கள் இன்ஸ்பெக்டர்!" டாக்டர் காட்டிய அந்த இருக்கையில், ஸ்ரீமன் பாலாஜி உட்கார்ந்தார். மல்ஹோத்ரா மெல்லப் பேச்சை ஆரம்பித்தார்.

"இன்ஸ்பெக்டர்! இரண்டு நாட்களுக்கு முன்பு என்னுடைய பழைய பேஷண்ட் சௌஜன்யாவோடு அந்த திருமூர்த்தி என்னை ஒரு கன்சல்டேஷன் விஷயமாய் பார்க்க வந்தான். அவனுடைய நண்பன் கதிர் இறந்து விட்டதாகவும், அவனுடைய இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாத அவனுடைய காதலி வெண்ணிலாவைத் தற்கொலையிலிருந்து காப்பாற்ற - அவளைக் கல்யாணம் செய்து கொள்வதற்காக தன்னுடைய முகத்தை பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் கதிரின் முகத்தைப் போலவே மாற்றும் படியும் என்னிடம் சொன்னான். நான் முதலில் தயங்கினாலும் ஒரு பெண்ணின் உயிரைக் காப்பாற்றுவதற்காக திருமூர்த்திக்கு ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து கதிரின் முகத்தைப்போலவே மாற்றுவதற்கு ஒப்புக் கொண்டேன். நான் எப்போதுமே ஒரு பேஷண்ட்டுக்கு பிளாஸ்டிக் சர்ஜரி செய்வதற்கு முன்பு அந்த பேஷண்ட்டை உளவியல் ரீதியாக பரிசோதனை செய்து பார்ப்பது வழக்கம். அதன்படி நேற்று இரவு திருமூர்த்தியை ஒரு இஞ்செக்ஷன் மூலம் மயக்கத்திற்கு உட்படுத்தி அவனுடைய மனதை சப்கான்ஷியஸ் மைண்டுக்கு கொண்டு போய் உளவியல் ரீதியாய் சில கேள்விகளைக் கேட்டுக் கொண்டு இருந்தேன். அப்போது திருமூர்த்தி அவனையும் அறியாமல் சொன்ன சில உண்மைகளைக் கேட்டு நான் அதிர்ந்து போனேன்."

இன்ஸ்பெக்டர் ஸ்ரீமன் பாலாஜி நிமிர்ந்து உட்கார்ந்தார். "அப்படியென்ன உண்மைகள் டாக்டர்?"

"அந்த உண்மைகளை நான் சொல்வதைக் காட்டிலும் - திருமூர்த்தி அவன் வாயால் சொன்னதை நீங்கள் சி.டி. மூலமாகவே பார்த்து தெரிந்து கொள்ளலாம். ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்வது சில சமயம் பிரச்சனைகளில் சிக்கிக் கொள்வதால் நான் ஒவ்வொரு பேஷண்டையும் உள வியல் ரீதியாய் பரிசோதனை செய்யும்பொழுது அதை வீடியோ எடுத்துக் கொள்வது வழக்கம். அதே போல் திருமூர்த்தியை பரிசோதனை செய்யும் போது எடுத்த சி.டி.யை இப்போது போட்டுப் பார்க்கலாம்...!"

சொன்ன டாக்டர் பக்கத்து மேஜையின் இழுப் பறையைத் திறந்து ஒரு சி.டியை எடுத்து டி.வி.டி.யின் வாய்க்குக் கொடுத்தார். ப்ளே பட்டனைத் தட்டியதும் டி.வி.திரை வெளிச்சப் புள்ளிகளைக் காட்டிவிட்டு அடுத்த சில விநாடிகளில் ஒரு அறையின் மையத்தில், அரை யிருட்டான வெளிச்சத்தில், ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டு இருந்த திருமூர்த்தியையும், அவனுக்கு அருகே நின்றிருந்த டாக்டர் மல்ஹோத்ராவை யும் காட்டியது.

கண்களை மூடி மயக்க நிலையில் இருந்த திருமூர்த்தி, டாக்டர் கேட்ட கேள்விகளுக்கு குழறலான குரலில் பதில் சொல்லிக் கொண்டு இருந்தான்.

"திரு...! நான் பேசுவது உங்கள் காதுகளில் விழுந்து மனதில் போய் பதிகிறதா?"

"ம்...! பதிகிறது...!"

"எந்த குழப்பமும் இல்லையே?"

"இல்லை...!"



"கதிரின் முகத்தைப் போலவே உங்கள் முகத்தை ப்ளாஸ்டிக் சர்ஜரி செய்து மாற்றிக் கொள்வதில் உங்களுக்கு பரிபூர்ணமான உடன்பாடுதானே?"

"ஆமாம்...!"

"அது விஷயமாக யாரும் உங்களை கட்டாயப்படுத் தவோ, நிர்ப்பந்தம் செய்யவோ இல்லைதானே?"

"இல்லை...!"

"கதிர் இறந்து போய் விட்டதால் வெண்ணிலா உண்மையிலேயே தற்கொலை செய்து கொள்வாளா...?"

"ஆமாம்...!"

"அப்படியெல்லாம் செய்து கொள்ள மாட்டாள் என்று வெண்ணிலாவின் அப்பா சொல்கிறார். அது உண்மையா... பொய்யா...?"

"அது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது. வெண்ணிலா கழுத்தில் நான் தாலி கட்ட வேண்டும். நான் அவளுக்கு கணவனாகவும், அவள் எனக்கு மனைவியாகவும் மாற வேண்டும். இது நடந்தால்தான் எனக்கு சந்தோஷம்...!"

"வெண்ணிலாவைக் கல்யாணம் செய்து கொள்வதில் உங்களுக்கு அவ்வளவு சந்தோஷமா...? கதிர் இறந்து போனதில் உங்களுக்கு வருத்தம் இல்லையா?"

"எதற்காக வருத்தப்பட வேண்டும்...? அவன் உயிரோடு இருக்கக் கூடாது... வெண்ணிலா எனக்குக் கிடைக்க வேண்டும்... என்பதுதானே என்னுடைய திட்டம். வெண்ணிலாவை என்றைக்கு நேரில் பார்த்தேனோ அன்றே அவள்தான் என் மனைவி என்பதை நான் தீர் மானம் செய்து விட்டேன். அவளை அடைவதற்கு என்ன வழி என்று யோசித்தேன். அப்படி யோசித்துக்

கொண்டிருந்த போதுதான் அந்தப் பழைய கால சரித்திரப் புத்தகம் கிடைத்தது."

"சரித்திரப் புத்தகமா?"

"ஆமாம்...! அந்தப் புத்தகத்தின் பெயர் சிவகிரி சித்தரின் மகாத்மியம். அந்த புத்தகத்தை படித்துப் பார்த்த போது சிவகிரி சித்தர் ஒரு பாண்டிய நாட்டு மன்னனின் இறந்துபோன உடம்புக்குள் கூடுவிட்டு கூடு பாயும் முறையில் நுழைந்து கொண்டு அந்த மன்னனின் மனைவியான வாசமதியின் கணவனாக பலகாலம் வாழ்ந்துள்ளார். இந்த செய்தி என் மனதை ஆக்ரமித்தது. சிவகிரி சித்தரை போல் கூடுவிட்டு கூடு பாயும் கலை தெரியாவிட்டாலும் இந்த விஞ்ஞான யுகத்தில் வளர்ந்து விட்ட ப்ளாஸ்டிக் சர்ஜரியைப் பயன்படுத்தி நான் ஏன் கதிராக மாறக்கூடாது என்று யோசித்தேன். கதிர்க்கும் வெண்ணிலாவுக்கும் திருமணம் நிச்சயமானதும் என் தீவிரம் அதிகமாயிற்று. ஒரு நல்ல திறமையான ப்ளாஸ்டிக் சர்ஜனைத் தேடி அலைந்தேன். அப்போதுதான் சௌஜன் யாவை சந்தித்தேன். அவளுடைய முகத்தை அடியோடு மாற்றிய டாக்டர் மல்ஹோத்ராவைப் பற்றித் தெரிந்து கொண்டேன். அவரும் என்னுடைய முகத்தை மாற்றி அமைப்பதாக சொல்லியுள்ளார்."

"அப்படியானால் கதிரைக் கொலை செய்தது நீங்கள்தானா?"

"நான்தான்! ஆனால் என் கையால் நான் கதிரைக் கொலை செய்யவில்லை. ஒரு கூலிப் படையை அமைத்துக் காரியத்தை முடித்தேன். அதற்காக சில லட்சங்கள் செலவாயிற்று. அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. என் முகம் இன்னும் சில தினங்களில் கதிரின் முகமாய் மாறப் போகிறது. அதற்குப் பிறகு அந்த சிவகிரி சித்தர்,



மன்னன் சுந்தரசேனன் உடம்பில் புகுந்து கொண்டு சுந்தரசேனனின் மனைவி வாசமதிக்குக் கணவனாய் வாழ்ந்தது போல் நான் கதிரின் முகத்தோடு - கணவன் என்ற உறவோடு வெண்ணிலாவோடு வாழப்போகிறேன்...!"

"இந்த உண்மையை வெண்ணிலாவிடம் யாராவது சொல்லி விட்டால்...?"

"இந்த உண்மை குறிப்பிட சில பேர்களைத் தவிர வெளியே யார்க்கும் தெரியாது. அந்தக் குறிப்பிட்ட சில பேர்களும் வெண்ணிலா உயிரோடு இருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள். எனவே எந்தக் காரணத்தை முன்னிட்டும் உண்மை வெளியே வராது!"

டி.வி.திரையில் மறுபடியும் வெளிச்சப் புள்ளிகள் தோன்றி உருவங்கள் காணாமல் போக, டாக்டர் மல்ஹோத்ரா டி.வி.டி.யை அணைத்துவிட்டு மேஜையின் ஓரத்தில் ஒரு பாலிதீன் பைக்குள் போட்டு வைத்திருந்த அந்த புத்தகத்தை எடுத்தார். நிறம் மங்கி தாள்கள் மக்கிப் போன ஒரு பழைய புத்தகம் அது.

"இதைப் பாருங்க இன்ஸ்பெக்டர்."

அவர் பார்த்தார்.

புத்தகத்தின் தலைப்பு. சிவகிரி சித்தரின் மகாத்மியம் (அல்லது) கூடுவிட்டு கூடு பாய்ந்த படலம்.

"இன்ஸ்பெக்டர்! இந்த புத்தகம் திருமூர்த்தியின் அறையில் இருந்தது. இது தவிர ஏராளமான பிளாஸ்டிக் சர்ஜரி சம்பந்தப்பட்ட வெளிநாட்டுப் புத்தகங்கள். திரு

மூர்த்தி கதிரைக் கொலை செய்து விட்டு தான் கதிராக மாற வேண்டும் என்பதற்கு மூலகாரணமே இந்தப் பழைய சரித்திர கால புத்தகம்தான்..."

இன்ஸ்பெக்டர் ஸ்ரீமன் பாலாஜி அந்தப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து விட்டுக் கேட்டார்.

"டாக்டர்! நீங்கள் கொடுத்த தகவல்களுக்கு நன்றி. இப்போ அந்த திருமூர்த்தி எங்கே...?"

"அவன் ஒரு கொலையாளின்னு தெரிஞ்சதுமே அவன் தப்பித்து போகாதபடி ஒரு மயக்க ஊசியைப் போட்டு ஒரு தனியறையில் படுக்க வைத்து இருக்கிறேன். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் கைது செய்து உங்களுடைய கஸ்டடிக்கு கொண்டு போய் விடலாம்."

இன்ஸ்பெக்டர் ஒரு புன்னகையோடு தன் யூனிஃபார்மின் சட்டைப் பையில் இருந்த செல்போனை எடுத்து சில எண்களைத் தட்டிவிட்டு காதுக்கு ஏற்றினார். பேசினார்.

"கதிர்! இப்ப என்ன பண்ணிட்டிருக்கீங்க...?"

மறுமுனையில் கதிரின் குரல் கேட்டது.

"டி.வி.யில் கிரிக்கெட் மேட்ச் பார்த்துகிட்டு இருக்கேன் ஸார். ஏன் என்ன விஷயம்...?"

"திருமூர்த்தியை நாம மடக்கறதுக்கு முந்தி டாக்டர் மல்ஹோத்ரா மடக்கிட்டார். நீங்க உடனே புறப்பட்டு அவரோட நர்ஸிங்ஹோமுக்கு வாங்க..."

"எப்படி ஸார்...?"

"நேர்ல வாங்க... தெரியும்...!" இன்ஸ்பெக்டர் ஸ்ரீமன் பாலாஜி செல்போனை அணைத்து மறுபடியும் யூனிஃபார்மின் சட்டைப் பைக்குள் போட்டுக் கொள்ள - டாக்டர்



மல்ஹோத்ரா அதிர்ந்து போய் இன்ஸ்பெக்டரையே பார்த்துக் கொண்டிருந்தார். இன்ஸ்பெக்டர் சிரித்தார்.

"என்ன டாக்டர்...! அப்படி பார்த்துக் கொண்டு இருக்கிறீர்கள்...?"

"இ... இ.. இப்போது... நீங்கள் யாரிடம் பேசினீர்கள்?"

"கதிரிடம்...!"

"எந்த கதிரிடம்...?"

"வெண்ணிலாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிற கதிரிடம்.."

"அந்த கதிரைத்தான் திருமூர்த்தி கூலிப்படை ஆட்களை வைத்துக் கொலை செய்து விட்டானே...?"

"டாக்டர்! திருமூர்த்தி கூலிப்படை ஆட்களை வைத்து கதிரைக் கொலை செய்ய ஏற்பாடு செய்தது உண்மை. ஆனால் கதிர் கொலை செய்யப்படவில்லை..."

"எப்படி...?"

"சமீபகாலமாய் மும்பை போலீஸ் எடுத்த சில அதிரடி நடவடிக்கைகள் காரணமாக நகரில் உள்ள ரெளடிகளும், தாதாக்களும் திருந்தி வருகிறார்கள். அந்த பட்டியலில் இருந்த கூலிப்படை ஆட்களைத்தான் திருமூர்த்தி, கதிரைக் கொலை செய்ய ஏற்பாடு செய்து இருந்தான். திருமூர்த்தியிடம் அட்வான்ஸ் பணத்தை வாங்கிக் கொண்ட கூலிப்படையின் ஆட்கள் என்னை தனிமையில் சந்தித்து விஷயத்தை சொன்னார்கள். நான் உடனே கதிரை தொடர்பு கொண்டு விபரம் சொன்னதும் அவர் அதிர்ந்து போனார். நானும் அவரும் ரகசியமாய் ஒரு இடத்தில் சந்தித்து மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று யோசித்தோம். திருமூர்த்தியை கையும் களவுமாய்

பிடிப்பதற்கும் அவன் எவ்வளவு தூரம் போகிறான் என்று பார்ப்பதற்கும் கதிர் கூலிப்படை ஆட்களால் கொலை செய்யப்படுவது போல் நடிக்க வைத்தேன். மும்பை ஜி.ஹெச். மார்ச்சுவரிக்கு கூட்டிப் போய் டெட்பாடி போல் ஒப்பனை செய்யப்பட்ட கதிரின் உடம்பையும் திருமூர்த்திக்கு காட்டினேன். அது கதிரின் உடல்தான் என்று திருமூர்த்திக்கு தெரிந்து இருந்தும் அது கதிரின் உடல் இல்லை என்று சொன்னான். நானும் அதை ஏற்றுக் கொள்வது போல் நடித்தேன். மேற்கொண்டு அவனுடைய நடவடிக்கைகள் எந்த அளவுக்குப் போகிறது என்று பார்ப்பதற்காகத்தான் கதிரை ஒரு ஹோட்டல் அறையில் தங்க வைத்து விட்டு நான் திருமூர்த்தியைக் கண்காணித்துக் கொண்டு இருந்தேன். அதற்குள் நீங்கள் அவனை சப் – கான்ஷியஸ்மைண்டுக்கு கொண்டு போய் உண்மைகளைக் கறந்து விட்டீர்கள்.''

டாக்டர் புன்னகைத்தார். ''அதாவது... நீங்கள் பார்க்க வேண்டிய வேலையை நான் பார்த்து விட்டேன்.''

''அதே...!''

''வெண்ணிலாவை டெலிபோனில் மிரட்டிக் கொண்டு இருந்ததும் திருமூர்த்தியின் வேலை தானா...?''

''ஆமாம்...! கதிருடன் இருந்து கொண்டே கதிர்க்கும் வெண்ணிலாவுக்கும் நடக்க இருந்த கல்யாணத்தைத் தடுக்க என்னென்ன வேலைகளைச் செய்ய முடியுமோ அத்தனை வேலைகளையும் திரை மறைவில் இருந்தபடி செய்து கொண்டு இருந்தான் திருமூர்த்தி.''

இன்ஸ்பெக்டர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அறையின் ஜன்னல் வழியே போர்டிகோவும், போர்டிகோவில் வந்து நிற்கிற போலீஸ் ஜீப்பும், அந்த ஜீப்பி



லிருந்து கான்ஸ்டபிள்களோடு கலந்து இறங்குகிற கதிரும் டாக்டர் மல்ஹோத்ராவின் பார்வைக்குக் கிடைத்தார்கள்.

அவருடைய மனசுக்குள் சந்தோஷம் ஒரு பட்டாம் பூச்சியாய் பறந்தது.



## 20


''சித்தர் பெருமானே! மன்னன் சுந்தரசேனனின் உடலில் பல்லாண்டு காலம் தங்கியிருக்கப் போவதாக சொல்லிவிட்டு போனீர்கள். ஆனால் சொற்ப காலத்திலேயே திரும்பி வந்து விட்டீர்களே ஏன்?'' என்று சீடன் குருராஜன் கேட்டான்.

சித்தர் புன்னகைத்தார். ''மரம், செடி, கொடிகளுக்கும் பறவைகளுக்கும் கூட உதவலாம். ஆனால் மனிதர்களுக்கு மட்டும் உதவி செய்யவே கூடாது.''

''ஏன்...?''

''ஏனென்றால் அவனிடம்தான் மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை இந்த மூன்றும் இருக்கிறது. அந்த மூன்றும் இருக்கிறவரை அவன் பாவங்களைச் செய்து கொண்டேதான் இருப்பான். பாவிகளுக்கு உதவி செய்வது மிகப் பெரிய பாவம் என்று சாஸ்திரங்களில் சொல்லப் பட்டு இருக்கிறது.''

# சிவப்பாய் சில கனவுகள்



1

ஷோபனா பொழுது போகாமல் ஒரு கவிதையை எழுதிக் கொண்டிருந்தாள்.

**உன்னுடன் நான் பேசிய**

**நாட்கள் போதும்,**

**நாம் இருவரும் இனி**

**பார்க்கவே வேண்டாம்**

**நீ யாரோ; நான் யாரோ**



**இன்று முதல் பிரிந்துவிடுவோம்.**

**உனக்கும் எனக்கும் இனி**

**எந்த உறவும் இல்லை.**

**நான் உன்னுடன் இருந்த நாட்களை**

**நீ மறந்துவிடு. பை...!**

**இப்படிக்கு**

**உன் கவலைகளும்**

**துன்பங்களும்.**

ஷோபனா கவிதையை எழுதி முடித்துவிட்டு அதை ஒரு முறை படித்துப் பார்க்க முயன்றபோது, அவளுக்கு முன்பாய் இருந்த இளம் பச்சை நிற டெலிபோன் தன் எலக்ட்ரானிக் தொண்டையைத் திறந்தது.

ஷோபனா ரிஸீவரை எடுத்து பொன் வளையம் அசையும் தன் வலது காதில் வைத்தாள். "எஸ்...."

"'ஸ்கை வ்யூ' டிடெக்டிவ் ஏஜென்ஸி?" ஒரு பெண்ணின் குரல் பதட்டமாய்க் கேட்டது.

"ஆமா..."

"எனக்கு உடனடியாய் உங்க உதவி வேணும்."

"நீங்க யார்ன்னு மொதல்ல சொல்லுங்க..."

"என்னோட பேர் ஸ்வரூபா. நான் ஒரு டி.வி. சீரியல் ஆர்ட்டிஸ்ட்... ராயபுரம் க்ரீன் ஃபோர்ட் அவென்யூவில் குடியிருக்கேன். எனக்கு ஒரு பிரச்னை..."

"ஒரு நிமிஷம் லைன்ல இருங்க..." சொன்ன ஷோபனா இன்டர்காமின் பட்டனைத் தட்டிவிட்டு உள்ளேயிருந்த தன்னுடைய பாஸ் மதுவிடம் பேசினாள்.

''பாஸ்... ரிஸீவரை எடுங்க... ஒரு பார்ட்டி லைன்ல வெயிட் பண்ணுது.''

''யாரு...?''

''பேரு ஸ்வரூபா. டி.வி.சீரியல் ஆர்ட்டிஸ்ட். ஏதோ பிரச்னைன்னு சொல்லி நீங்க உதவ முடியுமான்னு கேட்டா...! லைன்ல இருக்கா. பேசுங்க...''

ஷோபனா மதுவுக்கு லைனைக் கொடுத்துவிட்டு பேரலல் லைன் ரிஸீவரை எடுத்து காதில் பொருத்திக் கொண்டாள். மது அந்த ஸ்வரூபாவிடம் பேச ஆரம்பித்தான்.

''சொல்லுங்க ஸ்வரூபா...! நான் மது என்கிற மதுசூதனன். 'ஸ்கை வ்யூ' டிடெக்டிவ் ஏஜென்ஸியின் சீஃப் எக்ஸிக்யூடிவ். உங்களுக்கு என்ன பிரச்னை?''

''ஸார்...! நீங்க என்னோட வீட்டுக்கு இப்ப வரமுடியுமா...?''

''பிரச்னை என்னான்னு சொல்லுங்க...''

''நேர்ல வாங்க ஸார் ப்ளீஸ்... உங்க ஃபீஸ் எதுவாயிருந்தாலும் குடுத்துடறேன்.''

''இதோ பாருங்க ஸ்வரூபா...! எனக்கு ஃபீஸ் முக்கியம் இல்லை. உங்க பிரச்னை என்ன என்பதுதான் முக்கியம். உங்க வீட்டு அட்ரஸைச் சொல்லுங்க...''

''நம்பர் தர்ட்டி சிக்ஸ், ஃபோர்த் க்ராஸ் ரோடு, க்ரீன் ஃபோர்ட் அவென்யூ, ராயபுரம்...''

''லேண்ட்மார்க் ஏதாவது சொல்லுங்க...!''

''ஹட்ச் டவர்க்குப் பின்புறம்...''



''ஓ.கே... இப்ப வந்துடறேன்...! பை த பை உங்க வீட்ல இப்ப யார் எல்லாம் இருக்காங்க...?''

''யாரும் இல்லை... நான் மட்டும்தான்...!''

''வேலைக்காரங்க...?''

''இல்லை...'' என்ற ஸ்வரூபா லேசான எரிச்சலோடு சொன்னாள். ''ஸார்...! போன்ல இப்படி பேசிட்டிருக்கிற நேரம் நீங்க புறப்பட்டு வந்திருக்கலாம்...''

''ஓ... ஸாரி...! இதோ கிளம்பிட்டேன்'' என்று சொல்லி ரிஸீவரை வைத்த மது ஷோபனாவைப் பார்த்து கண் சிமிட்டினான்.

''ரொம்ப நாளைக்கப்புறம் ஒரு கேஸ்...''

''தப்பு'' என்றாள் ஷோபனா.

''என்ன தப்பு...?''

''ரொம்ப நாளைக்கப்புறம்ன்னு நீங்க சொன்னது தப்பு. முன்னொரு காலத்திலேன்னு சொல்லியிருக்கணும்...''

மது முறைக்க அந்த முறைப்பைப் பொருட்படுத்தாமல் ஷோபனா பெருமூச்சுவிட்டாள். ''கவிதை எழுதப் பழகிக்கிட்டு சினிமாவுக்கு பாட்டு எழுதப் போலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே கேஸ் வந்துடுச்சு...''

''ம்... கிளம்பு...! அந்த ஸ்வரூபா எனக்காக வெயிட் பண்ணிட்டிருப்பா...''

''அவளுக்கு... என்ன பிரச்னை பாஸ்?''

''நேர்லதான் சொல்லுவாளாம்.''

ஆபீஸைப் பூட்டிக் கொண்டு இருவரும் வெளியே வந்து காத்திருந்த ஸ்ப்ளண்டரில் தொற்றிக் கொண்

டார்கள். சாயந்தர வேளையின் இருட்டு கூடிக் கொண் டிருக்க, மது தன் மணிக்கட்டில் நேரம் பார்த்தான். சரியாய் ஏழு மணி.

பைக் கிளம்பி போக்குவரத்தில் கலந்து கொண்டது. பில்லியனில் உட்கார்ந்திருந்த ஷோபனா 'பாஸ்' என்றாள்.

"என்ன?"

"ஸ்வரூபாவோட பிரச்னை என்னவாய் இருக்கும்ன்னு நினைக்கறீங்க?"

"போனாத்தானே தெரியும்?"

"எனக்கு இப்பவே தெரியும்..."

"என்ன சொல்லு..."

"பாஸ்...! ஸ்வரூபா ஒரு டி.வி. நடிகை. போன மாசத்துல மட்டும் ரெண்டு டி.வி. நடிகைகள் திடீர்ன்னு தற்கொலை பண்ணிக்கிட்டு செத்துப் போயிருக்காங்க. பொதுவா எல்லா டி.வி. நடிகைகளுக்கும் செக்ஸ் டார்ச்சர் அதிகம்... அதை எதிர்கொள்ள முடியாமல்தான் நடிகைகள் தற் கொலை பண்ணிக்கறாங்க. ஸ்வரூபாவுக்கும் அப்படிப் பட்ட பிரச்னை இருக்கலாம்னு நினைக்கிறேன்..."

"ஸ்வரூபாவுக்கு செக்ஸ் டார்ச்சர் பிரச்னை இருந்தால் அவ போலீஸுக்குத்தான் போவாளே தவிர நம்மை மாதிரி பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்ஸிக்கு போன் பண்ணி யிருக்கமாட்டா..."

"போலீஸுக்குப் போனா பப்ளிசிட்டி ஆயிடுமேன்னு பயப்பட்டு இருக்கலாம் இல்லையா?"

"இல்ல ஷோபனா...! இது வேற ஏதோ பிரச்னை. அதாவது போலீஸுக்கு போக முடியாத அளவுக்குப் பிரச்னை."



"இன்னும் பத்து நிமிஷத்துல பிரச்னை என்னான்னு தெரிஞ்சுடும்..."

பைக் ராயபுரம் ஹைவேஸ் ரோட்டில் திரும்பியது. டிஜிட்டல் விளம்பர பேனர்களில் முன்னணி நடிகர்கள் சிரித்து லட்சக்கணக்கில் பணம் சம்பாதித்துக் கொண் டிருந்தார்கள். பிளாட்பாரக் கடைகளில் மனிதர்கள் எதை எதையோ வாங்கிக் கொண்டிருந்தார்கள்.

மது ராயபுரம் ஹைவேஸ் ரோட்டை முடித்துக் கொண்டு ராயபுரத்தின் எல்லைக்குள் நுழைந்தான். தொலைவில் ஹட்ச் டவர் தெரிந்தது. குறி வைத்து பைக்கை விரட்டி னான்.

இரண்டே நிமிஷம்.

க்ரீன் ஃபோர்ட் அவென்யூ வந்தது.

"நம்பர் என்ன ஷோபனா?"

"தர்ட்டிசிக்ஸ், ஃபோர்த் க்ராஸ் ரோடு..."

"இது செக்கண்ட் க்ராஸ்... அடுத்ததுக்கு அடுத்தது ஃபோர்த்."

பைக் வேகம் பிடித்துப்போக, ஃபோர்த் க்ராஸ் வந்தது. ஒரே சீராய் வீடுகள். மே ஃப்ளவர் மரங்களும், சரக் கொன்றை மரங்களும் போட்டி போட்டுக் கொண்டு பூத்து இருந்தன.

"லொக்கேஷன் சூப்பராய் இருக்கு பாஸ்."

"மொதல்ல வீட்டு நம்பர் முப்பத்தியாறு எந்த சைடில் வருதுன்னு பாரு ஷோபனா..."

ஷோபனா பார்வையை உன்னிப்பாக்கி இரண்டு பக்கமும் பார்த்துவிட்டு "பாஸ்... பாஸ்...! இந்த வீடுதான்...

ரைட்ல பாருங்க..." என்று அவனுடைய முதுகைச் சுரண்டினாள். மது பார்த்தான்.

அந்தச் சிறிய பங்களா பார்வைக்குக் கிடைத்தது. காம்பௌண்ட் கேட்டின் இடது பக்க சுவரில் '36' என்ற எண் எழுதப்பட்டு இருந்தது. மது கேட்டுக்கு முன்பாய் பைக்கை நிறுத்தினான்.

"பாஸ்..."

"என்ன?"

'நாய் ஜாக்கிரதை'ன்னு போர்டு மாட்டியிருக்கு. கேட்டைத் திறந்துகிட்டு உள்ளே போயிடாதீங்க... தொடையில் இருக்கிற சதையில் கால் கிலோ போயிடும்..."

"போர்டு இருக்கு! ஆனா நாய் இல்லைன்னு நினைக்கிறேன். இருந்திருந்தா இந்நேரம் குரைச்சிருக்குமே...! கேட்டுக்குப் பக்கத்துல காலிங்பெல் இருக்கான்னு பாரு..."

"இருக்கு பாஸ்..."

"அழுத்து."

ஷோபனா காலிங்பெல் பட்டனை அழுத்தினாள். அது வீட்டுக்கு உள்ளே பியானோ வாசித்தது. காத்திருந்தார்கள்.

முழுதாய் ஒரு நிமிஷ நேரம் கழித்து பிரதான தேக்கு மரக் கதவைத் திறந்து கொண்டு அந்த இளம்பெண் வெளிப்பட்டாள். அழகாக இருந்தாள். ஒரு நடிகைக்கு உரித்தான அம்சங்கள் ஆங்காங்கே தெரிந்தன. அங்கிருந்தபடியே கேட்டாள்.

"யார் வேணும்?"



"இங்கே ஸ்வரூபா...?"

"நான்தான்!"

"நாங்க 'ஸ்கை வ்யூ' டிடெக்டிவ் ஏஜென்ஸியிலிருந்து வர்றோம்."

"சரி..."

மது ஷோபனாவை குழப்பமாய்ப் பார்த்து மெல்ல முனகினாள். "என்ன ஷோபனா... 'சரி'ன்னு சொல்லிட்டு நம்ம மூஞ்சிகளையே பார்த்துட்டிருக்கா?"

"அதானே...!"

மது மறுபடியும் ஸ்வரூபாவிடம் திரும்பினான்.

"நீங்க எங்களுக்கு போன் பண்ணி வரச்சொல்லியிருந்தீங்களே...?"

இப்போது ஸ்வரூபா திகைத்தாள்.


"என்னது! நான் போன் பண்ணி உங்களை வரச் சொன்னேனா...? என்ன உளர்றீங்க...! அட்ரஸ் மாறி வந்துட்டீங்கன்னு நினைக்கிறேன்..."

"நோ... நோ... இதே அட்ரஸ்தான்... நம்பர் 36, ஃபோர்த் க்ராஸ் ரோடு, க்ரீன் ஃபோர்ட் அவென்யூ, ராயபுரம்."

"அட்ரஸ் சரிதான்...! பட் நான் உங்களுக்கு போன் பண்ணலையே...?"

"உங்களுக்கு ஏதோ பிரச்னைன்னு..."

"எனக்கு பிரச்னையா...? வாட் நான்சென்ஸ் யூ ஆர் டாக்கிங்..." ஸ்வரூபா கோபத்தில் குரலை உயர்த்திக் கத்திக் கொண்டிருக்கும் போதே ஒரு மாருதி ஆல்டோ கார் சத்தமில்லாமல் வாசலில் வந்து நின்றது.



## 2

போலீஸ் கமிஷனர் சுந்தரவேல் பத்திரிகை - தொலைக்காட்சி நிருபர்களுக்கு மத்தியில் பேசிக் கொண்டிருந்தார்.

''இப்போது நான் சொல்லப் போகும் செய்தியை உங்கள் பத்திரிகைகளிலும் தொலைக்காட்சி மீடியாக்களிலும் சிறப்பாக வெளிப்படுத்தி அது எல்லா மக்களையும் சென்றடையும்படியாக செய்ய வேண்டும். செய்தி இதுதான்! கற்பழிப்பு குற்றத்தில் ஈடுபட்டு குற்றம் சாட்டப்பட்டவர்கள் இப்போதெல்லாம் சட்டத்தின் ஓட்டைகளை பயன்படுத்தி அந்தக் குற்றத்திலிருந்து எளிதாக தப்பி விடுகிறார்கள். அப்படி அவர்கள் தப்பி விடாத படிக்கு கற்பழிப்புக்கான குற்றப்பிரிவு சட்டத்தில் திருத்தம் வரப்போகிறது. கற்பழிப்பு குற்றத்தை வரையறுக்கும் இ.பி.கோ.375; தண்டனையை வரையறுக்கும் இ.பி.கோ.376 ஆகிய பிரிவுகளில் திருத்தம் செய்யப்பட உள்ளது. தற்போது கற்பழிப்பு குற்றத்துக்கான தண்டனை ஏழு ஆண்டில் இருந்து ஆயுள் தண்டனை வரை வெவ்வேறு அளவில் உள்ளது. அதில் எந்த மாற்றமும் இல்லை. பெண்களுக்கு எதிரான கற்பழிப்புக் குற்றங்களைத் தடுக்க தேசிய மகளிர் ஆணையமும், சட்ட கமிஷனும் ஏராளமான யோசனைகளைத் தெரிவித்



துள்ளன. அவற்றில் பெரும்பாலானவை இந்த சட்ட திருத்தத்தில் சேர்க்கப்படும். அது தவிர கற்பழிப்புக் குற்றத்துக்கான மருத்துவப் பரிசோதனையில் மரபணு பரிசோதனை நடத்தவும் இந்த சட்டத்திருத்தம் வழி செய்கிறது. மேலும் சில தவிர்க்க இயலாத சூழ்நிலைகளைத் தவிர பெரும்பாலும் சூரிய அஸ்தமனத்துக்கு பிறகோ சூரிய உதயத்துக்கு முன்போ பெண்களைக் கைது செய்யக் கூடாது என்றும் இந்த திருத்தம் கூறுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக கோர்ட்டில் வக்கீல்கள் கற்பழிக்கப்பட்ட ஒரு பெண்ணை விசாரிக்கும்போது கண்ணியமான முறையில் அந்தப் பெண்ணின் மனம் புண்படாத வகையில் கேள்விகளைக் கேட்க வேண்டும்.''

கமிஷனர் சுந்தரவேல் பேசி முடித்ததும் பத்திரிகை நிருபர் ஒருவர் மெல்ல எழுந்து நின்றார்.

''ஸார்... ஒரு கேள்வி...''

''என்ன... கேளுங்க....''

''சமுதாயத்தின் மேல் மட்டத்தில்தான் பாலியல் பலாத்காரங்கள் அதிகம் நடைபெறுவதாகவும் அதை போலீஸ் கண்டு கொள்வது இல்லையென்றும் பரவலாக குற்றச்சாட்டு உள்ளது. இதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள் ஸார்?''

''இது ஒரு அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டு! பாலியல் பலாத்காரம் ஒரு குடிசைக்குள் நடந்தாலும் சரி; ஒரு மாளிகையில் நடந்தாலும் சரி; சட்டம் அங்கே பாயும். சம்பந்தப்பட்டவர்களைக் கைது செய்யும். அவர்கள் எவ்வளவு பெரிய மனிதர்களாக இருந்தாலும் சரி.... கோர்ட்டின் கூண்டில் ஏற்றப்படுவார்கள்.''

"நீங்கள் கமிஷனராக பொறுப்பேற்ற பிறகு சென்னையில் விபச்சாரமும் ரௌடிஸமும் வெகுவாகக் குறைந்துவிட்டது. இதற்கு நீங்கள் எடுத்த நடவடிக்கைகள் என்னென்ன?"

சுந்தரவேல் சிரித்தார். "நான் ஒரு கமிஷனர் என்பதை மறந்துவிட்டு ஒரு கான்ஸ்டபிள் மாதிரி செயல்பட்டேன். எந்த ஒரு அதிகாரியும் சரி, தன்னுடைய கடமைகளைச் செய்தாலே போதும்... ஒழுங்கீனங்கள் எல்லாம் காணாமல் போகும். நான் எதையும் பெரிசா பண்ணிடலை... ஐ டிட் மை ஜாப்..." சொல்லி முடித்த கமிஷனர் தன்னுடைய இருக்கையினின்றும் எழுந்து கொண்டார். பத்திரிகையாளர்களை ஏறிட்டார்.

"ஓ.கே... டியர் ரிப்போர்ட்டர்ஸ்...! பேட்டியை இத்தோடு முடிச்சுக்குவோம். உங்களுக்காக அந்த ஹாலில் ஸ்வீட், காரம், காபி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கு... எல்லாரும் அங்கே போய் சாப்பிட்டா எனக்கு சந்தோஷம்..."

ரிப்போர்ட்டர்கள் எல்லோரும் கிளம்பி கம்யூனிடி ஹாலை நோக்கிப் போக, கமிஷனர் தன்னுடைய அறையை நோக்கி நடந்தார்.

இருபதடி நடந்து இருப்பார்.

அவர்க்கு பின்பக்கம் "ஸார்" என்ற குரல் கேட்டது.

திரும்பினார்.

பத்திரிகை போட்டோகிராஃபர் கிரி நின்றிருந்தான். கமிஷனர் புருவங்களை உயர்த்தினார். "என்ன கிரி...! உனக்குத் தனியா 'சாப்பிடப்போ'ன்னு சொல்லணுமா...?"

"ஸார்...! உங்ககிட்ட தனியா ஒரு அஞ்சு நிமிஷம் பேசணும். டயம் ஒதுக்கித் தர்றீங்களா?"



கமிஷனர் புன்னகைத்தார். "உன்கிட்டே ஒரு விஷயம் இருக்குன்னா அது விவகாரமான விஷயமாய்த்தான் இருக்கும்... இப்பவே பேசணுமா?"

"ஆமா ஸார்..."

"சரி வா..." சொல்லிவிட்டு அவர் நடக்க, கிரி பின் தொடர்ந்தான். நீளமான வராந்தாவில் இரண்டு நிமிஷ நடை.

கமிஷனர் தன்னுடைய அறைக்குள் நுழைந்து நாற்காலிக்கு சாய்ந்து கொண்டு கிரிக்கு தனக்கு முன்னால் இருந்த நாற்காலியொன்றைக் காட்டினார்.

"உட்கார்...கிரி."

உட்கார்ந்தான்.

"சொல்லு... என்ன விஷயம்...! ஏதாவது அரசியல் விவகாரமா... இல்லை எந்த மந்திரியாவது 'பலான' விஷயத்துல மாட்டிக்கிட்டாரா?"

"ரெண்டுமே இல்லை ஸார்... இது வேற விவகாரம்."

"சொல்லு..."

கிரி தன் கையோடு கொண்டு போயிருந்த அந்த ப்ரீப்கேஸைத் திறந்து உள்ளே மடித்து வைத்து இருந்த அந்தப் பழைய நியூஸ் பேப்பர்களை எடுத்தான். அதிலிருந்து ஒரு பேப்பரை எடுத்து பிரித்து மேஜையின் மீது பரப்பினான்.

"ஸார்...! இந்த பேப்பரெல்லாம் ரெண்டு மாசத்துக்கு முந்தின தமிழ் பேப்பர்ஸ். இப்ப நான் மேஜை மேல் பரப்பி வெச்சிருக்கிற இந்தத் தமிழ் பேப்பர் 'தின ரோஜா'வைப் பாருங்க... இந்தப் பேப்பரைப் பார்த்ததும் உங்களுக்கு என்ன தோணுது?"

கமிஷனர் அந்தப் பேப்பரைப் பார்த்தார். பக்கங்களைப் புரட்டிவிட்டு சொன்னார். "இந்த பேப்பரில் வெளியாகியிருந்த மூணு செய்திகளை கட் பண்ணி எடுத்து இருக்காங்க!"

"யூ ஆர்... கரெக்ட் ஸார்...! இந்த 'தின ஓசை' பத்திரிகையைப் பாருங்க" என்று சொன்ன கிரி இன்னொரு பேப்பரை எடுத்து பிரித்து பரப்பினான். கமிஷனர் பார்த்துவிட்டு தன் பெரிய நெற்றியைப் பரப்பைச் சுருக்கினார்.

"இந்த பேப்பரிலேயும் சில செய்திகளை வெட்டி எடுத்து இருக்காங்க...."

கிரி புன்னகைத்தான்."ஸார்! இந்த ரெண்டு பேப்பரில் மட்டும் இல்லை. நான் இந்த ப்ரீப்கேஸில் கொண்டு வந்து இருக்கிற இருபதுக்கும் மேற்பட்ட பத்திரிகைகளிலும் செய்திகள் வெட்டப்பட்டிருக்கு."

"ஓ.கே... கிரி...! இந்த மேட்டரில் என்ன விவகாரம்...?"

"பெரிய விவகாரம் இருக்கப் போய்த்தானே ஸார்... இதை உங்ககிட்டே கொண்டு வந்து இருக்கேன்..."

"சரி சொல்லு..."

"ஸார்... என் மாமனாரோட வீடு வளசரவாக்கத்தின் எக்ஸ்டென்ஷன் ஏரியாவில் இருக்கு. அவரோட வீட்டு மாடியில் ஒரு போர்ஷன் காலியாய் இருக்கவே, அதை ஸ்ரீராமுலு என்கிற ஒரு ஆந்திர இளைஞனுக்கு வாடகைக்கு விட்டிருந்தார். அந்த ஸ்ரீராமுலு தனக்கு கல்யாணமாகி ஒரு குழந்தை இருப்பதாகவும், தற்சமயம் மனைவியும் குழந்தையும் கடப்பாவில் உள்ள மாமனார் வீட்டில் இருப்பதாகவும், இரண்டு மாதம் கழித்து அவர்களை



அழைத்து வரப்போவதாகவும், தான் ஒரு கால்சென்டரில் வேலை பார்த்துக் கொண்டு இருப்பதாகவும் சொல்லியிருக்கிறான். அவனுடைய பேச்சையும் தோற்றத்தையும் பார்த்து நம்பிய என்னுடைய மாமனார் அவனுக்கு வீடு கொடுத்திருக்கார். வாடகை இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய். அட்வான்ஸ் இருபதாயிரம். இரண்டு மாதம் ஒழுங்காய் வாடகை கொடுத்த ஸ்ரீராமுலு மூன்றாவது மாதம் வாடகை கொடுக்காமல் அட்வான்ஸில் கழித்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டு ஊர்க்குக் கிளம்பி போயிருக்கிறான். போனவன் போனவன்தான். இதுவரைக்கும் வரலை. இரண்டு நாட்களுக்கு முன் நான் மாமனார் வீட்டுக்குப் போயிருந்தபோது அவர் இந்த விஷயத்தை என்னிடம் சொன்னார். அந்த ஸ்ரீராமுலு எந்த கால்சென்டரில் வேலை பார்ப்பதாக கேட்டேன். மாமனார்க்குத் தெரியவில்லை. நான் உடனே மாடி போர்ஷனின் பூட்டை உடைத்து வீட்டை சோதனை போட்டு அவன் வேலை செய்த கால்சென்டரின் அட்ரஸ் கிடைக்குமா என்று தேடிப் பார்த்தேன். கிடைக்கவில்லை. அதற்கு பதிலாக பரணில் தாறுமாறாய் போட்டு வைத்து இருந்த இந்த தமிழ்ப் பேப்பர்கள்தான் கிடைத்தது. ஒரு ஆந்திர இளைஞன் தமிழ்ப் பத்திரிகைகளை விரும்பிப் படிக்கிறான் என்கிற விஷயம் என் மனதுக்கு நெருடலாய்ப் பட்டது. பத்திரிகைகளைப் புரட்டிப் பார்த்தேன். நூற்றுக்கும் மேற்பட்ட பத்திரிகைகளைப் புரட்டிப்பார்த்தபோது இந்த இருபதுக்கும் மேற்பட்ட பத்திரிகைகளில் சில செய்திகளை அவன் வெட்டி எடுத்து இருப்பது தெரிஞ்சுது."

கமிஷனர் குறுக்கிட்டார்.

"உடனே உனக்கு அந்த ஸ்ரீராமுலு மேல ஒரு சந்தேகம் வந்தது."

"ஆமா ஸார்...! அவன் அந்த பத்திரிகைகளிலிருந்து வெட்டி எடுத்த செய்திகள் என்னவாயிருக்கும்ன்னு தெரிஞ்சுக்கறதுக்காக அந்தக் குறிப்பிட்ட தேதியிட்ட பத்திரிகைகளை பத்திரிகை அலுவலகங்களிலிருந்து வாங்கிப் பார்த்தேன். அப்படி வெட்டி எடுக்கப்பட்ட செய்திகள் எல்லாமே கோர்ட் தீர்ப்பு சம்பந்தப்பட்டதாய் இருந்தது ஸார்."

"கோர்ட் தீர்ப்பா?"

"ஆமா... ஸார்... பாருங்க..." சொன்ன கிரி ப்ரீப்கேஸை மறுபடியும் திறந்து உள்ளேயிருந்த ஒரு ஃபைலை எடுத்துக் கொடுத்தான். கமிஷனர் வாங்கிப் பிரித்து கோர்க்கப்பட்டிருந்த அந்த கட்டிங்குகளைப் பார்த்தார்.

கள்ள நோட்டு வழக்கில் கோவை கோர்ட் இன்று பரபரப்பான தீர்ப்பு.

தர்மபுரி கோர்ட்டில் குற்றம் சாட்டப்பட்டவர் வக்கீலைத் தாக்க முயற்சி.

மயிலாடுதுறை கோர்ட்டில் நீதிபதிக்கு முன்பாக கைதி வெட்டிக் கொலை. ஜாமீனில் வெளிவந்தவரின் படுபாதகச் செயல்.

செஷன்ஸ் கோர்ட் அளித்த தீர்ப்பு செல்லாது. உயர்நீதிமன்றம் உத்தரவு.

பொறுப்பற்ற செயல்; அமைச்சர்க்கு உச்சநீதிமன்றம் சுடும் கண்டனம்.

கமிஷனர் எல்லா பேப்பர் கட்டிங்குகளையும் படித்து விட்டு ஆச்சர்யம் பரவிக் கொண்ட முகத்தோடு கிரியை ஏறிட்டார்.



"நீ இதைப் பத்தி என்ன நினைக்கிறே கிரி...?"

"ஒண்ணும் புரியலை ஸார்... பட் ஒரு விஷயம் மட்டும் உறுதி. அந்த ஸ்ரீராமுலு கிட்டே ஏதோ தப்பு இருக்கு. அவன் நல்லவன் கிடையாது. அவன் நல்லவனாய் இருந்தா சொல்லிட்டு காலி பண்ணியிருப்பான். சென்னையில் இருக்கிற எல்லா கால்செண்டர்ஸ்லேயும் என்கொயர் பண்ணிப் பார்த்துட்டேன். அந்தப் பேர்ல யாரும் இல்லை... ஸார்."

"ரூமை சோதனை போட்டபோது அவன் போட்டோ ஏதாவது கிடைச்சுதா...?"

"இந்த பழைய பத்திரிகைகளைத் தவிர வேற எதுவுமே ரூம்ல இல்லை ஸார்."

"நீ அவனைப் பார்த்திருக்கியா கிரி?"

"இல்ல... ஸார்... நான் மாமனார் வீட்டுக்குப் போயிருந்த ரெண்டு மூணு தடவையும் அந்த ஸ்ரீராமுலு வெளியே போயிருந்தான்."

"சரி... ஆள் எப்படியிருப்பான்னு உங்க மாமனார் கிட்டே கேட்டியா?"

"கேட்டேன் ஸார்...! ஆள் நல்ல உயரம். வயது முப்பதிலிருந்து முப்பத்தஞ்சுக்குள்ளே இருக்கலாம்னு சொன்னார். வெளியே எப்போ கிளம்பிப் போனாலும் ஒயிட் அண்ட் ஒயிட் பேண்ட் சர்ட்லதான் போவானாம். ஆள் நல்ல சிவப்பு. முன் தலையில் லேசான வழுக்கை. தெலுங்கு கலந்த தமிழில் பேசியிருக்கான்."

"வேற ஏதாவது வித்தியாசமான அடையாளம்?"

"நான் மறுபடியும் மாமனார்கிட்டே கேட்டுப் பார்க்கிறேன் ஸார்."

"அவரோட வீடு வளசரவாக்கத்துல எங்கே?"

"எக்ஸ்டென்ஷன்ல ஸார்..."

கமிஷனர் சுந்தரவேல் சில விநாடிகள் யோசிப்பில் இருந்துவிட்டு ரிஸீவரை எடுத்தார். டயலில் சில எண்களை அழுத்திவிட்டு பேசினார்.

"வளசரவாக்கம் போலீஸ் ஸ்டேஷன்?"

மறுமுனை 'எஸ்' என்றது.

"இன்ஸ்பெக்டர் செந்தில்நாதன் இருக்காரா?"

"இருக்கார்! நீங்க...?"

"கமிஷனர்..."

"ஸ....ஸார்... குட்மார்னிங் ஸார்... நான் செந்தில்நாதன்தான் பேசறேன்..."

"ஒரு தகவல் வேணும்..."

"சொல்லுங்க ஸார்..."

"கடந்த ரெண்டு மாச காலத்துக்குள்ளே வளசரவாக்கம் ஏரியாவுக்குள்ளே பெரிய அளவில் ஏதாவது குற்றங்கள் நடந்து இருக்கா...?"

"பெரிய அளவில்ன்னு சொல்லப்போனா நாலைஞ்சு சம்பவங்கள் நடந்திருக்கு.... ஸார்."

"ஒவ்வொண்ணா சொல்லிட்டு வாங்க பார்ப்போம்."

"வளசரவாக்கம் பாரதி நகர்ல முகமூடி கொள்ளையர்கள் ஒரு வீட்டுக்குள்ளே புகுந்து இருநூறு பவுன் நகையைக் கொள்ளையடிச்சுப் போயிட்டாங்க ஸார். அடுத்ததா பிருந்தாவன் காலனியில் கள்ளக்காதல் விளைவாய் ஒரு மர்டர். மூணாவதாய் ஒரு கோஷ்டி தகராறு. ரெண்டு



பேர்க்கு அரிவாள் வெட்டு. ஒருத்தர் இன்னமும் சீரியஸான கண்டிஷனில் ஹாஸ்பிட்டலில் இருக்கார். நாலாவதாய் ஒரு லாயர் காணாமே போயிட்டார் ஸார்." செந்தில்நாதன் சொல்லச் சொல்ல கமிஷனர் அவசரமாய் இடைமறித்தார்.

"என்ன சொன்னீங்க... லாயர் காணாமே போயிட்டாரா?"

"ஆமா...ஸார்."

"யார் அந்த லாயர்...? பேர்... என்ன?"

"பேர் சிற்றரசு... ஸார். உதயாநகர் காலனியில் இருந்தவர் ஸார்."

"எப்படி காணாமே போனார்?"

"தெரியலை ஸார்... எப்பவும் போல காலையில் அஞ்சு மணிக்கு எழுந்து வாக்கிங் போயிருக்கார். போனவர் வரவேயில்லை."



## 3



மாருதி ஆல்டோ கார் வாசலில் வந்து நிற்பதைப் பார்த்ததும், மதுவும் ஷோபனாவும் கார்க்குள்ளே குனிந்து பார்த்தார்கள்.

ஒரு இளம்பெண் மிடியில் இறங்கினாள். அழகாய் இருந்தாள். தன் சுருண்ட கூந்தலை போனிடெய்ல்

ஆக்கியிருந்தாள். தோளில் வானிடி பேக் இடம் பிடித்து இருக்க, வாய் சுயிங்கம் மென்றது.

ஸ்வரூபா மதுவையும் ஷோபனாவையும் மறந்தவளாய் அவளை நோக்கிப் போனாள்.

''வா... வசந்தி...''

அந்த வசந்தி மதுவையும் ஷோபனாவையும் ஒரு அரைப்பார்வை பார்த்தபடி ஸ்வரூபாவிடம் கேட்டாள்.

''என்ன... ஏதாவது பிரச்னையா...?''

ஸ்வரூபா படபடத்தாள். ''பிரச்னைதான் வசந்தி! இவங்க ரெண்டு பேரும் ஏதோ ஒரு டிடெக்டிவ் ஏஜென் ஸியைச் சேர்ந்தவங்களாம். நான் இவங்களுக்கு போன் பண்ணி இவங்க உதவியைக் கேட்டேனாம். நேர்ல வரச் சொல்லி போன் பண்ணினேனாம். எங்கேயோ போக வேண்டியவங்க இங்கே வந்து தகராறு பண்ணிகிட்டு இருக்காங்க...''

வசந்தி புன்னகைத்தாள். ''அவங்க எங்கேயோ போக வேண்டியவங்க இல்லை ஸ்வரூபா. சரியான இடத்துக் குத்தான் வந்திருக்காங்க.''

''வசந்தி! நீ என்ன சொல்றே?''

''உன்னை மாதிரியே அவங்களுக்கு போன் பண்ணி பேசினது நான்தான்.''

''என்னது... நீயா...?''

''ம்...''

''நீ எதுக்காக அப்படி போன் பண்ணினே?''

''உன்னோட பிரச்னையை அவங்ககிட்ட சொல்லத் தான்.''



''எனக்கு என்ன பிரச்னை...?''

''உனக்கு என்ன பிரச்னைன்னு தெரியாதா...? வா உள்ளே போய் பேசுவோம்...''

''வசந்தி...!''

''ப்ளீஸ்... ஆர்க்யூ பண்ணாதே...''

''சரி... உள்ளேவா...''

வசந்தி மதுவிடம் திரும்பினாள். ''ஸாரி மிஸ்டர் மது...! உங்களுக்கு போன் பண்ணிட்டு உடனே நான் கிளம்பி வந்து இருக்கணும். கொஞ்சம் லேட் பண்ணிட்டேன். என்னோட ஃப்ரண்ட் ஸ்வரூபா கொஞ்சம் ஷார்ட் டெம்பர். படபடன்னு பேசிடுவா... அவ பேசினதை ஒண்ணும் மனசுல வெச்சுக்க வேண்டாம்...''

''நோ... நோ...! இட்ஸ் ஆல் ரைட்...''

''வாங்க உள்ளே போலாம்.''

வாசற்படியேறி மூன்று பேரும் உள்ளே போனார்கள். ஸ்வரூபாவின் முகத்தில் இன்னமும் கோபம் மையம் இட்டிருந்தது. சோபாவில் உட்கார்ந்தார்கள்.

வசந்தி சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு பேச்சை ஆரம்பித்தாள். ''மிஸ்டர் மது...! நானும் ஸ்வரூ பாவும் சின்னத்திரை சீரியல்களில் நடிச்சிட்டிருக்கோம். பெஸ்ட் ஃப்ரண்ட்ஸ். ஒரே தாய் வயிற்றில் பிறந்த சகோதரிகளைப் போல பழகிகிட்டு வர்றோம். எங்களுக் குள்ளே எந்த ஒளிவு மறைவும் கிடையாது. எல்லா விஷயங்களைப் பற்றியும் பேசிக்குவோம்.''

பேச்சை சில விநாடிகளுக்கு நிறுத்திய வசந்தி பின், தொடர்ந்தாள். ''ரெண்டு நாளைக்கு முந்தி சாதாரண

தபாலில் ஸ்வரூபாவுக்கு ஒரு கடிதமும் அதோடு ஒரு புத்தகமும் வந்தது. அந்த லெட்டரைப் படிச்சுட்டு அந்தப் புத்தகத்தைப் பார்த்த எனக்கு ஒரே டென்ஷன். ஆனா ஸ்வரூபா அதை ஒரு பெரிய விஷயமா எடுத்துக்கலை... போலீஸுக்குப் போலாம்ன்னு சொன்னேன். வேண் டான்னு சொல்லிட்டா. பட் எனக்கு மனசு கேட்கலை. ரெண்டு நாளா யோசனை பண்ணிட்டு கொஞ்ச நேரத் துக்கு முன்னாடி உங்களுக்கு போன் பண்ணினேன்."

ஷோபனா ஆவல் பொறுக்க முடியாமல் கேட்டாள். "அது என்ன லெட்டர்...? என்ன புத்தகம்...?"

வசந்தி தன்னுடைய வானிடி பேக்கின் ஜிப்பைப் பிரித்து உள்ளே வைத்து இருந்த பழுப்பேறிய ஒரு பழைய புத்தகத்தையும் நான்காய் மடிக்கப்பட்டு இருந்த அந்தக் கடிதத்தையும் வெளியே எடுத்தாள்.

"இந்தாங்க... மது... மொதல்ல இந்த லெட்டரைப் படிங்க."

மது அந்தக் கடிதத்தை வாங்கினான். கம்ப்யூட்டரில் பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்ட அந்தக் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

**அன்புள்ள ஸ்வரூபா!**

**நேற்றைக்கு முந்தியநாள் இரவு நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவில் நீயும் நானும் காட்டு வழியே நடந்து ஒரு கோயிலுக்கு போய்க் கொண்டு இருக் கிறோம். நீ சிவப்புப் பட்டுப் புடவையில் ரொம்பவும் அழகாய் இருந்தாய். நாம் இருவரும் நடந்து கொண்டேயிருக்கிறோம். ஆனால் கோயில் வரவில்லை. நீயும் நானும் களைத்துப் போய் ஒரு மரத்தடியில் உட்கார்கிறோம். அப்போது பக்கத்து புதர்மறைவி**



**லிருந்து ஒரு காட்டெருமை தன் கூரிய கொம்புகளை நீட்டியபடி பாய்ந்து வருகிறது. நாம் இருவரும் பயந்துபோய் எழுந்து ஓட ஆரம்பிக்கிறோம். நீ சிவப்புச் சேலை கட்டியிருப்பதால் அந்த எருமை உன்னைத் துரத்த ஆரம்பிக்கிறது. இந்த இடத்தில் தூக்கம் கலைந்து போகவே நான் எழுந்து உட்கார்ந்துவிட்டேன். அந்தக் கனவு மறுபடியும் ரீப்ளேவாய் மூளைக்குள் ஓடியது. இப்படி ஒரு கனவு வந்தால் அதற்கு என்ன பலன் என்பதைத் தெரிந்து கொள்ள என்னிடம் இருந்த 'கனவுகளும் அதன் பலன்களும்' என்ற புத்தகத்தைப் புரட்டிப் பார்த்தேன். பலன் போட்டிருந்தார்கள். அதைப் படித்ததும் அதிர்ந்து போனேன். அது என்ன பலன் என்பதை என் வாயால் சொல்ல விரும்பவில்லை. இத்தோடு அந்தப் புத்தகத்தை அனுப்பியுள்ளேன். படித்துப் பார்த்து தெரிந்து கொள்ளவும்.**

**இப்படிக்கு**

**எல்.ஓ.**

மது கடிதத்தைப் படித்து முடித்ததும் வசந்தி தன் கையிலிருந்த 'கனவுகளும் அதன் பலன்களும்' என்று தலைப்பிட்ட புத்தகத்தைக் கொடுத்தாள்.

"மது...! இந்தப் புத்தகம் லெட்டரோடு சேர்ந்து வந்தது. புத்தகத்தோட 80வது பக்கத்தைப் புரட்டிப் பாருங்க..."

மது புரட்டிப் பார்த்தான்.

80வது பக்கம் வந்தது.

சிவப்பு ஸ்கெட்ச் பேனாவால் அடிக்கோடிட்ட அந்த வாசகம் பார்வைக்குக் கிடைத்தது.

ஒரு ஆணையோ பெண்ணையோ எருமை துரத்தி வருவது போல் கனவு கண்டால் அந்த ஆணையோ

பெண்ணையோ மரணம் நெருங்கி வருகிறது என்று பொருள். இந்த கனவுக்கு பரிகாரம் கிடையாது.



# 4



கமிஷனர் சுந்தரவேல் ரிப்போர்ட்டர் கிரியையும், வளசரவாக்கம் போலீஸ் இன்ஸ்பெக்டர் செந்தில்நாதனை யும் அழைத்துக் கொண்டு உதயாநகர் காலனியில் இருந்த லாயர் சிற்றரசு வீட்டுக்குப் போனபோது அவருடைய மகன் தீபக்கும், தீபக்கின் மனைவி மஞ்சுளாவும் டி.வி. பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள். போலீஸ் யூனிஃபார்ம் களைப் பார்த்ததும் மிரண்டுபோய் எழுந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் செந்தில்நாதன் கமிஷனரிடம் திரும் பினார்.

"ஸார்...! இவர் தீபக். லாயர் சிற்றரசுவோட மகன். இவங்க அவரோட ஒய்ஃப் மஞ்சுளா..."

தீபக்கும் மஞ்சுளாவும் கைகளைக் குவித்தார்கள். இரு வரும் ஒரே நேரத்தில் ஆர்வம் சிதறும் குரலில் கேட் டார்கள்.

"அப்பா கிடைச்சுட்டாரா ஸார்?"

"இன்னும் இல்லை... உங்கப்பாவைப் பற்றி ஃபர்தராய் விசாரணை பண்ணத்தான் கமிஷனர் வந்திருக்கார்."



சுந்தரவேல் தீபக்கை உன்னிப்பாய் ஒரு பார்வை பார்த்தபடி கேட்டார்.

"உங்க ஃபாதர் லாயர் சிற்றரசு காணாமல் போய் கிட்டத்தட்ட ஒருமாச காலம் ஆகிறது இல்லையா...?"

"ஆமா ஸார்..."

"காலையில் வாக்கிங் போனவர் வீட்டுக்குத் திரும் பலைன்னு போலீஸ்ல ரிப்போர்ட் கொடுத்து இருக்கீங்க. அவர்க்கு தினசரி வாக்கிங் போகிற ஹேபிட் இருந்ததா?"

"ஆமா ஸார்... எவ்வளவு குளிராய் இருந்தாலும் சரி மப்ளரை தலைக்குக் கட்டிட்டாவது வாக்கிங் போயிடு வார்..."

"அவர் காணாமல் போனதுக்கு என்ன காரணம் இருக்க முடியும்ன்னு நினைக்கறீங்க...?"

"எங்களுக்கு ஒரு காரணமும் பிடிபடலை ஸார். அப்பா ரொம்பவும் அமைதியான டைப். தன்னோட மனசாட் சிக்கு நியாயம்ன்னு பட்ட கேஸ்களைத்தான் எடுத்துக்கு வார். கடவுள் பக்தி அதிகம். அவர் காணாமல் போனதுக்கு குடும்பத்துல எந்த ஒரு பிரச்னையும் காரணம் கிடையாது ஸார்! அப்பாவும் அம்மாவும் ரொம்பவும் அன்னி யோன்யமாய் இருப்பாங்க. எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் ஒருநாள் கூட சண்டை போட்டுக்கிட்டது கிடையாது."

சுந்தரவேல் சுற்றும் முற்றும் பார்த்தார். "இப்போ உங்க மதர் எங்கே...?"

"அப்பா காணாமல் போன அதிர்ச்சியில் அம்மாவுக்கு பி.பி. அதிகமாகி ஸ்ட்ரோக் மாதிரி வந்துடுச்சு ஸார்... இப்ப ஹாஸ்பிட்டல்லதான் இருக்காங்க... இன்னும் ஒரு வாரத்துல டிஸ்சார்ஜ் பண்ணி கூட்டிட்டு வந்துடுவோம்..."

"உங்க அப்பா தானாய் காணாமே போயிருக்க மாட்டார்ன்னு சொல்றீங்க. கடத்தப்பட்டு இருக்கலாமோ?"

"மே....பி...ஸார்..."

"அவர் கடத்தப்பட என்ன மோட்டிவேஷன்... இருக்க முடியும்னு நினைக்கறீங்க...?"

"ஸாரி ஸார்... என்னால எதையும் 'கெஸ் ஒர்க்' பண்ண முடியலை... அப்பா கடத்தப்படற அளவுக்கு அவர் வி.ஐ.பி. கிடையாது."

"ஓ.கே...! அவர் கடைசியாய் எந்த மாதிரியான கேஸை டீல் பண்ணிட்டிருந்தார்...?"

"ஒரு சொத்து தகராறு கேஸ்... அண்ணன் தம்பிகளுக்குள்ளே பாகப்பிரிவினை நடந்தது சரியில்லைன்னு கேஸ்..."

இன்ஸ்பெக்டர் செந்தில்நாதன் குறுக்கிட்டுப் பேசினார். "ஸார்...! அந்த சொத்துத் தகராறு பார்ட்டியை நான் போய்ப் பார்த்து என்கொயர் பண்ணினேன். அவங்க இப்போ கேஸ் எதுவும் இல்லாம ராசியாயிட்டாங்க. லாயரை அவங்க கடத்த ஒரு சதவீதம்கூட வாய்ப்பு இல்லை ஸார். அதே மாதிரி லாயர் சிற்றரசுக்கு தொழில் ரீதியாவும் குடும்ப ரீதியாவும் எதிரிகள் யாரும் இல்லை."

கமிஷனர் சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு தீபக்கை ஏறிட்டார்.

"நீங்க என்ன பண்றீங்க தீபக்...? வேலைக்குப் போறீங்களா... இல்லை பிசினஸா...?"

"வேலைக்குப் போறேன் சார்."

"எங்கே...?"



"சக்தி கியர்ஸ்ன்னு ஒரு கம்பெனி. அங்கே ஏ.ஈ.யாய் ஒர்க் பண்ணிட்டிருக்கேன்."

"உங்க மனைவி?"

"அவங்க ஹவுஸ் ஒய்ஃப்..."

"ஓ.கே... மிஸ்டர் தீபக்...! இப்ப நான் கேட்கப் போற கேள்விக்கு கொஞ்சம் யோசனை பண்ணி பதில் சொல்லுங்க."

தீபக் தலையசைக்க கமிஷனர் கேட்டார்.

"உங்களுக்கு ஸ்ரீராமுலு என்கிற பேர்ல யாரையாவது தெரியுமா?"

தீபக் சில விநாடிகள் யோசித்துப் பார்த்துவிட்டு தலையாட்டினான்.

"தெரியாது ஸார்."

"அடையாளம் சொல்றேன். அந்த ஸ்ரீராமுலு நல்ல உயரம். வயசு முப்பத்திலிருந்து முப்பத்தஞ்சுக்குள். பெரும்பாலும் ஒயிட் பேண்ட் ஒயிட் சர்ட்தான் போட்டுக்குவான். ஆள் நல்ல சிவப்பு. முன் தலையில் லேசாய் வழுக்கை. அவன் தமிழ் பேசும்போது தெலுங்கும் கலந்து வரும்."

தீபக் தீர்மானமாய் தலையாட்டினான். "அப்படி யாரையும் எனக்குத் தெரியாது ஸார்..."

அதுவரைக்கும் எதுவும் பேசாமல் அமைதியாய் நின்றிருந்த தீபக்கின் மனைவி மஞ்சுளா இப்போது வாயைத் திறந்தாள்.

"எனக்குத் தெரியும் ஸார்."



# 5

மது அந்தக் கடிதத்தையும் 'கனவுகளும் அதன் பலன்களும்' என்ற புத்தகத்தையும் கையில் வைத்தபடி வசந்தியையும் ஸ்வரூபாவையும் வியப்போடு பார்த்தான்.

''இந்த ரெண்டையும் அனுப்பினது யார்ன்னு உங்களுக்குத் தெரியாது?''

''தெரியாது.''

''எப்ப இது வந்தது?''

''ரெண்டு நாளைக்கு முந்தி - சாதாரண தபாலில்.'' வசந்தி சொல்லிக் கொண்டிருக்க ஸ்வரூபா படபடத்தாள்.

''இதோ பாருங்க மிஸ்டர் மது... இந்த லெட்டரையும் சரி, இந்த புத்தகத்தையும் சரி நான் பொருட்படுத்தவேயில்லை... யாரோ என்கூட விளையாடணும்னு ஆசைப்பட்டு இருக்காங்க... அவ்வளவுதான். இந்த விஷயத்துல ரொம்பவும் அரண்டு போயிருக்கிறது வசந்திதான்... இது எனக்கு வந்த ஒரு வகையான கொலை மிரட்டல்ன்னு சொல்றா...''

மது புன்னகைத்தான்.

''உங்க ஃப்ரெண்ட் சொல்றது சரிதான்! இது ஒருவகையான கொலை மிரட்டல்தான்.''

''நீங்களும் பயந்துட்டீங்க போலிருக்கு...''

''ஸ்வரூபா! எந்த ஒரு விஷயத்தையுமே நாம் விளையாட்டாய் எடுத்துக் கொள்ளக்கூடாது. இது வெளியி



லிருந்து பார்க்க விளையாட்டு மாதிரி தோன்றினாலும் உள்ளே விபரீதம் இருக்கு...''

''என்ன விபரீதம்...? என்னோட உயிர்க்கு ஆபத்து வரும்ன்னு சொல்றீங்களா...?''

''வரலாம்...''

''சரி... இப்போ என்ன பண்ணப் போறீங்க...?''

''இப்படி ஒரு லெட்டரை எழுதி 'கனவுகளும் அதன் பலன்களும்' என்கிற புத்தகத்தை அனுப்பி வெச்சது யாருன்னு கண்டுபிடிக்க வேண்டாமா?''

''எப்படி கண்டுபிடிப்பீங்க...?''

''அதுக்கு உங்க ஒத்துழைப்பு வேணும்... நீங்க சரியான படி ஒத்துழைப்பு கொடுத்துட்டா உங்களை மிரட்டின நபர் யார்ங்கிறதை நான் கண்டுபிடிச்சுடுவேன்...''

''உங்களுக்கு என்கிட்டேயிருந்து எது மாதிரியான ஒத்துழைப்பு வேணும்?''

''நான் கேட்கிற கேள்விகளுக்கு எந்த ஒரு உண்மையையும் மறைக்காமே சரியான பதில்களை சொன்னாப் போதும்...''

ஸ்வரூபா எரிச்சலாய் வசந்தியைப் பார்த்தாள்.

''எல்லாமே நீ பண்ணின வேலை...''

வசந்தி சிரித்தாள்.

''இதோ பார் ஸ்வரூபா...! உனக்கு உன்னோட உயிர் பெரிதாய் தெரியாமல் இருக்கலாம். பட் எனக்கு நீ வேணும். உனக்கு வரக்கூடிய எந்த ஒரு ஆபத்தையும் என்னால தாங்கிக்க முடியாது. ப்ளீஸ்! மது, பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்ஸியில் நம்பர் ஒன். அவரால் உண்மைகளைக் கண்டுபிடிக்க முடியும். அவர்க்கு நீ ஒத்துழைப்பு கொடு...''

''ஓ.கே... ஓ.கே...!'' என்று தலையசைத்த ஸ்வரூபா மதுவிடம் திரும்பினாள்.

"நீங்க என்ன கேட்கணுமோ... அதைக் கேளுங்க..."

"உங்களுக்கு யார் மீதாவது சந்தேகம் இருக்கா...?"

"ஒருத்தர் மீதும் கிடையாது..."

"நீங்க ஒரு சின்னத்திரை நடிகை. தொழில் ரீதியாய் உங்களுக்கு பலதரப்பட்ட பிரச்னைகள் இருக்கலாம். அந்தப் பிரச்னைகளைப் பத்தி சொல்ல முடியுமா?"

"எனக்கு ஒரு பிரச்னையும் கிடையாது. சின்னத்திரை சீரியல்களில் என்றுமே நான் ஹீரோயின் கிடையாது. சப்போர்ட்டிங் ஆக்ட்ரஸ்தான். ஸோ நான் யார்க்கும் போட்டியும் கிடையாது. யாருடைய வளர்ச்சியின் குறுக் காகவும் நான் நிற்கலை..."

மது தயக்கமாய் ஸ்வரூபாவைப் பார்த்தான்.

"நான் ஒரு கேள்விகேட்டா நீங்க தப்பா நினைச்சுக்க மாட்டீங்களே...?"

"நீங்க தப்பான கேள்வியைக் கேட்டா நான் தப்பாய் நினைக்காமல் இருக்க முடியுமா?"

"அது... வந்து... வந்து..."

"சரி... பரவாயில்லை கேளுங்க."

"உங்களுக்கு பாலியல் தொந்தரவுகள் வந்தது உண்டா...?"

"அதாவது எந்த ஆணாவது என்கிட்டே தப்பா நடக்க முயற்சி பண்ணியிருக்கானான்னு கேட்கறீங்க... இல்லையா?"

"ஆமா..."

"செருப்பு பிஞ்சிடும்..."



மது திகைக்க, ஸ்வரூபா தொடர்ந்தாள். "இதுவரைக் கும் எவனும் என்னைத் தப்பாய்க்கூட பார்த்தது இல்லை. நான் ஃபீல்டுல ஒரு நெருப்புங்கிறது எல்லார்க்குமே தெரியும்."

"உங்க ஃபேமிலியைப் பத்தி கொஞ்சம் சொல்ல முடியுமா?"

"கண்டிப்பா சொல்லணுமா?"

"சொன்னா பரவாயில்லை... எந்த ஒரு இண்டு இடுக்கிலாவது உண்மை சிக்கிட்டு இருக்கலாமே...? அது உங்க கண்களுக்குத் தெரியாது. எங்களை மாதிரியான வங்க கண்களுக்கு பளிச்ன்னு அந்த உண்மைகள் தெரியும்."

ஸ்வரூபா ஒரு அலட்சியப் புன்னகையோடு சொன் னாள்.

"எனக்கு சொந்த ஊர் பண்ருட்டிக்குப் பக்கத்துல ஒரு கிராமம். சின்ன வயசிலேயே அம்மாவை இழந்துட்டேன். குடிகார அப்பா எனக்கு ஒரு பெரிய பிரச்னையாய் இருந் தார். நான் அழகாய் இருக்கேன்னு மத்தவங்க சொன்னதால சினிமாவில் நடிக்க வந்தேன். சென்னை எழும்பூர் ஸ்டே ஷன்ல இறங்கி எந்தப் பக்கம் போறதுன்னு தெரியாமே முழிச்சிட்டு நின்னபோது பெண் போலீஸ் கையில் மாட்டினேன். எனக்கு சொந்த பந்தம் யாரும் கிடை யாதுன்னு பொய் சொன்னதால மகளிர் காப்பகத்துல கொண்டு போய் என்னைச் சேர்த்தாங்க போலீஸ். நல்ல சாப்பாடு, கட்டிக்கத் துணிமணி கிடைச்சதால ஒரு இரண்டு வருஷம் அந்த மகளிர் காப்பகத்திலேயே இருந்துட்டேன். ஒரு தடவை டி.வி. சீரியல் தயாரிப்பாளர் ஒருவர்

காப்பகத்துக்கு வந்து ஒரு விழாவில் கலந்துகிட்டபோது அவர்கிட்டே என்னோட சினிமா ஆசையைச் சொன்னேன். உடனே அவர் சினிமாவெல்லாம் உனக்கு வேண்டாம் டி.வி. சீரியலில் நடி'ன்னு சொன்னார். சொன்னதோடு மட்டுமில்லாமே அவரோட 'கோபுர தரிசனம்' என்ற டி.வி. சீரியலில் நடிக்க வாய்ப்புக் கொடுத்தார். அது ஒரு சிறிய ரோல்தான். இருந்தாலும் அது பெரிய அளவில் பேசப்பட்டதால நிறைய வாய்ப்புகள் கிடைச்சது. நடிச்சேன். பணமும் வேகமாய்ச் சேர்ந்தது. பேங்க்ல கொஞ்சம் கடன் வாங்கி இந்த வீட்டைக் கட்டி முடிச்சேன். எனக்கு இப்போ எந்தப் பிரச்னையும் கிடையாது. சந்தோஷமாய் இருக்கேன்.''

''கிராமத்தில் இருக்கிற உங்க அப்பா?''

''அவர் இறந்து நாலு வருஷமாச்சு...! எனக்கு இப்போ உறவுன்னு சொல்லிக்க யாரும் இல்லை பட்... எனக்கு ஒரு சகோதரி இருந்தா அவ என்னென்ன பண்ணுவாளோ அதையெல்லாம் வசந்தி பண்ணிட்டு இருக்கா...''

''உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிற எண்ணத்துல யாராவது அப்ரோச் பண்ணினாங்களா?''

''இல்லை.''

''சரி...! உங்களுக்கு கல்யாணம் பண்ணிக்கிற எண்ணம் உண்டா?''

''இல்லை.''

''ஏன்?''

''குடும்ப வாழ்க்கை என்கிற சிறைக்குள்ளே நான் போக விரும்பலை. கடைசி வரைக்கும் தனியாவே இருக்க விரும்பறேன்.''



''தேங்க்யூ மிஸ் ஸ்வரூபா...! நான் கேட்ட எல்லாக் கேள்விக்கும் தெளிவான பதில்களைச் சொல்லியிருக்கீங்க... உங்களுக்கு யாரோடும் எந்தப் பகையும் இல்லை. ஆனாலும் கண்ணுக்கு தெரியாத ஒரு எதிரி இருக்கான். அவன் யார்ங்கிறதை என்னால கண்டுபிடிக்க முடியும்ன்னு நினைக்கிறேன்...''

ஸ்வரூபா பெரிதாய் புன்னகைத்தாள்.

''முயற்சி பண்ணுங்க. விஷ் யூ ஆல் த பெஸ்ட்...''

''இந்த லெட்டரையும், 'கனவுகளும் பலன்களும்' என்கிற இந்தப் புத்தகத்தையும் நான் எடுத்துக்கலாமா...?''

''தாராளமா... எடுத்துக்குங்க...! இன்னும் ஏதாவது வேணும்ன்னா கேளுங்க...''

''இப்போதைக்கு இது போதும்...'' சொன்ன மது வசந்தியை ஏறிட்டான்.

''மிஸ் வசந்தி! இந்தக் கேஸை இந்த நிமிஷத்தில் இருந்தே நாங்க டீல் பண்ண ஆரம்பிச்சுட்டோம். இன்னும் ரெண்டு நாள்ல ஒரு ஃப்ரூட் ஃபுல் ரிசல்ட்டோடு வர்றோம்...''

''தேங்க்யூ வெரிமச்...''

மதுவும் ஷோபனாவும் விடைபெற்று வெளியே வந்தார்கள். பைக்கில், பயணித்து தெருவின் போக்குவரத்தில் கலந்ததும் மது கேட்டான்.

''என்ன ஷோபனா... நீ ஒண்ணும் பேசலை?''

''பாஸ்! நீங்க ஸ்வரூபாகிட்டே பேசிட்டு இருக்கும் போது நான் யோசனை பண்ணிட்டிருந்தேன்...''

''யோசனை பண்ணிட்டிருந்தியா?''

"ம்..."

"எதைப்பத்தி...?"

"பாஸ் ஸ்வரூபா ஏதேதோ சொன்னா. அதெல்லாம் உண்மையா... பொய்யான்னு எனக்குத் தெரியாது... பட் அவ ஒரு உண்மையை மறைச்சுட்டா."

மதுவின் பைக் வேகம் குறைந்தது. அவளை மெல்லத் திரும்பிப் பார்த்தான்.

"என்ன சொன்னே... உண்மையை மறைச்சுட்டாளா?"

"ஆமா..."

"என்ன உண்மை...?"

"ஆறு மாசத்துக்கு முன்னாடி தான் அபார்ஷன் பண்ணிக்கிட்டதை!"

பைக் சட்டென்று முழுவேகமும் குறைந்து ரோட்டோரமாய் ஒதுங்கி நின்றது.

"ஷோபனா...! நீ என்ன சொன்னே? ஸ்வரூபா அபார்ஷன் பண்ணிக்கிட்டாளா?"

"ஆமா... ஆமா... ஆமா..." என்றாள் ஷோபனா.



6



'எனக்குத் தெரியும் ஸார்!' என்று தீபக்கின் மனைவி மஞ்சுளா சொன்னதும் எல்லோரும் அவளைத் திரும்பிப் பார்த்தார்கள்.



கமிஷனர் சுந்தரவேல் அவளை நெருங்கினார்.

"நீ என்னம்மா சொல்றே... அந்த ஸ்ரீராமுலுவை உனக்குத் தெரியுமா...?"

"தெரியும்..."

"எப்படி...?"

"ரெண்டு மாசத்துக்கு முந்தி நீங்க இப்ப சொன்ன அடையாளங்களோடு ஒருத்தன் காலை நேரத்துல வந்து மாமாவைப் பார்த்தான்."

"அதாவது... லாயர் சிற்றரசுவை..."

"ஆமா ஸார்... அப்ப என்னோட கணவர் வீட்ல இல்லை. வந்த அந்த ஆள் நீங்க சொன்ன மாதிரியே தமிழும், தெலுங்கும் கலந்து பேசினான். மாமா அவனை உட்காரச் சொல்லிட்டு என்ன விஷயம்ன்னு கேட்டுகிட்டு இருந்தார். நான் சமையல் வேலையைப் பார்க்க உள்ளே போயிட்டேன். ஒரு அரைமணி நேரம் கழிச்சு மறுபடியும் ஹாலுக்கு வந்து பார்த்தபோது அந்த ஆள் இல்லை. போயிட்டார். மாமா மட்டும் பேப்பர் பார்த்துகிட்டு இருந்தார்."

"அவங்க என்ன பேசினாங்கன்னு உனக்குத் தெரியலை?"

"தெரியலை ஸார்... மாமாவைப் பார்க்க எத்தனையோ க்ளைண்ட்ஸ் வர்றாங்க... அவங்கள்ல ஒருத்தராய் இருக்கலாம்ன்னு நினைச்சுட்டேன்..."

"அதுக்கப்புறம் அவன் வரலை?"

"வந்திருக்கலாம்... நான் பார்க்கலை..."

சுந்தரவேல் தீபக்கிடம் திரும்பினார்.

"தீபக்...! அப்பாவோட ரூம் எது...?"

"அதோ அந்த ரூம்தான் ஸார்."

"பார்க்கலாமா...?"

"வாங்க ஸார்...! ஆல் ரெடி இன்ஸ்பெக்டர் செந்தில் நாதன் அப்பாவோட அறையை சர்ச் பண்ணிப் பார்த் துட்டார். ஒரு க்ளூவும் கிடைக்கலை."

"இட்ஸ் ஓ.கே...! வாங்க... மறுபடியும் ஒரு தடவை பார்த்துடலாம்."

எல்லோரும் ஹாலையொட்டியிருந்த வலதுபக்க அறையில் நுழைந்தார்கள். சற்று பெரிய அறை. கண் ணாடி அலமாரியில் காலிகோ பைண்ட் செய்யப்பட்ட தடிமன் சைஸ் புத்தகங்கள் அணிவகுத்து சாய்ந்து தெரிந்தன.

கமிஷனர் சுந்தரவேல் அறையைச் சுற்றிப் பார்த்து விட்டு தீபக்கிடம் வந்தார்.

"மிஸ்டர் தீபக்...! அப்பா எத்தனையோ கேஸ்களில் ஆஜராகியிருப்பார். சமீபத்துல அவர் ஜெயிச்ச முக்கிய மான கேஸ் எதுன்னு சொல்ல முடியுமா...?"

"முடியும் ஸார்..."

"என்ன கேஸ்... சொல்லுங்க..."

"மயிலாப்பூர்ல ஒரு அப்பாவியான பிராமணக் குடும்பம் ஸார். சிவராமன் - வைதேகின்னு தம்பதிகள். அவங்களுக்கு ஒரே பையன் சங்கரநாராயணன். பையன் படிச்சுட்டு வேலைக்குப் போகாமே அப்பா நடத்திகிட்டு வந்த மெஸ்ஸைப் பார்த்துக்கிட்டு இருந்தான். 'சிவராமன் மெஸ்'ன்னு சொன்னா மயிலாப்பூர்ல ஃபேமஸ்...



சாயந்தரம் ஆறு மணியாயிட்டா மெஸ்ல கூட்டம் அலைமோதும். இது மத்த மெஸ்காரங்களோட கண்ணை உறுத்தவே சிவராமனோட பேரைக் கெடுக்க மெஸ் ஸுக்குள்ளே கஞ்சாவை வெச்சுட்டு... போலீஸுக்குத் தகவல் கொடுத்துட்டாங்க ஸார். போலீஸ் மெஸ்ஸுக்கு வந்து சர்ச் பண்ணி கஞ்சாவை கைப்பற்றி சிவராமன், வைதேகி, சங்கரநாராயணன் மூணுபேரையும் கைது பண்ணி ஜெயிலுக்கு கொண்டு போயிட்டாங்க ஸார். அப்பா அந்த மெஸ்ஸுக்கு அடிக்கடி சாப்பிடப் போறதால ஏற்பட்ட பழக்கத்தின் காரணமாய் சிவராமன் கேஸை எடுத்து நடத்தி கஞ்சா வழக்கு பொய்யானதுன்னு நிரூபணம் பண்ணி விடுதலை வாங்கிக் கொடுத்தார்."

"இது எப்போ நடந்தது?"

"ஒரு ரெண்டு வருஷம் இருக்கும் ஸார்."

"இதை இன்ஸ்பெக்டர் செந்தில்நாதன்கிட்டே சொன் னீங்களா?"

"இல்ல ஸார்...."

"ஏன் சொல்லலை...?"

"அதை சொல்லும்படியான சந்தர்ப்பம் வரலை ஸார். நீங்க இப்போ அப்பா நடத்தின கேஸ்களில் முக்கியமான கேஸ் எதுன்னு கேட்டதால அதைச் சொன்னேன்."

"ஓ.கே.! அந்த சிவராமனும் வைதேகியும் இன்னமும் மயிலாப்பூர்லதான் இருக்காங்களா?"

"இல்ல ஸார்... வழக்கிலிருந்து அவங்களுக்கு விடு தலை கிடைச்சதும் சென்னையில் இருக்கப் பிடிக்காமே சொந்த ஊர்க்குப் போயிட்டாங்க."

''அவங்க சொந்த ஊர் எது...?''

''கும்பகோணம்...''

''அட்ரஸ் தெரியுமா...?''

''சரியான அட்ரஸ் தெரியாது... ஸார்! ஆனா வீதி பேர் மட்டும் தெரியும். சாரங்கபாணி கோயில் தெரு...''

''சிவராமனோட மெஸ்ஸில் கஞ்சாவை வெச்சது யார்ன்னு தெரிஞ்சுதா...?''

''அந்த உண்மை வெளியே வரவேயில்லை ஸார்... மயிலாப்பூரில் இருந்த போட்டி மெஸ்காரங்ககிட்ட விசாரணை நடத்தியும் எந்த பலனும் கிடைக்கலை. அப்பா இதையே சொல்லிச் சொல்லி ரொம்ப நாளா கவலைப் பட்டுக்கிட்டு இருந்தார்.''

கமிஷனர் சுந்தரவேல் இன்ஸ்பெக்டர் செந்தில்நாதனை சற்றே கோபமாய்ப் பார்த்தார்.

''என்ன இன்வெஸ்ட்டிகேஷன் பண்ணியிருக்கீங்க...? இந்த கஞ்சா விஷயம் எவ்வளவு பெரிய விஷயம்...? நிரபராதிகளான சிவராமன், வைதேகி, சங்கரநாராயணன் மூணு பேர்க்கும் லாயர் சிற்றரசு கோர்ட்டில் வாதாடி விடுதலை வாங்கிக் கொடுத்து இருக்கார். இது யார்க்கோ பிடிக்கலை. அந்த 'யாரோ' யார்ன்னு கண்டுபிடிச்சா போதும்... சிற்றரசுவைக் கடத்திட்டுப் போனவங்க யார்ங்கிற உண்மைக்கு ரொம்பவும் பக்கத்துல போயிடலாம்.''

''ஸாரி ஸார்... இந்த கேஸுக்கு இப்படியொரு கோணம் இருக்கும்ன்னு எனக்குத் தெரியலை...''


''ஓ.கே...! பாஸ்ட் ஈஸ் பாஸ்ட்... இன்னிக்கே நீங்க கும்பகோணம் கிளம்புங்க... சாரங்கபாணி கோயில் தெரு



வில் போய் விசாரிச்சா சிவராமன் வீடு எதுன்னு தெரியும். சிவராமனை சந்திச்சு சிற்றரசு காணாமே போன விஷயத்தைச் சொல்லி ஃபாரா என்கொயர் பண்ணுங்க. சிற்றரசு, சிவராமன் ஃபேமிலிக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தது யார்க்கோ பிடிக்கலை. அது யார்ன்னு ஒருவேளை சிவராமனுக்கு தெரிஞ்சு இருக்கலாம்...''

''நான் இன்னிக்கே கும்பகோணத்துக்கு கிளம்பறேன் ஸார்.''

''இன்னிக்கே இல்லை இப்பவே...!''



# 7

திகைப்பு அப்பிக் கொண்ட முகத்தோடு ஷோபனாவை ஏறிட்டான் மது.

''என்ன ஷோபனா... நீ சொன்னது உண்மையா... இல்லை கெஸ் ஒர்க்கா...?''

''பாஸ்...! 'பிம்பம்' வார இதழைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க...?''

''தரமான இதழ்...''

''அதுல பொய்யான செய்திகள் வருமா?''

''வராது...''

ஷோபனா தொடர்ந்தாள். ''ஆறு மாசத்துக்கு முன்னாடி அந்தப் பத்திரிகையில் 'கிசு கிசு' பாணியில் ஒரு செய்தி

போட்டு இருந்தாங்க பாஸ். அது அப்படியே என் மனசுக்குள்ளே இருக்கு..." சொல்லட்டுமா?"

"சொல்லு..."

"முன்பெல்லாம் தமிழ்நாட்டில் கற்பு என்ற வார்த்தைக்கு ஒரு மதிப்பு இருந்தது. இப்போது அது ஒரு வெறும் மூன்று எழுத்துக்கள் கொண்ட வார்த்தையாகி விட்டது. பெரிய திரைகளிலும் சின்னத் திரைகளிலும் கற்பு பற்றி உயர்வாகப் பேசும் பல நடிகைகளில் சிலர் அந்தக் கற்பை மிதியடிகளுக்கு சமமாகக் கொண்டு வந்துவிட்டனர். அந்த லிஸ்டில் இப்போது சேர்ந்து இருப்பவர் ஒரு சின்னத்திரை நடிகை. இந்த நடிகை யார் என்பதைத் தெரிந்து கொள்ள உங்களுக்கு ஆவலாக உள்ளதா? அந்த நடிகை வேறு யாருமில்லை. தன்னுடைய பெயரின் கடைசி இரண்டு எழுத்துக்களில் பணத்தை மறைத்து வைத்து இருப்பவர். இன்னமும் உங்களுக்குப் புரியவில்லையென்றால் சென்னை 34ல் உள்ள ஒரு மலரின் பெயரைக் கொண்ட மருத்துவமனையில் விசாரித்துக் கொள்ளவும்."

"இதுதான்... அந்த கிசுகிசுவா...?"

"ஆமா பாஸ்... இந்த செய்தி மட்டும் என்னோட மனசுக்குள்ளே ஒட்டிக்கிட்டு இருந்ததுக்கு காரணம் அந்த 'பிம்பம்' வார இதழைப் படிக்கும்போது என்னோட ஃப்ரண்ட் ஒருத்தி பக்கத்தில் இருந்தா. அவளும் நானும் அந்த சின்னத்திரை நடிகை யாராய் இருக்கும்ன்னு யோசனை பண்ணிப் பண்ணி களைச்சுப் போயிட்டோம். அதே மாதிரி சென்னை 34ங்கிறது. நுங்கம்பாக்கம் ஏரியா. அந்த ஏரியாவில் இருக்கிற எந்த ஹாஸ்பிட்டலுக்கு மலரோட பேர் இருக்குன்னு யோசனை பண்ணினோம்.



அதையும் கண்டுபிடிக்க முடியலை. அதுக்கப்புறம் நானும் என்னோட ஃப்ரண்டும் சந்திக்கும் போதெல்லாம் அதைப்பத்திப் பேசுவோம். பட் இன்னிக்குத்தான் அந்த கிசுகிசுவுக்கு விடை கிடைச்சது. பேரு ஸ்வரூபா. இந்த பேரோட கடைசி ரெண்டு எழுத்து ரூபா. கிசுகிசுவில் என்ன சொல்லியிருக்கு பாஸ்... தன்னுடைய பெயரின் இரண்டு எழுத்துக்களில் பணத்தை மறைத்து வைத்து இருப்பவர், சரியா பொருந்துதா பாஸ்?"

"பொருந்துது... பட்... அபார்ஷன் பண்ணிகிட்ட நடிகை வேற யாராவது இருந்துட்டா... 'ரூபா'ங்கிற எழுத்துக்களில் முடிகிற பெயரைக் கொண்ட நடிகை இந்த ஸ்வரூபா மட்டுந்தானா...? வேற யாராவது ஒருத்தராய் இருக்க வாய்ப்பும் இருக்கே...?"

"பாஸ்...! 'ஸ்வரூபா'ங்கிறது வெரி ரேர் நேம். இவளைத் தவிர ஃபீல்டில் வேற யாரும் இருக்கிற மாதிரி எனக்குத் தோணலை."

"சரி... நுங்கம்பாக்கம் ஏரியாவில் மலரின் பெயரைக் கொண்ட ஹாஸ்பிட்டல் எது...?"

"எனக்குத் தெரியலை பாஸ்... நானும் சில டாக்டர்ஸ்கிட்டே கேட்டுப் பார்த்தேன். அப்படி ஒரு ஹாஸ்பிட்டல் இல்லைன்னு சொல்லிட்டாங்க... நீங்க முயற்சி பண்ணுங்களேன்..."

மது பெருமூச்சு விட்டான்.

"ஷோபனா! எனக்கு இன்னமும் நம்பிக்கையில்லை. ஸ்வரூபாவோட பேச்சையும் நடவடிக்கையும் பார்த்தா தப்பு பண்ற டைப் மாதிரி தெரியலை... பிம்பம் பத்திரிகைக்காரங்க ஏன் ஒரு பரபரப்புக்காக அந்த நியூஸைப் போட்டிருக்கக் கூடாது...?"


"பிம்பம் பத்திரிகை பொய் சொல்லாத பத்திரிகைன்னு நீங்கதானே சொன்னீங்க...?"

"சொன்னேன்...! அவங்களுக்கு கிடைச்ச தகவலே பொய்யானதாய் இருந்தா...?"

"தகவல் உண்மையா பொய்யான்னு கண்டுபிடிக்க இப்போ ஒரு வழிதான் இருக்கு பாஸ்."

"என்ன வழி...?"

'மலரோட பெயரைக் கொண்ட அந்த ஹாஸ்பிட்டல் நுங்கம்பாக்கத்துல எங்கேயிருக்குன்னு கண்டுபிடிக்கணும்... ஸ்வரூபா உண்மையிலேயே அபார்ஷன் பண்ணிகிட்டவளாயிருந்தால் உங்க கையில் இருக்கிற லெட்டர்க்கும் 'கனவுகளும் பலன்களும்' தலைப்பிட்ட புத்தகத்துக்கும் சொந்தக்காரங்க யார்ங்கிறதைக் கண்டு பிடிச்சுடலாம்."



# 8

கும்பகோணம்.

சாரங்கபாணி கோயில் தெருவில் இன்ஸ்பெக்டர் செந்தில்நாதன் மஃப்டியில் அலைந்து சிவராமன் வீட்டைத் தேடி களைத்துப்போய், இரண்டு தெரு தள்ளியிருந்த அந்த போஸ்ட் ஆபீஸுக்குள் நுழைந்தார். போஸ்ட்



மாஸ்டரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு சிவராமனைப் பற்றி விசாரித்தார். போஸ்ட்மாஸ்டர் அறைக்கு வெளியே எட்டிப் பார்த்து பீட் போஸ்ட் மேனைக் கூப்பிட்டார்.

"பொன்னுரங்கம்."

"ஸார்..." அந்தப் பொன்னுரங்கம் காபிக் கொட்டை நிற யூனிஃபார்மோடு ஓடி வந்தார்.

"நீ சாரங்கபாணி கோயில் தெருதானே?"

"ஆமா ஸார்."

"ஸார் ஒரு இன்ஸ்பெக்டர்...! சென்னையிலிருந்து வந்து இருக்கார். ஏதோ பேர் சொல்லி விசாரிக்கிறார். என்னான்னு கேட்டு டீடெய்ல்ஸ் குடு."

பொன்னுரங்கம் பவ்யமாய் செந்தில்நாதனுக்குப் பக்கத்தில் வந்தார்.

"யார் ஸார் வேணும்?"

"பேர் சிவராமன். மெட்ராஸ் மைலாப்பூர்ல முன்னாடி மெஸ் வெச்சு நடத்திட்டிருந்தார். அப்புறம் அங்கிருந்து ஃபேமிலியோடு இங்கே கும்பகோணத்துக்கு வந்துட்டார். சாரங்கபாணி கோயில் தெருவுல வீடுன்னு சொன்னாங்க."

"அவரோட ஒய்ஃப் பேர் வைதேகியா?"

"ஆமா..."

"பையன் பேர் சங்கரநாராயணன்?"

"கரெக்ட்..."

பொன்னுரங்கம் பெருமூச்சு ஒன்றை வெளியேற்றி விட்டு சொன்னார். "ஸார்! நீங்க தேடி வந்த சிவராமனும்

அவரோட மனைவியும் இப்போ உயிரோடு இல்லை. அவங்க இறந்துட்டாங்க.''

செந்தில்நாதன் நெற்றி சுருக்கத்துக்கு உட்பட்டது.

''என்னது... இறந்துட்டாங்களா?''

''ஆமா ஸார்...''

''எப்படி...?''

''தெரியலை ஸார்... சிவராமன் ஆறுமாசத்துக்கு முன்னாடி என்னை வழியில் பார்த்து 'போஸ்ட்மேன்! நாங்க சாரங்கபாணி கோயில் தெருவிலிருந்து திருநாகேஸ் வரத்துக்குப் பக்கத்தில் இருக்கிற ஒரு வீட்டுக்கு குடி போறோம். அந்த அட்ரஸை பேப்பர்ல எழுதித் தர்றேன். பழைய அட்ரஸ் போட்டு எனக்கு ஏதாவது கடிதம் வந்தா கொஞ்சம் சிரமம் பார்க்காமே கொண்டு வந்து தர்றியா? அப்படி தர்றது சிரமமாய் இருந்தா ரீ டைரக்ட் பண்ணி விடு'ன்னு சொன்னார். 'நான் நேர்லயே கொண்டு வந்து தர்றேன்'னு சொன்னேன். மூணு மாசத்துக்கு முன்னாடி நான் திருநாகேஸ்வரம் கோயிலுக்கு போயிருந்தபோது, ஏதேச்சையாய் சிவராமனின் பையன் சங்கரநாரா யணனைக் கோயில் வாசல்ல பார்த்தேன். டிப்டாப்பாய் டிரஸ் பண்ணிட்டு ஒரு கார்க்குப் பக்கத்துல நின்று யார் கூடவோ பேசிட்டிருந்தான். நான் அவனுக்குப் பக்கத்துல போய் நின்னு 'அப்பா சௌக்கியமாய் இருக்காரா'ன்னு கேட்டேன். அதுக்கு அவன் 'நீங்க யார்'ன்னு கேட்டான். நான் 'போஸ்ட்மேன்'னு சொன்னதும் சில விநாடிகள் யோசனை பண்ணிட்டு 'அப்பாவும் அம்மாவும் அடுத் தடுத்து ஹார்ட் அட்டாக்கில் இறந்து போயிட்டாங்க'ன்னு சொன்னான். எனக்கு அதிர்ச்சியாய் இருந்தது.''



''அந்தக் கார் யாரோடது?''

''தெரியலை ஸார்... நான் ஒரு ரெண்டு நிமிஷம் பேசிட்டு கோயிலுக்குப் போயிட்டேன்...''

''திருநாகேஸ்வரத்தில் சங்கரநாராயணனுக்கு எங்கே வீடு...?''

''ஒரு நிமிஷம் ஸார்'' சொன்ன பொன்னுரங்கம் தன் பாக்கெட்டில் வைத்து இருந்த சிறிய டயரியை எடுத்து பிரித்துப் பார்த்து எழுதி வைத்து இருந்த அட்ரஸைச் சொன்னார்.

''டோர் நெம்பர் 27, நாகம்மை நகர் ஐந்தாவது குறுக் குத்தெரு, திருநாகேஸ்வரம்...''

அட்ரஸை ஒரு தாளில் குறித்துக் கொண்ட செந்தில் நாதன் கேட்டார்.

''நீங்க சங்கரநாராயணனை மீட் பண்ணி எவ்வளவு நாள் இருக்கும்?''

''மூணு மாசம் இருக்கும் ஸார்.''

''நீங்க கொடுத்த தகவல்களுக்கு ரொம்பவும் நன்றி... வேற ஒரு கேஸ் விஷயமாய் சங்கரநாராயணனைக் கொஞ்சம் என்கொய்ரி பண்ண வேண்டியிருக்கு. நான் போய் அவரைப் பார்த்துக்கிறேன்...''

செந்தில்நாதன் போஸ்ட்மாஸ்டரிடமும் பொன்னுரங்கத் திடமும் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தார். டாக்ஸி ஒன்றைப் பிடித்தார்.



# 9



''பாஸ்...!'' கூப்பிட்டாள் ஷோபனா. கையில் ஒரு தாள்.

''ம்...'' மது அவளை ஏறிட்டான்.

''நுங்கம்பாக்கம் ஏரியாவில் எத்தனை ஹாஸ்பிட்டல்ஸ் இருக்கோ... அத்தனையும் லிஸ்ட் பண்ணிட்டேன். மொத்தம் எத்தனை தெரியுமா?''

''சொல்லு...''

''பதினாறு...''

''படி... பார்க்கலாம்.''

''சுகம் ஹாஸ்பிட்டல், ராஜம் மருத்துவமனை, ஹரிஹரன் ஹாஸ்பிட்டல், கம்ஃபர்ட் ஹாஸ்பிட்டல், ஜெயம் நர்சிங்ஹோம், கீதா ஹாஸ்பிட்டல்.''

''ஆறாச்சு... அப்புறம்?''

''ஜெம் ஹாஸ்பிட்டல், வேதவல்லி மருத்துவமனை, நல்லாயன் நர்சிங் ஹோம், கே.எம்.எஸ்.பாலி நர்சிங் ஹோம்.''

''பத்தாச்சு... தென்...?''

''ரோகிணி ஜானகிராமன் ஹாஸ்பிட்டல், ஜி.எம். க்ளீனிக், பாரி நர்ஸிங் ஹோம், பாலாஜி ஹாஸ்பிட்டல்,



தீபா மருத்துவமனை, வைதேகி நர்ஸிங் ஹோம். இவ்வளவுதான் லிஸ்ட்.''

''மலரின் பெயரைக் கொண்ட மருத்துவமனையே இந்த லிஸ்டில் இல்லையே...?''

''அப்படி இல்லாமே அந்தப் பத்திரிகை எழுதாதே பாஸ்?''

''நீ லிஸ்ட்டை ஒழுங்காய் ப்ரிப்பேர் பண்ணினியா?''

''என்ன பாஸ் இப்படி கேட்டுட்டீங்க...? நுங்கம்பாக்கம் ஏரியா பூராவும் சுத்தி சுத்தி எந்த தெருவில் எந்த ஹாஸ்பிட்டல் இருக்குன்னு பார்த்து பார்த்து லிஸ்ட் ப்ரிப்பேர் பண்ணியிருக்கேன்...''

சில விநாடிகள் யோசித்த மது பிறகு கையைச் சொடுக்கினான்.

''இப்ப கண்டுபிடிச்சுடலாம்.''

''எப்படி பாஸ்...?''

''என்னோட ஃப்ரண்ட் ஒருத்தன் 'மெடிக்கல் ரெப்'பாய் ஒர்க் பண்ணிட்டிருக்கான். அவன் சென்னையில் சுத்தாத ஏரியா கிடையாது. அவன்கிட்டே கேட்டா மலரின் பெயர் கொண்ட ஹாஸ்பிட்டல் எதுன்னு தெரிஞ்சுடும்...''

''சீக்கிரம் போன் பண்ணுங்க பாஸ்!''

மது டெலிபோன் ரிஸீவரை எடுத்துக் கொண்டு சில எண்களைத் தட்டிவிட்டு பேசினான்.

''ராஜராஜன்...?''

''எஸ்... ஸ்பீக்கிங்...''

''டேய்... நான் மது...''

"என்னடா... துப்பறியும் சிங்கம்... எப்படி இருக்கே?"

"ஃபைன்..."

"என்ன கேஸ் ஏதாவது வருதா? இல்லை ஜன்ன லுக்குப் பக்கத்துல உட்கார்ந்துகிட்டு ரோட்டை வேடிக்கை பார்த்துட்டிருக்கியா...?"

"டேய்... இப்ப கேலி பண்ணு...! என்னிக்காவது ஒரு நாள் என்னை சந்திக்க அப்பாயிண்ட்மெண்ட் கேட்டு நீ போன் பண்ண வேண்டியிருக்கும்."

"வரட்டும்...! வரட்டும்...! அந்த பொன்னான காலம்... வரட்டும்... நீ அப்படியொரு நிலைமைக்கு வரணும்ன்னு தானே நானும் ஆசைப்பட்டுகிட்டு இருக்கேன்."

"சரி... நீ இப்ப ஃப்ரீயா...?"

"ஃப்ரீதான்... ஏன்...?"

"எனக்கொரு இன்பர்மேஷன் வேணும்."

"கேளு..."

"நுங்கம்பாக்கம் ஏரியாவில் மலரின் பெயர் கொண்ட ஹாஸ்பிட்டல் ஏதாவது இருக்கா...?"

"என்னடா...! 'கிசுகிசு' பாணியில் கேக்கிறே?"

"இது ஒரு 'கிசுகிசு' மேட்டர்தான்..."

"எந்த ஏரியான்னு சொன்னே... நுங்கம்பாக்கமா?"

"ஆமா..."

"ஒரு நிமிஷம் லைன்ல இரு... என்னோட டயரியைப் புரட்டிப் பார்த்துட்டு சொல்றேன்..."

"ம்... ம்..."

மது காத்திருந்தான்.



சரியாய் இரண்டு நிமிஷ நேரம் கழித்து பேசினான் ராஜராஜன்.

"இருக்கே... மலரோட பேர்ல ஹாஸ்பிட்டல் இருக்கே?"

"எந்த ஹாஸ்பிட்டல்?"

"ரோஜா ஹாஸ்பிட்டல்..."

"ரோஜா ஹாஸ்பிட்டலா... அப்படியொரு ஹாஸ்பிட் டலே நுங்கம்பாக்கம் ஏரியாவில் இல்லையே...!"

"ரோஜா ஹாஸ்பிட்டல்ன்னு போர்டு எதுவும் இருக் காது. பொதுவா அந்த ஹாஸ்பிட்டலோடு காண்டாக்ட் இருக்கிறவங்க அந்த ஹாஸ்பிட்டலை செல்லமாய் ரோஜா ஹாஸ்பிட்டல்ன்னுதான் கூப்பிடுவாங்க. உண்மை யிலேயே அந்த ஹாஸ்பிட்டலோட பேரு ரோகிணி ஜானகிராமன் ஹாஸ்பிட்டல். ரோகிணியில் 'ரோ'வையும் ஜானகிராமனில் 'ஜா'வையும் சேர்த்து 'ரோஜா'ன்னு கூப்பிடுவாங்க..."

"தேங்க்யூடா..."

"டேய்... தேங்க்யூ சொல்லிட்டு போனை வெச்சுடாதே! எங்க ஹாஸ்பிட்டல் எல்லைக்குள்ளே நுழைஞ்சிருக்கே... என்ன விஷயம்...? எதுக்காக இந்த என்கொய்ரி...?"

"சொல்றேன்...! அதுக்கு முன்னாடி ஒரு விஷயம். உனக்கு டாக்டர் ரோகிணி ஜானகிராமன் நல்ல பழக்கமா...?"

"பழக்கம்தான்..., ஏன்?"

"நல்லாப் பேசுவாங்களா...?"

"வெரி ஜோவியல்..."

"நீயும் நானும் அந்த டாக்டரை சந்திச்சு பேசறோம். நீ இப்போ எங்கேயிருக்கேன்னு சொல்லு... வந்து பிக்கப் பண்ணிக்கறேன்."

"ஆயிரம் விளக்கு. அம்பாள் பில்டிங் தெரியுமா?"

"தெரியும்..."

"அந்த பில்டிங் வாசலில் இருக்கிற ஒரு டீக்கடையில் இடது கையில் டீ டம்ளரும் வலது கையில் மசால் வடையுமாய் உட்கார்ந்திருக்கேன் வா."



## 10



இன்ஸ்பெக்டர் செந்தில்நாதன் திருநாகேஸ்வரம், நாகம்மை நகரின் ஐந்தாவது குறுக்குத் தெருவில் இருந்த சங்கரநாராயணனின் வீட்டுக்குப் போனபோது ஒரு இளம்பெண் சிட்அவுட்டில் உட்கார்ந்து புத்தகமொன்றைப் புரட்டிக் கொண்டிருந்தாள். செந்தில்நாதன் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே வருவதைப் பார்த்ததும் எழுந்து நின்றாள்.

"யா...யார் வேணுங்க...?"

"இது சங்கரநாராயணன் வீடுதானே...?"

"ஆமா..."

"அவரைப் பார்க்கணுமே?"



"அவர் வெளியே போயிருக்காரே?"

"நான் சென்னையிலிருந்து வர்றேன். போலீஸ் டிபார்ட்மெண்ட். இன்ஸ்பெக்டர் செந்தில்நாதன்..." அடையாள அட்டையை எடுத்துக் காட்டினார்.

"போ... போலீஸா...?" அந்தப் பெண்ணின் முகம் சட்டென்று வெளிறிப் போயிற்று.

செந்தில்நாதன் புன்னகைத்தார். "போலீஸ்ன்னாதும் ஏம்மா பயப்படறீங்க...? ஒரு கேஸ் விஷயமாய் அவர் கிட்டே ஒரு சின்ன என்கொய்ரி. அவ்வளவுதான்... நீங்க அவருடைய மனைவியா?"

"ஆமா..."

"வெளியே போயிருக்கிற சங்கரநாராயணன் எப்ப திரும்புவார்?"

"ஒரு அரைமணி நேரத்துக்குள்ளே வந்துடறதா சொல்லிட்டுப் போனார். நீங்க உள்ளே வந்து உட்கார்ங்க..."

செந்தில்நாதன் சிட்அவுட்டில் போடப்பட்டிருந்த நாற்காலியொன்றில் போய் உட்கார்ந்தார்.

"உங்க பேர் என்னம்மா?"

"சரளா..."

"உங்க மாமனார் மாமியார் ஐ...மீன் சிவராமனும், வைதேகியும் உயிரோடு இல்லைன்னு கேள்விப்பட்டேன்."

"ஆமா... அத்தையும் மாமாவும் அடுத்தடுத்து மாரடைப்பு ஏற்பட்டு இறந்து போயிட்டாங்க..."

''உங்க கணவர் சங்கரநாராயணன் இப்போ என்ன பிசினஸ் பண்றார்...?''

''ரியல் எஸ்டேட்...!'' என்று சொன்ன சரளா செந்தில் நாதனிடம் தயக்கமான குரலில் கேட்டாள்.

''ஏதோ ஒரு கேஸ் விஷயமாய் என்னோட கணவரை விசாரிக்க வந்ததாய் சொன்னீங்க. அது என்ன கேஸ்?''

''ஒண்ணுமில்லேம்மா...! உங்க மாமனார் ஒரு கஞ்சா வழக்கில் மாட்டிகிட்டபோது லாயர் சிற்றரசு அந்த வழக்கில் வாதாடி ஜெயிச்சுக் கொடுத்தார். அந்த விஷயம் உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியும்... என்னோட கணவர் சொல்லியிருக்கார்.''

''அந்த லாயர் சிற்றரசு இப்போ திடீர்ன்னு காணாமே போயிட்டார். அவராகவே காணாமே போனாரா? இல்லை... அவரை யாராவது கடத்திகிட்டு போயிட்டாங் களான்னு தெரியலை. இதுபற்றி உங்க கணவர்க்கு ஏதாவது தெரிஞ்சிருக்கலாம் என்கிற எண்ணத்தில்தான் நான் சென்னையிலிருந்து புறப்பட்டு வந்தேன்.''

சரளா ஒன்றும் பேசாமல் இறுகிய முகத்தோடு நிற்க, செந்தில்நாதன் கேட்டார்.

''உங்க கல்யாணத்துக்கு சிற்றரசு வந்தாரா?''

''வரலை...'' என்று சொன்ன சரளாவின் முகம் வெகுவாய் மாறியிருக்க, அதை கவனித்துவிட்ட செந்தில்நாதன் கேட்டார்.

''என்ன...லாயர் சிற்றரசுவோட பேரைச் சொன்னதுமே உங்க முகம் ஒரு மாதிரியாயிடுச்சு...?''

''அ... அ... அது வந்து... ஒண்ணும் இல்ல...''



''இதோ பாருங்கம்மா... ஒண்ணுமில்லேன்னு உங்களுடைய உதடுகள் சொன்னாலும் ஏதோ இருக்குன்னு உங்க முகம் சொல்லுது. ஏதாவது பிரச்னையிருந்தா என்கிட்டே சொல்லுங்கம்மா...''

சரளா சில விநாடிகள் தயங்கிவிட்டு பின் தொடர்ந்தாள்.

''லாயர் சிற்றரசு காணாமே போயிட்டார்ன்னு நீங்க சொன்னதிலிருந்து... என் மனசுக்குள்ளே ஒரு பயம் நுழைஞ்சுருச்சு. டென்ஷனாவும் இருக்கு...''

''எதுக்கு டென்ஷனும் பயமும்...?''

''லாயர் சிற்றரசு காணாமே போன மாதிரி என்னோட கணவரும் காணாமே போயிடுவாரோன்னு எம் மனசுக்குள்ளே ஒரு கலக்கம்.''

''என்னம்மா இது...! லாயர் காணாமே போனதுக்கும் உங்க கணவர்க்கும் என்ன சம்பந்தம்?''

''ஸார்... நீங்க ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டராய் இருக் கிறதால உங்ககிட்டே உண்மையைச் சொல்றதில் தப் பில்லை... என்னோட கணவர் இப்போ வெளியே போயிருக்கிறதாய் உங்ககிட்டே சொன்னேன். அவர் எங்கே போயிருக்கிறார் தெரியுமா?''

''சொல்லுங்க...''

''போலீஸ் ஸ்டேஷனுக்கு...''

''எதுக்கு...?''

''ரெண்டு நாளைக்கு முன்னாடி போலீஸ் ஸ்டேஷனில் என்னுடைய கணவர் ஒரு புகார் கொடுத்திருந்தார். அது சம்பந்தமாய் அந்த ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் கொஞ்ச

நேரத்துக்கு முந்தி போன் பண்ணியிருந்தார். அதுக்காக புறப்பட்டு போயிருக்கார்.''

''என்ன புகார்...?''

''அது... வந்து...''

''சொல்லுங்கம்மா... என்ன புகார்?''

''ஒரு நிமிஷம் ஸார்...!'' சொன்ன சரளா உள்ளே போய் ஒரு ப்ரௌன் நிற கவரைக் கொண்டு வந்தாள்.

பிரித்தாள்.

கவரிலிருந்து நான்காய் மடிக்கப்பட்ட ஒரு கடிதத்தையும் ஒரு புத்தகத்தையும் எடுத்தாள். செந்தில்நாதனின் பார்வை அந்தப் புத்தகத்தின் தலைப்புக்குப் போயிற்று.

'கனவுகளும் அதன் பலன்களும்.'



11

மது மெடிக்கல் ரெப் ராஜராஜனை தன் பைக்கில் பிக்கப் செய்து கொண்டு டாக்டர் ரோகிணி ஜானகிராமனைப் பார்க்கப் போயிருந்தபோது வெளி நோயாளிகள் கூட்டம் அவ்வளவாக இல்லை.

ஒரு ஐந்து நிமிஷம் காத்திருந்து டாக்டரைப் பார்த்தார்கள். ரோகிணி ஜானகிராமன் ராஜராஜனைப் பார்த்ததும் கிண்டலடித்தார்.



''என்ன ராஜராஜன்... வளைகாப்பு சீமந்தம் எப்போ?''

''ராஜராஜன் திகைத்தான்.

''என்ன டாக்டர்... எனக்கு இன்னும் கல்யாணமே ஆகலை. அதுக்குள்ளே வளைகாப்பு சீமந்தம்ன்னு போயிட்டீங்க...?''

''நான் கேட்டது உனக்கு...!''

''எனக்கா...?''

''ம்... என்னிக்காவது கண்ணாடி முன்னே நின்னு உன்னோட வயித்தைப் பார்த்து இருக்கியா...?''

''ஓ...! என்னோட தொப்பையைச் சொல்றீங்களா... மேடம்...? எவ்வளவுதான் டயட் இருந்தாலும் வாக்கிங் போனாலும் தொப்பை குறையமாட்டேங்குதே மேடம்...?''

''தினசரி ராத்திரி பத்து மணிக்குமேல் பீர் சாப்பிட்டா தொப்பை எப்படி குறையும்...?''

''என்ன மேடம்... சொல்றீங்க... நான் பீர் சாப்பிடறேனா...? அபாண்டம். பொய்... நான் மோர் சாப்பிடக்கூட யோசனை பண்றவன்.''

''சரி...சரி... இன்னொரு நாளைக்கு இந்த சண்டையை வெச்சுக்குவோம். உன் ஃப்ரண்ட்டுக்கு முன்னாடி வேண்டாம். உட்கார்...''

உட்கார்ந்தார்கள்.

''ஸார் யாரு?''

''மேடம்...! ஹி ஈஸ் மை ஃப்ரண்ட். பேரு மதுசூதனன். நான் மதுன்னு கூப்பிடுவேன். இவர் ஒரு பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்ஸி ஒண்ணை வெச்சு நடத்திக்கிட்டு வர்றார். ஒரு கேஸ் விஷயமா உங்ககிட்ட ஒரு சின்ன என்கொயரி.''

"என்கிட்டே என்கொய்ரியா... வாட் அபௌட்?"

மது மெல்ல பேச்சை ஆரம்பித்தான்.

"டாக்டர்...! உங்களுக்கு டி.வி. சீரியல் நடிகை ஸ்வரூபாவைத் தெரியுமா...?"

"தெரியும்..."

"எப்படித் தெரியும்... அவங்க உங்க பேஷண்டா...?"

டாக்டரம்மாள் புருவங்களை உயர்த்தினாள்.

"எதுக்காக கேட்கறீங்க...?"

"ஒரு கேஸ் விஷயமாய்..."

"என்ன கேஸ்...?"

"டாக்டர்...! அது வந்து..."

"சொல்லுங்க... என்ன கேஸ்...?"

மது சொல்வதற்கு யோசிக்க, ராஜராஜன் குறுக்கிட்டு சொன்னான். "மேடம்...! ஸ்வரூபாவுக்கு ஒரு லெட்டரும், அதோடு ஒரு புத்தகமும் வந்தது. அந்த புத்தகத்தோட தலைப்பு 'கனவுகளும் அதன் பலன்களும்!' அந்த லெட்டர்ல ஒரு கனவு எழுதப்பட்டு இருந்தது..."

"என்ன கனவு...?"

மது இரண்டு நிமிஷங்கள் செலவழித்து எல்லா வற்றையும் சொல்லி முடித்தான். உன்னிப்பாய் கேட்டுக் கொண்ட டாக்டரம்மாள் யோசிப்போடு தன்னுடைய மூக்குக் கண்ணாடியைக் கழற்றி வைத்தாள்.

"லெட்டர்க்கு கீழே L.O.ன்னு போட்டு இருந்ததாய் சொன்னீங்க. அதுக்கு என்ன அர்த்தம்?"



"தெரியலை டாக்டர்...'

"இது ஒரு வகையான கொலை மிரட்டல் இல்லையா?"

"எஸ்...!"

"ஸ்வரூபா ஏன் போலீஸுக்குப் போகலை...?"

"ஸ்வரூபா அந்த லெட்டரையும் புத்தகத்தையும் ஒரு பொருட்டாவே நினைக்கலை. அவங்க தோழி வசந்தி எனக்கு போன் பண்ணி விஷயத்தை சொன்னதால்தான் நான் இன்வெஸ்டிகேஷனில் இறங்கினேன்..."

"சரி... இப்ப உங்களுக்கு என்ன தகவல் வேணும்?"

"ஒரு பத்திரிகையில் ஸ்வரூபாவைப் பற்றி ஒரு 'கிசு கிசு' போட்டு இருந்தாங்க. அது உண்மையா பொய்யான்னு தெரிஞ்சுக்கத்தான் உங்ககிட்டே வந்தேன்."

"என்ன 'கிசு கிசு'...?"

மது சில விநாடிகள் தயங்கிவிட்டு மெல்லிய குரலில் சொன்னான். "ஸ்வரூபா இந்த ஹாஸ்பிட்டலில் தங்கி அபார்ஷன் பண்ணிக்கிட்டதாய் அந்தப் பத்திரிகையில் போட்டிருந்தாங்க..."

டாக்டரம்மாள் புன்னகைத்தாள்.

"ஓ.கே...! அந்த செய்தி உங்களுக்கு உண்மைதான்னு தெரிய வந்தா உங்களோட அடுத்தக்கட்ட நடவடிக்கை என்ன?"

"ஸ்வரூபாவை அபார்ஷன் பண்ணக்கூடிய அளவுக்கு கொண்டு வந்தவன் யார் என்கிற உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும்."

"அது உங்களால் முடியுமா?"

"முடியும்..."

"இதோ பாருங்கள் மிஸ்டர் மது...! ஸ்வரூபாவுக்கு ஏதோ ஆபத்து என்கிற காரணத்துக்காகத்தான் உங்ககிட்டே உண்மையைச் சொல்றேன். ஸ்வரூபாவுக்கு இந்த ஹாஸ்பிட்டல்ல அபார்ஷன் நடக்கறது இது ரெண்டாவது தடவை. நான் அந்தப் பெண்கிட்டயே கர்ப்பத்துக்கு காரணம் யார்ன்னு கேட்டேன். அவ சொல்ல மறுத்துட்டா. 'இனி ஒரு தடவை கருத்தரிச்சா என்னோட ஹாஸ்பிட்டலுக்கு வராதே'ன்னு அவளை வார்ன் பண்ணி அனுப்பிட்டேன்."

"இந்தத் தகவல்கள் எனக்குப் போதும் டாக்டர்...! ஸ்வரூபாவுக்கு வந்த கனவுக் கடிதத்துக்கும் அந்தப் புத்தகத்துக்கும் காரணமான நபர் யார்ங்கிறதைக் கண்டுபிடிச்சுடுவேன்."

மது சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவனுடைய செல்போன் ரிங்டோனை வெளியிட்டது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தான்.

வசந்தி.

காதுக்கு ஒற்றிக் கொண்டே கேட்டான்.

"நான் மது. சொல்லுங்க வசந்தி...!"

"மது...! நீங்க இப்போ எங்கே இருக்கீங்க?"

"ஒரு ஃப்ரண்ட் வீட்ல...! ஏன் என்ன விஷயம்?"

"நீங்க உடனே புறப்பட்டு ஸ்வரூபா வீட்டுக்கு வர முடியுமா?"

"ஏன்.... என்ன விஷயம்?"



"போனில் சொல்லக்கூடிய விஷயம் இல்லை. உடனே புறப்பட்டு வாங்க... ப்ளீஸ்..."

வசந்தியின் குரலில் ஏராளமான அவசரம்.



## 12



செந்தில்நாதனிடம் சரளா கனவுகளும் அதன் பலன்களும் என்ற புத்தகத்தையும் கடிதத்தையும் கொடுத்துவிட்டு கவலையும் கலக்கமும் நிரம்பிய குரலில் சொன்னாள்.

"ஸார்... இந்த புத்தகமும் கடிதமும் நாலு நாளைக்கு முன்னாடி தபாலில் வந்தது. மொதல்ல இந்த லெட்டரைப் படிச்சுப் பாருங்க..."

செந்தில்நாதன் அந்த லெட்டரைப் படித்துப் பார்த்தார்.

**அன்புள்ள சங்கரநாராயணன்!**

**நேற்று விடியற்காலையில் ஒரு கனவு கண்டேன். நீ ஆற்றில் குளிப்பதற்காக மாற்று உடைகளோடு செல்கிறாய். தொலைவில் ஆறு ஆர்ப்பரித்து ஓடிக் கொண்டிருக்கிறது. நீ ஆற்றை நெருங்குகிறாய். கரையில் உடைகளைக் களைந்துவிட்டு உள்ளாடையோடு படிகளில் இறங்கி ஆற்றில் காலை வைக்கிறாய். என்ன ஒரு ஆச்சர்யம்...! ஆற்றில் ஒரு சொட்டுத் தண்ணீர் இல்லை. எல்லாம் மணல். நீ திகைத்துப் போய்**

நிற்கிறாய். எனக்கு தூக்கத்திலிருந்து விழிப்பு வந்துவிட்டது. இந்த கனவுக்கு என்ன பலன் என்று தெரிந்து கொள்வதற்காக 'கனவுகளும் அதன் பலன்களும்' என்ற புத்தகத்தைப் புரட்டினேன். என்ன பலன் போட்டிருந்தது தெரியுமா? தெரிந்து கொள்ள விரும்பினால் இத்துடன் நான் அனுப்பியுள்ள புத்தகத்தைப் புரட்டி 117ம் பக்கம் பார்க்கவும்.

இப்படிக்கு

L.O.

செந்தில்நாதன் நிமிர்ந்தார்.

"117ம் பக்கம் என்ன பலன் போட்டிருந்தது?"

"நீங்களே பாருங்க ஸார்."

செந்தில்நாதன் அந்தப் புத்தகத்தைப் புரட்ட 117ம் பக்கம் பார்த்தார். பேனாவால் அடிக்கோடு இடப்பட்ட அந்த வரிகள் பார்வைக்குக் கிடைத்தது.

**குளிக்கப் போகும்போது ஆறு வறண்டுவிட்டது போல் கனவு கண்டால் உன்னுடைய ஆயுள் முடியப் போகிறது என்று அர்த்தம்.**

செந்தில்நாதனின் கண்கள் திகைத்தன.

"யார் இந்த எல்.ஓ...?"

"தெரியலை ஸார்."

"போலீஸில் புகார் கொடுத்ததுக்கு அவங்க என்ன சொன்னாங்க...?"

"உங்க ஃப்ரண்ட்ஸ் வட்டாரத்திலேயும் உறவு வட்டாரத்திலேயும் உங்களுக்கு வேண்டாதவங்க யார் யார் இருக்காங்களோ அவங்களையெல்லாம் லிஸ்ட் பண்ணிக் கொடுங்கன்னு சொன்னாங்க. அப்படி யாரும் இல்லைன்னு என் கணவர் சொல்லிட்டார்."



"இப்ப உங்க கணவர் போலீஸ் கூப்பிட்டாங்கன்னு ஸ்டேஷனுக்கு போயிருக்கார். இல்லையா?"

"ஆமா... ஸார்..."

"போலீஸ் ஸ்டேஷன் எங்கேயிருக்கு?"

"ரெண்டு தெரு தள்ளி... பஞ்சாயத்து பள்ளிக்கூடம் ஒண்ணு வரும்... அதுக்கு கொஞ்சம் தள்ளி போலீஸ் ஸ்டேஷன் இருக்கு..."

"சரி... நான் ஸ்டேஷனுக்கே போய் சங்கரநாராயணனைப் பார்த்துக்கறேன்..."

செந்தில்நாதன் எழுந்து கொண்டார். சரளா கவலையான குரலில் கேட்டாள்.

"ஸார்...! என்னோட கணவர்க்கு எந்த ஆபத்தும் வந்துடாதே?"

"ஒரு ஆபத்தும் வராது. பயப்படாதீங்கம்மா..."

"ஸ...ஸார்."

"சொல்லம்மா..."

"லாயர் சிற்றரசு காணாமே போனதுக்கும் என் கணவர்க்கு வந்த இந்த கனவுக் கடிதம் புத்தகத்துக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமா ஸார்...?"

"அப்படி இருக்கிற மாதிரி எனக்குத் தெரியலேம்மா... அதுவேற... இதுவேற...! இருந்தாலும் சங்கரநாராயணன்கிட்டே நான் முறையா விசாரணை பண்ணிப் பார்த்துடறேன்..."

வீட்டினின்றும் செந்தில்நாதன் வெளியே வந்தார். ஐந்து நிமிஷ நடையில் இரண்டு தெருக்களைக் கடந்து அடுத்த தெருவுக்குள் நுழைந்தார். பஞ்சாயத்துப் பள்ளிக் கூடம் குழந்தைகளின் இரைச்சலோடு வந்தது. கொஞ்சம் தள்ளி ஒரு பெரிய வேப்ப மரத்துக்கு கீழே அந்த போலீஸ் ஸ்டேஷன் சிவப்புப் பெயிண்ட் பூச்சில் தெரிய செந்தில் நாதன் அதை நோக்கி நடந்தார். ஸ்டேஷனுக்கு வெளியே கான்ஸ்டபிள் ஒருவர் நிற்க, அவரை நெருங்கினார்.

''இன்ஸ்பெக்டரைப் பார்க்கணும்.''

''நீங்க...?''

செந்தில்நாதன் தன்னுடைய உத்யோக அட்டையைக் காட்டி அறிமுகப்படுத்திக் கொண்டதும் கான்ஸ்டபிள் சற்றே பதட்டமாகி அட்டென்ஷனுக்கு வந்து நின்றார்.

''இன்ஸ்பெக்டர் உள்ளே இருக்கார் ஸார். போய்ப் பாருங்க.''

செந்தில்நாதன் உள்ளே போனார். ஃபைல் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்த அந்த இளவயது இன்ஸ்பெக்டரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும் அவர் நாற்காலியைக் காட்டினார். நேம் பேட்ஜ் சேகர் என்று சொன்னது.

''ப்ளீஸ் ஸீட்டட் ஸார்...''

செந்தில்நாதன் உட்கார்ந்ததும் அந்த இன்ஸ்பெக்டர் பார்த்துக் கொண்டிருந்த ஃபைலை மூடி வைத்துவிட்டு கேட்டார்.

''சொல்லுங்க ஸார்... என்ன விஷயம்?''

''சங்கரநாராயணன் இங்கே வந்தாரா?''



''எந்த சங்கரநாராயணன்...?''

''நாகம்மை நகர் ஐந்தாவது குறுக்குத் தெருவில் குடியிருக்கும் சங்கரநாராயணன்.''

சேகர் நெற்றி சுருங்கியது!

''ஓ... அவரா...? அவர் வரலையே!''

''என்னது! வரலையா...? நீங்க அவர்க்கு போன் பண்ணி ஸ்டேஷனுக்கு வரச் சொன்னீங்களாமே...?''

''நானா...?''

''எஸ்...''

''அப்படின்னு யார் சொன்னது...?''

''சங்கரநாராயணனோட மனைவி சரளா...''

''நான் அவர்க்கு போன் பண்ணலையே...? நேத்து ராத்திரி பக்கத்து கிராமத்துல கள்ளச்சாராயம் காய்ச்சறதா கேள்விப்பட்டு அங்கேபோய் விடிய விடிய வேட்டையை நடத்திட்டு விடியற்காலையில் வீட்டுக்கு வந்து நல்லாத் தூங்கி ரெஸ்ட் எடுத்துட்டு இப்பத்தான் ஸ்டேஷனுக்கு வந்து ஒரு பழைய கொலைக் கேஸ் விஷயமாய் ஒரு தகவலைத் தேடி ஃபைலைப் புரட்டிக்கிட்டு இருக்கேன்.''

''ஸ்டேஷனிலிருந்து வேறு யாராவது போன் பண்ணிப் பேச வாய்ப்பு இருக்கா...?'' செந்தில்நாதன் கேட்க - சேகர் உதட்டைப் பிதுக்கினார்.

''எனக்குத் தெரியாமே அப்படி யாரும் பேசியிருக்க மாட்டாங்க. அவரோட மனைவிகிட்டே மறுபடியும் ஒரு தடவை போன் பண்ணினது யார்ன்னு விசாரிச்சுப் பாருங்களேன்!''

"சரி... இந்த போலீஸ் ஸ்டேஷன்ல அவர் ஒரு புகார் கொடுத்து இருக்காரா?"

"ஆமாம்..."

"என்ன புகார்...?"

"அவர்க்கு யாரோ ஒரு நபர் ஒரு மொட்டைக் கடிதம் எழுதிப் போட்டு இருக்கான். அந்த நபர் ஏதோ ஒரு கனவு கண்டதாகவும் அந்த கனவின்படி சங்கரநாராயணனின் ஆயுள் முடியப் போகிறது என்றும் லெட்டர்ல மிரட்டி யிருக்கான். அந்த லெட்டரை என்கிட்டே கொண்டு வந்து காட்டினார். நான் படிச்சுப் பார்த்துட்டு யாரோ விளை யாட்டுக்கு எழுதியிருக்கலாம்ன்னு சொன்னேன். நான் சொன்னதை அவர் ஒத்துக்கலை. 'யாரோ எனக்கு மறைமுகமாய் கொலை மிரட்டல் விட்டு இருக்காங்க. அந்த நபர் யார்ன்னு நீங்க கண்டுபிடிச்சு கைது பண் ணனும் ஸார்'ன்னு சொன்னார். நானும் அவருடைய புகாரை ஃபைல் பண்ணிகிட்டேன்."

"அந்த புகாரின் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுத்தீங்களா?"

"சங்கரநாராயணனுக்கு அப்படியொரு மிரட்டல் கடிதம் வந்ததுக்குக் காரணம் அவரோட நண்பர்களோ அல்லது வேண்டாத உறவினர்களோ இருக்கலாம் என்கிற கோணத்தில் விசாரணையை மூவ் பண்ணலாம்ன்னு இருந்தேன். அதுக்காக அவர்கிட்டேயிருந்து ஒரு லிஸ்ட்டையும் கேட்டிருந்தேன்."

"லிஸ்ட்டை கொண்டு வந்து கொடுத்தாரா?"

"இல்லை..."

"நீங்க ஒண்ணும் கேட்கலையா...?"



"கேட்கலை..."

"லுக் மிஸ்டர் சேகர்...! சங்கரநாராயணன் உங்ககிட்டே கொடுத்த புகார்ல எந்த விளையாட்டுத் தனமும் இல்லை. அதுல ஒரு விபரீதம் இருக்கு..."

"விபரீதமா...?"

"எஸ்...!"

"சென்னையில் இருக்கிற சிற்றரசு என்கிற லாயர் ஒருத்தர் திடீர்ன்னு காணாமே போயிட்டார். சங்கரநாராய ணனும் அவருடைய அப்பாவும் ஒரு கஞ்சா வழக்கில் மாட்டிக்கிட்டபோது அந்த லாயர் சிற்றரசுதான் அவங் களுக்காக வாதாடி கேஸிலிருந்து விடுதலை வாங்கிக் கொடுத்தார். இந்த லாயர் இப்போ காணாமே போயிட்டார். பட் போலீஸ் தரப்பிலிருந்து நாங்க பண்ற கெஸ் ஒர்க் 'லாயர் கடத்தப்பட்டு இருக்கலாம்'ங்கிறதுதான்."

"ஈஸிட்...?" என்ற இன்பெக்டர் சேகர் பெருமூச் சொன்றை வெளியேற்றிவிட்டு கேட்டார்.

"லாயர் சிற்றரசு காணாமே போனதுக்கும் சங்கர நாராயணனுக்கும் வந்த கனவு கடிதத்துக்கும் ஏதாவது தொடர்பு இருக்கும்ன்னு நினைக்கறீங்களா...?"

"ஷ்யூர்...! சிற்றரசு காணாமப் போனதை இன்வெஸ்டி கேட் பண்ணி தகவல்கள் திரட்டத்தான் நான் கும்ப கோணம் வந்தேன். பட்... இங்க, சங்கரநாராயணனுக்கு மிரட்டல் கடிதம் வந்திருக்கிறதைப் பார்த்தா ரெண்டு சம்பவத்துக்கும் தொடர்பு இருக்கும்னுதான் நினைக் கிறேன்."

"ஸார்! நீங்க இதையெல்லாம் சொன்ன பிறகுதான் எம் மனசுக்குள்ளே ஒரு சந்தேகம் எட்டிப் பார்க்குது. நான் சங்கர

நாராயணனுக்கு போன் பண்ணி ஸ்டேஷனுக்கு வரச் சொல்லவேயில்லை. பட் யாரோ என்னை மாதிரியே பேசி அவரை வீட்டை விட்டு வெளியே கிளப்பியிருக்காங்க. மொதல்ல அவர் எங்கேயிருக்கார்ன்னு... கண்டுபிடிக்கணும். வீட்டுக்கு போன் பண்ணி அவர் வந்துட்டாரான்னு மிஸஸ் சங்கரநாராயணன்கிட்டே கேட்கலாமா?"

"ம்...கேளுங்க..." செந்தில்நாதன் சொல்ல இன்ஸ்பெக்டர் சேகர் தனக்குப் பக்கத்தில் இருந்த டெலிபோனை நகர்த்தி வைத்துக் கொண்டு ரிஸீவரை எடுத்தார்.



## 13

மது பைக்கை விரட்டிக் கொண்டு ஸ்வரூபாவின் வீடு போய் சேர்ந்தபோது வசந்தி சிட்அவுட்டில் இருட்டடித்த முகத்தோடு கவலையாய் நின்றிருந்தாள். மது பைக்கை ஸ்டாண்டிட்டு விட்டு அவளை நெருங்கினான்.

"சொல்லுங்க... வசந்தி...! ஈஸ் தேர் எனி ராங்க்?"

"எஸ்..."

"என்ன...?"

"உள்ளே வாங்க சொல்றேன்."

போனார்கள்.

வீடு வெறிச்சென்று இருந்தது.



மது கேட்டான்.

"உங்க தோழி ஸ்வரூபா எங்கே...?"

வசந்தி பதில் ஒன்றும் பேசாமல் இறுகிய முகத்தோடு டீபாயின் மேல் ஒட்டப்பட்டிருந்த அந்த துண்டு பேப்பரைக் காட்டினாள். மதுவின் பார்வை டீபாய்க்குப் போயிற்று.

ஒரு அடி நீள, இரண்டங்குல அகலத்தில் அந்த துண்டு பேப்பர் ஒட்டப்பட்டு இருக்க, அதில் சிவப்பு ஸ்கெட்ச் பேனாவால் எழுதப்பட்ட ஒரு வாசகம் பளிச்சென்று பார்வைக்குக் கிடைத்தது.

**கனவு பலிக்கப் போகிறது.**

மது படித்துவிட்டு வசந்தியிடம் நிமிர்ந்தான்.

"என்னங்க... இது...? இதை இங்கே ஒட்டினது யாரு...?"

"தெரியலை...! நான் வழக்கம்போல் இந்த நேரத்துக்கு ஸ்வரூபாவைப் பார்க்க வருவேன். இன்னிக்கும் வந்தப்ப வீட்டுக்கதவு லேசாய் சாத்தியிருந்தது. ஸ்வரூபான்னு குரல் கொடுத்துகிட்டே உள்ளே வந்தேன். ஸ்வரூபா இல்லை. எங்கே போயிட்டான்னு வீடு பூராவும் தேடிப் பார்த்துட்டு சோபா செட் பக்கம் வந்தபோதுதான் டீபாயில் ஒட்டப்பட்டிருந்த இந்த துண்டு பேப்பரைப் பார்த்தேன்."

"ஸ்வரூபா எங்கே போனான்னு உங்களுக்குத் தெரியலை...?"

"தெரியலை...! இந்த துண்டு பேப்பரைப் பார்த்ததும் எம்மனசுக்குள்ள பயம். பதட்டம். அதான் உங்களுக்கு போன் பண்ணினேன். மது... ஸ்வரூபாவுக்கு ஏதோ

ஆபத்துன்னு நினைக்கிறேன். இனியும் நாம பொறுமை யாய் இருக்க முடியாது. போலீஸுக்கு போயிடுவோம்.''

''கொஞ்சம் பொறுங்க வசந்தி...! ஸ்வரூபாவுக்கு என்ன நடந்து இருக்கும்ன்னு கெஸ் பண்ணிப் பார்க்கலாம். அவங்க வழக்கமாய் போற இடங்களுக்கு போன் பண் ணிப் பார்க்கலாம்.''

''நான் அங்கெல்லாம் போன் பண்ணிப் பார்த்துட் டேன்... ஸ்வரூபா வரலைன்னு சொல்லிட்டாங்க...''

மது பெருமூச்சு விட்டான்.

''ஸ்வரூபாவோட பாதுகாப்பு விஷயத்தில் நாம கொஞ்சம் அலட்சியமாய் இருந்துட்டோம். பிரைவேட் செக்யூரிட்டியை ஏற்பாடு பண்ணியிருக்கணும்.''

''நான் சொன்னேன் மது... அவ வேண்டாம்ன்னு சொல்லிட்டா...! ஸ்வரூபா சுபாவத்துல ரொம்பவும் தைரியசாலி... எதுக்காகவும் யார்க்காகவும் பயப்பட மாட்டா. அந்த கனவுக் கடிதம் எனக்கு வந்து இருந்தா நான் மிரண்டு போயிருப்பேன். பட் அவ அதை ஒரு வேஸ்ட் பேப்பர் மாதிரி ட்ரீட் பண்ணினா...!''

''அளவுக்கு அதிகமான துணிச்சல் என்னிக்குமே ஆபத்தானதுதான்.''

''மது...! இனியும் நாம் லேட் பண்ணக்கூடாது. வாங்க... போலீஸுக்குப் போயிடலாம்...''

வீட்டைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்தார்கள். மதுவின் பைக்கில் ஏறிக் கொண்டாள் வசந்தி.

பைக்கை விரட்டிக் கொண்டே மது சொன்னான்.

''வசந்தி...! நான் உங்ககிட்டே சில கேள்விகளைக் கேட்பேன். நீங்க தப்பா நினைச்சுக்கக்கூடாது.''



''இல்ல கேளுங்க...''

''உங்க தோழி ஸ்வரூபா எல்லா விஷயங்களையும் உங்ககிட்டே சொல்கிற டைப்பா...?''

''ம்...சொல்லுவா...''

''எல்லா விஷயங்களையுமா...?''

''ம்... சொல்லுவா... ஒண்ணையும் மறைக்க மாட்டா.''

''தனக்கு ரெண்டு தடவை அபார்ஷன் ஆனதைப்பத்தி உங்ககிட்டே எப்பவாவது சொல்லியிருக்காளா?''

வசந்தி திடுக்கிடுவதை மதுவினால் உணர முடிந்தது.

''எ... எ... என்ன சொன்னீங்க... அபார்ஷனா?''

''எஸ்... உங்க தோழி ரெண்டு தடவை கருச்சிதைவு பண்ணியிருக்காங்க. இந்த உண்மையும் எனக்கு சில நிமிஷங்களுக்கு முன்னாடிதான் தெரிஞ்சுது.''

''உங்களுக்கு யார் சொன்னது?''

''அபார்ஷன் பண்ணின டாக்டர்...''

''யார் அந்த டாக்டர்...?''

''ஸாரி மிஸ் வசந்தி...! அந்த டாக்டர் யார்ன்னு நான் சொல்ல முடியாது. டாக்டரோட பெயரை வெளியே சொல்லமாட்டேன்னு அவங்களுக்கு ப்ராமிஸ் பண்ணி யிருக்கேன்...''

''அந்த டாக்டர் ஏன் பொய் சொல்லியிருக்கக்கூடாது?''

''பொய் சொல்லக்கூடிய அளவுக்கு அந்த டாக்டர் ஒண்ணும் சீப்பானவர் கிடையாது. ஒரு பெரிய வெல் எக்யூப்ட் ஹாஸ்பிட்டலோட டாக்டர்...''

''இதோ பாருங்க மது... நானும் ஸ்வரூபாவும் சின் னத்திரை நடிகைகள். பொதுவாவே நடிகைகள்ன்னாலே

எல்லார்க்கும் இளப்பம். அவ கற்போடு இருக்க மாட்டாள்ன்னு நூத்துக்கு தொண்ணூத்தி ஒன்பது பேர் சத்தியம் பண்ண தயாராய் இருப்பாங்க. ஸ்வரூபாவை பிடிக்காதவங்க யாராவது இதுமாதிரியான புரளிகளைக் கிளப்பி விடுவாங்க."

"ஒரு டாக்டர்க்கு ஸ்வரூபா மேல் என்ன கோபம் இருக்க முடியும்...?"

"அந்த டாக்டர் யார்ன்னு நீங்க சொல்லுங்க காரணம் நான் சொல்றேன்..."

"ஸாரி... வசந்தி...! நீங்க நினைக்கிற மாதிரி உங்க தோழி சுத்தமானவங்க கிடையாது... அவங்களுக்கு ரெண்டு தடவை கருக்கலைப்பு நடந்திருக்கு... இது மறுக்க முடியாத உண்மை. இப்படிப்பட்ட ஒரு பிரச்னையினால் தான் ஸ்வரூபாவுக்கு அந்த கனவுக் கடிதம் வந்திருக்கு. இப்போ அவங்க காணாமே போனதுக்கும் இதுதான் காரணம்."

"எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை மது! ஸ்வரூபா தப்பான நடத்தையுள்ளவளாய் எனக்குத் தெரியலை. அவ ரொம்பவும் நல்ல டைப். கற்பு விஷயத்தில் ரொம்பவும் ஸ்ட்ராங்க்..."

"இதையே நீங்க திரும்பத் திரும்ப சொல்லிட்டிருக்கிறதுல எந்த பிரயோஜனமும் கிடையாது. என்னோட கெஸ் ஒர்க்படி ஸ்வரூபா யாராலோ கடத்தப்பட்டு இருக்காங்க. அவங்க உயிர்க்கு ஆபத்து ஏற்படறதுக்கு முன்பாக அவங்களை நாம காப்பாத்தியாகணும்... இப்போ நாம போலீஸ் ஸ்டேஷனுக்குப் போறதைக் காட்டிலும் போலீஸ் கமிஷனர் சுந்தரவேலையே பார்த்துடறது நல்லது..."



"அவரை உங்களுக்குத் தெரியுமா?"

"நல்லாவே தெரியும்... எத்தனையோ கேஸ்களில் அவர்க்கு நான் உதவி பண்ணியிருக்கேன். ஸ்வரூபாவோட விவகாரத்தை அவர்கிட்டே கொண்டு போயிட்டா போதும்... போலீஸ் ஸ்பெஷல் ஸ்குவாடை களம் இறக்கி அடுத்த சில மணி நேரங்களிலேயே ஸ்வரூபாவை நம் கண் முன்னாடி கொண்டு வந்து நிறுத்திடுவார்..."

"அப்படீன்னா அவர்கிட்டயே போலாம்."

பைக்கை விரட்டினான் மது. மனசுக்குள் ஸ்வரூபாவின் வீட்டு டீபாயின் மேல் எழுதப்பட்டு இருந்த 'கனவு பலிக்கப் போகிறது' என்ற வாசகம், ஒட்டப்பட்ட போஸ்டர் மாதிரி தெரிய வயிற்றுக்குள் சிட்ரஸ் அமிலம் சுரந்தது.

## 14

போலீஸ் கமிஷனர் சுந்தரவேல் தனக்கு முன்பாய் உட்கார்ந்திருந்த மதுவையும் வசந்தியையும் பார்த்தார். பின் பெருமூச்சொன்றை விட்டு தோள்களைக் குலுக்கினார்.

"இப்போ ஸ்வரூபா வீட்டில் இல்லை?"

"ஆமா ஸார்..."

''அதாவது கடத்தப்பட்டும் இருக்கலாம்?''

''மே...பி...ஸார்...''

''இந்த மாதத்தில் இது மூன்றாவது சம்பவம்.''

''மூன்றாவது சம்பவமா...?''

''எஸ்...''

''எப்படி ஸார்?''

''ஒரு லாயர். அவரோட பேர் சிற்றரசு. திடீர்ன்னு காணாமே போயிட்டார். காலையில் வாக்கிங் போனவர் வீட்டுக்குத் திரும்பவேயில்லை. அதேபோல் கும்ப கோணத்தில் சங்கரநாராயணன்னு ஒருத்தர். போலீஸ் இன்ஸ்பெக்டர் கூப்பிடறதாய் ஸ்டேஷனிலிருந்து போன் வந்தது. வீட்டை விட்டு கிளம்பிப் போனவர் போனவர் தான். போன வாரம் வரைக்கும் வீடு திரும்பலை. இப்போ ஸ்வரூபா.''

கமிஷனர் சொல்லச் சொல்ல மதுவும் வசந்தியும் ஒருத்தரையொருத்தர் கலவரமாய்ப் பார்த்துக் கொண் டார்கள். மது கேட்டான்.

''இந்த கடத்தல்களுக்குப் பின்னாடி யார் ஸார் இருக்காங்க?''

''அதைக் கண்டுபிடிக்கிற வேலையில்தான் ஒரு போலீஸ் டீம் மும்முரமாய் இயங்கிக்கிட்டிருக்கு...'' சொன் னவர் தனக்கு முன்னால் இருந்த இண்டர்காம் பட்டனை அழுத்திவிட்டு பேசினார்.

''செந்தில்நாதன்...! கொஞ்சம் என்னோட ரூம் வரைக் கும் வந்துட்டுப் போங்க...''

அடுத்த இரண்டாவது நிமிஷம் ஒரு சல்யூட்டோடு கமிஷனர்க்கு முன்பாய் வந்து நின்றார் செந்தில்நாதன்.



''உட்காருங்க...'' எதிரே இருந்த நாற்காலியைக் காட்டினார்.

உட்கார்ந்தார்.

கமிஷனர் தன்னுடைய ரிவால்விங் நாற்காலியில் ஒரு அரைவட்டம் அடித்துவிட்டு மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார்.

''செந்தில்நாதன்...! கும்பகோணத்தில் சங்கரநாராயண னுக்கு வந்த கனவுக் கடிதம் மாதிரியே டி.வி. நடிகை ஸ்வரூபாவுக்கும் வந்திருக்கு. அதை பிரைவேட் டிடெக்டிவ் ஏஜென்ஸியைச் சேர்ந்த மது இன்வெஸ்டிகேட் பண்ணிட் டிருக்கும்போதே ஸ்வரூபா காணாமே போயிருக்காங்க'' என்று ஆரம்பித்து எல்லாவற்றையும் சொல்லி முடிக்க, செந்தில்நாதன் முகத்தில் கலக்கம், கவலையோடு வசந் தியை ஏறிட்டார்.

''ஸ்வரூபா உங்களுக்குத் தோழி இல்லையா?''

''ஆமா ஸார்...''

''ஸ்வரூபா எந்த சந்தர்ப்பத்திலாவது லாயர் சிற்றரசு வோட பேரையோ, சங்கரநாராயணனோட பேரையோ உங்ககிட்டே சொல்லியிருக்காளா?''

''இல்ல ஸார்...''

''இந்த சென்னையில் அவளுக்கு சொந்த பந்தம் ஏதாவது?''

''யாரும் கிடையாது ஸார்.''

''எனி லவ் அஃபேர்ஸ்?''

''தமிழில் அவளுக்குப் பிடிக்காத வார்த்தை காதல்'' வசந்தி சொல்ல - செந்தில்நாதன் தொடர்ந்தார்.

''கும்பகோணத்தில் இருக்கிற சங்கரநாராயணனுக்கும் ஒரு கனவுக் கடிதம் வந்தது. ஸ்வரூபாவுக்கும் ஒரு கனவுக் கடிதம் வந்தது. லாயர் சிற்றரசுக்கும் ஒரு கனவுக் கடிதம் வந்து இருக்கலாம். அவர் அதைக் கிழித்துப் போட்டு விட்டு வெளியில் சொல்லாமலும் இருந்து இருக்கலாம். இப்போதைக்கு இந்த மூணு பேரும் கடத்தப்பட்டு இருக்காங்க... இந்த லிஸ்ட் இப்படியே இருக்குமா...? இன்னும் தொடருமான்னு தெரியலை... லாயர் சிற்றரசுவுக்கும் சங்கரநாராயணனுக்கும் ஒரு தொடர்பு இருந்தது. அதாவது சங்கரநாராயணனோட ஃபேமிலி கஞ்சா வழக்கில் மாட்டிக்கிட்டபோது லாயர் சிற்றரசுதான் கோர்ட்டில் வாதாடி 'அவர்கள் குற்றமற்றவர்கள்' என்கிற தீர்ப்பை வாங்கிக் கொடுத்தார். லாயரும் சங்கரநாராயணனும் கடத்தப்படுவதற்குக் காரணம் அந்த கஞ்சா வழக்குத்தான் என்பது உண்மையானால் டி.வி. நடிகையான ஸ்வரூபா ஏன் காணாமல் போகணும்? அதாவது ஏன் கடத்தப்படணும்...? வாட் வாஸ் த மோட்டிவ்...? ஸ்வரூபாவுக்கு லாயரையும் தெரியாது. சங்கரநாராயணனையும் தெரியாது'' செந்தில்நாதன் பேசப்பேச –

மது ''ஸார்.... ஒரு நிமிஷம்...!'' என்று குறுக்கிட்டான். அவர் 'என்ன' என்பதுபோல் பார்த்தார்.

மது தொடர்ந்தான். ''ஸார்! ஸ்வரூபா கடத்தப்பட்டதுக்குக் காரணம் அந்த கஞ்சா மேட்டர் கிடையாது.''

''பின்னே வேறு எதுவாய் இருக்கும்ன்னு நினைக்கறீங்க?''

''ஸ்வரூபா ரெண்டு தடவை கர்ப்பமாகி அபார்ஷன் வரைக்கும் போயிருக்காங்க. அந்த கர்ப்பத்துக்குரிய ஆண் யார்ங்கிறதைக் கண்டுபிடிச்சுட்டா அந்த நபர்கிட்ட



யிருந்து எல்லா உண்மைகளையும் வெளியே கொண்டு வந்துடலாம்.''

கமிஷனர் ஏதோ சொல்ல முயல – கதவருகே ஒரு கான்ஸ்டபிள் வந்து சல்யூட்டோடு நின்றார்.

''என்ன...?''

''ஸார்! உங்களைப் பார்த்து பேசறதுக்காக ப்ரஸ் ரிப்போர்ட்டர் கிரி வந்து இருக்கார்.''

''உள்ளே அனுப்பு...''

கான்ஸ்டபிள் சல்யூட் அடித்துவிட்டு மறைந்த முப்பது விநாடிகளுக்குள் ரிப்போர்ட்டர் கிரி உள்ளே வந்தான்.

''குட்மார்னிங் ஸார்...''

''குட்மார்னிங்...! என்ன கிரி ஏதாவது ஹாட் நியூஸ் உண்டா...?''

''ஸார்... அந்த 'ஸ்ரீராமுலு'வைக் கண்டுபிடிக்க போலீஸ் டிபார்ட்மெண்ட் எடுத்த நடவடிக்கைகளில் ஏதாவது முன்னேற்றம் உண்டா...?'

''இந்த நிமிஷம் வரைக்கும் இல்லை... சர்ச்சிங் அண்ட் இன்வெஸ்டிகேஷன் ஈஸ் கோயிங் ஆன். பை...த...பை அந்த ஸ்ரீராமுலு கட் பண்ணி பழைய நியூஸ் பேப்பர்களிலிருந்து எடுத்த அந்த செய்திகள் என்னான்னு லிஸ்ட் பண்ணிட்டியா?''

''லிஸ்ட் ரெடி ஸார்...'' சொன்னவன் தன் தோளில் மாட்டியிருந்த ஜோல்னாப் பையைப் பிரித்து நியூஸ் பேப்பர் கட்டிங்குகளையும் தமிழில் டைப் செய்த ஒரு தாளையும் எடுத்தான்.

''ஸார்... அந்த ஸ்ரீராமுலு பழைய நியூஸ் பேப்பர்களிலிருந்து கட் பண்ணி எடுத்த எல்லா செய்திகளுமே

கோர்ட் தீர்ப்பு சம்பந்தப்பட்டவை. அதைத் தவிர வேற எந்த செய்தியும் இல்லை...''

''கிரி...! நானே... உனக்கு போன் பண்ணனும்ன்னு நினைச்சிட்டிருந்தேன்... ஸ்ரீராமுலு கட் பண்ணி எடுத்த அந்த பேப்பர் கட்டிங் செய்திகளில் லாயர் சிற்றரசு எடுத்து நடத்தின கஞ்சா வழக்குப் பற்றிய கோர்ட் தீர்ப்பு இருக்கான்னு பாரு...''

''ஒரு நிமிஷம் ஸார்...'' சொன்னவன் கையில் வைத்து இருந்த லிஸ்டில் விரலை வைத்து நகர்த்திக் கொண்டே வந்தான்.

விரல் நின்றது.

''இருக்கு ஸார்...''

''அந்த பேப்பர் கட்டிங்கை எடு...''

கிரி பேப்பர் கட்டிங்குகளைப் புரட்டி நான்கு சதுர அங்குலப் பரப்பில் இருந்த அந்த பேப்பர் கட்டிங்கை எடுத்துக் கொடுக்க - கமிஷனர் வாங்கி பார்வையைப் போட்டார். வாய்விட்டுப் படித்தார்.

கஞ்சா வழக்கில் பரபரப்பு தீர்ப்பு.

அப்பாவிகளை கஞ்சா வழக்கில் கைது செய்வதா?

போலீஸார்க்கு நீதிபதி கண்டனம்.

வழக்கறிஞர் சிற்றரசுவுக்கு பாராட்டு.

தலைப்புச் செய்திக்கு கீழே செய்தி ஓடியிருந்தது.

'சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்தவர்கள் சிவராமன் - வைதேகி தம்பதிகள். இவர்கள் மயிலாப்பூரில் மெஸ் ஒன்றை நடத்தி வந்தார்கள். இந்த மெஸ்ஸில் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் சுவையாகவும்,



சுகாதாரமாகவும் இருந்ததால் அந்த பகுதியில் மெஸ் பிரபலமாக இருந்தது. வாடிக்கையாளர்களும் அதிக அளவில் வந்து சாப்பிட்டுச் சென்றார்கள். இந்த நிலைமையில் சென்ற மாதம் பதினேழாம் தேதி ராத்திரி வேளையில் அந்த மெஸ்ஸுக்கு வந்து திடீர் சோதனை நடத்திய போலீஸார் மெஸ்ஸில் மறைத்து வைக்கப்பட்டு இருந்த ஐந்து கிலோ கஞ்சாவைக் கைப்பற்றினார்கள். சிவராமன் - வைதேகி தம்பதிகள் தங்கள் மெஸ்ஸில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாவைப் பார்த்து அதிர்ந்து போனார்கள். தங்கள் மெஸ்ஸின் நற்பெயரைக் கெடுப்பதற்காகவே யாரோ கஞ்சாவை இங்கே கொண்டு வந்து வைத்துள்ளதாக போலீஸாரிடம் சொன்னார்கள். ஆனால் போலீஸார் அதை ஏற்றுக் கொள்ளாமல் அந்த தம்பதியரையும், அவர்களுடைய ஒரே மகனான சங்கர நாராயணனையும் கைது செய்து வழக்குத் தொடர்ந்தார்கள். எழும்பூர் கோர்ட்டில் கடந்த சில மாதங்களாக நடந்து வந்த வழக்கில் நேற்று தீர்ப்பு கூறப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி வரதராஜன் இருதரப்பு வாதங்களையும் கேட்டபின் தீர்ப்பை வாசித்தார்.

தீர்ப்பில் சிவராமன், வைதேகி, சங்கரநாராயணன் இந்த மூன்று பேரும் குற்றமற்றவர்கள் என்றும், மெஸ் நடத்துவதில் அவர்க்கு இருந்த நற்பெயரைக் கெடுக்க வேண்டும் என்பதற்காகவே திட்டமிட்டு யாரோ சதி செய்து கஞ்சாவை மெஸ்ஸில் வைத்து இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. எல்லாத் தொழில்களிலும் போட்டி பொறாமை இருப்பதுபோல் இந்த மெஸ் நடத்தும் தொழிலிலும் போட்டி பொறாமை ஏற்பட்டு யாரோ செய்த இந்த இழி செயலுக்கு போலீஸ் துணை போயுள்ளார்கள் என்பது தெளிவாகவே தெரிகிறது. இந்த உண்மையைத் தகுந்த ஆதாரங்களோடு நிரூபித்து திறம்பட வாதாடிய

**வழக்கறிஞர் திரு. சிற்றரசு அவர்களை இந்த நீதிமன்றம் பாராட்டுகிற அதேவேளையில் அப்பாவிகளைக் கைது செய்த போலீஸாரை இந்த நீதிமன்றம் வன்மையாக கண்டிக்கிறது.**

கமிஷனர் படிப்பதை நிறுத்திவிட்டு செந்தில்நாதனையும் மதுவையும் பார்த்தார். ஆழ்ந்த யோசனையோடு மோவாயைத் தடவிக் கொண்டே சொன்னார். "கஞ்சா வழக்கில் சிக்கி விடுதலையான சிவராமன் - வைதேகி தம்பதிகள் இப்போது உயிரோடு இல்லை. உயிரோடு இருக்கிற சங்கரநாராயணன் காணாம போயிருக்கார். அதேபோல் அந்த வழக்கில் வாதாடிய சிற்றரசுவும் காணாம போயிருக்கார் பட்... இந்த வழக்கில் துளியும் சம்பந்தப்படாத டி.வி. நடிகை ஸ்வரூபா ஏன் காணாம போகணும்?"

கிரி குறுக்கிட்டான்.

"ஸார்...! நான் ஒரு விஷயம் சொல்லலாமா?"

"என்ன...?"

"நான் ஒரு பிரஸ் ரிப்போர்ட்டராய் இருக்கிறதால சில டி.வி. மற்றும் சினிமா நடிகைகளோட அந்தரங்க வாழ்க்கையைப் பற்றி ஓரளவுக்குத் தெரியும். இப்ப நீங்க சொன்ன டி.வி. நடிகை ஸ்வரூபாவைப் பற்றிய ஒரு ஹாட் நியூஸை என்னால சொல்ல முடியும்."

"என்ன ஹாட் நியூஸ்?"

"ஒரு அரசியல் தலைவரோட பையனுக்கும் ஸ்வரூபாவுக்கும் தொடர்பு உண்டு."

"ஈஸிட்...! யார் அந்த அரசியல் புள்ளியோட பையன்...?"



"இ.ம.கா. கட்சியின் தலைவரோட பையன் கோகுலக் கண்ணன் ஸார்..."

"இது ஊர்ஜிதமான செய்திதானே?"

"ஹண்ட்ரட் பர்ஸன்ட் ஸார். பட் அவங்க ரெண்டு பேர்க்கும் தொடர்பு இருக்குங்கிறதுக்கு எந்த விதமான ஆதாரமும் இல்லை."

போலீஸ் கமிஷனர் மெல்லத் திரும்பி வசந்தியைப் பார்த்தார். "இதைப்பத்தி உனக்கு ஏதாவது தெரியுமாம்மா?"

"தெரியாது ஸார்..." வசந்தி தலையை ஆட்டிக் கொண்டு இருக்கும்போதே அவளுடைய கைப்பையில் இருந்த செல்போன் ரிங்டோனை வெளியிட்டது. எடுத்து அழைப்பது யார் என்று பார்த்தாள்.

ஒரு புது எண்.

'யாராயிருக்கும்?' - யோசித்தபடியே செல்போனை காதுக்கு ஒற்றி "ஹலோ" என்றாள்.

"மிஸ் வசந்தி...?" ஒரு ஆண் குரல் கேட்டது.

"எஸ்..."

"நான் டாக்டர் பலராமன்... பழைய மகாபலிபுரம் ரோட்டில் இருக்கிற ஸ்வஸ்திக் ஹாஸ்பிட்டல் என்னுடையது தான். நீங்க இப்ப சென்னையில்தானே இருக்கீங்க...?"

"ஆமா..."

"உடனே புறப்பட்டு என்னுடைய ஹாஸ்பிட்டலுக்கு வர முடியுமா?"

"ஃபார் வாட்...?"

"உங்க தோழி ஸ்வரூபா இங்கே அட்மிட் ஆகியிருக்காங்க..."

''எ...ன்...ன...து! ஸ்வரூபா உங்க ஹாஸ்பிட்டலில் அட்மிட்டாகியிருக்காளா...? அவளுக்கு என்ன...?''

''ஆக்ஸிடெண்ட்...''



# 15



பழைய மகாபலிபுரம் ரோடு. ஸ்வஸ்திக் ஹாஸ்பிட்டல்.

டாக்டர் பலராமனின் அறைக்குள் கமிஷனர், மது, வசந்தி, செந்தில்நாதன் பதட்டமாய் நுழைய, டெலிபோனில் யாருடனோ பேசிக் கொண்டிருந்த டாக்டர் திடுக்கிட்டுப் போய் எழுந்தார். பின் கமிஷனரைப் பார்த்ததும் டெலிபோனில் பேச்சை அவசர அவசரமாய் முடித்துக் கொண்டு நாற்காலியைக் காட்டினார்.

''உட்காருங்க ஸார்...''

கமிஷனர் சுந்தரவேல் உட்காராமல் அவசரக் குரலில் கேட்டார். ''டாக்டர்! ஸ்வரூபாவுக்கு ஆக்ஸிடெண்ட்ன்னு போன்ல சொன்னீங்க...! உடனே புறப்பட்டு வர்றோம்...! ஆக்ஸிடெண்ட் எங்கே... எந்த இடத்தில்... எப்படி நடந்தது...? ஹௌ ஈஸ் ஷீ... நவ்...?''

டாக்டர் பலராமன் புன்னகைத்தார்.

''நீங்க பயப்படற மாதிரி ஸ்வரூபா உயிர்க்கு ஆபத்தான நிலைமையில் இல்லை. கை, கால்களில் அடிபட்டிருக்கு... நெற்றியில் ஒரு சிறிய காயம்... தட்ஸ் ஆல்...''



''ஆக்ஸிடெண்ட்... எப்படி டாக்டர்...?''

''ஓடும் காரிலிருந்து உருண்டு விழுந்து இருக்காங்க...''

''யாரோட கார்...?''

''தெரியலை... ஸ்வரூபாவை யாரோ கார்ல கடத்திக்கிட்டுப் போக முயற்சி பண்ணியிருக்காங்க. ஸ்வரூபா அவங்ககிட்டேயிருந்து தப்பிக்கிறதுக்காக ஓடும் காரிலிருந்து கீழே குதிச்சு உருண்டதில் உடம்பு முழுக்க சின்னச் சின்ன காயங்கள்.''

''ஸ்வரூபாவை நாங்க பார்க்கலாமா டாக்டர்...?''

''ஸ்வரூபா வசந்தியை மட்டும் பார்க்க பிரியப்பட்டு அவங்களுக்கு போன் பண்ணச் சொன்னாங்க. நானும் போன் பண்ணினேன். இவ்வளவு பேர் வருவீங்கன்னு நான் எதிர்பார்க்கலை.''

''டாக்டர்...! ஸ்வரூபா கடத்தப்பட்ட விநாடியிலிருந்து நாங்க தேடிட்டு இருக்கோம். ஸ்வரூபாவுக்கு இப்போ சுய உணர்வு நல்ல நிலைமையில் இருக்கிறதால அவங்களைக் கடத்திட்டுப் போக முயற்சி பண்ணினவங்க யார்ன்னு அவங்களுக்கு நல்லாவே தெரியும். அந்தக் கடத்தல் பேர்வழிகள் யார்ன்னு தெரிந்தால் எல்லா சந்தேகங்களுக்கும் விடை கிடைக்கும்.''

''வாங்க...!'' சொன்ன டாக்டர் அறையினின்றும் வெளியேறி ஐ.ஸி.வார்டை நெருங்கினார். ஸ்வரூபா இருந்த அறைக்குள் நுழைந்தார்கள்.

தலை, நெற்றி, முழங்கைகளில் பாண்டேஜ்ஜும் பிளாஸ்திரியும் தெரிய கட்டிலுக்கு சாய்ந்து உட்கார்ந்து

கண்களை மூடியிருந்தாள் ஸ்வரூபா. காலடிச் சத்தங்கள் கேட்டு கண்ணிமைகளைப் பிரித்தாள்.

கமிஷனர் சுந்தரவேல், செந்தில்நாதன், மது, வசந்தி எல்லோரும் அவளுடைய படுக்கையைச் சூழ்ந்தார்கள். சுந்தரவேல் அருகில் இருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.

"இதோ பாரம்மா! நீ சொல்லப் போகிற தகவல்களை வெச்சுத்தான் குற்றவாளிகள் யார்ங்கிறதை நாங்க ட்ரேஸ் பண்ண முடியும்... உனக்கு வந்த கனவுக் கடிதம் மாதிரியே கும்பகோணத்தில் இருக்கிற சங்கரநாராயண னுக்கும் வந்திருக்கு. அவரும் இப்போ கடத்தப்பட்டு இருக்கார். அதேபோல் சென்னையைச் சேர்ந்த லாயர் சிற்றரசுவும் கடத்தப்பட்டு இருக்கார். இதுக்கெல்லாம் என்ன காரணம்ன்னு தெரியலை. உன்னைக் கடத்திட்டுப் போக முயற்சி பண்ணினவங்க யாருன்னு உனக்குத் தெரியுமா?"

ஸ்வரூபா கண்ணீரோடு நிமிர்ந்தாள். "ஸார்! அவங்க யார்ன்னு தெரியாது. ஆனா மொத்தம் ஐந்து பேர். எல் லாருமே முகத்துக்கு துணி கட்டியிருந்தாங்க. ஹிந்தியும், அரைகுறை ஆங்கிலமும் பேசிக்கிட்டாங்க."

"உன்னை எப்படி கடத்தினாங்க...?"

"வீட்டுக்கு முன்னாடி ஒரு க்வாலிஷ் கார் வந்து நின்னது ஸார். என்னைப் பார்க்க யாரோ வர்றாங்கன்னு நினைச்சு வாசலுக்கு வந்தேன். ஆனால் காரிலிருந்து யாரும் இறங்கலை. ஒரு அஞ்சு நிமிஷம் பொறுத்துப் பார்த்த நான் கார்க்குப் பக்கத்துல போய் யார் வந்து இருக்காங்கன்னு உள்ளே எட்டிப் பார்த்தேன். அடுத்த விநாடி காரோட கதவு படார்ன்னு திறந்தது. முகத்துக்கு



துணி கட்டியிருந்த ரெண்டு பேர் என்னை உள்ளே இழுத்துப் போட்டாங்க. என் முகத்துல மருந்து நெடியோடு கூடிய ஒரு துணியை வெச்சு அழுத்தினாங்க. நான் உடனே மயக்கமாயிட்டேன். மறுபடியும் எனக்கு நினைவு வந்தபோது கார் வேகமாய் போயிட்டிருந்தது. ஒருத்தன் காரை ஓட்டிகிட்டு இருக்க நாலுபேரும் ஹிந்தி, இங்கி லீஷ்ல பேசிகிட்டே வந்தாங்க. எனக்கு எதுவும் புரியலை. அந்த நேரத்துல ஒருத்தனுக்கு செல்போன் அழைப்பு வந்தது. அதை எடுத்து பேசினவன் 'ஃபாக்ஸ்'ன்னு சொன்னான்."

கமிஷனர் முகம் மாறினார். விழிகள் திகைத்தது.

"என்னது? ஃபாக்ஸா...?"

"ம்... செல்போனை எடுத்து காதுல வெச்சதுமே அப்படித்தான் அவன் சொன்னான்."

சுந்தரவேல் செந்தில்நாதனிடம் திரும்பினார். "ஃபாக்ஸ் ஒரு தீவிரவாத இயக்கம். 'FOX' இதனோட விரிவாக்கம் FIGHTERS OF X. உளவுத்துறையிடம் கேட்டால் நிறைய விஷயங்கள் கிடைக்கலாம்" மறுபடியும் ஸ்வரூபாவிடம் திரும்பினார்.

"அப்புறம்... என்னம்மா... நடந்தது?"

"எனக்கு சுய உணர்வு வந்தது அவங்களுக்குத் தெரியலை. ஏதேதோ பேசிகிட்டே வந்தாங்க... நான் கண்ணை மூடியபடியே ஆழ்ந்த மயக்கத்தில் இருக்கிற மாதிரி பாவ்லா பண்ணினேன். கார் ஒரு இடத்துல வேகம் குறைஞ்சது... எனக்குப் பக்கத்துல கார் கதவோட கைப்பிடி இருந்ததால ஒரு விநாடி நேரத்துல அதைத் திறந்து சட்டுன்னு கீழே உருண்டேன். நான் ரோட்ல

உருண்டு விழுந்ததும் அந்தப் பக்கமா நடந்து போயிட்டிருந்த சிலர் ஓடிவந்தாங்க... அதைப் பார்த்ததும் கார்ல இருந்தவங்க பயந்து போய் காரை ஓட்டிகிட்டு போயிட்டாங்க. எனக்கு நெற்றியில் அடிபட்டதும் மயக்கமாயிட்டேன். என்னை ஹாஸ்பிட்டல்ல கொண்டு வந்து சேர்த்தது யார்ன்னு கூட எனக்குத் தெரியாது.''

சுந்தரவேல் கேட்டார்.

''உன்னை அவங்க கடத்தறதுக்கு என்னம்மா காரணம்?''

''தெரியலை ஸார்... ஃபாக்ஸ்ங்கிறது ஒரு தீவிரவாத இயக்கம்ன்னு நீங்க சொல்லித்தான் எனக்குத் தெரியும். என்னைக் கடத்திக்கிட்டு போறதால அந்த தீவிரவாத இயக்கத்துக்கு என்ன லாபம்ன்னும் எனக்குத் தெரியலை.''

மது இப்போது பேச்சில் குறுக்கிட்டான்.

''நான் ஒரு கேள்வி கேட்டா... நீங்க தப்பா நினைச்சுக்கக்கூடாது.''

''கேளுங்க...''

''கோகுலக்கண்ணனுக்கும் உங்களுக்கும் இடையில் இருக்கிற தொடர்பு எது மாதிரியானது?''

''அது... வந்து...''

''சொல்லுங்க... நீங்க சொல்லப் போகிற ஒவ்வொரு தகவலும் இப்போ இருக்கிற நிலைமைக்கு முக்கியமானது.''

ஸ்வரூபா சில விநாடிகள் மௌனமாய் இருந்துவிட்டு சொன்னாள். குரலில் கோபம் இருந்தது.



''அந்தக் கோகுலக்கண்ணனைப் பத்தி பேசாதீங்க ஸார். அவன் ஒரு அயோக்கியன். என்னைப் படுக்கைக்குக் கொண்டு போறதுக்காக உயிர்க்கு உயிராய் என்னைக் காதலிக்கிற மாதிரி நடிச்சான். நானும் ஏமாந்துட்டேன். ரெண்டு தடவை டாக்டர் ரோகிணி ஜானகிராமனிடம் போய் டி.அண்ட்.ஸி பண்ணிக்க வேண்டியதாயிடுச்சு... அரசியல் செல்வாக்குள்ள அவனை எதிர்த்து என்னால ஒண்ணும் பண்ண முடியலை... விட்டுட்டேன்... கடவுள் அவனைத் தண்டிப்பார்.''

''உங்களால ஏதாவது பிரச்னை வரும்ன்னு நினைச்சு பயந்து போன கோகுலக்கண்ணன் அந்த 'ஃபாக்ஸ்' தீவிரவாதிகள் உதவியோடு இந்தக் கடத்தல் முயற்சியில் ஈடுபட்டு இருக்கலாமா?''

''அப்படீன்னா அந்த லாயர் சிற்றரசு கடத்தப்பட்டதுக்கும் கும்பகோணம் சங்கரநாராயணன் கடத்தப்பட்டதுக்கும் யார் காரணம்...?''

தன் இரண்டு கைகளாலும் கமிஷனர் நெற்றியைப் பிடித்துக் கொண்டார்.

''இது ஒரு இடியாப்பச் சிக்கல் கேஸ்.''



## 16



எங்கோ புறப்பட்டுப் போகத் தயாராயிருந்த கோகுலக் கண்ணன் தன் வீட்டுக்கு முன்பாய் ஒரு போலீஸ் ஜீப்

நிற்பதையும், அதிலிருந்து இன்ஸ்பெக்டர் செந்தில்நாதன் இறங்கி வருவதையும் பார்த்துவிட்டு அப்படியே நின்றான்.

"வாங்க இன்ஸ்பெக்டர்..."

செந்தில்நாதன் கோகுலக்கண்ணனை நெருங்கினார். "வெளியே புறப்பட்டீங்க போலிருக்கு...?"

"ஆமா... கட்சியோட பொதுக்குழு மீட்டிங்கில் இன்னிக்கு சில முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கு. அதான் கிளம்பிட்டிருக்கேன். என்ன விஷயம் இன்ஸ்பெக்டர்...?"

"உங்ககிட்ட ஒரு பத்து நிமிஷம் பேசணும்."

"உள்ளே வாங்க..."

இருவரும் உள்ளே போய் ட்ராயிங் அறையில் இருந்து நாற்காலியில் சாய்ந்தார்கள்.

"சொல்லுங்க இன்ஸ்பெக்டர்...! என்ன விஷயம்?"

"டி.வி. நடிகை ஸ்வரூபா 'ஃபாக்ஸ்' என்கிற ஒரு தீவிரவாத இயக்கத்தை சேர்ந்தவர்களால் கடத்தப்பட்டு அந்தப் பெண் காரிலிருந்து உருண்டு தப்பிச்சதைப் பற்றிய செய்தியை டி.வி.யிலேயும் பேப்பர்லேயும் பார்த்து இருப்பீங்க!"

"ம்... பார்த்தேன்..."

"அதைப்பத்தி என்ன நினைக்கிறீங்க...?"

"நினைக்க என்ன இருக்கு...? ஸ்வரூபா ஒரு அழகான பெண். அவ அழகாய் இருக்கா என்கிற ஒரே ஒரு காரணத்துக்காகவே கடத்தப்பட்டு இருக்கலாம்..."



"உங்களுக்கு ஸ்வரூபாவோடு பழக்கம் உண்டா?"

"ம்... உண்டு..."

"எந்த அளவுக்கு பழக்கம்?"

"எங்கேயாவது பார்த்துகிட்டா "ஹலோ... எப்படியிருக்கீங்க...?"ன்னு கேட்கிற அளவுக்கு..."

"அவ்வளவுதானா...?"

"அவ்வளவுதான்...!"

"வெளியே டாக் வேற மாதிரி இருக்கு."

"வேற மாதிரின்னா...?"

"நீங்களும் ஸ்வரூபாவும் எல்லை மீறி பழகி அதன் காரணமாய் அந்தப் பெண் ரெண்டு தடவை அபார்ஷன் பண்ணிக்கிட்டதாய் தகவல்."

"இந்தத் தகவலை உங்களுக்கு யார் சொன்னது...?"

"யார் சொன்னாங்க என்பது முக்கியமில்லை. தகவல் உண்மையா பொய்யா...?"

செந்தில்நாதன் கேள்வியைக் கேட்ட விநாடி - பின் பக்கம் அந்தக் குரல் கேட்டது.

"தகவல் உண்மையா...; பொய்யான்னு அவர்கிட்டே கேக்காதீங்க. என்கிட்டே கேளுங்க..."

செந்தில்நாதன் திரும்பிப் பார்த்தார்.

திடுக்கிட்டார்.



# 17

ஸ்வஸ்திக் ஹாஸ்பிட்டல்.

ஸ்வரூபா இரவு உணவை முடித்துக் கொண்டு பால் டம்ளரைக் கையில் எடுத்தபோது டாக்டர் பலராமன் உள்ளே வந்தார்.

''என்னம்மா ஸ்வரூபா...! இன்னிக்கு நல்லா சாப்பிட முடிஞ்சுதா...?''

''ஓரளவுக்கு சாப்பிட்டேன் டாக்டர்... கடந்த நாலு நாள்ல இன்னிக்குத்தான் எனக்குப் பசி எடுத்தது.''

''இனிமே நார்மலாயிடும்.''

''டாக்டர்...! என்னை எப்ப டிஸ்சார்ஜ் பண்ணுவீங்க?''

''காயமெல்லாம் ஓரளவுக்கு ஆறிடுச்சு... நெற்றிக் காயம் மட்டும் இன்னும் ஆறலை. என்னிக்கு டிஸ்சார்ஜ்ங்கிறதை நாளைக்கு சொல்றேன்ம்மா...''

டாக்டர் சொல்லிவிட்டுக் கிளம்பிப் போனதும் மறுபடியும் பால் டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்ட விநாடி அந்த நர்ஸ் உள்ளே எட்டிப் பார்த்தாள்.

''அம்மா...''

''என்ன...?''

''உங்களுக்கு போன்...! கடந்த ஒரு மணி நேரத்துல நாலைஞ்சு தடவை பண்ணிட்டாங்க. 'பேஷண்ட் ரூம்ல



போன் கிடையாது. அவங்களை ரிசப்ஷன் வரைக்கும் கூப்பிட முடியாது'ன்னு சொன்னாலும் விடாப்பிடியாய் ஒருத்தர் போன் பண்ணிட்டிருக்கார். விஷயம் என்னான்னு கேட்டாலும் சொல்லமாட்டேங்கிறார்...''

பால் டம்ளரை கீழே வைத்தாள் ஸ்வரூபா.

''எனக்கு போனா...? பேர் என்னான்னு சொன்னாங்க?''

''அது வந்து... வந்து...'' என்று யோசித்த நர்ஸ் பிறகு சொன்னாள். ''ஸ்ரீராமுலு...''

ஸ்வரூபா படுக்கையினின்றும் சட்டென்று இறங்கினாள். ''இப்ப... லைன்ல இருக்காரா...?''

''ஆமாங்கம்மா...''

அறையினின்றும் வேகமாய் வெளிப்பட்ட ஸ்வரூபா அடுத்த வராந்தாவில் இருந்த ரிசப்ஷனை நோக்கிப் போனாள்.

ரிசப்ஷனில் யாரும் இல்லை. மேஜையின் மீது ரிஸீவர் மல்லாந்து கிடந்தது. எடுத்து காதுக்குப் பொருத்தினாள் கேட்டாள்.

''ஸ்ரீராமுலு?''

''ம்...''

'''எனக்கு போன் பண்ணாதே...'ன்னு உனக்கு எத்தனை வாட்டி சொல்றது...? ஒரு தடவை சொன்னா புரியாதா...?''

''..........'' மறுமுனையில் மௌனம்.

''என்ன! நான் சொல்றது... உன் காதுல விழுதா இல்லையா...?''

"......" தொடர்ந்து மௌனம்.

"ஸ்ரீராமுலு! ஏன் பேசாமே இருக்கே...?"

அடுத்த விநாடி - மறுமுனையில் குரல் சிரித்தது.

"என்ன ஸ்வரூபா...! நான் ஸ்ரீராமுலுவாய் இருந்தாத்தானே உன்னோட கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல முடியும்...?"

ஸ்வரூபா திகைத்தாள்.

"நீ...நீ...யா...யாரு...?"

"கிரி...! ப்ரஸ் ரிப்போர்ட்டர்...! வளசரவாக்கத்தில் என்னோட மாமனார் வீட்டில் வாடகைக்கு இருந்த ஸ்ரீராமுலுவை உனக்குத் தெரியுமா தெரியாதான்னு எம் மனசுக்குள்ளே ஒரு சந்தேகம் இருந்தது. அதை நிவர்த்தி பண்ணிக்கத்தான் ஸ்ரீராமுலு மாதிரி உனக்கு போன் பண்ணினேன். ஸ்ரீராமுலுவோடு உனக்கு நல்ல பழக்கம் இருக்குன்னு இப்ப தெரிஞ்சுக்கிட்டேன்."

"அது... வந்து... வந்து... இதோ... பார்... உன்னோட பேர் என்ன சொன்னே...?"

"கிரி..."

"நான் உன்கூட கொஞ்சம் பேசணும்."

"போன்லயே பேசலாமே?"

"வேண்டாம்... நான் உன்னை நேர்ல சந்திச்சுப் பேசணும்..."

"நீ என்னை சந்திச்சு பேசறதுக்கு முந்தி உன்னை சந்திச்சுப் பேச மூணு பேர் காத்துட்டிருக்காங்க..."

"எ...எ...என்னையா...?"



"ம்..."

"யார் அவங்க...?"

"கொஞ்சம் பின்னாடி திரும்பிப் பாரு..."

ஸ்வரூபா திரும்பிப் பார்த்தாள்.

கமிஷனர் சுந்தரவேல், இன்ஸ்பெக்டர் செந்தில்நாதன், மது நின்றிருந்தார்கள்.

ஸ்வரூபா பதற்றத்தோடும், வியர்த்து வழிகிற முகத்தோடும் கைநடுங்க ரிஸீவரை வைத்தாள்.

மூன்று பேரும் அவளை நெருங்கினார்கள். அரை வட்டம் போட்டுக் கொண்டு நின்றார்கள்.

"ஸோ...! உனக்கு ஸ்ரீராமுலுவைத் தெரியும்?"

"......"

"லாயர் சிற்றரசுவைக் கடத்தினது யார்ன்னு தெரியும்?"

"......"

"கும்பகோணம் சங்கரநாராயணனைக் கடத்திக்கிட்டு போனது யார்ன்னும் தெரியும்..."

"......"

"ஒரு தீவிரவாத கும்பல் உன்னைக் கடத்திக்கிட்டு போன மாதிரியும் நீ அவங்ககிட்டயிருந்து தப்பிச்ச மாதிரியும் ஒரு ட்ராமா பண்ணினியே அதுக்கான காரணத்தையும் இப்ப நீ சொல்ல வேண்டிய நேரம். நீ அட்மிட்டாகியிருக்கிற அந்த அறைக்குப் போயிடலாமா... இல்லை... போலீஸ் லாக்கப்புக்கு போயிடலாமா?"

ஸ்வரூபா சில விநாடிகள் தயக்கமாய் நின்றுவிட்டு அறையை நோக்கி தளர்ந்த நடையோடு போனாள். மூன்று பேரும் பின் தொடர்ந்தார்கள்.



# 18



கையும் களவுமாய் பிடிபட்ட அதிர்ச்சி அடுத்த சில நிமிடங்களுக்குள்ளாகவே ஸ்வரூபாவிடமிருந்து விலகிப் போயிருக்க, அவள் அலட்சிய புன்னகையோடு கட்டிலின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டாள். பிறகு மூன்று பேரையும் பார்த்தபடி சொன்னாள்.

"இப்படியொரு நிலைமை என்றைக்காவது ஒரு நாள் வரும் என்று எனக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரத்தில் வரும் என்று எனக்குத் தெரியாது."

சுந்தரவேல் உதட்டில் கேலிச்சிரிப்பு. "எல்லாக் குற்றவாளிகளும் எதை நினைப்பாங்களோ அதைத்தான் நினைச்சிருக்கே...! ஆனா போலீஸ்ன்னு ஒண்ணு இருக்கே...?" சொன்னவர் அந்தக் கேள்வியைக் கேட்டார்.

"லாயர் சிற்றரசுவையும் சங்கரநாராயணனையும் கடத்தியது யார்...?"

"L.O."

"எல்.....ஓ...! அப்படீன்னா?"

"லா...அண்ட் ஆர்டர்."

"அது ஒரு இயக்கம்...?"

"போலீஸ் பாஷையில் அது ஒரு இயக்கம். எங்களுடைய பாஷையில் அது ஒரு நற்பணி மன்றம்..."



"சரி... லாயரையும், சங்கரநாராயணனையும் எதுக்காகக் கடத்தணும்...?"

"அவங்க நல்லவங்க இல்லை.... எல்.ஓ.வின் பார்வையில் அவங்க ரெண்டு பேரும் சட்ட ஒழுங்கை அரிக்க வந்த புற்றுநோய்கள்..."

"அவங்க ரெண்டு பேரும் நல்லவங்க இல்லைன்னு எப்படி சொல்றே?"

ஸ்வரூபா பெருமூச்சொன்றை விட்டபடி கால்மேல் கால் போட்டுக் கொண்டாள்.

"கமிஷனர் ஸார்! சட்டம் ஒழுங்கை காக்க வேண்டிய போலீஸாரும் நீதிமன்றங்களும் அந்தக் கடமையிலிருந்து தவறிய காரணத்தால்தான் எங்க எல்.ஓ. உருவாச்சு. உங்க பார்வையில் லாயர் சிற்றரசு நல்லவர். கும்பகோணம் சங்கரநாராயணன் அப்பாவி. ஆனால் உண்மை நிலவரம் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா...?"

"சொல்லு...!"

"சில மாதங்களுக்கு முன் மயிலாப்பூரில் மெஸ் நடத்திட்டு வந்த சிவராமனும், அவருடைய மனைவி வைதேகியும், உண்மையான கணவன் மனைவி கிடையாது. கஞ்சா, அபின், எல்.எஸ்.டி. சைனா ஸ்ரேக் போன்ற போதை மருந்துகளைக் கடத்தற கும்பலைச் சேர்ந்தவங்க. அவங்களுடைய மகன்னு நீங்க நினைச்சிட்டிருக்கிற சங்கரநாராயணனும் உண்மையிலேயே மகன் கிடையாது. அவனுடைய உண்மையான பெயர் பிஸ்வா. போதை மருந்துகளைப் பதுக்கி வைக்கிறதுக்கும், அதை முறைப்படி தமிழ்நாடு முழுவதும் சப்ளை செய்வதற்கும் மெஸ்ஸை பயன்படுத்திக்கிட்டு வந்தாங்க. போலீஸ்

அதை மோப்பம் பிடிச்சு மெஸ்ஸை சோதனை போட்டாங்க. அங்கே பதுக்கி வெச்சிருந்த கஞ்சாவை கண்டுபிடிச்சாங்க. ஆனா லாயர் சிற்றரசு அந்த கேஸை வேறு விதமாய்க் கையாண்டு குற்றவாளிகளுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தார். சிவராமன் நடத்தி வந்த மெஸ்ஸுக்கு கெட்ட பெயரை உண்டாக்கற வகையில் மற்ற மெஸ் உரிமையாளர்கள் கஞ்சாவை கொண்டு போய் வைத்துவிட்டு போலீஸில் தகவல் கொடுத்துவிட்டதாக அவர் கோர்ட்டில் வாதாடியது எடுபட்டது. சிவராமன், வைதேகி, சங்கரநாராயணன் ஆகியோர்க்கு விடுதலை கிடைத்தது. அதுக்கப்புறம் சிவராமன் கும்பகோணத்துக்கு தன்னோட பிசினஸை கொண்டு போனார். ஆனா அங்கே சங்கரநாராயணனுக்கும் சிவராமன் - வைதேகிக்கும் ஏற்பட்ட பணத் தகராறில் சங்கரநாராயணன் அந்த ரெண்டு பேரையும் ஸ்லோ பாய்ஸன் கொடுத்து யார்க்கும் சந்தேகம் ஏற்படாத வகையில் தீர்த்துக் கட்டினான். அதுக்குப் பிறகு சங்கரநாராயணன் ஒரு பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு திருநாகேஸ்வரத்துக்கு குடிபோய் அங்கே தன்னுடைய தொழிலை பண்ணிட்டு வந்தான்.''

''இது உங்க எல்.ஓ.வுக்கு பிடிக்கலை...?''

''ஆமா...! இந்த சிற்றரசு, சிவராமன் கும்பல் மட்டும் இல்லை. தமிழ்நாட்டில் யார் யாரெல்லாம் சட்டத்தை ஏமாற்றி வக்கீல்களின் வாதத் திறமையால் விடுதலையாகி வெளியே வந்தாங்களோ அவங்களை எல்லாம் குறி வெச்சோம். எல்லா நியூஸ் பேப்பர்களையும் வாங்கி அவைகளில் கோர்ட் தீர்ப்புப் பற்றிய செய்திகள் இருந்தால் அதை கட் பண்ணி எடுத்து அந்தச் செய்திகளுக்குப் பின்னால் உள்ள உண்மைகளைக் கண்டுபிடிச்சோம். கோர்ட் அவங்களை விடுதலை பண்ணிட்டாலும் நாங்க தண்டிக்க விரும்பினோம். அந்த லிஸ்டில் மொதல்ல இடம் பெற்ற இரண்டு பேர்தான் லாயர் சிற்றரசுவும் சங்கரநாராயணனும்...''

சுந்தரவேல் பதட்டமாய் குறுக்கிட்டார்.

''அந்த ரெண்டு பேரையும் எங்கே கொண்டு போய் மறைச்சு வெச்சிருக்கீங்க...?''

''மறைச்சு வைக்கறதா...?'' ஸ்வரூபா கோணலாய் சிரித்துவிட்டு சொன்னாள். ''மறைச்சு வைக்கறதுக்கு எங்களுக்கு இடம் ஏது? கடத்திக்கிட்டு போன ஒரு மணி நேரத்துக்குள்ளே அந்த ரெண்டு பேரையும் ஒரு வனாந்தரப் பகுதிக்குக் கொண்டுபோய் தீர்த்துக்கட்டி எரிச்சுட்டோம்.''

எல்லோரும் திகைத்துப் போயிருக்க - மது மட்டும் அந்த திகைப்பிலிருந்து மீண்டு ஸ்வரூபாவை ஏறிட்டான்.

''அப்படீன்னா... அந்த கனவுக் கடிதங்கள் எதுக்கு?''

''போலீஸோட கவனத்தை சிதறடிக்கத்தான்...! போலீஸுக்கு எப்பவும் மோட்டிவேஷன் கிடைச்சுட்டா போதும் அதை வெச்சுக்கிட்டு நூல் பிடிச்ச மாதிரி கொலையாளிகளை நோக்கி வந்துடுவாங்க... எங்க குழுவில் போலீஸை திசை திருப்பற பொறுப்பை என்கிட்டே கொடுத்தாங்க. அதனால்தான் எனக்கு நானே ஒரு கனவுக் கடிதம் எழுதிக்கிட்டேன். அதை வசந்திகிட்டே காட்டினேன். அவ போலீஸுக்கு இந்த விஷயத்தைக் கொண்டு போகாமே டிடெக்டிவ் ஏஜென்ஸியான உங்ககிட்டே கொண்டு போனா. அதுக்கப்புறமும் என்னை நானே கடத்திக்கிட்டு

கார்ல இருந்து உருண்டு விழுந்து சின்னச் சின்ன காயங்களோடு வந்து ஹாஸ்பிட்டலில் அட்மிட் ஆயிட் டேன்... இவ்வளவு துல்லியமா நான் திட்டம் போட்டு ஏமாற்றியும் போலீஸ் எப்படி என்னை ஸ்மெல் பண்ணி னாங்கன்னு எனக்கு ஆச்சரியமாயிருக்கு."

செந்தில்நாதன் புன்னகைத்தார்."குற்றவாளி நீயாகத் தான் இருக்கணும்ன்னு ஸ்மெல் பண்ணினது போலீஸ் இல்லை. மிஸ்டர் மதுதான்..."

"ஈஸிட்...! எப்படி மிஸ்டர் மது...?" பிடிபட்ட துக்கம் கொஞ்சம்கூட இல்லாமல் வெகு இயல்பாய்க் கேட்டாள் ஸ்வரூபா.

"ரொம்ப ஈஸி!" என்று தோள்களைக் குலுக்கிய மது தொடர்ந்தான். "நீ ஹாஸ்பிட்டலில் அட்மிட்டாகியிருந்த போது உன்மேல் எனக்கு எந்த சந்தேகமும் வரலை. உன்னைக் கடத்த முயற்சி பண்ணினவங்க யாராய் இருக்க முடியும் என்கிற கேள்வியோடு ஏதேனும் தடயம் கிடைக் குமா என்கிற ஆர்வத்தோடு உங்க வீட்டில் இருந்த எல்லா அறைகளையும் சோதனை போட்டேன். வீட்டில் இருந்த ஒரு பிட் பேப்பரைக் கூட விடவில்லை... அலமாரியில் இருந்த எல்லாப் பொருள்களையும் கீழே இறக்கிவிட்டு மேலே ஏறிப் பார்த்தபோது அந்த தடயம் கிடைச்சுது..."

"என்ன தடயம்...?"

"இதுதான்..." சொன்ன மது கையோடு கொண்டு போயிருந்த ஒரு தோல் பையைப் பிரித்து உள்ளே மடித்து வைத்து இருந்த அந்த நியூஸ் பேப்பர்களை எடுத்தான். எல்லாமே பழைய நியூஸ் பேப்பர்கள்.

"இந்த நியூஸ் பேப்பர்களையெல்லாம் மரப் பலகையி லான அலமாரிகளில் பரப்பி அதன்மேல் எல்லாப்



பொருள்களையும் வெச்சிருந்தீங்க. இந்த பேப்பர்களில் என்ன விசேஷம்ன்னா ஒரு பேப்பர்கூட முழுசா இல்லை. எல்லாமே ஏதோ ஒரு செய்திக்காக அங்கங்கே வெட்டி எடுக்கப்பட்டு இருந்தது. அப்படி வெட்டி எடுத்த பேப்பர்களை நான் பார்த்தபோது ப்ரஸ் ரிப்போர்ட்டர் கிரி சொன்ன ஸ்ரீராமுலு மேட்டர் எனக்கு ஞாபகம் வந்தது. ஸ்ரீராமுலு குடியிருந்த வீட்டிலும் இதேபோல் செய்தி வெட்டி எடுக்கப்பட்ட நியூஸ் பேப்பர்கள் இருந்ததாக போலீஸ் கமிஷனரிடம் வந்து கிரி சொல்லியிருக்கிறார். இது என்னுடைய ஞாபகத்துக்கு வந்ததும் உன்னுடைய வீட்டில் கண்டெடுத்த பேப்பர்களில் வெட்டி எடுக்கப் பட்ட செய்திகள் எது எதுன்னு தெரிஞ்சுக்கிறதுக்காக அந்த பத்திரிகையின் அலுவலகத்துக்குப் போய் அந்த தேதி யிட்ட பேப்பர்களை வாங்கிப் பார்த்தேன். வெட்டி எடுக்கப்பட்ட செய்திகள் எல்லாமே கோர்ட் தீர்ப்பு சம்பந் தப்பட்டவை. எனக்கு இது போதாதா...? உனக்கும் ஸ்ரீராமுலு என்கிற அந்த நபர்க்கும் தொடர்பு இருக்கிறதைப் புரிஞ்சுக்கிட்டேன். அதை கமிஷனரிடம் சொன்னேன். உன்னைக் கையும் களவுமாய் பிடிக்க அவர் போட்டுக் குடுத்த திட்டம்தான் இது. வெளியேயிருந்து கிரி - ஸ்ரீராமுலு மாதிரி போனில் பேச, உன்னோட ரியாக்ஷன் எப்படியிருக்கும்ன்னு கண்டு பிடிக்கத்தான் அந்த இருட் டில் தூணுக்குப் பின்னாடி நின்னுட்டிருந்தோம். நாங்க நினைச்ச மாதிரியே எல்லாம் நடந்தது."

செந்தில்நாதன் குறுக்கிட்டு, "நீ சொன்ன இன்னொரு பொய்யும் சாயம் போயிடுச்சு. அதாவது ரெண்டு தடவை நடந்த உன்னோட அபார்ஷனுக்குக் காரணம் கோகுலக் கண்ணன்தான்னு சொன்னே...! நானும் அதை உண்மைன்னு நம்பி கோகுலக்கண்ணனை விசாரிக்கப்

போனேன். விசாரிக்கப் போன இடத்தில்தான் அந்த அதிர்ச்சியான விஷயம் தெரிஞ்சுது...'' என்று சொல்ல ஸ்வரூபா 'என்ன?' என்பதுபோல் பார்த்தாள்.

செந்தில்நாதன் தொடர்ந்தார்.

''நான் கோகுலக்கண்ணன் கிட்டே 'ஸ்வரூபாவோட அபார்ஷனுக்கு காரணம் நீதானே?'ன்னு விசாரிச்சுக்கிட்டு இருக்கும்போது 'தகவல் உண்மையா பொய்யான்னு... அவர்கிட்டே கேக்காதீங்க... என்கிட்டே கேளுங்க'ன்னு எனக்குப் பின்னாலிருந்து ஒரு குரல் வந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். கோகுலக்கண்ணனோட மனைவி விமலா நின்னுட்டிருந்தாங்க. அவங்க அழுதுகிட்டே சொன்ன விஷயம் இதுதான். 'என்னோட கணவர் என்னையை மட்டுமல்ல எந்தப் பொண்ணையுமே அவரால் தாயாக்க முடியாது. டாக்டர்கள் கொடுத்த சர்டிபிகேட்ஸ் இருக்கு. பார்க்கறீங்களா?'ன்னு சொல்லி ஒரு ஃபைலைக் கொண்டு வந்து என்கிட்டே காட்டினாங்க...!''

''ஓ'' ஸ்வரூபா தலையை அண்ணாந்து சிரித்தாள். ''இதிலும் நான் தோத்துப் போயிட்டேனா? உண்மையை ஜெயிக்க முடியாது போலிருக்கே?''

''என்னிக்குமே அது சாத்தியமில்லை!'' சொன்ன கமிஷனர் அறைக்கு வெளியே பார்த்து கண்ணைக் காட்ட இரண்டு பெண் கான்ஸ்டபிள்கள் கைவிலங்கோடு ஸ்வரூபாவை நெருங்கினார்கள்.

நாள் :